# எழுநா

மார்ச் 2023

இதழ் 8



இ. மயூரநாதன்

தியாகராஜா சுதர்மன்

இரா. சடகோபன்

நடேசன் இரவீந்திரன்

வி. துலாஞ்சனன்

பி. ஏ. காதர்

எம். ஐ. எம். சாக்கீர்

நவரத்தினம் கிரிதரன்

பாலசுப்ரமணியம் துவாரகன்

சு. சிவரெத்தினம்

பால. சிவகடாட்சம்

என். கே. எஸ். திருச்செல்வம்

அனுதர்சி கபிலன்

ஜிஃப்ரி ஹாசன்

முத்துவடிவு சின்னத்தம்பி

சி.கிருபானந்தகுமரன்

கந்தையா பகீரதன்

கணபதிப்பிள்ளை ரூபன்

கமலநாதன் பத்திநாதன்

மரியநாயகம் நியூட்டன்

பரமு புஷ்பரட்ணம்

# இதழ் 8

# எழுநா

முந்தைய இதழ்






**பதிப்பாசிரியர்**
கணேசானந்தன் சசீவன்

**ஆசிரியர் குழு :**
மாயழகு பவித்ரா
பரமசிவம் பவதாரணி

**குரல் வடிவம்**
பாலரூபன் கிருஷிகா
இராதாகிருஷ்ணன் தர்ஷினி

**வளவாளர்கள்**

| | | |
|---|---|---|
| இ. பத்மநாப ஐயர் | – | உசாத்துணை சேவை |
| கதிர் சயந்தன் | – | நூல் தயாரிப்பு |
| தபின் | – | கட்டுரை திருத்தம் |
| பா. சிவகுமார் | – | காணொலி எண்ணக்கரு |
| பரணீதரன் | – | காணொலி தயாரிப்பு |
| தி. கோபிநாத் | – | நூல் வரிசை |
| கனகலிங்கம் சுகுமார் | – | உசாத்துணை சேவை |

**துறை சார் ஆலோசகர் குழு**

| | |
|---|---|
| கந்தையா ரமணிதரன் | – நீரியலும் சூழற்பொறியியலும் |
| மகேந்திரன் திருவரங்கன் | – மொழியும் இலக்கியமும் |
| குமாரவடிவேல் குருபரன் | – சட்டமும் சட்டமுறைமையும் |
| பரமு புஷ்பரட்ணம் | – வரலாறும் தொல்லியலும் |
| இ. மயூரநாதன் | – கட்டடக்கலையும் வடிவமைப்பும் |

**பங்களிப்பாளர்கள்**
கணேசலிங்கம் குகரூபன்
கருணானந்தன் சஞ்யே

**விற்பனைத் தொடர்பு**
நடராஜா முரளிதரன் – கனடா


**FOLLOW**

எழுநா

https://ezhunaonline.com/
https://youtube.com/user/Ezhuna
https://www.facebook.com/Ezhunax/
https://twitter.com/Ezhuna
https://www.instagram.com/ezhunaa/
https://www.tiktok.com/@ezhuna
https://open.spotify.com/show/4Xn
https://tinyurl.com/ykj8ru3f
https://tinyurl.com/3zfkzxme
https://tinyurl.com/2p83m8zj
https://pca.st/swr6zomk
https://radiopublic.com/6rX3L4
https://tinyurl.com/bdeky92h
https://anchor.fm/ezhuna
https://www.clubhouse.com/club/ezhuna
https://www.magzter.com/publishers/


தொடர்பு முகவரி :
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி.

**மின்னஞ்சல்:**
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

# உள்ளே...


யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்கள் - இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் 04

யாழ்ப்பாண பாரம்பரிய உணவில் கீரை, இலைவகைகள் - தியாகராஜா சுதர்மன் 09

திராவிடர் எழுச்சிக் குரல்களின் தாக்கம் - இரா. சடகோபன் 22

பெருந்தோட்டமே இலங்கைப் பொருளாதாரத்தின் மையம் - இரா. சடகோபன் 25

மதசார்பில்லாக் கருத்தியல் - நடேசன் இரவீந்திரன் 29

கீழைக்கரைக்கான எழுத்துச் சான்றுகள் : நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டு - விவேகானந்தராஜா துலாஞ்சனன் 36

நிச்சயமற்ற கோப்பியின் வீழ்ச்சியும் நிலையான தேயிலையின் ஆதிக்கமும் - பி. ஏ. காதர் 46

நவீன விவசாயமும் உணவுப் புரட்சியும் - கந்தையா பகீரதன் 53

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டசைவுகள் : தாய்வழிக் குடிவழிமுறை - எம். ஐ. எம். சாக்கீர் 59

சிங்கை நகர் பற்றியதொரு நோக்கு நவரத்தினம் கிரிதரன் 63

மீட்பராக மருத்துவர் கிறீனது மீள்வருகை! - பாலசுப்ரமணியம் துவாரகன் 69

தமிழ் கட்சிகளும் சாதி அடையாளமும் - கலாநிதி சுந்தரப்பிள்ளை சிவரெத்தினம் 73

இரசவர்க்கம்: தாவரநெய்கள் - பால. சிவகடாட்சம் 77

தமிழ் அதிகாரி மகாசாத்தான் பற்றி குறிப்பிடும் தாமரவெவ தூண் கல்வெட்டு - என். கே. எஸ். திருச்செல்வம் 82

வடபுல சமூகமும் திருநர்களும் - அனுதர்சி கபிலன் 85

பிரதேசம் சாராத மக்களுக்குரிய பொருளாதாரப் பரிமாணங்கள் : இலங்கைப் பெருந்தோட்டத் - முத்துவடிவு சின்னத்தம்பி 89

வாணிபம் ஆரம்பிக்க தேவையான 4 நிதி தொடர் அடிப்படைகள் - கணபதிப்பிள்ளை ரூபன் 100

கிழக்கிலங்கை தொல்குடிகள் மீதான நில ஆக்கிரமிப்பும் குவேனி பழங்குடி அமைப்பின் தோற்றமும் -கமலநாதன் பத்திநாதன் 103

இலங்கை முஸ்லிம்களின் உப மரபினங்கள் : இலங்கை மலாயர்கள் -ஜிஃப்ரி ஹாசன் 108

அம்பாறை மாவட்டத்தின் வரலாற்றில் இருந்து மறைந்து போகும் ஒரு சைவத் தமிழ்க் கிராமம் -பரமு புஷ்பரட்ணம் 113

பட்டினியாக நாங்களும் களவாடப்படும் எங்கள் நீலப் பிரபஞ்சமும் -மரியநாயகம் நியூட்டன் 117

கால்நடைகளில் குடற்புழுக்களால் ஏற்படும் பொருளாதார இழப்புகளும் தீர்வுகளும் -Dr. சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன் 121

யாழ்ப்பாண மருத்துவ வரலாறு : 1864 -பாலசுப்ரமணியம் துவாரகன் 128

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.




**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**

மயூரநாதன் இரத்தினவேலுப்பிள்ளை அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.


தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார். தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப் புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.


# யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்கள்

*இடமொன்றின் தெரிந்தெடுக்கப்பட்ட இயல்புகளைக் குறியீட்டு அடிப்படையில் காட்டுவதே நிலப்படம் ஆகும். இது பெரும்பாலும் மட்டமான தளத்தில் வரையப்படுகின்றது.1 நிலப்படங்கள், அவை வரையப்பட்ட காலத்தின் பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்துவனவாக உள்ளன. நிலப்படங்கள் முதன்மையாக, முழு உலகினதோ அதன் பகுதிகளினதோ புவியியலை விளக்குவனவாக இருந்தபோதும், அவை அப்பகுதிகளின் வரலாறுகளைப் புரிந்துகொள்வதற்கும் உதவுகின்றன. "நிலப்படங்கள் சிறப்பான வரலாற்று மூலங்கள். பழைய நிலப்படம் ஒன்று, அதன் வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் ஒரு கதையை உள்ளடக்கியிருக்கலாம். வரலாற்று நிலப்படங்களின் வடிவத்தின் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய கலைத்துவம், பாணி, தோற்றம் என்பன குறிப்பிட்ட காலத்தைப் பற்றியும் அக்காலத்துப் பண்பாட்டைப் பற்றியும் விளக்கங்களைத் தரக்கூடும். அதேவேளை வரலாற்று நிலப்படங்களின் உள்ளடக்கங்கள், தற்காலத்தில் இல்லாமற் போய்விட்ட நிலத்தோற்றங்களினதும் பிற அம்சங்களினதும் பதிவுகளாக அமைகின்றன. அவை நிலப்படத்தை வரைந்தவரது முன்னுரிமைகள், உணர்வுகள், பயங்கள், அறிவு நிலை ஆகியவற்றுடன் அவரது பண்பாட்டுச் சூழலையும் பிரதிபலிப்பவையாக*

அமையக்கூடும்.”2

ஒரு படம் பல ஆயிரம் சொற்களுக்குச் சமம் என்பார்கள். நிலப்படங்கள் இக்கூற்றுக்குச் சரியான எடுத்துக்காட்டுகள். அவை ஏராளமான தகவல்களை இலகுவாக அறிந்துகொள்ளும் வகையில் ஒரே தாளில் தருகின்றன. குறிப்பாக, இடஞ்சார்ந்த தகவல்களை நிலப்படங்களினூடாகச் சிறப்பாக விளக்க முடியும். முழு உலகையும் அல்லது பிராந்தியங்கள், நாடுகள், நகரங்கள், ஊர்கள் போன்ற பல்வேறு அளவுகளைக் கொண்ட பகுதிகளைத் தேவைக்கு ஏற்றவாறு நிலப்படங்களில் காட்ட முடியும். இப்பகுதிகளிற் காணப்படக்கூடிய நிலம், கடல், காடுகள், மலைகள், நிலத் தோற்றங்கள், ஏரிகள், குளங்கள், நகரங்கள், வீதிகள், கட்டடங்கள் போன்ற இயற்கையானவையும் செயற்கையானவையுமான பலவகைப்பட்ட பௌதீக அம்சங்கள் தொடர்பான தகவல்களை நிலப்படங்கள் தருகின்றன. குறிப்பிட்ட ஒரு காலத்தில் மேலே குறிப்பிட்ட அம்சங்களின் அமைவிடங்கள், அளவுகள், வடிவங்கள் போன்றவற்றை நிலப்படங்களிலிருந்து அறிந்துகொள்ள முடிவதுடன், அவற்றுக்கு இடையிலான வெளிப்படையாகத் தெரியக்கூடிய தொடர்புகளை விளங்கிக்கொள்ளவும், வெளிப்படையாகத் தெரியாத தொடர்புகளை உய்த்துணரவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.




**தொலமியின் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பின்னாளில் வரையப்பட்ட இலங்கையின் நிலப்படம்**

Image source - blogs.loc.gov

## ஒரே நிலப்படத்திலிருந்து வரலாற்றுத் தகவல்கள்

பல சந்தர்ப்பங்களில் சில வரலாற்று உண்மைகளை நிறுவுவதற்கு ஒரு நிலப்படமே போதுமானதாக இருக்கக்கூடும். 3 எடுத்துக்காட்டாக, ஒல்லாந்தர் போர்த்துக்கேயக் கோட்டையை முற்றுகையிட்டிருந்தபோது வரையப்பட்ட நிலப்படமொன்றிலிருந்து போர்த்துக்கேயர் கால யாழ்ப்பாண நகரத்தின் பல்வேறு அம்சங்களை அறிய முடிவதுடன், யாழ்ப்பாண நகரத்தின் தோற்றம், அதன் வளர்ச்சி என்பன தொடர்பான சில தகவல்களையும் பெறக்கூடியதாக உள்ளது. அத்துடன், ஒல்லாந்தர் எவ்வாறு போர்த்துக்கேயரின் கோட்டையை முற்றுகை இட்டிருந்தனர் என்பதை இந்நிலப்படத்திலிருந்து தெளிவாக அறிய முடிகின்றது. இதிலிருந்து பெறக்கூடிய பல தகவல்கள் வேறு மூலங்களில் கிடைக்காதவை. இந்நிலப்படத்திலிருந்து நேரடியாகக் கிடைக்கும் தகவல்களைத் தவிர, இதைப் பிற எழுத்துமூல அல்லது தொல்லியல் சான்றுகளுடன் சேர்த்து ஆய்வு செய்யும்போது மேலதிகமான தகவல்களையும் பெறமுடிகின்றது.

## வரலாற்றுத் தொடர்ச்சியும் நிலப்படங்களும்

ஒரு தனி நிலப்படம் ஒரு குறிப்பிட்ட

தருணத்தில் இருக்கும் நிலைவரங்களையே காட்டுவதால், கால ஓட்டத்தில் இடம்பெறும் மாற்றங்களை அறிவதற்கு அது போதுமானதல்ல. பல்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட நிலப்படங்களை ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் பல்வேறு அம்சங்கள் வரலாற்றினூடாக அடைந்த மாற்றங்களை அறிய முடியும்.4 நகரங்கள் அல்லது பிற குடியிருப்புகள், போக்குவரத்து வலையமைப்பு போன்ற இன்னோரன்ன முறைமைகளின் விரிவாக்கம், வளர்ச்சி என்பன தொடர்பான தகவல்களை இவ்வாறு பெற முடியும். பல்வேறு முறைமைகள் இவ்வாறு வளர்ச்சி பெறுகின்ற போது, அவை ஒன்றன்மேல் இன்னொன்று ஏற்படுத்தும் தாக்கங்களைத் தெளிவாக அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. புதிய வீதிகள், பேருந்து நிலையங்கள், தொடர்வண்டி நிலையங்கள், மருத்துவ வசதிகள், தொழில் வசதிகள், வடிகால்கள், நீர்வசதி போன்றவை ஏற்படுத்தும் நிலப் பயன்பாட்டு மாற்றங்களைப் பல்வேறு கால கட்டங்களில் வரைந்த நிலப்படங்களை ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.

## அரசியல், பாதுகாப்புச் சூழலும் நிலப்படங்களும்

அத்துடன், குறிப்பிட்ட காலகட்டங்களில் ஏற்படக்கூடிய அரசியல், பாதுகாப்பு அழுத்தங்கள் தொடர்பான சான்றுகளையும் நிலப்படங்கள் தருகின்றன. இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் இறுதியில் பல முக்கிய நகரங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான திட்டங்களைக் காட்டும் நிலப்படங்கள் இவ்வாறானவை. அக்காலகட்டத்தில் பிரான்ஸ், பிரித்தானியா ஆகியவை இந்துமாகடற் பிராந்தியத்தில் வலுப்பெற்றன. இந்நாடுகளில் ஒன்று இலங்கையிலிருந்த ஒல்லாந்தரின் பகுதிகளைக் கைப்பற்றிக்கொள்ள வாய்ப்புகள் இருந்தன. இதனால். கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற முக்கியமான நகரங்களைப் பலப்படுத்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வரைபடங்களும் தயாரிக்கப்பட்டன. திறந்த நகரமாக இருந்த யாழ்ப்பாண நகரத்தைச் சுற்றி மதில் அமைப்பதையும், கோட்டையைப் பலப்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு நிலப்படங்களும் வரைபடங்களும் வரையப்பட்டன. இந்தத் திட்டங்கள் செயலுருப் பெறாவிட்டாலும், மேற்படி படங்கள் அக்காலத்தில் நிலவிய அரசியல், பாதுகாப்புச் சூழலை விளக்குவதற்கான சான்றுகளாக அமைகின்றன.

> **”**
>
> **நிலப்படங்களின் நம்பகத்தன்மை குறித்து எச்சரிக்கை யாக இருக்க வேண்டும் எனப் பலர் குறிப்பிடுவது உண்டு. எழுத்து மூலமான ஆவணங் களைப் போலவே நிலப்படங்களின் நம்பகத் தன்மைக்கும் வரையறைகள் உண்டு.**

## நிலப்படங்களும் இடப்பெயர்களும்

நிலப்படங்கள், தேவையைப் பொறுத்து அவை வரையப்பட்ட காலப்பகுதியில் புழக்கத்திலிருந்த நாடுகள், பிரதேசங்கள், ஊர்கள், குறிச்சிகள், காணிகள், வீதிகள், ஆறுகள், நீர்நிலைகள் போன்ற பல இடம் சார்ந்த அம்சங்களைப் பெயர் குறித்துக் காட்டுகின்றன. பழைய நிலப்படங்களில் காணப்படும் இவ்வாறான பெயர்கள் தற்காலப் பெயர்களை ஒத்தவையாகவோ வேறுபாடான வையாகவோ இருக்கலாம். இவை இப்பெயர்கள் குறிக்கும் அம்சங்களின் தோற்றம், வரலாறு, பல்வேறு காலப்பகுதிகளில் அவற்றின் பயன்பாடு போன்றவை தொடர்பான தகவல்களைத் தரக்கூடியவையாக உள்ளன.

பல வரலாற்றாளர்கள் தமது ஆய்வுகளுக்குப் பழைய நிலப்படங்களில் காணப்படும் இடப் பெயர்களைப் பயன்படுத்தியுள்ளனர். யாழ்ப்பாணத்தின் பண்டைய வரலாற்றை எழுதிய இராசநாயக முதலியார், தனது கருதுகோள்களை நிறுவுவதற்குத் தொலமியின் நிலப்படத்திலுள்ள இடப்பெயர்களைப் பயன்படுத்தியுள்ளார்.5

## நிலப்படங்களைத் தகவல் மூலங்களாகப் பயன்படுத்துவதிலுள்ள சிக்கல்கள்

நிலப்படங்களின் நம்பகத்தன்மை குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும் எனப் பலர்

குறிப்பிடுவது உண்டு. எழுத்து மூலமான ஆவணங்களைப் போலவே நிலப்படங்களின் நம்பகத் தன்மைக்கும் வரையறைகள் உண்டு. இன்று நாம் பார்க்கக்கூடிய பழைய நிலப்படங்களை ஒரு காலத்தில் அரசர்களோ, பிரபுக்களோ, அரசாங்கமோ, படையினரோ, வணிகரோ, கடலோடிகளோ பயன்படுத்தியிருக்கலாம்.6 எனவே பயன்படுத்துபவர்களின் தேவையை நிறைவேற்றும் வகையிலேயே நிலப்படங்கள் வரையப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. நிலப்படங்களில் அவை காட்டும் பகுதியின் எல்லாத் தகவல்களையும் காட்ட முடியாது என்பதால், குறித்த நிலப்படம் என்ன நோக்கத்துக்காக வரையப்படுகின்றதோ அந்த நோக்கத்துக்கு ஏற்ப தெரிந்தெடுக்கப்பட்ட தகவல்களே நிலப்படங்களில் உள்ளடக்கப்படுகின்றன. நிலப்படமொன்றில், அதன் நோக்கத்துக்குத் தேவை இல்லாததால் குறிப்பிட்ட ஒரு வீதி காட்டப்படாமல் இருக்கலாம். அந்நிலப்படத்தைப் பார்ப்பவர்கள் அப்படம் வரையப்பட்ட காலத்தில் அவ்வீதி இருக்கவில்லை என்ற பிழையான முடிவுக்கு வரக்கூடும். சமயம், அரசியல் போன்றவை சார்ந்த நோக்கங்களுக்காக வரையப்படும் நிலப்படங்களில் பக்கச் சார்பான தகவல்கள் இடம்பெறுவது உண்டு.

**நிலப்படங்கள் பல்வேறு வழிகளில் சேகரிக்கப்படும் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு வரையப்படுகின்றன. அறியாமை, ஆசை, கருத்தியல் சார்ந்த காரணங்களாலும் சிலவேளைகளில் கெட்ட நோக்கம் போன்றவற்றாலும் தகவல்களில் திரிபுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.**

சில நிலப்படங்கள் பல்வேறு காரணங்களால் சீரான அளவுத் திட்டங்களுக்கு அமைவதில்லை. படத்தின் சில பகுதிகள் அளவுக்கு மீறிப் பெரிதாகவோ சிறிதாகவோ காணப்படலாம் அல்லது சில பகுதிகள் நெருக்கி வரையப்பட்டிருக்கலாம். முறையான நில அளவைத் தரவுகள் இல்லாததால் அல்லது வரைதற் குறைபாடுகளால் இவ்வாறான நிலை ஏற்படக்கூடும். குறிப்பிட்ட தேவைக்கு துல்லியம் முக்கியமானதாக இல்லாமலும் இருந்திருக்கலாம். ஆனால், இவ்வாறான குறைபாடுகளால் தகவல்கள் திரிபு அடைந்து பிழையான முடிவுகளுக்கு வழியேற்ப டுத்தக்கூடும். யாழ்ப்பாண நகரத்தையும் சூழலையும் காட்டும் ஒல்லாந்தர் கால நிலப்படங்கள் சிலவற்றில் இவ்வாறான குறைபாடுகளைக் காண முடிகின்றது.

சில வேளைகளில் நிலப்படங்களில், உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்ட அம்சங்களும் காட்டப்படுகின்றன. அவை குறித்த நிலப்படங்கள் வரையப்பட்ட காலத்தில் உண்மையாக இல்லாதிருந்திருக்கும். அவை எக்காலத்திலும் உருவாக்கப்படாமலே இருந்திருக்கலாம். வேறு வழிகளில் தகவல்கள் கிடைக்காவிடில் குறித்த அம்சங்கள் ஒரு காலத்தில் உண்மையில் இருந்தவை எனப் பிழையாகக் கருத வாய்ப்புகள் உள்ளன. யாழ்ப்பாணக் கோட்டை, நகரம் என்பவற்றைக் காட்டும் ஒல்லாந்தர் கால நிலப்படங்கள் சிலவற்றிலும் உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்ட கட்டடங்களும் அமைப்புக்களும் காட்டப்பட்டுள்ளன. அவை உண்மையில் கட்டப்படவில்லை.

நிலப்படங்கள் பல்வேறு வழிகளில் சேகரிக்கப்ப டும் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு வரையப்படுகின்றன. அறியாமை, ஆசை, கருத்தியல் சார்ந்த காரணங்களாலும் சிலவேளைகளில் கெட்ட நோக்கம் போன்றவற்றாலும் தகவல்களில் திரிபுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.7

எனவே நிலப்படங்களை வரலாற்றுச் சான்றுகளாகப் பயன்படுத்தும்போது கவனம் தேவை. வேறு மூலங்களிலிருந்து கிடைக்கும் தகவல்களை ஆராய்ந்து குறிப்பிட்ட

சான்றுகளை உறுதிப்படுத்த வேண்டும். கி. பி. 150 அளவில் தொகுக்கப்பட்ட தொலமியின் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பின்னாளில் வரையப்பட்ட இலங்கைப் படத்தின் ஒரு பகுதியாக இன்று யாழ்ப்பாணப் பிரதேசம் என அழைக்கப்படும் பகுதிகளும் காட்டப்பட்டுள்ளன.8 ஆனாலும், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் யாழ்ப்பாணப் பிரதேசத்தைக் காட்டும் நிலப்படங்கள் ஒல்லாந்தர் காலத்திலிருந்தே கிடைக்கின்றன. இவற்றுட் பெரும்பாலானவை நெதர்லாந்திலுள்ள ஆவணக்காப்பகங்களிலும் அருங்காட்சியகங்களிலும் உள்ளன. மேற்படி நிலப்படங்கள் குறித்தும் இலங்கையில் பல்வேறு நிறுவனங்களிலுள்ள சில நிலப்படங்கள் குறித்தும் 1941/42 ஆம் ஆண்டுகளில் ஆர். எல். புரோகியர் ஒல்லாந்தப் பறங்கியர் சங்க ஆய்விதழில் ஒரு கட்டுரைத் தொடர் எழுதியிருந்தார். இதில் யாழ்ப்பாணத்து நிலப்படங்கள் பற்றிய தகவல்களும் உள்ளடங்கியிருந்தன. எனினும் இதில் படங்கள் எதுவும் இல்லை. அண்மைக் காலம்வரை இந்த நிலப்படங்களைப் பார்வையிடுவது காலமும் பெருஞ் செலவும் பிடிக்கக்கூடிய ஒரு விடயம். ஆனால், இப்போது இவற்றுட் பெரும்பாலானவற்றை நெதர்லாந்தின் தேசிய ஆவணக் காப்பகம் (*Nationaal Archief*), விக்கிமீடியா பொதுவகம் (*Wikimedia Commons*), பரஸ்பர மரபுரிமைக்கான நிலப்படத் தொகுப்பு (*Atlas of Mutual Heritage*) போன்ற இணையத்தளங்களில் பார்வையிட முடிகின்றது. முதலிரண்டு இணையத்தளங்களில் இவற்றைப் பதிவிறக்கம் செய்யும் வசதிகளும் உள்ளன. எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதும், குறித்த சில நிலப்படங்களின் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதுமே இத்தொடரின் நோக்கம்.

**நிலப்படங்கள், தேவையைப் பொறுத்து அவை வரையப்பட்ட காலப்பகுதியில் புழக்கத்திலிருந்த நாடுகள், பிரதேசங்கள், ஊர்கள், குறிச்சிகள், காணிகள், வீதிகள், ஆறுகள், நீர்நிலைகள் போன்ற பல இடம் சார்ந்த அம்சங்களைப் பெயர் குறித்துக் காட்டுகின்றன. பழைய நிலப்படங்களில் காணப்படும் இவ்வாறான பெயர்கள் தற்காலப் பெயர்களை ஒத்தவை யாகவோ வேறுபாடான வையாகவோ இருக்கலாம்.**

## அடிக்குறிப்புகள்


1. "Map," National Geographic Resource Library, accessed January 19, 2023, https://education.nationalgeographic.org/resource/map.
2. World History Sources – The World History Survey Course on the Web, George Mason University, accessed January 19, 2023,
3. https://chnm.gmu.edu/worldhistorysources/unpacking/mapswhybother.html
4. Brien Barrette, and Genya Erling, "Learning Historical Research," accessed January 19, 2023, http://www.williamcronon.net/researching/maps.htm#_Using_Maps_to. "Learning Historical Research"
5. C. Rasanayagam, Ancient Jaffna (New Delhi: Asian Educational Services, 1993), 93-128.
6. Ashly and Miles Baynton-Williams, New Worlds – Maps from the Age of Discovery (London: Quercus, No Date), 7.
7. Mark Monmonior, How to Lie with Maps (Chicago: University of Chicago, 2018), 2.
8. J. R. Sinnathamby, Ceylon in Ptolemy's Geography (Colombo: J. R. Sinnathamby, 1968), 19-30.
9. R. L. Brohier, "Ceylon in Maps," The Journal of the Dutch Burgers Union, vol XXXII, no. 2 (October 1942): 79-89.



ஈழத்தில் யாழ்ப்பாணம் தனக்கென சிறப்பான உணவுப் பழக்கவழக்கங்களையும் மருத்துவத்தில் சில விசேட முறைகளையும் கொண்டிருந்தது. ஆயினும் அந்நியர் ஆட்சி, பூகோளமயமாதல், வர்த்த நோக்கிலான வாழ்வியல், நாகரிகமோகம் என்பன அந்த உணவுப்பழக்கவழக்கத்தைக் குலைத்துப்போட்டது. அதன் விளைவாக, ஆரோக்கியக் குறைபாடுகள், தொற்றா நோய்கள் என பலவீனமான சமுதாயம் ஒன்று நம்மிடையே உருவெடுத்துள்ளது. இந்த நிலையை மாற்றியமைத்து, மீண்டும் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப எமது பாரம்பரிய உணவுமுறைமையை மீட்டெடுக்க வேண்டும். ஈழத்தமிழர்களின் உணவுப்பழக்க வழக்கங்கள், உணவுகள் என்பன தொடர்பாக சித்தமருத்துவம், தற்கால உணவு விஞ்ஞான ஆய்வு என்பவற்றின் நோக்குநிலையில் விளக்குகின்றது 'மாறுபாடில்லா உண்டி' என்ற இந்தக்கட்டுரைத்தொடர்.

● தியாகராஜா சுதர்மன்

தியாகராஜா சுதர்மன் அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தின் சித்தமருத்துவ பட்டதாரியும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உணவு விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா பட்டதாரியும், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உளவளத்துணை டிப்ளோமா பட்டதாரியும் ஆவார்.
அரச சித்த மருத்துவ உத்தியோகத்தராகப் பணிபுரியும் இவர் ஒரு சிறுகதை எழுத்தாளருமாவார். இவர் 'ஆகாரமே ஆதாரம்' எனும் நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார்.



# யாழ்ப்பாண பாரம்பரிய உணவில் கீரை, இலைவகைகள்

இங்கு குறிப்பிடப்படும் தாவர உணவு வகைகளின் குணங்கள் அவற்றின் தனியான குணங்களாகும். இவற்றினை நாம் உணவாக்கிக் கொள்ளும்போது அவற்றின் குணங்களில் மாற்றங்கள் ஏற்படக் கூடியவாறே எமது பாரம்பரிய உணவுப்பழக்கங்கள் அமைந்துள்ளன. உணவுப்பொருட்கள் எல்லாவற்றுக்குமே இவை பொருந்தும்.

உணவுப் பொருட்களில் உள்ள நற்குணங்களை அதிகரிக்கவும், ஒவ்வாத குணங்களை இல்லாமல் செய்வதற்கு அல்லது குறைப்பதற்கும் ஏற்றவாறே நமது பாரம்பரிய உணவுத் தயாரிப்பு முறைகள் அமைந்துள்ளன. ஏற்கனவே குறிப்பட்டதுபோல் திரிதோச சமதிரவியங்கள் உணவு வகைகளில் சேர்த்தல், சில உணவுப் பொருட்களை சமைக்கும்போது சேர்க்கப்படும் ஏனைய சேர்க்கைகள் என்பனவும் இவ்வாறே அமையப் பெற்றுள்ளன.
அவற்றைவிட உணவுகளை உண்ணும் அளவு, காலங்கள், சமையல் முறைகள் என்பனவும் அமையப் பெற்றுள்ளன. எனவே இங்கு குறிப்பிடப்படும் உணவுப்பொருட்களின் குணங்களைக் கருத்தில் கொள்ளும் அதே அளவு சிரத்தையினை அவற்றுடன் சேர்க்கப்படும் திரிதோச சமதிரவியங்கள், ஏனைய சேர்க்கைகள், சேர்க்கக்கூடாதவை, சமையல் முறைகள், உண்ணும் காலங்கள், அளவு என்பனவற்றையும் கருத்தில் கொள்வது ஆரோக்கிய வாழ்வுக்கு முக்கியமானதாகும்.

எமது பாரம்பரிய உணவுப்பழக்கமானது ஆரோக்கியத்துக்கான முற்பாதுகாப்பினையே (Preventive care) அடிப்படையாகக் கொண்டது. சில உணவுப்பொருட்கள் ஆரோக்கியமற்ற குணங்களைக் கொண்டாலும் அவற்றிலிருந்து பயன்பெறக் கூடியவாறே எமது உணவுப்பழக்கம் அமைந்துள்ளது. இன்று நாம் அவற்றைக் கவனிக்காது செல்லும்போதுதான் எமது ஆரோக்கியம் கேள்விக்குறியாகின்றது.

## கீரை, இலை வகைகள்

பொதுவாக கீரை வகைகளில் அடங்கியுள்ள சத்துக்கள் மிகக் குறைந்தளவு வேறுபாடுகளையே காட்டுகின்றன. ஆனால் அவை கொண்டுள்ள தாவர இரசாயனங்களின் அடிப்படையில் மருத்துவக் குணங்கள் வேறுபடுகின்றன.



இலங்கையைப் பொறுத்தளவில் கீரைவகைகள், இலைவகைகள் தாராளமாகக் கிடைக்கக்கூடியனவாகக் இருப்பதுடன், பணமின்றிப் பெறக்கூடியவையாகவும் இருக்கின்றன.

ஆனால் இன்று இவற்றைப் பயன்படுத்துவதில் மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை. இதனால் பல்வேறு ஊட்டச்சத்துக் குறைபாடுகளையும், நோய்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

கீரைவகைகள் அனைவருக்கும் உகந்த உணவாகக் காணப்படுகின்றன. கீரை சமைக்கும்போது தேசிப்புளியே அதிகம் சேர்க்கப்படும். இங்கு தேசிப்புளியில் அதிகம் உயிர்ச்சத்து C காணப்படுகின்றது. இது கீரையில் உள்ள இரும்புச்சத்தினை நன்றாக அகத்துறிஞ்சுவதற்கு உதவுகின்றது.

## முளைக் கீரை - கீரைத் தண்டு

அன்றாட பாரம்பரிய உணவில் முளைக்கீரை பிரதான பாகம் வகிக்கின்றது. அதிலும் முக்கியமாக பௌர்ணமி, அமாவாசை, புரட்டாதி மாத சனீஸ்வரன் விரதம் போன்ற பல்வேறு விரதங்களில் கீரை பிரதானமாகின்றது.

கீரைப்பிட்டு, பிட்டும் கீரைக்கறியும் யாழ்ப்பாணத்துக்குரிய பாரம்பரிய உணவுப்பழக்கங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. குரக்கன், தினை, சாமை போன்ற சிறுதானியங்களில் பிட்டு போன்ற உணவுகள் தயாரிக்கும்போது கீரை சேர்த்து செய்வது வழக்கமாகும். யாழ்ப்பாண சித்தமருத்துவ நூலாகிய பதார்த்த சூடாமணியில் முளைக்கீரை தொடர்பில் கூறப்பட்டுள்ளதாவது,

யரோசி போக்கு மொழியிற்பத் தியத்திற் காகும்
தளர்ச்சிசே ருடலைத் தேற்றுந் தனையரா தியர்க்கு மாகும்
விளைத்திடுங் கீரைத் தண்டு வெட்டைநீர்க் கடுப்புச் சீதம்
உளைத்திடு மூல ரத்தம் போம்வலி வாய் வுண்டாமே

**– பக். 64, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.**

முளைக்கீரையானது பசியின்மை, உணவில் வெறுப்பு, ஓங்காளம் என்பவற்றைப் போக்கும். பத்தியத்துக்கு உகந்தது. தளர்வடைந்த (சோர்வடைந்த) உடலைத் தேற்றும். தளர்ச்சி / சோர்வு / களைப்பு என்பது குருதிச்சோகையின் முதன்மையான குணமாகும்.

கீரைத் தண்டானது அதிக குளிர்ச்சிக் குணம் கொண்டது. சூட்டினால் அல்லது அதிக வெப்பத்தினால் ஏற்படும் நீர்க்கடுப்பு, சிறுநீரகத் தொற்று, நீரிழிவு என்பனவற்றை கட்டுப்படுத்த உதவுகின்றது. வயிற்றுக்கடுப்பு, சீதபேதி தீரும். மூலத்தால் இரத்தம் போதல் நிற்கும். ஆனால் அதிக குளிர்ச்சியைக் கொண்டிருப்பதால் உடல் வலி, வாதம் என்பன அதிகரிக்கும்.

பாலர்க்குந் தக்கவயதோர்க்கும்
மிளங்கீரை நாவுக் கிதமாங் கிளம்பு
சுரகாசம் போக்குந் தொடர்பசி யுண்டாக்கும்
பிரகாசமா யெடுத்துப் பேசு

பக் 190, பதார்த்தகுண சிந்தாமணி.



கீரை வகைகள்

Image source - webdunia.com

நோயுற்றவர்கள், குழந்தைகள், சிறுவர்கள், அனைத்து வயதினர்க்கும் இளங்கீரை நாவுக்கு இதமாக இருப்பதுடன் உடலுக்குப் பொருந்தக்கூடியதும் ஆகும். ஒவ்வாமைகளால் வரும் காய்ச்சலைப் (சுரகாசம்) போக்கும். நல்ல பசியை உண்டாக்கும்.

## இறால் கீரைப் பிட்டு

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| அரிசி மா | – 1 சுண்டு |
| தேங்காய்ப் பூ | – 3 மேசைக்கரண்டி |
| கூனி இறால் | – 150 கிராம் (கோது நீக்கியது) |
| கீரை | – 250 கிராம் |
| சின்ன வெங்காயம் | – 100 கிராம் |
| பச்சை மிளகாய் | – 4 |
| உப்பு | – தேவையான அளவு |

வழமையாகப் பிட்டுச் செய்வது போன்று அரிசிமாவினை கொதிநீர் கலந்து பிட்டைக் கொத்திக் கொள்ளவும். கீரையை நன்றாக அரிந்து சிறிதளவு உப்புச் சேர்த்து வைத்துக் கொள்ளவும். வெங்காயம், பச்சை மிளகாய் போன்றவற்றையும் சிறிதுசிறிதாக அரிந்து கொள்ளவும்.கோது நீக்கி சுத்தம் செய்த இறாலுக்கு தேவையான அளவு உப்புச் சேர்த்து பிரட்டிக்கொள்ளவும்.

பின்பு பிட்டுமா, கீரை, தேங்காய்ப்பூ, பச்சைமிளகாய், வெங்காயம், இறால் எல்லாவற்றையும் நன்றாகக் கலந்து நீர்த்துப்பெட்டியில் போட்டு பிட்டை அவித்துக்கொள்ளவும்.
சிலர் இறால், கீரை, தேங்காய்ப்பூ, பிட்டுமா என்ற அடுக்கின் ஒழுங்கில் வைத்து பிட்டை அவித்துக்கொள்வர்.

## அறைக்கீரை, சிறுகீரை

அறைக்கீரை நீர்க்க டுப்போ டருங்கய ரோகக் காய்ச்சல்
சுறுக்கதாய் நீக்கு மென்ப சொல்லுபத் தியத்திற் காகும்
வெறுப்பிலாச் சிறிய கீரை விழிக்கேற்கு மேனி தன்னில்
பொறுக்கலா வெரிவு நீக்கு மாமெனப் புகலு நூலே

பக்.64, பதார்த்த சூடாமணி.

### அறைக்கீரை / அறக்கீரை / அரைக்கீரை / அறுகீரை

அறைக்கீரையில் பல வகைகள் உண்டு. பிரதானமாக பச்சை, சிவப்பு என இரண்டு இனங்கள் காணப்படுகின்றன.
அறைக்கீரையானது நீர்க்கடுப்புடன் வரும் கசரோகம் அதனால் ஏற்படும் காய்ச்சல் என்பவற்றை விரைவாகக் குணமாக்கும். அத்துடன் பத்தியத்துக்கு ஏற்றது.

### சிறுகீரை / குப்பைக்கீரை

சிறுகீரையானது கண்ணுக்கு சிறந்தது. உடலில் ஏற்படும் தாங்கமுடியா எரிவினை நீக்கும்.

## முசுட்டையிலை



முசுட்டைக்கொடி

Image source - wikipedia.org

றழைவா தத்தை முதிர்விக்கும் பித்தம் போக்கும்
திசைப்புறு சலரோ கம்போந் தித்திக்கு மெரிப்பு நீங்கும்..

பக். 64, பதார்த்த சூடாமணி

முசுட்டையின் இலை வாததோசத்தை அதிகரித்து முதிர்ச்சியான நல்ல நிலையில் வைத்திருக்கும். இதனால் முசுட்டை இலையை நாம் எமது உணவில் சேர்த்து உட்கொள்வோமானால் உடல் பலவீனப்படுவதும் நோய்கள் ஏற்படுவதும் தவிர்க்கப்படும். நீரிழிவு நோயிலும் சிறந்த பலனைத்தருவதுடன், அது உருவாவதை குறைக்கவும், தடுக்கவும் செய்கின்றது. பித்த தோசத்தைப் போக்கும். நீரிழிவால் ஏற்படும் எரிவு (பாத எரிவு) நீங்கும்.

### முசுட்டை துவையல்

முசுட்டை – மெலிதாக அரிந்த இலை 200 கிராம்
மிளகு – 01 தேக்கரண்டி
உளுத்தம் பருப்பு – 50 கிராம்
தேசிப்புளி – பாதி அளவு
சீரகம் – 01 தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு
பெருங்காயம் – தேவையான அளவு
செத்தல் மிளகாய் – 4
தேங்காய்ப்பூ – 50 கிராம்
பசுநெய் – 1 மேசைக்கரண்டி
நெய்யில் செத்தல் மிளகாய், உளுந்து, மிளகு, சீரகம், தேங்காய்ப்பூ, பெருங்காயம்

என்பவற்றை வறுத்து இவற்றுடன் உப்பு சேர்த்து இறக்கியபின் தேசிப்புளியை சேர்த்து அரைத்து வைத்துக்கொள்ளவும். மெலிதாக அரிந்த முசுட்டை இலைகளை நெய்யில் வதக்கி, ஏற்கனவே அரைத்து வைத்திருக்கும் கூட்டினைக் கலந்து நன்றாக அரைத்து எடுத்துக்கொள்ளவும்.

## பயிரிக் கீரை

பயிரி பொதுவாக பிட்டுடன் அல்லது பருப்புடன் சேர்த்து சமையல் செய்யப்படும்.

பயிரி வெட்டை கொடும்பயித் தியம ரோசி
இழித்திடு நீர்க்க டுப்பு மியம்புநீர்ச் சிறுப்பும் போக்கும்ஃ

பக். 64, பதார்த்த சூடாமணி



பயிரி கீரை
Image source - www.facebook.com/adhirasiddha

பயிரியானது உடலுக்கு மிகுந்த குளிர்ச்சியைத்தரும் கீரையாகும். இதனால் கோடைகால உணவுகளில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. அதிக உடற்சூடு (கணை), பயித்தியரோகங்கள், சமிபாட்டுக்கோளாறுகள், சிறுநீர்க்கடுப்பு, சிறுநீர் குறைவாகப்போதல், சிறுநீர் எரிவு என்பவற்றைப் போக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றது. கோடை காலங்களில் அதிக வெப்பத்தால் ஏற்படும் உடல் உபத்திரவங்களைக் குணமாக்கி உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும்.

## துயிலி / தொய்யில்

பழிப்பிலாத் துயிலி வெட்டை பழமல முழலை புண்ணோ
டழித்திடுஞ் சீதஞ் சேர்க்கு மாம்ஃஃ

— பக்.65, பதார்த்த சூடாமணி

தொய்யில் கீரையானது அதிஉடற்சூடு (கணை), நாட்சென்ற மலக்கட்டு, நீர்வேட்கை (அதிகதாகம்), உடல் எரிவு, புண் என்பவற்றை மாற்றுவதுடன் உடலுக்கு குளிர்ச்சியைத் தரக்கூடியதும் ஆகும்.

## முடக்கொத்தான் / முடக்கறுத்தான்



முடக்கொத்தான் / முடக்கறுத்தான்
Image source - webdunia.com

முடக்கொத்தான் ஆனது பொதுவாக யாழ்ப்பாணத்தில் குளிர், மழைக்காலங்களில் இரசத்துக்கு சேர்க்கப்படும். வாதத்தைக் கட்டுப்படுத்தக்கூடியது. முடக்கொத்தான் தொடர்பில் மாறுபாடான

அடையாளப்படுத்தல் பிரதேசவாரியாகக் காணப்படுகின்றது. கஞ்சிக்கொத்தான் எனப்படும் கீரைவகையையும் முடக்கொத்தான் என்றே அழைக்கின்றனர்.
முடக்கொத்தான் கீரையின் பயன்தொடர்பில் அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> காலில் வாத முதிர்சூலைப் பிடிப்பு வாயு
> தொடர்ச்சிசேர் சொறிசி ரங்கு தொலைவிலாக் கரப்பன் போக்கும்ః
>
> பக்.65, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.

முடக்கொத்தான் ஆனது காலில் வாத தோசத்தின் மாறுபாட்டால் ஏற்படும் தீவிர வலி, பிடிப்பு என்பவற்றை அகற்றும். தொடர் வாத அதிகரிப்பால் ஏற்படும் தோல் நோய்களான சொறி, சிரங்கு போன்ற கரப்பன் என்பவற்றைப் போக்கும் குணம் கொண்டது.

## சிறுகுறிஞ்சா, குறிஞ்சா

சிறுகுறிஞ்சா நமது பாரம்பரியத்தில் தேவைக்கு ஏற்றவாறு உணவுடன் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. முக்கியமாக குறிஞ்சா வகைகள் சிறந்த பருவகால உணவுகளாக குளிர்காலங்களான ஐப்பசி, கார்த்திகை, மார்கழி போன்ற தமிழ் மாதங்களில் கூடுதலாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. பெரும்பாலும் நமது பாரம்பரியத்தில் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

மேற்படி காலங்களில் உடலில் ஏற்படும் மாற்றங்களுக்கும், ஏற்படும் நோய்களுக்கும் ஏற்ற ஆரோக்கியமான உணவு வகைகளாக இவை காணப்படுகின்றன. இக்காலங்களில் ஏற்படக்கூடிய தொற்றுக்கள் அவற்றால் ஏற்படும் காய்ச்சல் என்பவற்றில் இருந்து பாதுகாக்கக் கூடியன. அதேபோல் இருமல், ஆஸ்துமா போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தக்கூடியன.

அதேபோல் உடலில் ஏற்படும் உடற்சூடு, குளிர்ச்சி என்பனவற்றை சீராகப் பேணக்கூடியன. முக்கியமாக குளிர்காலங்களில் சூழலில் ஏற்படும் வெப்பநிலை மாறுபாட்டை அனுசரித்து உடலின் அனுசேப வீதம் அதிகரிக்கும். உடலில்



சிறு குறிஞ்சா
Image source - annaimadi.com

இருந்து அதிக சக்தி வெப்பமாக இழக்கப்படும். இதன் மூலம் சூழல் வெப்பநிலையுடன் உடல் வெப்பநிலை சமநிலையைப் பேணிக்கொள்ளும். இதனால் மேலதிக சக்திக்காக அதிக பசி ஏற்படும். இதன்போது சமிபாட்டின் அதிகரிப்புக்கு ஏற்றவாறு சக்தியை வழங்குவதற்காக, குளுக்கோஸ் அனுசேப செயற்பாட்டுக்கு ஏற்றவாறு இன்சுலின் சுரப்பினை சுரப்பதற்கு கணையச் சுரப்பிக்கான (*Pancreas*) தூண்டலையும், கணையச் சுரப்பியின் செயற்திறனையும் சிறுகுறிஞ்சா, குறிஞ்சா வகைகள் அதிகரிக்கின்றன.

குறிஞ்சாவில் பலவகைகள் காணப்படுகின்றன. எமது பிரதேசங்களில் சிறுகுறிஞ்சா அரிதாகவே காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் *Gymnema lactiferum, Gymnema rotundatum* போன்ற உப சிறு குறிஞ்சா இனங்களே அதிகம் காணப்படுகின்றன.

உப இனங்கள் பல்வேறு காணப்படுகின்றன. இவற்றின் பொதுவான மருத்துவ குணங்கள் ஒத்தனவாக இருந்தாலும் அவற்றின் செயற்திறனில் வேறுபாடுகள் காணப்படும். சிறுகுறிஞ்சாவை விட ஏனையவை வீரியம் குறைந்தவையாகும். யாழ்ப்பாணத்தில் பொதுவாக குறிஞ்சா எனப்படும் பெருங்குறிஞ்சாவே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.

சிறுகுறிஞ்சா நீரிழிவு நோய்நிலையில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அண்மைய ஆய்வுகளும் நீரிழிவில் சிறுகுறிஞ்சா தாக்கம் செலுத்துவதை உறுதிப்படுத்தி உள்ளன.

மூன்று வழிகளில் சிறுகுறிஞ்சா நீரிழிவினைக் கட்டுப்படுத்துவதாக அண்மைய ஆய்வுகள் கூறுகின்றன.

குளுக்கோஸ் குருதியினுள் செல்வதை குறைக்கின்றது. சிறுகுடலில் மாப்பொருள் அடிப்படைக்கூறுகளை (Oligosaccharides) அகத்துறிஞ்சும் செயற்பாட்டைக் குறைப்பதன் மூலம் குருதியில் குளுக்கோஸ் அளவினைக் குறைக்கின்றது.
இன்சுலின் சுரப்பை அதிகரிப்பதன் மூலம்
சித்த மருத்துவத்தில் மேகரோகங்கள் எனும் பிரிவுக்குள்ளேயே மதுமேகம் அடங்குகின்றது. மேகரோகங்களில் முதன்மையாக மதுமேகமே குறிப்பிடப்பட்டிருந்தது எனவும், பிற்காலத்திலேயே பிரமேகம் எனப்படும் பால்வினை நோய்களும் மேகரோகங்களுடன் சேர்க்கப்பட்டதாக “மேகவாகடத் திரட்டு” எனப்படும் தஞ்சாவூர் சரஸ்வதிமகால் நூலின் முன்னுரையில் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு மதுமேக ரோகமானது தோசங்களின் அடிப்படையில் 20 வகைகளாகக் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் மதுமேக நோய்க்கான மருந்துகளில் சிறுகுறிஞ்சா நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை. எனினும் மேகரோகங்களுக்கு பொதுவாக கூறப்படும் மேகசஞ்சீவித்தைலத்தில் சிறுகுறிஞ்சா வேர் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் சிறுகுறிஞ்சாவின் இலை மதுமேக நோயில் ஏற்படக்கூடிய உபத்திரவங்களை தீர்க்கும் என சிறுகுறிஞ்சாவின் மருத்துவ குணங்களைக் சொல்லும் பொதுக்குணப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உபத்திரவங்கள் தொடர்பில் யாழ்ப்பாண சித்தமருத்துவ நூலான செகராசசேகரம் என்னும் நூலில் சில நீரிழிவு நோய் நிலை களின்போது தனியே குறிப்பிடப்பட்டுள்ளது, இவ்வுபத்திர நிலைகளுக்கு தனியே மருந்தும் கூறப்பட்டுள்ளது. அதாவது மதுமேகத்தில் பெருநீர்ச்சலம் (அடிக்கடி அதிகமாக சிறுநீர் கழிதல்), சிறுநீருடன் இரத்தம் போதல் அதனைத் தொடர்ந்து ஏற்படும் உபத்தி ரவங்களாக மேகவெட்டை (உடற் சூடு அதிகரித்தல்), தாகம், நாவரட்சி (வாய் உலர்தல்) என்பன ஏற்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடலிறாஞ்சிஆவிரைவேர்
முந்தவிவை யொன்றொரு நிறையாய் முடாவில
வித்துக் குடித்துவரில்
தொந்தப் பெருநீர்ச்சல மிரத்தந் தொடருங்கழிச்சல் மேகவெட்டை
வந்ததாகம் நாவரட்சி மாறிச்சலமும் மாறிடுமே

— பக்.206, செகராசசேகரம்.

இதே உபத்திரவங்களை உள்ளடக்கி சித்தமருத்துவ நூலான பதார்த்தகுண சிந்தாமணியில் சிறுகுறிஞ்சாக் கொடியின் (இலையின்) மருத்துவக் குணங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்ட பாடல்,

வாதமொடு சீதத்தை நீக்கும்
மறுவுதிர மில்லாத மாதர்க் குறுமுலகி
லத்தி சுரமு மகலாக் கடிவிடமுந்
தத்தி யகலத்தகர்க்குங் தான்

சந்நிசுர மாறாக் கபசுரமும்
பூதலம்விட் டோடப் புரியுங்காண் மாதேகேள்
அக்கரங்கள் தீர்க்கும் அதிசுரந்தா கந்தொலைக்குந்
தக்க சிறுகுறிஞ்சாந் தான்

பக்.114, பதார்த்தகுண சிந்தாமணி.

இங்கு குறிப்பிடப்படுவது, வாதம், குளிர் இவற்றை நீக்கும், மாதாந்த உதிரச்சிக்கல் நீங்கும், வாதசுரம், சன்னிசுரம், மாறாத கபசுரம் உடம்பை விட்டகலும் அதேவேளை மேகரோகங்களில் ஏற்படக்கூடிய (மதுமேகம் உட்பட) அதிசுரம் (மேகவெட்டை), தாகம், அக்கரங்கள் (வாய் உலர்தல், வாய்ப் புண்கள்) என்பவற்றைத் தொலைக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

மேற்படி குறிகுணங்கள் அற்றுப் போகும்போது சிறுகுறிஞ்சாவைத் தொடர்ந்து பயன்படுத்தத் தேவையில்லை அல்லது தொடர்ந்து பயன்படுத்துவது ஆகாது என்பதற்காகவே மதுமேகத்துக்கு சிறுகுறிஞ்சாவானது மருந்தாக நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை. மருந்தாக சிறுகுறிஞ்சாவைப் பயன்படுத்த வேண்டுமானால் மருத்துவரின் ஆலோசனையுடன் பயன்படுத்துதல் வேண்டும்.

சிறுகுறிஞ்சாவின் வீரியத்தன்மைக்கு சிறந்த எடுத்துக்காட்டு சிறுகுறிஞ்சா இலையை வாயில்போட்டு நன்கு மென்று உண்டபின் நாவினால் இனிப்பு சுவையை உணரமுடியாது இருக்கும்.

இவ்வாறான சிறுகுறிஞ்சாவின் செய்கைகளால் இதனை தமிழில் சர்க்கரைகொல்லி என்றும், வடமொழியில் மதுநாசினி என்றும், மலையாளத்தில் இவ்விரண்டு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.

அண்மைய ஆய்வுகள் சிறுகுறிஞ்சாவில் உள்ள தாவர இரசாயனச் சேர்க்கை (*gymnemic acid: phospholipid complex*) ஈரலை (*Liver*) பாதிக்கும் என்பதனைக் காட்டுகின்றன. எனவேதான் தொடர்ச்சியாக அதனை மருந்தாகப் பாவிக்காது சில உபத்திரவ நிலைகளில் மட்டும் பயன்படுத்தக்கூடியவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ஈரல் பாதிப்பு உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனையின் கீழே பயன்படுத்த வேண்டும்.

அதிலும் மருந்தாகப் பயன்படுத்தும்போது தனியே சிறுகுறிஞ்சாவைப் பயன்படுத்தாது வேறு மூலிகைகளுடன் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக மதுமேக நோய்நிலையில் சிறுகுறிஞ்சா இலையோடு இரண்டு மடங்கு தென்னம்பாளையினுள் உள்ள தென்னம்பூ சேர்த்துக்கொள்ளப்படுகின்றது அல்லது நாவல்கொட்டை சம அளவு சேர்த்து மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றது. அளவு, எவ்வளவு காலம் அனுபானம் என்பன சித்தமருத்துவர்களின் ஆலோசனையுடன் பயன்படுத்துதல் வேண்டும்.

## குறிஞ்சா

குறிஞ்சா இலையே பொதுவாக உணவாகப் பயன்படுத்தப்படுவது. சிறுகுறிஞ்சாவை ஒத்த மருத்துவகுணங்கள் இருந்தாலும் சிறுகுறிஞ்சாவுடன் ஒப்பீட்டளவில் அவற்றின் வீரியம் குறைந்ததாகவே காணப்படும். எனினும் குறிஞ்சாவுக்கு என மருத்துவ குணங்கள் பற்றி அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணியில் இவ்வாறு குறிப்பி டப்பட்டுள்ளது.

னிலைநோப் புண்ணே கோரமாம் வாயு வாதம்
குறுகிட வொட்டா தென்று கூறும்வா கடங்க ளெல்லாம்ః

பக்.66, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.

குறிஞ்சாவின் இலை, புண் பெருத்து வலி அதிகரித்துக் கொள்வதைத் தடுக்கும். அதேபோல் வாயு, வாத தோசம் சலனமடைவதைத் தடுக்கும். எனவே குளிர் பருவ காலத்தில் வாத தோசத்தை நிலையாக வைத்திருக்க குறிஞ்சாவை உணவாக உட்கொள்ளல் சிறந்தது. அதாவது முதுவேனில் காலத்தில் (ஆனி - ஆடி) வாத தோசமானது உடலில் ஆரோக்கிய நிலையில் பருவகால மாற்றத்துக்கு ஏற்ப புற - அக (அண்ட - பிண்ட) சமநிலையைப் பேண அதிகரித்து காணப்படும்.

இந்த அதிகரிப்பானது மழைக் காலமான (ஆவணி - புரட்டாதி) காலத்தில் உணவு மாறுபாடு, மற்றும் சூழலின் திடீர் குளிர்ச்சியாலும், பித்ததோசமானது தன்னிலையில் விருத்தியடைந்து ஏனைய இருதோசங்களையும் பாதிப்படைய செய்வதாலும் வாததோசம் விகாரமடைவதன் மூலம் மேலும் விருத்தியடைந்து வாதநோய்களுக்கான உபாதைகளையும், வாத நோய்களையும் ஏற்படுத்தும்.

குளிர்காலமான ஐப்பசி - கார்த்திகையில் உடலானது புறச் சூழலுக்கு இசைவாகி வாததோசம் தன்னிலைக்கு வந்துவிடும். ஆனால் பித்த தோசமானது உடலில் ஆரோக்கியமான அதிகரிப்பைத் (தன்னிலை விருத்தி) தாண்டி அதிகரித்து (பிறநிலை விருத்தி அடைந்து) உபாதைகளை உண்டுபண்ணும். இந்நிலையால் ஏனைய வாதம் மற்றும் கப தோசங்கள் சலனமடைந்து சீரற்று காணப்படும்.

உதாரணமாக, குளிர் காலத்தில் சூழலில் ஏற்படும் குளிர்ச்சியைத் தாங்க, உடலைப்பாதுகாக்க உடலானது கூடுதலாக வெப்பத்தை உருவாக்கும். இச்செயற்பாடு பித்த தோசத்தின் அதிகரிப்பினாலேயே நிகழுகின்றது. வெப்ப உருவாக்கத்துக்காக உடலில் சக்தி கூடுதலாகப் பயன்படுத்தப்படும். இதனால் பசி அதிகரிக்கும். எனவே கூடுதலாக உணவு உட்கொள்ளப்படும்போது உள்ளெடுக்கப்படும் மாப்பொருள் சமிபாடு அடைந்து இறுதி

விளைபொருள் குளுக்கோஸ் குருதியை அடையும். இங்கு குருதியில் குளுக்கோஸ் அதிகரிக்க வாதமானது தூண்டப்பட்டு அதிகரித்து கணையத்தை தூண்டி கூடுதலான இன்சுலினை சுரக்கச்செய்து கொள்ளும். குளுக்கோஸ் அனுசேபத்தின் மூலம் உடலுக்கு தேவையான சக்தி கிடைத்துக்கொள்ளும்.

இங்கு பித்த அதிகரிப்பின்போது வாதமானது அதிகரிக்காவிடின் குளுக்கோசின் செறிவானது குருதியில் அதிகரிக்கும். இந்நிலையே மதுமேகம் எனப்படும். எனவே வாதத்தை அதிகரிக்கக் கூடிய கசப்புச் சுவையுள்ள உணவுகள் கூடுதலாக மதுமேகத்தில் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக பாகற்காய், குருவித்தலைப்பாகல், சுண்டங்கத்தரி, குறிஞ்சா, முசுட்டை, வல்லாரை என்பன.

எனவே பித்த தோசத்தின் மேற்படி அதிகரிப்பை குறைத்துக்கொள்ள கைப்பு, துவர்ப்பு, இனிப்பு சுவையுள்ள உணவுகளை இக்காலப்பகுதிகளில் (ஐப்பசி கார்த்திகை) உட்கொள்ள வேண்டும். இதன் மூலம் மூன்று தோசங்களையும் சமநிலையில் வைத்திருப்பதோடு பருவகால மாற்றங்களால் ஏற்படும் உடற்பாதிப்புக்களை குறைத்துக்கொள்ளலாம். முக்கியமாக அனுசேப செயற்பாடுகளில் ஏற்படும் மாறுபாடுகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

இதனாலேயே நமது பாரம்பரியத்தில் மேற்படி காலங்களில் பருவகால உணவாக பிட்டுடன் கலந்து, கறிவகைகளில் வறையாகக் குறிஞ்சா அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.

பாரம்பரிய உணவில் சிறுகுறிஞ்சா (*Gymnema sylvestre*) சாதாரணமாகப் பயன்படுத்துவதில்லை. பிரத்தியேகமாகப் மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றது.

(குறிப்பு - பருவகால மாதங்கள் அனைத்தும் தமிழ் மாதங்கள் ஆகும்).

## வல்லாரை (யோசனைவல்லி)



**வல்லாரை**

Image Source - tamil.samayam.com

உடலைத் தேற்றக்கூடியது, உடலை வன்மையாக வைத்திருக்கக்கூடியது. சிறந்த ஞாபகசக்தியைத் தரக்கூடியதுடன் மனநலத்தைக்காக்கும் குணம் கொண்டது.

வல்லாரை துவர்ப்பு, கைப்பு, இனிப்பு சுவைகளைக் கொண்டது. சித்தமருத்துவ தத்துவங்களின் படி பித்த தோசத்தை சமப்படுத்தக் கூடியது. மதுமேக நோயில் சிறந்த பலனைத் தரக்கூடியது.

**வல்லாரையானது நோய்களைப் போக்குவது போல் நோய் அணுகாதிருக்கவும் செய்வதுடன், உடலை நரை, திரை, மூப்பின்றி வைத்திருக்க கற்பமாகவும் (Antioxidant) தொழிற்படும்.**



வல்லாரை யிலையை யுண்ண மடிந்திடும் பயித்தி யங்கள்
அல்லாத கறைக்கி ராணி யனலுடன் பெரிப்பு மேகம்
பொல்லாத மற்று நோய்கள் போமென நந்திக் கந்நாள்
எல்லார்க்கு முதல்வ னாய விறைபர்ந் திட்ட வாறே

பக்.67, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.

வல்லாரை இலையை உண்ண பயித்திய ரோகங்கள் (பித்த தோஷத்தால் ஏற்படும் ரோகங்கள்) மடிந்திடும். குருதியில் உள்ள குறைபாடுகள், வயிற்றுக்கடுப்பு, கழிச்சல், மேக ரோகம் (மதுமேகம்) இவை போன்ற ஏனைய நோய்களும் குணமாகுமென நந்திதேவருக்கு முதற்சித்தனான சிவன் அருளினார் எனப்பாடல் குறிப்பிடுகின்றது.

வல்லாரையானது மேற்குறிப்பிட்ட பாடலில் குறிப்பிட்டது போல உடல் ஆரோக்கியத்துக்கு எல்லா வகையிலும் உதவுகின்றது. குறிப்பாக தோல் நோய்கள், புண் (காயம்), கட்டி, வீக்கம், கண்டமாலை, சுரங்கள், இளைப்பு, யானைக்கால் நோய் எனப் பல்வேறு நோய்களுக்கும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் வல்லாரையானது நோய்களைப் போக்குவது போல் நோய் அணுகாதிருக்கவும் செய்வதுடன், உடலை நரை, திரை, மூப்பின்றி வைத்திருக்க கற்பமாகவும் (Antioxidant) தொழிற்படும். இவற்றுக்கு வல்லாரையில் அதிகம் உள்ள உயிர்ச்சத்து C, உயிர்ச்சத்து A, மற்றும் வல்லாரையில் உள்ள Phenolics வகை தாவர இரசாயனங்களும் ஆகும்.

இதனையே “தேரையர் வெண்பா”, “தேரையர் காப்பியம்”, உள்ள பாடல்கள் குறிப்பிடுகின்றன.

வல்லாரை கற்பமுண வல்லாரை யார்நிகர்வார்
கல்லாரைப் போலக் கலங்காமல் வல்லாரைச்
சாறு மிலவணமுஞ் சாதிபத்திரி யுமுண்ணப்
பேருமடி வல்லலைப் பிணி

பக்.168, தேரையர் வெண்பா.

சித்தமருத்துவத்தில் கற்பமுறையானது விசேட சிகிச்சை முறையாகக் காணப்படுகின்றது. இம்முறையில் வல்லாரையை உட்கொள்ளும்போது மூளையானது சிறப்பாகச் செயற்படும். இவ்வல்லாரைச் சாற்றுடன் சாதிபத்திரி மற்றும் உப்பு சேர்த்து கற்பமுறையில் உண்ண பெருவயிறு, வயிற்றுவலி தீரும்.

இது மருத்துவமுறை. மருத்துவரின் ஆலோசனையின்படி உண்ண வேண்டியது. வல்லாரையின் சிறப்பினை எடுத்துக்காட்டவே இங்கு தரப்பட்டுள்ளது.

வல்லாரை யினிலை மருவுகற்ப மாய்க்கொள்
வெல்லாப் பிணிகளு மிலாமையா மெய்யினில்

பக்.12, தேரையர் காப்பியம்.

வல்லாரை இலையை கற்பமாக உண்ண எல்லாப் பிணிகளும் உடலில் இல்லாது போகும்.

எனவே இவ்வாறு பல பயன்களைக் கொண்ட வல்லாரைக் கீரையினை உணவில் அடிக்கடி சேர்த்துக்கொள்ளல் வேண்டும். இவ்வளவு பயன்களையும் கொண்ட வல்லாரையை இலகுவாக வீட்டிலேயே வளர்த்துக்கொள்ளலாம்.

## பிரண்டை



பிரண்டை
Image Source - mediyaan.com

சமையலில் அருகிவரும் வச்சிரவல்லி என அழைக்கப்படும் பிரண்டை நிறைந்த கல்சியத்தையும் நார்ச்சத்தையும் கொண்டது. உடலை உறுதியாக வைத்திருக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருப்பதால் இதனை வஜ்ரவல்லி என அழைப்பர்.
பொதுவாகப் பிரண்டையைத் துவையலாகச் செய்து உணவுடன் உட்கொள்வர். இவ்வாறு

துவையல் செய்வதற்கு பிரண்டையைப் பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டிய விட யங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

பிரண்டையின் துளிர்களையும், இலைகளையும் பயன்படுத்த வேண்டும்.
துளிர்களை நன்றாகக் கழுவியபின் சிறிது சிறிதாக நறுக்கி பசு நெய்யினில் வறுத்த பின்னரே பயன்படுத்த வேண்டும். இல்லையேல் சுணையுடன் கூடிய கடி வாயினில், உடம்பினில் சிலருக்கு ஏற்படலாம்.
புதிதாக உண்பவர்கள் சிறிது உண்டு பார்த்து அதன் பின்னரே உண்ண வேண்டும்.
ஏனைய கறிகளைப் போன்று அதிகம் உண்ணுதல் கூடாது. சம்பல் போன்று சிறிதளவாக உண்ணலாம்.
பிரண்டையில் உணவு தயாரிக்கும் போது மிளகு, நற்சீரகம், உள்ளி போன்ற திரிதோச சமதிரவியங்கள் அதிகம் சேர்த்துக்கொள்ளலாம்.
முக்கியமாக நெய்யில் வறுத்துக்கொள்ள வேண்டும் என பின்வரும் பாடல் கூறுகின்றது.

பிரண்டையைநெய்யால்வறுத்துப் பின்ரைத்து மாதே!
வெருண்டிடா தேற்று விழுங்கில் அரண்டுவரும்
மூலத் தினவடங்கும் மூலவி ரத்தமறும்
ஞாலத்தி னுள்ளே நவில்

— பக்.675, பதார்த்த குணபாடம்.

மூலநோயில் பிரண்டையை நெய்யில் வறுத்து அரைத்து உண்கில் மூலத் தினவு, மூலத்தால் இரத்தம் போதல் என்பன மாறும்.

பிரண்டையின் மருத்துவக் குணங்கள் தொடர்பில் யாழ்ப்பாண நூலாகிய அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணியில் பின்வருமாறு குறிப்பி டப்பட்டுள்ளது.

குணத்தை யோதிற் பித்தமாம் வாயு மந்தம்
திரண்டமார் வலியே குன்மஞ் சேட்டுமஞ் சூலை வாதம்
வெருண்டநாய் நரிக டித்த விடமகோ தரமே மூலம்
உருண்டுபோ மற்று நோயு மோடுமென் றோதி னாரே

பக்.68, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.



உடலிற் சோம்பல், களைப்பு, மார்பு (இதய) வலி, குன்மம் (வயிற்றுப்புண்), வலி, வாத, பித்த, கப அதிகரிப்பு, நாய் நரி கடிவிசம், பெருவயிறு, மூலம் என்பன இல்லாமற் போகும் போகும்.

பிரண்டையில் கல்சியம், உலர்ந்த இலையில் - 1.68g/100g, உலர்ந்த தண்டில் - 1.76g/100g, உலர்ந்த வேரில் - 1.51g/100g காணப்படுகின்றது. ஒரு நாளைக்கு தேவைப்படும் கல்சியத்தின் அளவு 1g. கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், பொதுவாகப் பெண்களுக்கு 50 வயதுகளின் பின் சராசரியாக 1.2 g தேவைப்படும். ஏனைய உணவுகளுடன் பிரண்டையினை உணவில் சேர்த்துக்கொள்ளும்போது உடலுக்குத் தேவையான கல்சியமானது தாராளமாகக் கிடைக்கும்.

உடலில் கல்சியத்தின் தொழிற்பாடுகள் ஆவன,

உடற் கலங்களின் ஒழுங்கான செயற்பாட்டுக்கு அவசியம். தசைகள், இதயம், நரம்பு இழையங்களின் தொழிற்பாட்டுக்கு அவசியம். என்பு வளர்ச்சிக்கு அவசியமானது.
இதேபோல் பொஸ்பரஸ்,

உலர்ந்த இலையில் - 1.42g/100g
உலர்ந்த தண்டில் - 1.82g/100g
உலர்ந்த வேரில் - 1.26g/100g காணப்படுகின்றது.
சராசரியாக ஒரு நாளைக்குத் தேவைப்படும் பொஸ்பரஸ் 0.4g. என்பு வளர்ச்சிக்கும் பற்களின் வளர்ச்சிக்கும் பொஸ்பரஸ் அவசியமானதாகும்.

பிரண்டையானது பாரம்பரியமாக துவையலாக உணவுடன் சேர்த்துக்கொள்ளப்படுகின்றது. பிரண்டையின் முக்கியத்துவத்தை அறிந்தே வாழ்வியல் சடங்குகளில் குருக்களுக்கு தான உணவுப் பொருட்களுடன் பிரண்டையும்

சேர்த்து வழங்கப்படு கின்றது. பிரண்டையை இலகுவாக நாளாந்தம் பயன்படுத்த பிரண்டை வடகம் சிறந்தது. இதனை தேரையர் காப்பியத்தில் இவ்வாறு குறிப்பி டப்பட்டுள்ளது.

**சமையலில் அருகிவரும் வச்சிரவல்லி என அழைக்கப்படும் பிரண்டை, நிறைந்த கல்சியத்தையும் நார்ச்சத்தையும் கொண்டது. உடலை உறுதியாக வைத்திருக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருப்பதால் இதனை வஜ்ரவல்லி என அழைப்பர்.**

வச்சிரவல்லி வடகந் தனைத்தின
வுச்சித மாக வொழியுங் கபப்பிணி

பக்.20, தேரையர் காப்பியம்.

வச்சிரவல்லி வடகத்தை தினமும் உண்டுவர கப தோசத்தால் வந்த பிணிகளெல்லாம் ஒழியும். மேலும்,

வச்சிரவல்லி வடகமதைச் சொல்வேன்
மந்தவாய்வு மகோதரம் வல்லைபோம்
மார்வலித்தல் உளைத்தல் கடுத்தல்போம்
வைகலும் திடமாம் உடலினுக்கே...

வச்சிரவல்லி வடகத்தை உண்டுவர மந்தத்துடன் கூடியவாயு, பெருவயிறு, வயிற்றுவலி என்பன தீரும். அதேபோல் நெஞ்சில் ஏற்படும் வலி, உளைவு, கடுப்பு என்பனவும் தீரும். இவற்றுடன் உடல் வன்மை பெறும்.

பிரண்டை வடகம் செய்யும் முறை

பச்சைப்பிரண்டைகொய்து பாண்டத்திட்டு
நிறைத்தக் கிரத்தால் இருபகல்கழித்து
நற்கதிர்பசை யதில்கொளப் பானுவிலீர்பகல்
வச்சுலர்த்தி யதைநிறுத் தந்நிறை
மன்னுபாத அரிதகி சுக்குகொள்
மாடமஞ்சள் மிளகுளி சீரகம்
வாய்விளங்க மிலவண மிப்பொருள்
உச்சநீச மிலாமனி றுத்ததி
லூறுகாடி சலமிட்டரைத்ததை
ஒக்கநையப் பிசைந்து வடகஞ்செய்
துலரவைத்தெடுத்துக் கொள்ள லாகுமே

பக்.20, தேரையர் காப்பியம்.

பச்சையாகப் பிரண்டையை நறுக்கி ஒரு பாத்திரத்திலிட்டு பிரண்டை மூழ்குமாறு பசுவின் மோர்விட்டு அதிலுள்ள பசைபோகுமாறு இரண்டு நாள் வெயிலில் வைத்துலர்த்தி பின் அதில் 100 கிராம் நிறுத்து எடுத்து நன்கு தூளாக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

கடுக்காய், சுக்கு, கொள்ளு, மஞ்சள், மிளகு, உள்ளி, சீரகம், வாய்விடங்கம், உப்பு என்பன 10 கிராம் வீதம் எடுத்து அரிசி கழுவிய நீரில் அரைத்து எடுத்து மோரில் ஊறவிட்டு காயவைத்த பிரண்டைத் தூளுடன் பிசைந்து வடகமாக்கிக் கொள்ள வேண்டும்.

பிரண்டை வடகத்தினை நெய்யில் பொரித்து உண்ணுதல் நன்று.

## முருங்கை

“முருங்கை நட்டவன் வெறுங் கையோடு போவான்” என்ற பழமொழி மூலம் முருங்கை மரத்தின் பயனையும் அதன் இலைகளின் பயனையும் அறிந்து கொள்ளலாம். முருங்கை மரத்தை நட்டு வளர்த்து அதன் பயன்களை அனுபவித்தவன் உடற் திடகாத்திரத்தோடு கைத்தடி இன்றி எவர் உதவியும் இன்றி ஆரோக்கியமாக இருப்பான் என்பதே இப்பழமொழியின் கருத்தாகும்.

முருங்கையின் இலை, காய் என்பன உணவாகப் பயன்படுவது போல ஏனைய பகுதிகளும் மருந்தாகப் பயன்படுகின்றன.

உண்டிடு முருங்கை தன்னி லுறுமிலை வாயு மந்தம்
அண்டிடா மயக்கந் தீர்க்கு மணுகிடும் பித்தம் பூவால்
கண்டகண் பசாட்டி னோடு கருங்கணோய்ப் படலம் போகும்
மண்டுகாய் பெலனுண் டாக்கு மறுவில்பத் தியத்திற் காமே

பக்.79, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.

முருங்கையிலை வாயு, மந்தம் ஏற்படாமல் தடுக்கும். பித்த தோச அதிகரிப்பால் சோர்வு, மயக்கம் ஏற்படாமல் தடுத்திடும். பூவினால் கண்ணில் பசாடு வளர்தல், கண்ணோய்களும் போகும். முருங்கைக்காயினால் உடலுக்கு நல்ல பலமுண்டாகும். இது மறுபத்தியத்துக்கு உகந்ததாகும். அதாவது நோய்கள் ஏற்பட்டு மாறியவுடன் உடலைத் தேற்றுவதற்கு





முருங்கை

Image Source - mediyaan.com

உகந்ததாகும். தேரையர் காப்பியத்திலும் முருங்கை உடலுக்கு வன்மையைத் தந்து நோய்களைப் போக்கும் எனக் குறிப்பி டப்பட்டுள்ளது.

முருங்கைக் காய்கறி முகிழிலை வேர்கொள
வொருங்குள நோயெலா மோடவுந் துரத்துமே
— பக்.22, தேரையர் காப்பியம்.

முருங்கைக்காய், பூ, இலை, வேர் என்பனவற்றை உணவாகவும் மருந்தாகவும் உட்கொள்ள, உடலை ஒழுங்காக்கி நோய்கள் எல்லாவற்றை யும் துரத்தும் எனக் குறிப்பிடப்படுகின்றது. முருங்கைப்பூவானது விந்துற்பத்தியை அதிகரிக்கும்.

முருங்கை அதிகளவிலான ஊட்டச்சத்துக்க ளைக் கொண்டது. கறிமுருங்கை இலை நிறைந்த இரும்பு, கல்சியத்தையும், பல அமினோஅமிலங்கள் நிறைந்த புரதத்தையும் கொண்டது. எனினும் நாம் பச்சையாக உள்ளெடுக்கும்போது கிடைக்கும் அளவைவிட இலைகளை உலரவைத்து தூளாக்கி எடுக்கும்போது நிறைந்த ஊட்டச்சத்துக்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். அத்துடன் மிக மலிவானதும், இலகுவாக வீட்டில் தயாரிக்கக் கூடியதும் ஆகும்.

## பொன்னாங்காணி

மிகவும் குளிர்ச்சியைத் தரக்கூடிய கீரைவகை களில் முக்கியமானது. தற்காலத்தில் இதனைப் பயன்படுத்துவதும் குறைந்து வருகின்றது. ஆனால் உண்மையில் தற்கால நோய்களுக்கு குறிப்பாக நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு சிறந்தது.

அதிகமாம் பொன்னாங் காணிக் கரோசிநீர்க் கடுப்புப் பித்தம்
முதிர்சல ரோகங் கண்ணோய் மூலம்பீ னிசங்க யம்போம்
குதியினில் வாத மோடு கொடியபீ லிகையும் போகும்
மதுரமா முண்ணக் காந்தன் மாறிடுங் குளிர்ச்சி யுண்டாம்
பக்.72, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி

பொன்னாங்காணியால் பசியின்மை, உணவில் வெறுப்பு, சிறுநீர்க்கடுப்பு, அதிக பித்தம், சலரோகம், கண்ணோய், மூலம், பீனிசம், கசம், குதிக்கால் வாதம், மண்ணீரலில் ஏற்படும் வீக்கத்தால் ஏற்படும் கொடிய வயற்றுவலி என்பன தீருவதுடன் உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும்.

பொன்னாங்காணியில் அதிகமாக கல்சியம், இரும்பு, பொஸ்பரஸ், பொட்டாசியம், நாகம், மக்னீசியம், சோடியம் அதிகளவில் காணப்படுகின்றன. குருதிச்சோகை ஏற்படாமல் தடுக்கும்.

பொன்னாங்காணியும் கற்ப (Antioxidant) மூலிகைகளுள் ஒன்றாகும். கண்களுக்குச் சிறந்த ஆரோக்கியத்தை தந்து கண்ணில் ஏற்படும் நோய்கள் குணமாக உதவும். முடிவளர்ச்சியை அதிகரிக்கும். கற்ப முறையில் நாற்பது நாட்கள் உப்பின்றி வேகவைத்து வெண்ணெய்யில்

உண்டுவர கண்களுக்கு ஆரோக்கியத்தைத் அதிகம் தரும்.

தினந்தோறும் பொன்னாங்காணியை சீராக உண்டுவரின் நோய்களெல்லாம் குணமாகும் என தேரையர் காப்பியம் கூறுகின்றது.

> சீதையை நாடோறுஞ் சீரண வுண்டிடக்
> காதை சேர் நோயலாங் காதமோ டிடுமே
> —பக்.10, தேரையர் காப்பியம்.

## மொசுமொசுக்கை / முசுமுசுக்கை

> ... தேடுநன் முசுமு சுக்கை சேடமே வரட்சி தாகம்
> ஓடரு மிருமல் பித்த முழலையே சுரத்தை மாற்றும்
> பக்.72, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.

நாவரட்சி, தாகம், சளி, இருமல், அழல், சுரம் என்பவற்றை மாற்றும். பொதுவாக பித்த, கப தோச நோய்களை மாற்றும். தனியாக சம்பலாக அரைத்து அல்லது இலைகளை இரசத்துடன் சேர்த்து உணவுடன் உட்கொள்ளலாம்.

## அகத்தி

யாழ்ப்பாண பாரம்பரிய உணவுப்பழக்கத்தில் கோடைகாலங்களில் உடலில் அதிக வெப்பத்தினால் உண்டாகும் உபாதைகளின் போது, அகத்தி இலை சொதியுடன் சேர்த்து பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக வாய்ப்புண், வயிற்றுப்புண் போன்றவற்றுக்கு சிறந்தது. உடலுக்கு குளிர்ச்சியைத் தரக்கூடியது. பித்தத்தினால் ஏற்படும் ரோகங்களுக்கு மருத்துவம் செய்ய சிறந்தது. மேற்படி விடயங்களை யாழ்ப்பாண நூலாகிய சொக்கநாதர் தன்வந்திரியம் எனும் நூல் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

> பசிய பச்சிலை சீதம் பழுப்பினால்
> நசியஞ் செய்யப் பயித்தியந் நாடிடாக்
> கசியும் பூவிலை பிஞ்சுங் கறிபண்ணிப்
> பொசிய கத்தி பயித்தியம் போக்குமே
> —பக்.8, சொக்கநாதர் தன்வந்திரியம்

அகத்தியை எவ்வாறு சமைத்து உண்டால் மேற்படி பலன்களைப் பெறலாம் என்று தேரையர் வெண்பா பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

> தன்னை யெழுப்பிடுபித் தப்பிணி களைத்தீர்க்கும்
> பின்னும் பசியைப் பெருக்குமே பன்னமுதல்
> நிச்சயமா கப்புளிபுன் னோர்கறியா ணத்தருந்தும்
> அச்சமச்ச மாகியப யம்
> பக்.133, தேரையர் வெண்பா.

அதாவது அச்சம் தரும் பித்தப் பிணிகளைத் தீர்க்கும். பசியை அதிகரிக்கும். புளியுடன் அகத்தி இலைகளை குழம்பாக்கி உண்ண மேற்படி பலன்களை நிச்சயமாகப் பெறலாம் என்கின்றது பாடல்.
ஆனால் அகத்தியானது பொதுவாக மருந்துக்கு (நோய்க்கு அல்ல) அபத்திய உணவாகவே காணப்படுகின்றது. எனவே நோயுற்றவர்களுக்கு மருந்துண்ணுங் காலத்தில் அகத்தி உணவில் சேர்த்தல் ஆகாது.

இவற்றைவிட பல்வேறு கீரைவகைகள், இலைவகைகள் நமது பாரம்பரியத்தில் உணவாக உட்கொள்ளப்பட்டு வந்துள்ளன, உட்கொள்ளப்படுகின்றன. அந்தவகையில் தவசி முருங்கை, சண்டிஇலை, வாதநாரணி, பனங்கீரை, கற்றாளைப் பூந்துணர், வாதமடக்கி, கறிமுல்லை, பூசினி இலை எனப் பலவகைகள் காணப்படுகின்றன. பொதுவாக கீரைவகைகள், இலை வகைகளை உண்ணும்போது அளவில் அதிகமாகவும் அதேவேளை தொடர்ச்சியாக ஒரே வகையானவற்றை உண்ணாது மாறி மாறி அனைத்தையும் பயன்படுத்துதல் நன்று. அதேபோல் பருவகாலங்களில் கிடைக்கும் கீரைவகைகள் இலைவகைகள் என்பனவற்றை நமது பாரம்பரிய முறைப்படி உணவாகக் கொள்ளுவதன் மூலம் சிறந்தபலனை அடையக்கூடியதாக இருக்கும். குறிப்பாகத் தொற்றா நோய்களின் தாக்கம் குறையும்.

(தொடரும்)



இந்தியவம்சாவழி தொழிலாளர்களின் இலங்கை வருகை, அவர்களின் பிரஜாவுரிமை போன்ற பல விடயங்கள் தொடர்பேசுப்பொருளாக அமைந்திருக்கின்றன. ஆனால் கோப்பி பயிர்செய்கைக்குப் பின்னரான இந்தியவம்சாவழித் தமிழரின் வாழ்க்கை சூழல் எவ்வாறு அமைந்ததென ஒரு சில ஆய்வுகளே வெளிவந்துள்ளன. ”கண்டி சீமையிலே2 – சதிகளையும் சூழ்ச்சிகளையும் கடந்த வரலாறு என்ற இந்த வரலாற்றுத்தொடர் அந்த இடைவெளியை நிரப்புவதாக அமைகின்றது. இலங்கையில் கோப்பிப்பயிர்செய்கை முடிவுற்று தேயிலை பயிர்செய்கைக்கான ஆரம்பத்தினை எடுத்துக்கூறுகின்றது. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்திய வம்சாவழித் தமிழர்கள் தேயிலை தோட்டங்களில் பட்ட இன்னல்களையும் இடர்களையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது. கண்டி சீமைக்கு அழைத்துவரப்பட்ட தொழிலாளர்களின் உண்மை நிலையினை வரலாற்றுப் பார்வையினூடாக ஆதாரங்களுடன் எடுத்தியம்புகின்றது. இது வெறுமனே மக்களின் வாழ்வியல் பிரச்சினைசார் விடயங்களை மாத்திரம் தெளிவுப்படுத்தாமல், தொழில்சார், அரசியல், பொருளாதார, சமூகம் சார்ந்த பல்பரிமாண அம்சங்களினை வெளிகொணர்வதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திராவிடர் எழுச்சிக் குரல்களின் தாக்கம்




**இரா. சடகோபன்**

இரா. சடகோபன் என்று எழுத்து உலகில் அறியப்பட்ட இராமையா சடகோபன் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் புவியியல் சிறப்பு பட்டதாரி ஆவார். அதன்பின் ஒரு சட்டத்தரணியாக தன்னை உயர்த்திக் கொண்ட இவர் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் மூன்று நூல்களுக்குத் தேசிய சாகித்திய விருதுகளையும் பெற்றுள்ளார்.

விஜய் சிறுவர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரான இவர், ‘சுகவாழ்வு’ சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் ஆவார். இதனைத் தவிர மலையக மக்கள் மேம்பாடு தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். சடகோபன் ஊடகத்துறையில் ஆற்றிய பணிக்காகச் சிறந்த ஊடகவியலாளருக்கான ஜனாதிபதி விருதையும் பெற்றுள்ளார்


மன்னர் காலத்திற்குப் பின்னர் “நாம் தமிழ் இனம்” என்ற பிரக்ஞை தமிழ்நாட்டில் சுதந்திர இயக்கப் போராட்டங்களுடன் இணைந்தே மீண்டும் எழுச்சி பெற்றது. இதன் பிரதிபலிப்புகள் இலங்கையிலும் காணப்பட்டன. இத்தகு எழுச்சி தமிழ்நாட்டில் பார்ப்பனருக்கு எதிரான எழுச்சியுடன் ஆரம்பமாகிறது. இவ்வெழுச்சிக்குக் காரணமாக “தமிழன்” மற்றும் “திராவிடன்” என்ற மனவெழுச்சி ஏற்படுத்திய பிரவாகம் இருக்கிறது.

இந்த மனவெழுச்சியுடன் இணைந்து பிராமணர்களுக்கு எதிரான “சுயமரியாதை” இயக்கம் 1925 ஆம் ஆண்டு ஆரம்பமானது. இந்த எழுச்சியின் தந்தையாக இருந்தவர் “ஈவேரா” என்று சுருக்கமாக அழைக்கப்படும் ஈ. வே. ராமசாமி நாயக்கர் ஆவார். இவர் பின்னர் தந்தை பெரியார் என்றும் அழைக்கப்பட்டார். இவர் 1879 ஆம் ஆண்டு ஒரு வர்த்தகரின் குடும்பத்தில் பிறந்தார். சிறு வயது முதலே இவர் சாதிக் கட்டுப்பாடுகளை மீறி அதனை உடைத்தெறிவதில் முனைப்புக் காட்டினார். அதன் பின்னர் இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்து இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற போதும் மெட்ராஸ் காங்கிரஸ் தலைவர்களின் பார்ப்பனியச் செயற்பாடுகளுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினார். காங்கிரஸ் தலைமைத்துவத்திற்குள் காணப்பட்ட பார்ப்பனிய மேட்டுக்குடி எண்ணங்கள், சமூகப் பிற்போக்குத்தனங்கள், கடவுள் தத்துவம், மூடநம்பிக்கைகள், சமூக ஒடுக்குமுறைமை என்பவைகளுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கினார். அரசியல் விடுதலை மூலம் பார்ப்பனியத் தலைமைகள் உருவாவதைக் கடுமையாக எதிர்த்தார்.

இதனால் பார்ப்பனியர்கள் அல்லாத ஏனைய சமூக அடிமட்டப் பிரிவினரை ஒன்று திரட்டி மூடநம்பிக்கைகளுக்கு எதிரான ஒரு சமூகத்தை உருவாக்கப்பாடுபட்டார். அவர் தனது கொள்கைகளை இந்தியாவுக்கு வெளியிலும் பரப்புரைகள் செய்வதற்காக 1932 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அந்த விஜயத்தின்போது கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்து இந்துத்துவக்

கடவுள் நம்பிக்கைகளுக்கு எதிராகவும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகவும் இந்து சமயத்தில் பிராமணிய ஆதிக்கத்துக்கு எதிராகவும் பகுத்தறிவுவாதத்தை முன்வைத்து பிரசங்கங்கள் மேற்கொண்டார். அவரது வாதங்கள் சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக மக்கள் அணிதிரள வேண்டும் என்பதையும் வலியுறுத்தின. பெரியாரின் பகுத்தறிவு வாதக் கருத்துக்கள் இலங்கையில் ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்கள் மத்தியில் பெரிதும் பிரபல்யம் பெற்றது. அதன் காரணமாக யாழ்ப்பாணத்திலும் மலையகத்திலும் திராவிட இயக்கங்கள், சங்கங்கள் தோன்றின. 1930 களை தொடர்ந்தும் 1940 களின் முற்பகுதியிலும் பெரியாரின் பகுத்தறிவுவாத இயக்கம், பிராமணியத்துக்கு எதிரான போராட்டம், சுயமரியாதைப் போராட்டம் என்பன தமிழ்நாட்டில் பலமாக வேரூன்றின. அதனுடன் சேர்ந்து அறிஞர் அண்ணாதுரையின் திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்து “தமிழ்நாடு தமிழனுக்கே” என்ற கோஷத்தை முன்வைத்தது. இந்திய தேசிய காங்கிரஸில் வேரூன்றிக் கொண்டிருந்த ஆரியர் மேலாதிக்கத்துக்கு எதிராகவும் இவர்கள் கோஷங்களைப் பலமாக முன் வைத்தனர்.

**தமிழர் எழுச்சிகள் 1930 களிலும் மற்றும் 1940 களிலும் தமிழர்தம் கலாசாரம், சமூகச் சீர்திருத்தம் போன்றவற்றின் அவசியம் தொடர்பில் உரத்துக் குரல் எழுப்பக் காரணமாக அமைந்தன. இந்தக் குரல்கள் இலங்கை யின் தலைநகர் கொழும்பிலும் மலைநாட்டின் பெருந்தோட்டப் பகுதிகளிலும் கூட ஒலிக்கத் தொடங்கின. பெரியாரின் சுயமரியாதை இயக்கம் மற்றும் திராவிட இயக்கம் என்பன கொழும்பிலும் மலை நாட்டிலும் எழுச்சிக் குழுக்களை உருவாக்கின.**


இத்தகைய தமிழர் எழுச்சிகள் 1930 களிலும் மற்றும் 1940 களிலும் தமிழர்தம் கலாசாரம், சமூகச் சீர்திருத்தம் போன்றவற்றின் அவசியம் தொடர்பில் உரத்துக் குரல் எழுப்பக் காரணமாக அமைந்தன. இந்தக் குரல்கள் இலங்கையின் தலைநகர் கொழும்பிலும் மலைநாட்டின் பெருந்தோட்டப் பகுதிகளிலும் கூட ஒலிக்கத் தொடங்கின. பெரியாரின் சுயமரியாதை இயக்கம் மற்றும் திராவிட இயக்கம் என்பன கொழும்பிலும் மலை நாட்டிலும் எழுச்சிக் குழுக்களை உருவாக்கின. இத்தகைய குழுக்களில் சமையல் தொழில்புரிபவர்கள், சவரத் தொழிலாளர்கள், வீட்டுப் பணியாளர்கள், ரிக்சா ஓட்டுபவர்கள், உணவகப் பணியாளர்கள், வீட்டுத் தோட்ட வேலையாளர்கள், போத்தல் - சாக்கு - இரும்பு சேகரிப்பவர்கள் முதலானோர் பங்குபற்றினர். விரைவிலேயே இந்த இயக்கம் பெருந்தோட்டத் துறைக்கும் பரவியது. 1945 ஆம் ஆண்டில் இந்தத் திராவிட இயக்கத்துக்கு இலங்கைத் திராவிடக் கூட்டமைப்பு என்று பெயரிடப்பட்டது. அது 1948 ஆம் ஆண்டு இலங்கைத் திராவிடக் கழகம் என்று உருமாற்றம் அடைந்தது. 1949 ஆம் ஆண்டு அது திராவிட முன்னேற்றக்கழகமாக மாறி டி. எம். கே. என்று சுருக்கமாக அழைக்கப்பட்டது. இது பின்னர் ஏ. இளஞ்செழியனை செயலாளராகக் கொண்டு தனது கூட்டங்களை கண்டி, தலவாக்கலை போன்ற நகரங்களில் ஏற்பாடு செய்தது. இளஞ்செழியன் ஒரு ஹோட்டல் தொழிலாளியாகவே தனது வாழ்க்கையை ஆரம்பித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் எழுச்சி அடைந்த தேசிய மக்கள் இயக்கங்களின் செயற்பாடுகள் மற்றும் மக்களைப் பெருந்திரளாக இணைத்துக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் என்பன இலங்கைத் தேசிய விடுதலைப் போராட்டத்திலும் பிரதிபலித்ததுடன் இந்தியப் பெருந்தோட்டத் தொழிலாளர் மத்தியிலும் செல்வாக்குச் செலுத்தியதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவ்வப்போது நிகழ்ந்த, செல்வாக்கு மிக்க இந்தியத் தலைவர்களின் இலங்கை வருகைகள், இலங்கையில் வசித்த இந்திய வம்சாவழி மக்களின் மோசமான வாழ்க்கை நிலையை வெளி உலகத்திற்கு எடுத்துச் சொல்ல பெறும் வாய்ப்புகளாக அமைந்தன. குறிப்பாக அவர்கள் இலங்கை மத்திய மலைநாட்டில் கூலித் தொழிலாளர்களாக கடுமையான கெடுபிடிகளுக்கு மத்தியில் தொழில் புரிந்த மக்களைப்பற்றி வெளியுலகத்திற்கு பிரசாரம் செய்தார்கள். இதனால் அந்தத் தொழிலாளர்கள் எந்த அளவுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டு விலங்குகள் போல் நடத்தப்படுகிறார்கள் என்பது வெளியுலகத்திற்குத் தெரிய வந்தது.

இந்தியத் தேசிய விடுதலை அமைப்புகளுக்கு அப்பால் சமூகச் சீர்திருத்தம், சமூக ஒடுக்குமுறை, உயர் சாதி - கீழ்சாதி வேறுபாடுகள், தீண்டாமை முதலான சமூகப் பாகுபாடுகளுக்கு எதிராக போராட்டங்கள் மேற்கொண்ட பல அமைப்புகளும் இலங்கை வாழ் பெருந்தோட்ட மக்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வு ஏற்படுவது தொடர்பில் கரிசனை கொண்டிருந்தன.

பிற்காலத்தில் ஏற்பட்ட பல்வேறு சமூக மாற்றங்களுக்கு இவை அடிப்படை ஊக்குவிப்புகளாக அமைந்தன. எனினும் மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் வசித்த காலத்தில் அங்கிருந்த இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராக போராட்டங்கள் மேற்கொண்டதுபோல் இலங்கையின் மத்திய மலைநாட்டில் இவ்விதம் இந்தியத் தொழிலாளர்கள் துன்பப்படுகிறார்கள் என்று தெரிந்திருந்தும் அதுபற்றி அவரது இலங்கை விஜயத்தின்போது ஒன்றுமே குறிப்பிடவில்லை. அவர் இந்தியா சென்ற பின்னரும் அது தொடர்பில் ஒன்றுமே செய்யாமல் விட்டது ஒரு குறைபாடாகவே தென்படுகிறது என்று பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எது எப்படி இருந்த போதும் இலங்கையின் பிரித்தானிய அரச அதிகாரிகளும் பெருந்தோட்டச் சொந்தக்காரர்களும் அரச இயந்திரத்துக்குள் கடுமையான சட்டதிட்டங்களை அமுல்படுத்தி, தொழிலாளரைக் கசக்கிப் பிழிந்து பெருந்தோட்டத் துறையிலிருந்து உச்ச இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தனரேயன்றி உற்பத்திச் செயற்பாடு எவ்வாறு செயலாற்றுகின்றது, தோட்ட உட்கட்டமைப்பு எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது, தொழிலாளர் என்ன நிலையில் இருக்கிறார்கள், அவர்கள் எவ்வாறெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்பது பற்றி துளியளவிலாவது அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. எனினும் இந்த நிலைமையிலும் கூட தமக்கு எதிரான ஒடுக்குமுறை, உரிமை மறுப்பு மற்றும் பல்வேறு அநீதிகளுக்கு எதிராகவும் போராட வேண்டும் என்ற ஒரு தலைமைத்துவ உணர்வை இவர்கள் மத்தியில் ஏற்படுத்த யாரும் முயற்சிக்கவில்லை.



ஈ. வே. ரா

Image source - www.kalaignarseithigal.com

மறுபுறத்தில் இந்தியத் தேசிய தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து அவர்கள் பேசிய கருத்துக்கள் "நாம் இந்தியர்" என்ற உணர்வை இவர்களுக்கு ஏற்படுத்தியதுடன் ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு எதிரான உணர்வை அவர்களது உள்ளங்களில் தோற்றுவித்து காலனித்துவத்திற்கு எதிரான அணிக்கு ஆதரவு வழங்க அவர்களைத் தூண்டின. அதேசமயம் திராவிட இயக்கக் கருத்துக்களால் கவரப்பட்ட அவர்கள் சாதியத்திற்கு எதிராகவும் பிராமணியத்துக்கு எதிராகவும் போராடும் உணர்வு பெற்றனர். ஆனாலும் இந்தத் தலைவர்கள் யாருமே தொழிலாளர் உரிமை மறுப்புக்காக பெருந்தோட்த்ட தொழிலாளர்களும் போராட வேண்டும் என்ற உணர்வை அவர்கள் மனதில் தோற்றுவிக்க தவறிவிட்டனர். இந்த நிலைமையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட தோட்டத் துரைமார்கள் தொடர்ந்தும் தமது சட்டதிட்டங்களை கிடுக்கிப் பிடியாக இறுக்கி, தொழிலாளர்கள் தோட்டங்களில் இருந்து வெளியே செல்லாமலும் அதேசமயம் வெளியிலிருந்து தோட்டங்களுக்கு யாரும் சென்று விடாமலும் இருக்க மிகக் கடுமையான பாதுகாப்புச் சட்டங்களை அமுல்படுத்தி, தொடர்ந்தும் தொழிலாளர்களை அடிமை போன்று நடத்தி வந்தார்கள். அத்தகைய சட்டதிட்டங்களை யாரும் மீறினால் அவர்களைச் சட்டங்கள் கொண்டு தண்டிக்கவும் அவர்கள் கரங்களில் அதிகாரம் என்ற ஆயுதம் எப்போதுமே மின்னிக் கொண்டிருந்தது.

(தொடரும்)



# பெருந்தோட்டமே இலங்கைப் பொருளாதாரத்தின் மையம்

மலையகத்தின் அடுத்த கட்டத்திற்கான உரிமைக்கோரிக்கை குரல்களை எழுப்பியவர்கள் இடதுசாரிக் கொள்கையைக் கொண்டிருந்த சமசமாஜக் கட்சியினரே. இவர்களது தூரத்துக் கனவு இலங்கையில் இருந்து வெள்ளையர்களை துரத்தியடித்த பின் பாட்டாளி வர்க்கப் புரட்சியை ஏற்படுத்தி சோசலிச அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும் என்பதாக இருந்தபோதும் அவர்கள் இலங்கையின் அரசியல் சமூக பொருளாதார மாற்றத்துக்கு பின்னால் கணிசமான பங்களிப்பை செய்தனர்.

இலங்கையில் ஏற்பட்ட இருந்த சிறு முதலாளித்துவத்தின் வளர்ச்சி காரணமாக சிறு முதலாளித்துவ வர்க்கம் ஒன்று உருவாகியிருந்தது. இவர்கள் கொச்சையான ஆங்கிலத்தைப் பேசி, ஆங்கிலேயர்கள் போல் கோட்டும் சூட்டும் அணிந்து கொண்டு, ஆங்கிலேயரின் அடிவருடிகளாக இருந்து கொண்டு தொழிலாளர்களை சுரண்டி பணம் குவித்தனர். ஆங்கிலமோகம் கொண்ட இவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் ஆங்கில கல்வி கற்பிக்க இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் அனுப்பி வைத்தனர். அவ்விதம் ஆங்கிலம் படிக்கச் சென்ற அவர்களில் சிலர் வெறுமனே ஆங்கிலம் மட்டுமே படித்துவிட்டு வராமல் அரசியல், பொருளாதாரம், சமூகவியல் என்பவற்றுடன் சேர்த்து இடதுசாரிக் கொள்கைகளையும் கற்றுக்கொண்டு தாய் நாட்டுக்குத் திரும்பி வந்தார்கள்.

அவர்களில் லெஸ்லி குணவர்த்தன, பிலிப் குணவர்த்தன, என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா, ரொபர்ட் குணவர்த்தன ஆகியோர் இணைந்து இலங்கையின் முதல் இடதுசாரி அமைப்பான இலங்கை சமசமாஜக் கட்சியை 1935ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி தோற்றுவித்தார்கள். அவர்களது அமைப்பு பிரகடனத்தின் மூலம் நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பது, உற்பத்தித் துறைகளை தேசியமயப்படுத்துவது, இன, மத, குல மற்றும் ஆண்=பெண் பால் ரீதியான பாரபட்சங்களை இல்லாதொழித்தல்



**பிலிப் குணவர்த்தன**

Image Source - wikipedia.org

**இலங்கையில் ஏற்பட்ட இருந்த சிறு முதலாளித்து வத்தின் வளர்ச்சி காரணமாக சிறு முதலாளித்துவ வர்க்கம் ஒன்று உருவாகியிருந்தது. இவர்கள் கொச்சையான ஆங்கிலத்தைப் பேசி, ஆங்கிலேயர்கள் போல் கோட்டும் சூட்டும் அணிந்து கொண்டு, ஆங்கிலேயரின் அடிவருடிகளாக இருந்து கொண்டு தொழிலாளர்களை சுரண்டி பணம் குவித்தனர்.**

போன்றன பிரதான நோக்கங்களாக இருந்தன.

இதுவரை (1930) காணப்பட்ட தொழிற்சங்க தலைமைகள் மத்திய மலைநாட்டின் பெருந்தோட்டத் தொழிலாளர்களை புறக்கணித்து நகர்ப்புற தொழிலாளர்களை மாத்திரமே முக்கியமாகக்கொண்டு தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டமை ஒரு பெரும் குறைபாடு என அவர்கள் கருதினார்கள். அதற்குக் காரணம் தலைநகரை மையமாகக் கொண்ட தொழில்துறைகள் அனைத்துமே பெருந்தோட்டத்துறையில் உற்பத்தி, ஏற்றுமதி என்பவற்றில் தங்கியிருப்பதாக இருந்தன. ஆகவே தொழிற்சங்க நடவடிக்கைகளின் மையப்புள்ளி மத்திய மலைநாட்டின் தேயிலை உற்பத்தியை மையமாகக் கொண்ட தொழிலாளர்களைச் சார்ந்ததாகவே இருக்க வேண்டுமென்று அவர்கள் கருதினார்கள். இந்தச் சிந்தனையின் விளைவாக 1930 களில் நடுப்பகுதியில் மத்திய மலைநாட்டின் பெருந்தோட்டங்களை நோக்கி தமது தீவிரவாத தொழிற்சங்க அமைப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தினார்கள்.

1930 தசாப்தங்களை அடுத்து பல்வேறு தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துக்கு எதிராக உருவாவதை அவதானித்த அரசாங்கம் அவற்றைக் கட்டுப்படுத்தும் பொருட்டு எல்லாத் தொழிற்சங்கங்களும் , தொழிற்சங்கப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும் என்று சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் 1935 ஆம் ஆண்டில் 14 ஆம் இலக்க தொழிற்சங்கப் பதிவுகள் கட்டளைச்சட்டம் என்ற பெயரில் இந்தச்சட்டம் அரசாங்க சபையில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதலாவது சங்கம் துரைமார்கள் சங்கமாகவே இருந்தது. அதனைத்தொடர்ந்து 1937 ஆம் ஆண்டளவில் அகில இலங்கை தலைமை கங்காணிமார் சங்கம் 648 அங்கத்தினர்களுடன் பதிவு செய்யப்பட்டது. நடேசய்யரை தலைமையாகக் கொண்ட அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் கூட்டமைப்பு என்ற சங்கம் 1940 ஜனவரி 19ஆம் திகதி பதிவு செய்யப்பட்டது.

இவ்வாறு பதிவு செய்யப்பட்ட மற்றுமொரு தொழிற்சங்கமாக பெருந்தோட்ட கணக்குப்பிள்ளைகளின் தொழிற்சங்கம் காணப்பட்டது. 1948 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இந்தத்தொழிற்சங்கத்தின் தலைமையகம் நாவலப்பிட்டியில் அமைந்ததுடன் மலையகமெங்கும் பதினாறு கிளை அலுவலகங்களும் அமைக்கப்பட்டன. இதன் முதலாவது தலைவராக ஆர். எஸ். வேலுவும் உப தலைவராக எம். சுப்பையாவும் செயற்பட்டனர். இந்தச்சங்கத்தின் முதலாவது பேராளர் மாநாடு ஒன்பது ஆண்டுகளுக்குப் பின் 1957ஆம் ஆண்டு அட்டன் ஸ்ரீ பாத கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. (அதன் செயற் குழுவினரை படத்தில் காணலாம்)


இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்ற தொழிற்சங்கங்களில் லங்கா சமசமாஜக் கட்சியின் தொழிற்சங்கமான அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் யூனியன், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் தொழிற்சங்க வரலாற்றில் கணிசமான

மாற்றங்களை ஏற்படுத்தியது என்ற வகையில் முக்கிய வகிபாகத்தைப் பெற்றுக்கொண்டது. 1939 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் உருவாக்கப்பட்ட இந்த தொழிற்சங்கத்தில் அவ்வாண்டு இறுதியிலேயே 8000 அங்கத்தவர்கள் சேர்ந்திருந்தனர். தொழிற்சங்கத்தின் செயலாளர்களாக வேர்னன் குணசேகர மற்றும் பி. எம். வேலுச்சாமியும் செயற்பட்டார்கள். இதன் தலைவராக எஸ். என். பொன்னையா தெரிவுசெய்யப்பட்டார். லங்கா சமசமாஜக் கட்சியும் அதன் தொழிற்சங்கமும் இணைந்து அதன் ஆரம்ப கட்டத்திலேயே தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 33 சதவீதமாக அதிகரித்தல், பத்து சீட்டு முறைமையை இல்லாதொழித்தல், கங்காணிக்கான தலைக்குரிய பென்சுக் காசு கொடுப்பனவு, ரேசன் கார்ட் முறை போன்றவற்றை ஒழித்தல், பென்சன் முறையை ஏற்படுத்துதல், வேலையற்றோருக்கான காப்புறுதி போன்ற கோரிக்கைகளை முன்வைத்து செயற்பட்டது.

இத்தகைய சூழ்நிலைகளில் 1936 ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை அரசாங்க சபைக்கான பொதுத்தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் போட்டியிட்ட என். எம். பெரேரா, பிலிப் குணவர்த்தன ஆகிய இரண்டு வேட்பாளர்கள் தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்க சபைக்கு தெரிவுசெய்யப்பட்டனர். இவர்கள் வெற்றி பெறுவதற்கு பெருந்தோட்ட இந்திய வம்சாவளி கூலித் தொழிலாளர்களின் வாக்குகளே கணிசமான அளவுக்கு பங்களிப்புச் செய்தன. இது தொடர்பில் அரசாங்கசபையில் உரை நிகழ்த்தும் போது என். எம். பெரேரா பின்வருமாறு குறிப்பிட்டார்: "எனக்கு கிடைத்த ஓட்டுகளில் ஒரு தனி ஓட்டை தானும் நான் தோட்டத்துரை மார்களிடமிருந்து பெறவில்லை என்பதைத் திட்டவட்டமாக என்னால் கூற முடியும். மறுபுறம் தோட்டத் துரைமார்கள் அனைவருமே எனக்கு எதிராகப் போட்டியிட்ட எதிர் வேட்பாளருக்கு தமது ஓட்டைப் போட்டதுடன் தொழிலாளர்களையும் அப்படியே செய்ய வேண்டுமென நிர்ப்பந்தப்படுத்தினர். இருந்தாலும் வாக்காளர்கள் தங்கள் ஓட்டுக்களை யாருக்குப் போட வேண்டும் என்பதில் தீர்மானமாகவே இருந்தார்கள்"

1930 களின் அடுத்து வந்த தசாப்தத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் ஏற்பட்டிருந்த பொருளாதார மந்த நிலைமையிலிருந்து ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. இதன் விளைவாக தேயிலையின் விலை ஒரு இறாத்தலுக்கு 42 சதத்திலிருந்து 76 சதமாகவும் இறப்பரின் விலை 12 சதத்திலிருந்து 49 சதமாகவும் அதிகரித்திருந்தது. இதன் காரணமாக வேலைவாய்ப்புகளும் படிப்படியாக அதிகரித்தன. வர்த்தக வருமானங்களும் கணிசமாக அதிகரித்த போதும் அவற்றினால் ஏற்பட்ட எந்த நன்மைகளும் தொழிலாளர்களை சென்றடையவில்லை.

இவற்றை சுட்டிக்காட்டிய தொழிற்சங்கங்கள், தொழிலாளருக்கான சம்பள உயர்வையும் வாழ்க்கைத் தர உயர்வையும் கோரி தமது கோரிக்கைகளை முன்வைத்தன. எனினும் அவை தொடர்பில் அரசாங்கமும் துரைமார்களும் எந்தவிதமான அக்கறையும் காட்டியதாகத் தெரியவில்லை இதனைத்தொடர்ந்து பல தோட்டங்களிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறிய அளவில் தாக்குதல்களும் கலகங்களும் உருவாகத் தொடங்கின. முதல்முறையாக தோட்டத்துரைமார்களும் உரிமையாளர்களும் தோட்டத் தொழிலாளர்களின் ஸ்தாபனப்படுத்துதல் தொடர்பாகவும் அவர்களின் எழுச்சி தொடர்பிலும் பயமும் பீதியும் அடைந்தார்கள்.



லெஸ்லி குணவர்தன

Image Source - wikipedia.org

அதனைத்தொடர்ந்து இது தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காகவும் அதனை காலனித்துவ செயலாளருக்கு அனுப்பி, தகுந்த நடவடிக்கை



என். எம். பெரேரா

Image Source - www.dailymirror.lk

எடுக்க கோருவதற்காகவும் துரைமார் சங்கத்தினால் விசாரணைக் கமிஷன் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் பின்வரும் காரணங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை மேற்படி விசாரணைக்குழு தயாரித்து 1940 ஜூன் எட்டாம் திகதி காலனித்துவ செயலாளரிடம் கையளித்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: கடந்த மூன்று வருட காலத்தில் இலங்கை பெருந்தோட்டப் பகுதிகளில் இடதுசாரி தொழிற்சங்களை அனுமதித்தமை காரணமாக பல்வேறு வன்முறைகளும் தாக்குதல்களும் அதிகரித்து வந்திருக்கின்றன. அரசாங்கம் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. 1939 ஜனவரி 10 ஆம் திகதி முல்லோயா தோட்டத்தில் பெரிய கலவரம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதனை கட்டுப்படுத்த பொலிசார் அழைக்கப்பட்ட போதும் அவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. பொலிசாரின் வாகனம் சேதப்படுத்தப்பட்டது. துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒரு தொழிலாளி கொல்லப்பட்டார். அடுத்து வந்த ஏப்ரல் மாதத்தில் ரம்படை தோட்டத்தில் 600 தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்து கத்தி, கம்பு, தடிகளுடன் தோட்டத்துரையையும் அவருடைய பங்களாவையும் தாக்கியதில் தோட்டத்துரை கல்லடி பட்டு படுகாயமடைந்தார். அதே மாதத்தில் வெளிஓயா குழு தோட்டத்தில் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து மேற்கொண்ட கலவரத்திலும் தாக்குதலிலும் தோட்டத்து கண்டக்டர் காயமடைந்துள்ளார். மே மாதத்தில் நேஸ்பி தோட்டத்தில் இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஐந்து பேருக்கு காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதே மாதத்தில் நீட்வூட் தோட்டத்தில் தொழிலாளர்கள் கலகம் விளைவிக்க முற்பட்டபோது பொலிசாருக்கும் தொழிலாளிக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. ஒரு பொலிஸ்காரர் கடும் காயமும் மேலும் சில பொலிஸ்காரர்கள் சிறிய காயங்களுக்கும் உட்பட்டனர். அதே மாதத்தில் வேவல் ஹேன என்ற தோட்டத்தில் பெருந்திரளான தொழிலாளர் ஒன்று கூடி கலவரம் ஏற்படுத்த முற்பட்டபோது 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதே மாதத்தில் ஊவா ரதல்ல தோட்டத்தில் ஏற்பட்ட மோதலில் கங்காணி ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அதே மாதத்தில் வேவஸ்ஸ என்ற தோட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தின் போது அந்த தோட்டத்துரையை தோட்டத்திலிருந்து வெளியேறும்படி தொழிலாளர்கள் வலியுறுத்தினர். அதேசமயம் தோட்டத்துரைக்கும் அவரது மனைவிக்கும் தங்களால் பாதுகாப்பு வழங்க முடியாது என பொலிசார் தெரிவித்தனர். அதே மாதத்தில் சென் அண்ட்ரூவ்ஸ் என்ற தோட்டத்தில் தோட்டத்துரையின் மீது நடத்திய தாக்குதலில் அவரது ஒரு கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மற்றொரு கையிலும் காயம் ஏற்பட்டது.

தோட்டத்துரைமாரின் பார்வையிலும் பொலிசாரின் பார்வையிலும் மேற்படி சம்பவங்கள் கலவரங்கள் ஆகவும் தோட்டத்துரைமாருக்கு எதிரான தாக்குதல்களாகவும் இருந்தபோதும் தொழிற்சங்கங்களின் பார்வையில் இவை வெறும் தொழிற்சங்க நடவடிக்கைகளாகவே இருந்தன. மறுபுறம் இவை தோட்டப்புறங்களில் இடதுசாரி தொழிற்சங்கங்களால் தொழிலாளர்கள் முற்றிலும் தாபனப்படுத்துவிட்டதனை அறிவிக்கும் பறைசாற்றுதல்களாக இருந்தன என்றும் எடுத்துக்கொள்ள முடியும்.

(தொடரும்)

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வர்க்க அரசியலை மேவியதாக அடையாள அரசியல் மேலெழுந்து வந்துள்ளது. இனத்தேசியம் மதபேதம் என்பவற்றுக்கு அப்பால் சாதியுணர்வுடன் இணைந்த அடையாள அரசியல் முதன்மை இடம்பெற்றுள்ள இன்றைய சூழலில் எமது சமூக கட்டமைப்பில் வர்க்கமும் சாதியும் பின்னிப்பிணைந்துள்ளன எனும் விடயம் பேசுபொருளாகியுள்ளது. எமது சமூக உருவாக்கம் வர்க்க அடித்தளம் உடையதல்ல சாதிகளின் கட்டமைப்பு சார்ந்து இயங்கும் எமக்கான அரசியல் செல்நெறி வர்க்க அமைப்பின் வரலாற்றுச் செல்நெறிக்குரியதினின்றும் வேறுபட்டது என்ற விடயத்தினை தமிழர் வரலாற்றுத் தொடக்கமாக அமைந்த திணை வாழ்வியலை மையமாக கொண்டு ஆய்வு செய்வதாக 'தமிழ்ப் பண்பாடு: ஊற்றுகளும் ஓட்டங்களும்' என்ற இத்தொடர் அமைகிறது.




## நடேசன் இரவீந்திரன்

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலை மாணிப் பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச் சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ் ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக் கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.




# மதசார்பில்லாக் கருத்தியல்

மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக (கி.மு 7 தொடக்கம் கி.மு 3ஆம் நூற்றாண்டுகள் வரை) குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய திணைகளின் இயற்கை விளைபொருட்களது வணிகமும் - வணிக எழுச்சியுடன் கைகோர்த்தவாறு கைத்தொழில் விருத்தியும் ஏற்படுத்தித் தந்த வாழ்வியல் செழிப்பு தமிழகத்தில் வீறுமிக்க பண்பாட்டு எழுச்சி ஏற்பட வழிகோலியது. தமது ஆள்புலத்தை விரிவாக்கும் ஆக்கிரமிப்பு யுத்தங்களை எவராலும் மேற்கொள்ள இயலாத வாழ்நிலை காரணமாக திணைகள் ஒவ்வொன்றுக்கும் இடையே சமத்துவமான பரிமாற்றங்கள் நிலவின; ஆள்புலம் ஒன்றின் மன்னர் மணிமுடி சூடியவராக ஆதிக்க

மனோபாவத்தை வளர்த்தெடுக்க இயலாதவர் - சொந்த மக்களைப் பிரிந்து மேலாண்மை செலுத்தாதது மட்டுமன்றி மக்களில் ஒருவராக கூடிக்குலாவித் தலைமைப் பாத்திரத்தை வகித்து, கூட்டாக உழைப்பில் ஈடுபட்டுக் கிடைத்தவற்றைப் பகுத்துண்டு வாழும் வாழ்வியலை நெறிப்படுத்துபவராக திணைகளின் அரசர் இருந்தார். திணை வாழ்முறைக்குரிய மக்களிடையே ஏற்றத்தாழ்வு பேதங்கள் ஏற்படவில்லை; ஆண் - பெண் வேலைப் பிரிவினை வலுத்து வந்தபோதிலும் உடன்போக்கில் தனக்கான வாழ்வைத் தேடும் பெண் மீது ஆணாதிக்க ஒடுக்குமுறைகள் வலுப்பட்டுவிடவில்லை. அந்தவகையில் ஒடுக்கப்பட்டுச் சுரண்டப்படுகிற பெரும்பான்மையினர் மீது அபகரிப்பா

**ஏற்றத்தாழ்வுச் சமூக அமைப்பாக்கம் ஏற்பட்ட பின்னர் ஆதிக்கம் பெற்ற சமூக சக்தியின் கருத்தியலை முழுச் சமூகமும் ஏற்று ஒழுகும்படியான படைப்புகள் வெளிப்பட்டு வந்துள்ளன;**

ளர்களான சிறுபான்மையினரின் பொருட்டு அதிகாரம் செலுத்தும் கருவியாக திணைகளின் அரசு செயற்படவில்லை. நீண்ட காலத்துக்கு ரிய அந்த மன்னர் ஆட்சி அரைஅரசு வடிவம் கொண்டது!

பின்னரான மூன்று நூற்றாண்டுகளுக்கு (கி. மு 3 தொடக்கம் கி. பி 1ஆம் நூற்றாண்டுகள் வரை) மருதத்திணை மேலாதிக்கத்தின் வாயிலாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களின் மீது அதிகாரம் செலுத்திச் சுரண்டலை மேற்கொள்ளும் கிழார்களின் சார்பாக ஒடுக்குமுறையை மேற்கொள்ளும் (முழுமைப் பொருளிலான அரசுக்குரிய) அவசியத்துடன் தோற்றம்பெற்ற 'முடிமன்னர்கள்' வேறுவகைப்பட்ட வர்கள்; மணிமுடி சூடிக்கொண்ட அந்த 'வேந்தர்கள்' புதிய ஏற்றத்தாழ்வுச் சமூக முறைமைக்கானவர்கள். மூவேந்தர்களது ஆட்சியின் கீழ் தமிழகத்தின் பெரும்பகுதி கொண்டுவரப்பட்டு மூன்று பேரரசுகள் ஏற்பட்டுவிட்ட பின்னரும் குறுநில மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்ட நிலப்பரப்புகள் இருந்தன; முன்னர் திணைகளின் அரசுகள் சமத்துவக் கொள்வினை கொடுப்பினையுடன் இருந்தது போலன்றி பேரரசுகளுக்குத் திறை செலுத்தி வாழ்பவர்களாக இந்தக் குறுநில மன்னர்கள் தமது ஆட்சியை முன்னெடுத்தாக வேண்டியிருந்தது.

அடுத்துள்ள மூன்று நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட (கி. பி 2 தொடக்கம் 5ஆம் நூற்றாண்டுகள் வரையான) காலப்பரப்பில் மூன்று பேரரசுகளின் ஆள்புல எல்லைகள் தகர்ந்துபோயின. பல நூறு சிற்றரசுகளாகச் சிதறிய ஆட்சிகள் களப்பிரர் எனப்படுகின்ற, வெளியே இருந்து வந்த மன்னர்களது அதிகாரங்களுக்கு ஆட்பட்டன. ஆதிக்கச் சாதியாக வடிவமைக்க ஏற்றதாக மேலாதிக்கத்தை வென்றெடுத்திருந்த கிழார்கள் தமது ஆட்சியதிகாரத்தை இழந்தனர்; வணிகப் பிரிவினர் சமூக மேலாதிக்கத்தைப் பெற்றனர். நிலம் சார்ந்த - வள வழிபாட்டுப் பண்பாட்டின் நீடிப்பான கடவுளரைப் போற்றும் கிழார்களுக்கான கருத்தியல் உருவாகத் தொடங்கி மேலாதிக்கம்பெற்று வளர்ச்சியை எட்டிவந்த ஓரிரு நூற்றாண்டுகளுக்கு இடையிலேயே ஒரு முறிவு இவ்வகையில் ஏற்பட்டது; மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் வளமுடன் இருந்த வணிகச் சார்பான கருத்தியல் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் (கி. பி 2 - 5ஆம் நூற்றாண்டுகளில்) ஏற்றத்தாழ்வுச் சமூக முறைமையின் மேலாதிக்கவாத நிலைப்பட்ட 'வணிகச் சாதிக்கான' கருத்தியலாகப் பரிணமிப்பைப் பெறும் வரலாறு தொடர்ந்தது.

### மேலாதிக்கத் திணைகளின் மதங்கள்

ஏற்றத்தாழ்வுச் சமூக அமைப்பாக்கம் ஏற்பட்ட பின்னர் ஆதிக்கம் பெற்ற சமூக சக்தியின் கருத்தியலை முழுச் சமூகமும்



மருதத் திணை

Image source - kotravaivalaipakkam.blogspot.com

ஏற்று ஒழுகும்படியான படைப்புகள் வெளிப்பட்டு வந்துள்ளன; முன்னதாக, மேலாதிக்கம்பெற்ற கிழார்கள் தமக்கான கடவுளர்களை (முருகன், கொற்றவை, திருமால், வேந்தன், வருணன் போன்றோரை) முன்னிலைப்படுத்தத் தொடங்கிய போது அதிகாரத்தை இழந்தனர். பின்னர் மேலாதிக்கம் பெற்று வந்த வணிகச் சமூகத்தவரது மேலாண்மைக்குரிய கருத்தியல்களாக பௌத்தமும் சமணமும் தமிழினூடாகத் தமது கோட்பாட்டைத் தாங்கிய படைப்புகளை வெளிப்படுத்தின.

சமத்துவ நிலையுடன் திணைகள் இயங்கிய காலத்துக்குரியதாக கி. மு 6 ஆம் நூற்றாண்டு முதல் தோற்றம்பெற்று வளர்ந்து வந்த ஆசீவகம் ஏற்றத்தாழ்வான சமூக வேறுபாடுகளை நிராகரித்த அதேவேளை அதன் கருத்தியல் வணிகச் சார்பானதாக விளங்கியது. (கைத்தொழில் பேட்டைகளுக்கான தொழில் நுட்பத்திறன் வெளிப்பாட்டின் விஞ்ஞானப் பார்வை வீச்சு இணைந்ததாகவும் இருந்தது) அந்த ஆசீவகத்துக்கு என்ன நேர்ந்தது? கி. மு 3 முதல் கி. பி 1ஆம் நூற்றாண்டு வரை இயங்கிவந்த நில உடைமையாளரான கிழார்களது கருத்தியலைத் தாங்கிய இலக்கியம் , கி. பி 2ஆம் நூற்றாண்டின் பின்னரான வணிகக் கருத்தியல் மேலாதிக்கத்தை வெளிப்படுத்தும் பௌத்த - சமண இலக்கியங்கள் என்பவற்றுக்கு அப்பால் எந்தவொரு மேலாதிக்கச் சமூக சக்தியையும் சாராத படைப்பு உருவாகி இருக்க இயலாதா?

கிரேக்க - உரோம் வணிகர்கள் பருவக் காற்றுத் திசை மாற்றங்களைச் சாதகமாக்கி இயங்கும் பாய்மரக் கப்பல்களின் உதவியுடன் ஆழக் கடலில் பயணித்துத் தமிழகத்தோடான வணிகத்தை கி. பி 1ஆம் நூற்றாண்டில் வளர்த்தெடுக்கத் தொடங்கி இருந்தனர்; இந்த வணிக வாய்ப்புடன் மீளெழுச்சி பெற்ற தமிழக வணிகர்களது அபிலாசையின் வெளிப்பாடாகவே கி. பி 2ஆம் நூற்றாண்டில் கிழார்களது மூன்று பேரரசுகளுக்கான வம்ப வேந்தர் ஆட்சி பழங்கதை எனவாகிச் சிற்றரசுகளாகச் சிதறடித்த களப்பிரர்களது ஆட்சி ஏற்பட்டது. இந்த மாற்றக் கட்டத்தில் - வணிக எழுச்சி வீறுகொள்ளத் தொடங்கிய ஆரம்ப நிலையிலேயே - விவசாயத் தேவைக்கான கிழார்களையும் மதித்தபடி வணிகத்தின் மேலாதிக்கத்தையன்றி அது முன்னர் வளர்த்து வைத்திருந்த சமத்துவக் கருத்தியலை வெளிப்படுத்தியவாறே ஏற்பட்டு வருகிற வணிகப் பெருக்கத்தையும் உள்வாங்கி, மாறிவரும் சமூக நியதிகளுக்கு ஏற்ற படைப்பாக கி.பி. 1 ஆம் நூற்றாண்டின் இறுதியில் திருக்குறள் தோற்றம்பெற்ற

*காலத்திலான உற்பத்தி உறவுகள் பின்னர் எவ்வகை மாற்றங்களைப் பெற்றது? மாற்றம்பெற்ற உற்பத்தி உறவுக்கான கருத்தியலாக ஆசீவகத்தால் பரிணமிக்க இயலாமல் போனது ஏன்? அந்த இடத்தை வடக்கில் இருந்து வந்த பௌத்தமும் சமணமும் எப்படி நிரப்ப இயலுமானது? முழுச் சமூக சக்திகளான கிழார்கள் - வணிக சக்தி என்பவற்றின் மேலாதிக்கங்களை நிராகரிக்கும் படைப்பாகத் திருக்குறள் விளங்குவது எவ்வகையில் சாத்தியப்பட்டது?*

*'உலகப் பொது மறை' எனத் திருக்குறள் போற்றப்படுவதை அறிவோம். பொதுவாகவே தமிழின் தனிச் சிறப்புக்குரிய அம்சங்களால் உத்வேகம்பெற்று தமிழார்வலர்கள் பலர் மிகைப் புனைவுகளில் ஈடுபட்டு 'முதலுக்கும் சேதாரம்' ஏற்படுத்திவிடுவதைப் போலவே, திருக்குறள் குறித்தும் 'சொல்லப்படுவன அனைத்துமே வெறும் புனைவுகள் தாமோ' என்ற ஐயப்பாடு எழ வழிகோலுகிறவர்களாகக் கருத்துரைக்கின்றனர். மிகச் சரியான ஆதாரங்களுடன் திருக்குறளின் தனித்துவச் சிறப்புகள் பற்றிப் பலர் நூல்கள் பலவற்றை வெளிப்படுத்தியும் உள்ளனர். திருக்குறள் தோற்றம்பெற்ற காலச் சூழலின் விசேடித்த பண்புக் கூறுகளை முழு அளவில் கவனங்கொண்டவர்களாக அதனை ஆழ்ந்து கற்கும்போது தனித்த தேசத்துக்கோ, இனத்துக்கோ, மொழிக்கோ, மதத்துக்கோ, சமூகக் குழு எதற்குமோ, ஏற்றத்தாழ்வுச் சமூக முறைமைக்கோ சார்பற்ற பொது நூலாகத் திருக்குறள் துலங்குவதனையும் அதற்கான சாத்தியப்பாடு எவ்வகையில் கைவரப்பெற்றது என்பதனையும் கண்டறிவோம்.*

**சமத்துவ நிலையுடன் திணைகள் இயங்கிய காலத்துக்குரியதாக கி. மு 6 ஆம் நூற்றாண்டு முதல் தோற்றம்பெற்று வளர்ந்து வந்த ஆசீவகம் ஏற்றத்தாழ்வான சமூக வேறுபாடு களை நிராகரித்த அதேவேளை அதன் கருத்தியல் வணிகச் சார்பானதாக விளங்கியது.**

*இத்தனை அம்சங்களில் எந்த ஒன்றிலும் பக்கச் சார்பைக் கொள்ளாத போதிலும் மதச் சார்பு அற்றதாக திருக்குறள் விளங்குவது குறித்து விசேட கவனம் செலுத்துவதற்குக் காரணம் உள்ளது. வர்க்கச் சமூகத்தின் (ஐரோப்பிய நாடுகளின்) இயங்கியலில் வர்க்கப் புரட்சிகள் எனும் அரசியல் செயற்பாட்டின் வாயிலாக சமூக அமைப்பு மாற்றங்கள் நடந்தேறி வந்தன; அங்கே அடிமைச் சமூக முறைமையைத் தகர்த்து நிலவுடைமைச் சமூக அமைப்பு மேலெழுந்த போது புதிய ஆளும் வர்க்கத்துக்குப் பொருத்தமுடைய கிறிஸ்தவ மதம் சமூக அங்கீகாரத்தைப் பெற்றது. முதலாளித்துவப் புரட்சியின் பேறாக மூலதன எழுச்சிக்குச் சார்பான புரட்டஸ்தாந்துப் பிரிவு உதயமானது. இங்கே முழுச் சமூக சக்திகள் இடையே அதிகாரத்தை வென்றெடுப்பதற்கான மோதல்கள் வாயிலாக சமூக மாற்றம் நிகழ்கிறது; ஆளுகின்ற மேலாதிக்கத் திணையை (கிழார்களை) எதிர்த்துப் போராடும் திணை (வணிக சக்தி) தனக்கான புதிய மதத்தைக் கட்டமைத்து, முன்னர் ஆதிக்கத்தில் இருந்து வரும் சமூக சக்திக்கான மதத்தை (இயற்கை - வள வழிபாட்டுத் தொடர்ச்சியாகப் பரிணமித்து வந்த மதத்தை) வீழ்த்துவதன் மூலமாகவே ஆட்சி அதிகார மாற்றத்தைச் சாத்தியமாக்கும் வகையிலான இயக்கவியல் போக்கு வர்க்கப் பிளவுறாத எமக்கான (திணை மேலாதிக்கம் வாயிலாக ஏற்றத்தாழ்வுச் சமூக அமைப்பைக் கட்டமைத்த) வரலாற்று வளர்ச்சி!*

*வீர யுகக் காலத்தில் (கி. பி 1ஆம் நூற்றாண்டு வரை) கிழார்களின் மேலாதிக்கம் வலுப்பட்டு வந்தவாறிருக்க ஆளும் சமூக சக்தியான கிழார்களுக்கான திணை தனக்குரிய மதக் கட்டமைப்பை விருத்தி செய்யும் வகையில் வட இந்தியாவில் இருந்து வந்து குடியேறிய பிராமணர்களை அரவணைத்து, அவர்களுக்குத் தமது நிலங்களைப் பகிர்ந்தளித்துக் கலந்தவாறு ஒன்றிணைந்த கருத்தியல் பரிணமிப்பைப் பெற்றுக்கொண்டனர். பிராமணர்களது வருகை*

தொடக்கம் பெறுவதற்கு முன்னரே, கி. மு 4ஆம் நூற்றாண்டில் இருந்து பௌத்த, சமணத் துறவிகள் தமிழகம் நோக்கி வரத் தொடங்கியிருந்தனர். ஏற்கனவே ஆசீவக மதத்தை ஆதரித்து வந்த தமிழ் வணிகர்கள் அதனோடு அதிகளவு ஒத்த பண்புகளை உடைய இவ்விரு மதங்களையும் தமக்குரியதாக வரித்துக்கண்டனர்; வட இந்தியாவில் வேறொரு வரலாற்றுச் செயலொழுங்குப் பிரகாரம் வளர்ச்சியை வந்தடைந்த இந்த இரு மதங்களும் ஆசீவகத்தினின்றும் அடிப்படையான வேறுபாட்டைக் கொண்டிருந்த போதிலும் தமிழ் வணிகர்கள் அவற்றை ஆதரித்து ஆசீவகத் துறவிகளுக்குப் போன்று பௌத்த, சமணத் துறவிகளுக்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

## புதிய பொருளுற்பத்தி உறவுகள்

வணிக மேலாதிக்கம் சாத்தியப்பட்ட கி. பி. 2ஆம் நூற்றாண்டின் பின்னர் ஆசீவகத்துக்கான ஆதரவைக் காட்டிலும் அதிக சலுகைகளைப் பௌத்தமும் சமணமும் பெறத் தொடங்கின. வீர யுகக் காலத்தின் (கி. பி 1ஆம் நூற்றாண்டுக்கு முன்னரான) ஆசீவகப் பாடல்களை எல்லாம் சமண, பௌத்தப் பாடல்கள் என மயங்கும் வகையில் சிலப்பதிகாரம், மணிமேகலை எனும் காப்பியங்களில் இருந்து ஏராளமான படைப்புகளைப் புதிய மதங்கள் தமிழினூடாக வெளிப்படுத்தின. வேறெந்த மொழிப் பிரதேசங்களிலும் பிராகிருத, பாளி மொழிகளூடாகவே தமது மதப் பரப்புரை இலக்கியங்களை மேற்கொண்டவர்கள் தமிழில் ஏற்கனவே ஆசீவகக் கருத்தியலுக்கான பாடல்கள் இருந்த காரணத்தால் தாமும் தமிழுக்கான புதிய படைப்புகளைத் தமிழ் மொழியிலேயே வெளிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் சமண, பௌத்தத் துறவிகளுக்கு ஏற்பட்டிருந்தது; அதன் பொருட்டுத் தமிழுக்கான இலக்கணத்தை வடிவப்படுத்திக் கற்க வேண்டியவர்களாக இருந்தனர் (தமிழுக்கான இலக்கணத்தைக் கட்டமைக்கும் தேவையுடன் சமண, பௌத்தத் துறவிகள் இந்தப் பங்களிப்பைச் செய்து வளமூட்டிய காரணத்தாலும் ஆசீவகத்தை மேவிய இடத்தை அவர்களால் பெற இயலுமாயிற்று).
தமிழர்களாக வாழ்ந்தபடி இயல்பாகப் படைப்பாக்கம் செய்து வந்த ஆசீவகர்கள் இலக்கணம் கற்றுப் பாடல்கள் புனையும் அவசியமற்று இயங்கியவர்கள்; சமூகத்தில் மேலாதிக்கச் சக்திகள் 'இயல்பென' ஆகிவிட்ட பின்னர் இலக்கியத்தின் மீது இலக்கணம் மேலாதிக்கம் பெற்றுவிட்டது. வணிக மேலாதிக்கம் ஏற்பட்ட அறநெறிக் காலத்தின் (கி. பி 2 - 6ஆம் நூற்றாண்டுகள்) வரலாற்றுச் சூழலில், முன்னதாக ஆளுமையுடன் செயலாற்றிய ஆசீவகச் சிந்தனையாளர்களால் புதிய வணிகச் சார்பு மதங்களை மேவி இயங்க இயலாமல் போன நெருக்கடியை இந்தப் பின்னணி வாயிலாகப் புரிந்துகொள்ள முயற்சிக்கலாம். ஆசீவகத்தின் கருத்தியல் தளம், சமத்துவப் பரிமாற்றங்களில் ஈடுபட்ட வணிகச் சமூகத்துக்கானது; நிலவுடைமை பெற்ற பிராமண மேலாதிக்கத்தைத் தகர்த்து வணிகச் சமூக மேலாதிக்கம் சாத்தியப்பட்ட வரலாற்றுச் சூழலின் அவசியத்துடன் கி. மு 6ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் எழுச்சிபெற்றன, மேலாதிக்க வணிகக் கருத்தியல் தளத்துக்கு உரியவைகளான சமணமும் பௌத்தமும். அவை கி. பி 2ஆம் நூற்றாண்டின் பின்னர் சமூக மேலாதிக்கத்தைப் பெற்று ஆதிக்க சக்தியாகிவிட்ட தமிழ் வணிகர்களுக்கு ஆசீவகத்தைக் காட்டிலும் கூடுதல் பொருத்தப்பாடுடையதாக அமைந்திருந்தன.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என வணிகச் சிந்தனை ஓட்டத்தை வெளிப்படுத்திய கணியன் பூங்குன்றனாரது பாடலின் இறுதி அடிகள் இங்கு கவனிப்புக்கு உரியது; "பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்ற அந்த வரிகள் நகர நாகரிகத்தை எட்டிய முன்வீரயுக காலத்துக்கு உரிய ஆசீவகச் சிந்தனையை வெளிப்படுத்துவது. நகரப் பண்பாட்டை எட்டிப் 'பெரியோர்' என ஆகிவிட்ட வணிகச் சீமான்களுங்கூட அப்போது குறிஞ்சி, முல்லை, நெய்தல் திணைகளாகப் பரந்துகிடந்த மலை, காடு, கடல் என்பவற்றினூடே பயணப்பட்ட உழைப்பாளர் தாம். நகரின் கைத்தொழில் நுட்பத் திறன் வாய்ந்தோரிலும் மேலானவர்களாக வணிகர்கள் மேலாண்மை பெற்றுவிடவில்லை. இவர்களுக்கான வணிகப் பொருட்களை வழங்கும் திணைவாழ் உழைப்பாளர்கள் 'சிறியோர்' எனப் புறக்கணிக்கத் தக்கவர்களுமல்ல. அந்த வணிகர்கள், திணைவாழ் உழைப்பாளர்களது இரத்த உறவுகள்; இரு தரப்பாரிடையேயும் ஒரே இனமரபுக் குழுப் பந்தங்கள் நீடித்திருந்தன.

**தமிழர்களாக வாழ்ந்தபடி இயல்பாகப் படைப்பாக்கம் செய்து வந்த ஆசீவகர்கள் இலக்கணம் கற்றுப் பாடல்கள் புனையும் அவசியமற்று இயங்கியவர்கள்; சமூகத்தில் மேலாதிக்கச் சக்திகள் 'இயல்பென' ஆகிவிட்ட பின்னர் இலக்கியத்தின் மீது இலக்கணம் மேலாதிக்கம் பெற்றுவிட்டது.**

*ஆசீவகம் எழுச்சியுடன் தோன்றி வளர்ந்த முன் வீரயுக காலத்தில் வணிகர் - இயற்கை விளைபொருட்களை வணிகப் பண்டமாக்கி வழங்கும் திணைவாழ் உழைப்பாளர் - கைத்தொழில் நுட்ப வல்லுநர்கள் எனும் வேறுபடும் தொழிற்படைகள் தோன்றியிருந்த போதிலும் அவற்றினிடையே சமத்துவ உணர்வுடனான கொள்வினை , கொடுப்பி னைகளே நிலவின; சமூகப் படையாக்கப் பேதங்கள் வாழ்வியலிலும் உணர்விலும் கருத்திலும் தோற்றம்பெற்று வலுப்பட்டி ருக்கவில்லை.*

*மருதத் திணை மேலாதிக்கம் ஏற்பட்ட கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் இருந்து அதன் வெற்றியாளர்கள் இடையே கிழார்கள் எனும் நிலவுரிமை பெற்றோர் தோற்றம் பெற்றனர். வெற்றிபெற்ற திணையின் ஏனைய மக்கள் பிரிவும் வேந்துக்குரிய ஆள்புலத்தில் ஆதிக்க உரிமைக்குரிய சமூக சக்தியாக விளங்கினர்.*

*அதேவேளை, முன்னதாக மன்னருக்கும் மக்களுக்கும் இடையே ஏற்றத்தாழ்வுப் பேதம் ஏதுமில்லை என்றிருந்த நிலை மாறி முடி வேந்தர்கள் சொந்த மக்களையும் பிரிந்து அரண்களை அமைத்தவர்களாக மூடுண்ட கோட்டைக்குள் கொலுவிருப்பவர்களாயினர் - அது சமூகத் தளத்தில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுப் படையாக்கப் பேதங்களின் பேறு. சமூக சக்திகள் இடையேயான சமத்துவம் தகர்ந்து சுரண்டலுக்கு அமைவான பொருளுற்பத்தி உறவு இவ்வகையில் ஏற்படலாயிற்று!*

### மேலாதிக்க நிராகரிப்புப் படைப்பு

*வெற்றிபெற்ற மருதத் திணைக்கான இன மரபுக்குழுவுக்கு உரியோர் அனைவரும் நிலச் சொந்தக்காரர்களல்ல என்றபோதிலும் இரத்த உறவுடைய 'ஆளும் சமூக சக்தி' என ஒருமுகப்பட்டவர்கள்; அவர்களை ஒட்டு மொத்தமாக 'ஆதிக்கச் சாதி' (வெள்ளாளர்கள்) என ஆக்குவதற்கு உரிய கருத்தியலை வழங்க ஏற்றதாக, அதற்குரிய பிராமண மதத்துடன் வடக்கிலிருந்து வந்தவர்கள் நிலம் வழங்கிக் குடியமர்த்தப்பட்டனர்.*

*இத்தகைய சாதியக் கருத்தியல் மேலெழுந்த போது வணிகர்கள் 'செட்டிச் சாதி' என மடைமாற்றம் பெற்றனர். நிலக்கிழார்களைக் கொண்டுள்ள மேலாதிக்கம்பெற்ற சமூகசக்தியைக் கடவுள் அனுக்கிரகம் பெற்ற மேலான 'புனிதச் சாதி' எனக்காட்டவல்ல பிராமண மதத்தை வட இந்தியாவில் கி. மு 6ஆம் நூற்றாண்டில் இருந்து வீழ்ச்சியடையச் செய்து வந்த பௌத்தமும் சமணமும் 'உயிர்க் கொலை புரியாத வைசியர்களான' வணிகர்களே புனிதத் தொழில் புரிவோரென ஆதிக்க சாதி மனோபாவங்கொள்ள ஆற்றுப்படுத்தின. இத்தகைய சாதியக் கருத்தியல்கள் தமிழகத்தில் பரவத்தொடங்கின. வென்றடக்கப்பட்ட திணைகளின் கைத்தொழில் வல்லுநர்களும் உழைக்கும் ஏனைய பிரிவு மக்களும் இடைச் சாதிகளாக்கப்பட்டதோடு, காலவோட்டத்தில் தீண்டாமைக்குரிய சாதிகள் வந்தமையும் வரலாறு தொடர்ந்தது. சாதியத்துக்கான கருத்தியலை வடிவப்படுத்தியதில் பிராமணியத்துக்கு முதல்நிலை வகிபாகம் உள்ளது; பிராமண மேலாதிக்கத்தை அவைதிக மதங்களான பௌத்தமும் சமணமும் எதிர்த்தபோதிலும் வணிக மேலாதிக்கத்துக்கு அமைவான சாதியக் கருத்தியலை இந்த மதங்களும் வெளிப்படுத்தி வந்தன. உழைக்கும் மக்கள் பிரிவினர் சாதிகளாகச் சமூகப் படையாக்கப் பிளவுக்காளாகிச் சுரண்டலுக்கு ஆட்படுகிற புதிய வகைப் பொருளுற்பத்தி உறவு வாலாயமாவதில் வைதிக - அவைதிக மதப்பிரிவினர் அனைவரது பங்கேற்பும் இடம்பெற்றுள்ளது!*

*பிராமணக் கருத்தியலால் (வைதிக நெறியில்)*

இயக்கப்படும் விவசாய சக்தி - பிராமணிய மறுப்புடன் அவைதிக மத (பௌத்தமும் சமணமும்) மேலாண்மையில் தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்துகிற வணிக சக்தி எனும் இருமுனைப்பட்ட மோதல்கள் வாயிலாகவே எமக்கான வரலாற்று இயக்கம் நடந்தேறி வந்துள்ளது. உழைப்பாளர் - வள அபகரிப்பாளர் (சுரண்டுவோர்) என்ற பேதம் வலுப்பட்டதைத் தொடர்ந்து நில உடைமையாளரா வணிக சக்தியா ஆளும் தரப்பு என்ற மோதல் வலுப்பட்டது; அந்த இரு தரப்பாரை ஆதரிப்பனவாகிய வைதிக - அவைதிக மதப் பிரிவுகளில் ஏதாவதொன்றை முன்னிறுத்திய வண்ணமாகவே பின்னரான படைப்புகள் வெளிப்பட்டன.

இரு தரப்பில் எந்தவொன்றையும் ஆதரிப்பதாக இல்லாததுடன் உழைப்பைப் போற்றுவதாக அமைந்த படைப்பொன்று வெளிப்பட ஏற்ற காலப் பின்னணி ஒன்று அமைந்த சூழலில் திருக்குறள் தோற்றம்பெற்றது. கிழார்களை விடவும் செல்வச் செழிப்பில் மேலோங்கிச் சமூக மேலாண்மையை வணிக சக்தி வெற்றிகொண்ட போது கிழார்களுக்கான பேரரசுகளைத் தகர்க்கும் அவசியம் ஏற்பட்டது. வணிகருக்கானதாகப் பாரம்பரியமாக இருந்துவந்த ஆசீவக மதத்துடன் கன்னட, ஆந்திரப் பகுதிகளில் செல்வாக்குப்பெற்றவாறு இருந்த மேலாதிக்கவாதக் கருத்தியலுக்குரிய சமணமும் பௌத்தமும் தமிழ் வணிகச் சமூக ஆதரவுடன் வலுப்பெற ஆரம்பித்தன; கிழார்கள் பிராமணர்களுடன் இணைந்து உருவான கூட்டு மதம் செல்வாக்கு இழந்து வரும் சூழலுடன் அவர்களுக்கான பேரரசு களைத் தகர்க்கும் நூற்றுக்கணக்கான களப்பிர ஆட்சியாளர்கள் சமண, பௌத்தக் கொடிகளுடன் தமிழகத்தின் மூன்று பேரரசுகளைத் துண்டாடி பலநூறு அரசுகளாக ஆட்சி செலுத்தத் தொடங்கி னர். மேலாதிக்கங்களை ஏற்க மறுக்கும் ஆசீவ கத்தை வரித்துக்கொண்ட திருக்குறள் எந்தச் சமூக சக்தியையும் ஆதரித்தாக வேண்டிய நிர்ப்பந்தமற்ற வகையில் கிழார்கள் முழு அளவில் கீழ்நிலை அடையவும் இல்லை, வணிக சக்தி நிலைபேறான மேலாதிக்கத்தை வலுப்படுத்தும் கால அவகாசம் முழு அளவில் பெற்றிருக்கவும் இல்லை!

முன்னரான ஆசீவகத்தில் ஏற்கனவே வெளிப்பட்டது போலவே மேலாதிக்கத்தை நாடாத வகையிலான செயலொழுங்குடன் பொருள் தேடலை வலியுறுத்திய அதேவேளை 'ஏரின் பின்னது உலகம்' என்ற நிதர்சனத்தையும் எடுத்துரைக்கும் பண்பை ஆசீவகச் சிந்தனைக்குரிய திருக்குறளில் காண இயலும். எந்தவொரு உழைப்புப் பிரிவையும் மிக உயர்ந்தது (புனிதமானது) என்றோ கீழான தீட்டுக்குரிய தென்றோ வகைப்படுத்தாமல் உழைத்துண்டு வாழும் அவசியத்தை எடுத்துரைப்பதாகத் திருக்குறள் அமைந்திருப்பதைக் காண இயலும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதோடு, செய்யும் தொழிலை வைத்துப் பேதம் கற்பித்தல் ஏற்கவியலாதவொன்று என்பதனை வலியுறுத்தும் படைப்புத் திருக்குறள்! (வைதிகநெறி விவசா யத்தைச் சார்ந்திருக்கும் அதேவேளை உழைப்பைக் கீழானதாகக் கருதும் பிராமணரைப் புனிதப்ப டுத்துவது போலவே உடலுழைப்பில் ஈடுபடாத வணிகரை அவைதிக மதங்கள் புனிதப்ப டுத்துவதனை மனங்கொள்வது அவசியம்). முற்றுமுழுதாக ஆசீவகத்தை அப்படியே பரப்புரை செய்வதாகவும் திருக்குறளின் படைப்பாக்கம் அமையப்பெறவில்லை. காலமாற்றத்துடன் எழுந்த வாழ்வியல் அம்சங்களை ஏற்றாக வேண்டியிருந்த இடங்களில் பிராமண - பௌத்த - சமண மதங்களினதும் சாங்கியம், வைசேடிகம் போன்ற பல்வேறு தரிசனங்களது கருத்துகளையும் திருக்குறள் எடுத்தாண்டுள்ளது. அந்தக்காரணத்தால், ஆசீவக நூலென மட்டுப்படாமல் மதச்சார்பற்ற படைப்பென ஆகி அனைத்து மதங்களைச் சேர்ந்தவர்களாலும் தத்தமக்கான நூலெனப் போற்றப்படும் பேற்றைப்பெற்றது; மட்டுமல்லாமல், மக்களைப் பிரிந்த முடி வேந்தர்கள் வெளிப்பட்டதைத் தொடர்ந்து வலுப்பட்டு வந்த கடவுள் கோட்பாடுகளை ஏற்க மறுத்து (அதிக விஞ்ஞான நோக்குகளைக் கொண்டதாக) விளங்கியதோடு ஏற்றத்தாழ்வுச் சமூக நியதிகளுக்கு மாறவியலாத கட்டிறுக்கத்துடன் ஆசீவகம் இயங்கிய காரணத்தால் காணாமல் போனது போலவன்றி திருக்குறள் நீடிக்க இயலுமானதற்கு அவசியப்பட்ட சில மாற்றங்களை ஏற்றிருந்தமை காரணமாக அமைந்தது. அதன்பேறாக, சமத்துவ சமூகத்தை வென்றெடுக்க என முற்படும் வரலாறு படைப்போர்க்கு உதவும் வலிய பண்பாட்டு ஆயுதமாகத் திருக்குறள் இன்று கிடைத்துள்ளது! திருக்குறள் ஆசீவகச் சிந்தனையின் பாற்பட்டது என்பதற்கான பலமான அடித்தளமாக அமைவது ஊழ் எனும் அதிகாரம். மேலாதிக்க நிராகரிப்புக்கு உரிய ஆசீவகத்தின் ஊழ் என்பது ஏனைய சிந்தனைப் பள்ளிகளின் கன்மக் கோட்பாட்டில் இருந்தும் வேறுபட்டது. அது குறித்த தேடலில் தொடர்ந்து பயணிப்போம்!

(தொடரும்)



இலங்கையில் பண்பாட்டுத் தனித்துவம் கொண்ட பல்வேறு நிலப்பரப்புகளுள் கிழக்கு மாகாணத்தின் கீழைக்கரை எனும் நிலப்பரப்பும் ஒன்றாகும். இந்நிலப்பரப்பு ஒரு நெடிய பாரம்பரியத்தையும், ஆதிவேரான பழங்குடிகளின் தொல்மரபையும் கொண்டமைந்துள்ளது. அவ் வரலாற்றை சிங்கள வரலாற்றாதாரங்களுடன் ஒப்பிட்டு, நவீன ஆய்வுப்பார்வையில் எழுதும் முயற்சியே 'ஈழத்துக் கீழைக்கரை: ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற இத்தொடராகும். இதன்படி, இலங்கையின் கிழக்கு மாகாணம் எனும் அரசியல் நிர்வாக அலகின் பெரும்பகுதியையும் அப்பகுதியைத் தாயகமாகக் கொண்ட மக்களின் பண்பாட்டையும் வரலாற்று ரீதியில் இது ஆராய்கிறது. கிழக்கிலங்கையின் புவியியல் ரீதியான பண்பாட்டு வளர்ச்சியையும், அங்கு தோன்றி நிலைத்திருக்கும் தமிழர், சோனகர், சிங்களவர், ஏனைய குடிகள் போன்றோரின் வரலாற்றையும், இன்றுவரை கிடைத்துள்ள சான்றுகளை வைத்துத் தொகுத்துக் கூறும் தொடராக இது அமைகிறது.


● **விவேகானந்தராஜா துலாஞ்சனன்**


விவேகானந்தராஜா துலாஞ்சனன் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் மூலக்கூற்று உயிரியலும் உயிர் இரசாயனவியலும் கற்கைநெறியில் இளமாணிப் பட்டம் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தின் பட்டக்கற்கைகள் பீடத்தில் பொது நிர்வாகமும் முகாமைத்துவமும் துறையில் முதுமாணிக் கற்கையைத் தொடர்கிறார்.

இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாகக் கடமையாற்றும் இவர் தற்போது மட்டக்களப்பு போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகப் பணி புரிகிறார்.

இலங்கை சைவநெறிக்கழக வெளியீடான 'அலகிலா ஆடல்: சைவத்தின் கதை' எனும் சைவ வரலாற்று நூலையும் (2018), தனது திருமண சிறப்பு மலராக 'மட்டக்களப்பு எட்டுப் பகுதி' நூலையும் (2021) வெளியிட்டுள்ளார்.


# கீழைக்கரைக்கான எழுத்துச் சான்றுகள்:

## நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டு




**1901இல் வரையப்பட்ட பிரித்தானிய வரைபடத்தில் அன்றைய மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு நிருவாகப்பிரிவாகக் காட்டப்படும் நாடுகாடு** (NADUKADU). **இறக்காமம்** (Irakamem), **அவறாணை** (Arane), **குடுவில்** (Koodoo) **என்பனவும் காட்டப்பட்டுள்ளன. அருகில் அம்பாரவில்** (Ambarawilla) **என்று காட்டப்பட்டிருப்பது இன்றைய அம்பாறை நகரம் ஆகும்**


**படம் மூலம்:** David Rumsey Map Collection, David Rumsey Map Center, Stanford Libraries

*அ*து 1967ஆம் ஆண்டு, பேராசிரியர் சி.பத்மநாதன் யாழ்ப்பாண வைபவமாலை நூலைப் பதிப்பிப்பதற்காக அதன் சுவடிகளைத் தேடிக்கொண்டிருந்தபோது இலண்டனிலுள்ள பிரித்தானிய அருங்காட்சியகத்தில் ஒரு சுவாரசியமான கையெழுத்துப் பிரதியொன்றைக் கண்டடைந்தார். அப்பிரதி "நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டு" என்று பெயரிடப்பட்டிருந்தது. அப்பெயர் கொண்ட நூல் பற்றிய உரையாடல் எதுவும் அவருக்குத் தெரிந்தவரை ஈழத்துப் புலமைத்தளத்தில் நிகழ்த்தப்பட்டிருக்கவில்லை. எனவே அந்த மைப்பிரதியைக் கவனமாக ஆராய்ந்த அவர், அந்நூலை சிறு முன்னுரையுடன் 1976ஆம் ஆண்டு வெளியான அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் மட்டக்களப்பு மகாநாட்டு மலரில் "நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டு" என்ற பெயரில் ஒரு ஆய்வுக்கட்டுரையாக வெளியிட்டார் (பத்மநாதன் 1976:8290).

அதுவரை தங்கள் வரலாற்றுநூலாக எஃப்.எக்`ச். சி.நடராசாவால் "மட்டக்களப்பு மான்மியம்" என்ற பெயரில் பதிப்புக் கண்ட ஏட்டுச்சுவடியைக் கூறிவந்த கிழக்கிலங்கை அறிஞர் சமூகம், நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டையும் தம் வரலாற்றுநூல் வரிசையில் இணைத்துக்கொண்டது (நடராசா, 1980:125). 1 எனினும் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் பெற்றுக்கொண்ட கவனத்தையும் விவாதத்தையும் நாடுகாட்டுப்பரவணிக் கல்வெட்டு பெற்றுக்கொள்ளவில்லை. அந்நூல் பற்றிய ஆய்வுக்கட்டுரைகளும் மிகக்குறைவாகவே கிடைக்கின்றன .

உண்மை என்னவென்றால், பேரா. பத்மநாதனின் கட்டுரைக்கு முன்னர், இற்றைக்கு சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பே நாடுகாட்டுப் பரவணி கண்டறியப்பட்டு அதன் ஆங்கில மொழியாக்கமும் வெளியாகிவிட்டது. 1847 முதல் 1897 வரை இலங்கையில் பணியாற்றிய ஃகியூ நெவில் (Hugh Nevill) எனும் பிரித்தானிய அரச அதிகாரி, பல விதங்களிலும் இலங்கைப் புலமையாளர்களில் முக்கியமானவர். 'கீழைத்தேயக் கற்கைகளுக்கான திராவிட ஆய்வேடு' என்ற துணைத்தலைப்புடன் அவரால் வெளியிடப்பட்ட "தப்ரபேனியன்" எனும் ஆய்வேடு இலங்கையின் புலமைத்தளத்தில் இன்றும் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றது. அந்த ஆய்வேட்டில் தான் நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டை ஆங்கிலத்தில் மொழியாக்கி "The Nadukadu Record" என்ற பெயரில் இரு கட்டுரைகளை வரைந்தார் நெவில் (1887a:128, 1887b:137141).

நெவிலின் கட்டுரைகள் விரிவான விளக்கக்குறிப்புகள் அடங்கியவை. நாடுகாட்டுப் பரவணி பற்றிய நினைவுகள் முற்றிலும் மறையாத காலத்தில் வாழ்ந்த அக்கால உள்ளூர் மக்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்திருந்ததால், நெவில் பதிவுசெய்திருக்கும் குறிப்புகளே நாடுகாட்டுப் பரவணியைத் தெளிவாகப் புரிந்துகொள்வ தற்கு இன்று வழி சமைக்கின்றன. நெவிலின் மொழியாக்கத்தை பத்மநாதனின் பதிப்போடு ஒப்பிட்டு வாசிக்கும் போது இன்றுவரை புரியாதிருந்த பல மர்மத்திரைகள் விலகுகின்றன. நாடுகாட்டுப் பரவணிக்




**18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மட்டக்களப்பு மாவட்டம் உள்ளடக்கியிருந்த 11 நிருவாகப் பிரிவுகள், 11 இல் அடங்காது வேடர் வாழ்விடமாக குறிப்பிடப்பட்ட விந்தனைப்பகுதியும் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.**

Image Source - wikipedia.org

கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவமும் தெற்றெனப் புலப்படுகின்றது.
நாடுகாடு என்பது இன்றைய அம்பாறை மாவட்டம் இறக்காமம் கிராமத்தை மையமாகக் கொண்டு உகணை, அம்பாறை நகரம், மல்வத்தை உள்ளிட்ட இடங்களை உள்ளடக்கி வடக்கே நாதனை 2 (இன்றைய வெல்லாவெளி) வரை நீடித்த ஒரு பழங்கால நிருவாகப் பிரிவாகும். இன்றுள்ள அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவை மையமாகக் கொண்டிருந்த நாடுகாட்டில், அதே மாவட்டத்தின் சம்மாந்துறை, அம்பாறை, உகணை, தமனை, அக்கரைப்பற்று, நிந்தவூர் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளும், மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவு எல்லைப்பகுதியும் அடங்கியிருந்தன.
பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் இடச்சு

நெவிலின் கட்டுரைகள் விரிவான விளக்கக்குறிப்புகள் அடங்கியவை. நாடுகாட்டுப் பரவணி பற்றிய நினைவுகள் முற்றிலும் மறையாத காலத்தில் வாழ்ந்த அக்கால உள்ளூர் மக்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்திருந்ததால், நெவில் பதிவுசெய்திருக்கும் குறிப்புகளே நாடுகாட்டுப் பரவணியைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு இன்று வழி சமைக்கின்றன.

ஆளுநராக இருந்த ஜேகப் பேர்னாட்டின் குறிப்பில் வரும் "மட்டக்களப்பு மாவட்டத்தின் பதினொரு மாகாணங்களில்" நாடுகாடும் ஒன்றாகும்.3 1881ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பின் தனி "பற்று" பிரிவாக நீடித்த நாடுகாடு, 1891 முதல் சம்மாந் துறைப்பற்றின் ஒரு பாகமாக இணைக்கப் பட்டதோடு பின்னாளில் வேகம்பற்று, நிந்தவூர்ப்பற்று பகுதிகளுக்கும் தன் பாகங்களை இழந்து இன்று மறைந்தொழிந்துபோயிற்று.

துட்டகாமணி மன்னன் காலத்து தீகவாபி விகாரம், அனுராதபுர மற்றும் பொலனறுவைக் கால மன்னர்களின் கல்வெட்டுகள் கிடைக்கின்ற கொன்றைவட்டுவான் குளம், மல்வத்தை, அம்பாறை நகர் முதலிய தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் நாடுகாட்டு எல்லைக்குள்ளேயே அமைந்திருக்கின்றன. மகாவம்சத்தில் தீகவாபிமண்டலம் என்று குறிப்பிடப்படும் நிருவாக அலகும் இந்த நாடுகாட்டையே மையமாகக்கொண்டிருந்தது என்பதற்கான கல்வெட்டு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. எனவே சனப்புழக்கம் கொண்ட நாடாக நீடித்து பிற்காலத்தில் கைவிடப்பட்டு காடடர்ந்துபோனதால் "நாடுகாடு" என்ற விசித்திரமான பெயர் இப்பகுதிக்கு ஏற்பட்டிருக்கவேண்டும்.

நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டானது, சீதாவாக்கையிலிருந்து இங்கு குடியேறிய சிங்கள அரசகுடும்பங்கள் சிலவற்றின் பின்னணியில் வெவ்வேறு தமிழ், முஸ்லீம் சமூகங்கள் மூலம் நாடுகாட்டுப் பகுதியில் புதிய குடியிருப்புகள் உருவானதையும், அக்காலத்தில் நிகழ்ந்த சில குறிப்பிடத்தக்க விவசாய, பண்பாட்டு, சமூகவியல் நிகழ்வுகளையும் விவரிக்கின்றது. இறுதியில் சிங்களக் குடும்பங்களில் முதன்மை இடம் வகித்த இராஜபக்ஷ முதலியார் என்பவர் பேராதனை அப்பு என்பவனால் கொல்லப் பட்டதை அடுத்து ஏற்பட்ட குழப்பத்தில் அங்கிருந்த எல்லாக் குடிசனங்களும் தங்களுக்குள் மோதி அழிந்து போனதையும், இனி நாடுகாட்டில் யாரும் குடியிருக்கக்கூடாது என்று கண்டியரசன் ஆணையிட்டதையும் கூறி அந்நூல் முடிவடைகின்றது.

நாடுகாட்டுப்பரவணிக் கல்வெட்டு, முழுக்க முழுக்க மட்டக்களப்பு வட்டார வழக்கில் எழுதப்பட்டுள்ளது. அதன் மூலவடிவம் சிங்களத்தில் இருந்ததாகவும், மொழிபெயர்க்கப்பட்டு வழங்கிவரும் இந்தத் தமிழ் வடிவத்தை தான் திருக்கோவில் ஆலயத்தின் பரம்பரை நிருவாகிகளிடம் பெற்றுக்கொண்டதாகவும், நெவில் எழுதியிருக்கிறார் (Nevill 1887b:137).

நாடுகாட்டுப் பரவணியின் இன்றைய வடிவத்தைப் படிக்கும் போது, சரளமாக சிங்களம் வாசிக்கத் தெரிந்த ஒருவர் அதன் மூலநூலிலிருந்து மொழிபெயர்த்து பேச்சுத்தமிழில் சொல்லச்சொல்ல, அதை ஏட்டில் இன்னொருவர் எழுதியிருக்கிறார் என்று உணரமுடிகின்றது. நாடுகாட்டுப்



**நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டு, முழுக்க முழுக்க மட்டக்களப்பு வட்டார வழக்கில் எழுதப்பட்டுள்ளது.**

**மூலவடிவம் சிங்களத்தில் இருந்ததாகவும், மொழி பெயர்க்கப்பட்டு வழங்கிவரும் இந்தத் தமிழ் வடிவத்தை தான் திருக்கோவில் ஆலயத்தின் பரம்பரை நிருவாகிகளிடம் பெற்றுக்கொண்ட தாகவும், நெவில் எழுதியிருக்கிறார்**

பரவணியின் மூலச்சிங்கள நூல் விரிவானது என்றும் அதன் சிறுபாகமே இவ்வாறு மொழியாக்கப்பட்டுள்ளதென்றும் சொல்லப்படுவதைக் கொண்டு4, நாடுகாட்டுப் பகுதியைச் சேர்ந்த அல்லது அப்பகுதி மீது ஏதோ ஒரு காரணத்தால் ஆர்வம் கொண்ட ஒருவர், சிங்களத்தில் அப்பகுதியின் வரலாறு கிடைப்பதாக அறிந்து இதை மொழிபெயர்க்க முனைந்தார் என்று ஊகிக்கலாம்.

நாடுகாட்டுப்பரவணி, ஒரு சுவை யான நூல். "இராசபக்ˆச முதலியார்" என்ற சிங்களக் குடிமகனே அந்நூலின் நாயகன். இந்நூல் விவரிக்கும் சகல சம்பவங்களும் அவரது வாழ்க்கைக்குறிப்பு களூடாகவே சொல்லப்படுகின்றது. கால மயக்கம் ஏற்படும் இடங்களை சரியாகப் புரிந்துகொண்டால், இந்நூல் கூறும் பெரும்பாலான சம்பவங்கள் வரலாற்றுண்மை கொண்டவை என்ற முடிவுக்கே நம்மால் வரமுடிகின்றது.

தமிழ்க்கணிப்பு அறுபதாண்டு வட்டத்தில் பதினோராவது "ஈசுர வருசத்தில்" நாடுகாட்டுக்கு சிங்களக்குடும்பங்கள் குடியேறுகின்றன. ஈசுர வருசம் என்பதற்கு சாத்தியமான ஆண்டு களை ஆராய்ந்த நெவில், குறிப் பிட்ட வருடம் பொபி 1397ஆக இருக்கலாம் என்று ஊகிக்கிறார். புளியந்தீவில் உலுவிசி எனும் பறங்கியர் வாழ்வது பற்றிய குறிப்பு இக்கல்வெட்டில் காணப்படு வதாலும், வேறு சான்றுகளைக் கொண்டும் சி.பத்மநாதன் அது பதினாறு, அல்லது பதினேழாம் நூற்றாண்டு நூல் என்கிறார்.

கண்டியரசன் சேனாசம்மத விக்கிரமபாகுவின் கடலாதெனியக் கல்வெட்டின் மூலம் கண்டி அரசுக்கு கீழைக்கரையோடு 1477இலேயே உறவு நிலவியமை உறுதியாகின்றது (Codrington 1994:1315). "சீதாவாக்கை நகரியிலிருந்து" சிங்களக்குடிகள் வந்ததாக ஆரம்பிக்கும் நாடுகாட்டுப்பரவணியின் பின்பாகத்தில், சீதாவாக்கைக்குப் பதில் "கண்டி நகரி" வருகின்றது. ஆக, சிங்கள அரசியல் பலம் சீதாவாக்கையிலிருந்து கண்டிக்குக் கைமாறிய பதினாறாம் நூற்றாண்டு காலப்பகுதியில் பர

வணிக்கல்வெட்டு பாடப்பட்டிருக்கவேண்டும். நெவில் ஊகிக்கும் ஆண்டிற்கு (1397) சுமார் நூற்றிருபது ஆண்டுகளுக்குப் பின்பு தான் சீதாவாக்கை அரசே தோன்றுகின்றது என்பதால், இந்நூல் விவரிக்கும் சம்பவங்களும் காலக்கணிப்பும் உண்மையாயின் இந்நூலுக்குச் சாத்தியமான காலகட்டம், 1517 அல்லது 1557ஆம் ஆண்டாகவே இருக்கவியலும். எனவே பத்மநாதனின் ஊகத்தையே நாம் சரி என்று கொள்ளமுடியும்.

பரவணிக் கல்வெட்டின் கதாநாயகனான இராசபக்ச முதலியாரது "பள்ளகொம்பை அதிகார வம்சத்தின்" பெண்கள், அரசகுலக் குழந்தைகளுக்குப் பாலூட்டும் கௌரவத்தைப் பெற்றிருந்தார்கள். அந்த வம்சத்தில் வந்த நிலமையிறாளையின் (nilam ra, நிலமே றாள) மனைவி கிரியெத்தனா என்பவள் சோனககுலப் பிரதானியான "ஓவத்தை முகாந்திரம்" தன் குழந்தையோடு விளையாடியதால் கோபங்கொண்டு குழந்தையையே தூக்கியெறிந்து கொன்று குடும்பத்தோடு நாடுகாடு வந்து சேர்கிறாள்.

சோனகப்பிரதானி குழந்தையோடு விளையாடியதற்காக சிங்களச்சீமாட்டி ஏன் குழந்தையைக் கொல்லவேண்டும்? ஒன்று அவர்களிடம் அக்காலத்தில் சாதியம் இறுக்கமாக நிலவியதால் தீண்டாமை வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கவேண்டும். இரண்டு, கண்டி அரசில் சோனகர்கள் குறிப்பிடத்தக்க செல்வாக்குப் பெற ஆரம்பித்தபோது, கண்டிச்சிங்கள உயர்குலத்தார் அவர்கள் மீதான தங்கள் காழ்ப்பைப் பதிவுசெய்ய முயன்றிருக்கிறார்கள். எது எப்படியோ, குழந்தையைக் கொன்ற பின்னர் அந்தப்பெண்ணின் குடும்பத்தார் அரசனின் கோபத்துக்காளாகி நாடுகடத்தப்பட்டு இங்கு வந்திருக்கிறார்கள் என்றே முடிவுசெய்யலாம். (காதர், 1997:28). அரண்மனையில் முக்கியமான இடம் வகித்த சோனகருக்கு இழைக்கப்பட்ட அவமானத்துக்குக் கழுவாயாக இவ்வாறு அவர்கள் மன்னனால் தண்டிக்கப்பட்டிருக்கலாம்.

அப்படிப் புலம்பெயர்ந்த நிலைமையிறாளையின் குடும்பத்தவர்கள், நாடுகாட்டின் தளவில் என்ற இடத்தில் குடியேறுகிறார்கள். தளவில் என்ற ஊர், இன்றைய அம்பாறை "கல்மடு" ஊருக்குத் தென்மேற்கே அமைந்திருந்ததாக இடச்சு வரைபடம் ஒன்று காண்பிக்கிறது. அங்கு மூவாங்கல் (சிங்களம்: முவாம்:|கல, muvgala) என்றோர் பழங்கிராமம் காணப்படுகின்றது. தளவில் அந்தப்பகுதியிலேயே அமைந்திருக்கக்கூடும்.

தளவில் குடியேற்றத்தின்போது, நிலமையிறாளையின் குடும்பத்தோடு அக்குடும்பத்தின் பணியாளரும் வருகிறார்கள். பணியாளரை "அடியாள்" என்கின்றது பரவணிக் கல்வெட்டு. சலவைத்தொழிலாளர், நகைத்தொழிலாளர், மற்றும் சிங்கள வீட்டு ஊழியச் சமூகங்களான சங்கரவர், ஒலியர், கின்னரர் (குண்ணறையர்) ஆகியோர் அடங்கியதே அக்கால நிலப்பிரபு ஒருவரின் குடும்பம். இதில் சங்கரவர் என்பது பதநீர் வடித்து சர்க்கரை தயாரிக்கும் "வகும்புறா" எனும் சிங்கள சமூகம் என்கிறார் நெவில். கின்னரர் பாய் இழைக்கும் சமூகம். ஒலியர் சிங்கள நிலக்கிழார்களின் வீடுகளில் சிற்றூழியம் செய்யும் குலத்தவர் ஆனால் நிலக்கிழாரின் இல்லத்தில் சிற்றூழியம் செய்வது அவர்களின் கடமை.

தளவில்லில் குடியேறி முப்பதாண்டுகளுக்குப் பின் கிரியெத்தனாவின் மகனான இராசபக்ச முதலியார், குடும்பத்துடன் இறக்காமத்துக்குக் குடிபெயர்கிறார். இன்று முக்குவ சமூகத்தின் உட்பிரிவாகக் கருதப்படும் கோப்பிகுடி எனும் சமூகம் நாடுகாட்டுப்பகுதியில் இக்காலத்தில் குடியேறுகின்றார்கள். அக்கம்பக்கமிருந்த மட்டக்களப்புத் தமிழ் மற்றும் சோனக மக்களும் தொடர்ச்சியாக வந்து குடியேறியிருக்கிறார்கள். பரவணிக்கல்வெட்டைக் கூர்ந்து கவனித்தால், இராசபக்ச முதலியாரின் குடும்பம் தளவில்லுக்கு குடிவந்தபோதே இங்கு பல போடிமார் குடியேறி சேனைப்பயிர்ச்செய்கை செய்துவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பது தெரியவருகிறது.

நாடுகாட்டின் பிரதான தொழிலாக கால்நடை வளர்ப்பும் சேனைப்பயிர்ச்செய்கையுமே நீடித்துவந்திருக்கிறது. இந்நிலையில் இராசபக்ச முதலியாரின் ஒரு அடியான், மாடு மேய்க்கும் போது பொழுதுபோக்காக நெல் விதைத்து நாடுகாட்டில் விவசாயத்தை

அறிமுகப்படுத்துகிறான். நாடுகாட்டின் அருகே குடியிருந்த பல போடிமாரும் நாடுகாட்டுப் பகுதியில் காடு வெட்டி புதிய வயல்களை உருவாக்குகிறார்கள். இதற்கு வேடர்களின் உதவியும் கிடைக்கிறது. நாடுகாட்டு நெற்செய்கை, பெரும் விளைச்சலைத் தரத்தொடங்கியதால், மட்டக்களப்பின் வன்னிய அரசர்களும் அங்கு வேளாண்மை செய்கிறார்கள். இராசபக்ச முதலியாரை நாயகனாகப் பாடும் பரவணிக் கல்வெட்டு, வன்னியர்களுக்கு இராசபக்ச முதலியாரே வேடர்களைக் கொண்டு காடுதிருத்திக் கொடுத்ததாகப் புகழ்கிறது.

அதற்குப்பிறகு நாடுகாட்டில் சோனகக் குடியேற்றம் ஏற்படுகின்றது. ஒவ்வொரு சமூகத்திலும் ஏழு உட்பிரிவுகளே காணப்படும் என்ற மட்டக்களப்பு மரபுப்படி, சோனகரிலும் ஏழுகுடிச் சோனகரே குறிப்பிடப்படுகின்றனர். அவர்களில் பொன்னாச்சி குடியைச் சேர்ந்த அவக்கன் (அபூபக்கர்) கண்டி மகாராசனின் அன்புக்குப் பாத்திரமாகி சுங்கத்துறையில் வயற்காணி பெறுகின்றான். அவன் பட்டிப்பளையிலிருந்து5 பருத்திமூட்டையில் இரும்பு மறைத்து எடுத்துச் சென்று மட்டக்களப்பு வன்னியர்களுக்குக் கொடுத்து அவர்களிடமும் அணுக்கன்வெளி வயற்காணி பெறுகின்றான்.

வணிகச் சமூகமாக இருந்த சோனகர்கள், விவசாயத்துக்குள் நுழைந்ததை இச்செய்திகள் மூலம் ஊகிக்கமுடிகின்றது. ஆனால் அவக்கன் வன்னிய இராசாக்களுக்காக இரும்பை “ஒளிச்சுக்கொண்டு” எடுத்துவரும் வரிகள் மூலம் மட்டுக்களப்பு வன்னியர்களுக்கு (ஆயுதங்களுக்கான?) இரும்பு கிடைக்கக்கூடாது என்று எண்ணிய ஒரு எதிர் அரசியல் சக்தி அப்போது நாடுகாட்டில் அல்லது கண்டியில் வசித்திருக்கக்கூடும். நாம் இந்நூலின் காலமாக ஊகிக்கும் பதினேழாம் நூற்றாண்டு இலங்கையில் கண்டி - போர்த்துக்கேயர் ஆகிய இரு தரப்பினரிடையே அதிகார மோதல் இடம்பெற்றுவந்த காலகட்டம் என்பதை இங்கு நாம் ஒப்புநோக்கவேண்டும்.

அவக்கன் பற்றி, பத்மநாதனின் பிரதியில் கிடைக்காத முக்கியமான வரி ஒன்று நெவிலின் பிரதியில் கிடைக்கிறது. கண்டி மகாராசா அவக்கனுக்கு சுங்கத்துறையில் காணி கொடுத்தபின்னர் அவரோடு வந்த “இரட்டை வரிசை முதலியார் அவக்கனுக்குத் திருக்கோவிலில் ஒரு திருவேட்டைப்பானை 6 கொடுத்தார்” அதென்ன திருவேட்டைப்பானை?

கொக்கட்டிச்சோலையில் வேட்டைத்திருவிழா முடிந்தபின் “பங்குகூறல் அல்லது திருப்படைக்களஞ்சியம்” என்றழைக்கப்பட்ட பாடலைப் பாடி, குறித்த தேசத்துக்கோவிலின் நிலப்பரப்புக்குட்பட்ட எல்லா சமூகத்தவரையும் அழைத்து குடுக்கை(யில் பிரசாதம் வைத்துக்) கொடுத்துக் கௌரவிப்பது வழக்கமாக இருந்தது. கொக்கட்டிச்சோலை போல இன்னொரு திருப்படைக்கோவிலாக விளங்கிய திருக்கோவிலிலும் 1955 வரை இவ்வழமை நிலவியதை மானுடவியலாளர் நூர் யால்மன் பதிவுசெய்கிறார். அதன் படி, வெவ்வேறு சமூகங்களை (குடிகளை) உரிய வரிசைப்படி அழைத்து குடித்தலைவருக்கு குருக்கள் ‘உபயம்’ என்று அழைக்கப்பட்ட கோவில் பிரசாதத்தை வழங்கி வைத்தார். இதற்கு “குடி கூறிடல்” அல்லது “குடுக்கை கூறல்” என்ற பெயர் இருந்தது (Yalman, 1967:32627). இன்று திருக்கோவிலில் குடுக்கை கூறல் தொடர்பான எவ்வித நினைவும் எஞ்சவில்லை. எனினும் குடுக்கைகூறலோடு ஒப்பிடக்கூடிய “வட்டா கூறல்” எனும் வழக்கம் அக்கோவிலின் அருகே தம்பிலுவில் கண்ணகி அம்மன் சடங்கு முடிந்தபின்னர் இன்றும் இடம்பெற்று வருகிறது.

எனவே திருக்கோவிலிலும் வேட்டைத்திருவிழாவில் பங்கு கூறி குடுக்கை அல்லது பானை வழங்கும் மரபு நிலவியது உறுதியாகிறது. ஆக, கண்டிராசனோடு வந்த ஒரு முதலியாரால் அவக்கனுக்குக் கொடுக்கப்பட்ட திருவேட்டைப்பானை யானது, புதிதாகக் குடிவந்த அவக்கன் உள்ளிட்ட சோனகக்குடியினர் உத்தியோகபூர்வமாக திருக்கோவிலுக்குரிய “தேசத்திற்கு/நிலப்பரப்புக்கு” உட்பட்ட உள்ளூர்க் குடிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டதன் அடையாளமாகும். இடையே, பத்தினி வழிபாட்டின் அறிமுகம் சொல்லப்படுகின்றது. மதுரைக்குப் போய்

பத்தினியை7 வழிபட்டுவந்த சின்னத்தம்பிப்போடி என்பவருக்கு அம்மன் கனவில் வந்து சொன்னதன்படி, போகொடை என்ற இடத்திலிருந்து8 அம்மனது சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டு சிங்களப்பத்ததியின் படி இறக்காமம் கோவில்மேடு எனுமிடத்தில் வழிபாடு செய்யப்படுகின்றது. பல நாட்களின் பின்னர் இராசபக்ச முதலியார் காலத்தில் அந்த வம்சம் சந்ததியின்றி மறைகிறது. அங்கிருந்தவர்கள் அம்மனை இரவோடிரவாக அக்கரைப்பற்று பட்டிமேட்டுக்குக் கொண்டு



நக்கை விசாரம் என்று அழைக்கப்பட்ட தீகவாபி விகாரம்

Image Source - wikipedia.org



நாதனை வில்லைகட்டிச் சடங்கு இடம்பெற்றுவந்த நாதனை நாச்சிமார் கல்லடி பிள்ளையார் கோவில், வெல்லாவெளி.

சென்று கோவில் அமைக்கிறார்கள். தன் அனுமதி இல்லாமல் கோவிலை அங்கு கொண்டுசென்றதால் கோபிக்கும் இராசபக்ச முதலியார் காரைதீவில் அம்மனுக்குப் புதியகோவில் அமைக்கிறார். அக்கோவிலை அமைப்பதில் காரைக்காட்டு வேளாள குலத்தைச் சேர்ந்த கருணாகரக் கட்டாடி என்பவர் உதவிசெய்கிறார்.

காரைக்காட்டு வேளாளர் என்ற பெயருக்கும் காரைதீவு என்ற ஊர்ப்பெயருக்குமுள்ள தொடர்பைச் சிந்திக்கவேண்டும். இடச்சு வரைபடங்களின் படி, 1690களிலேயே காரைதீவுக்கு அப்பெயர் இருக்கிறது. காரைக்காட்டு வேளாளர் என்போர் வேளாளர் குலத்தின் ஒரு உட்பிரிவினர். இச்சமூகத்தவர் மட்டக்களப்பில் வசித்ததை பூர்வசரித்திரம் சொல்கின்றது.9 பரவணிக்கல்வெட்டு கூறுவதன் படி, காரைக்காட்டு வேளாளர் அல்லது கார்காத்த வேளாளர், அவறாணை என்ற ஊரில் வசித்துவந்தார்கள். அவறாணை முன்பு “சிதம்பரகாமம்” என்று அழைக்கப்பட்டதையும் அதே நூல் சொல்கின்றது. அந்தக்கிராமம் இன்றைய அம்பாறை வளத்தாப்பிட்டிக்கு அருகே அவறாணை என்ற பெயரில் ஒரு வயல்வெளியாகக் காட்சியளிக்கிறது.

சின்னத்தம்பிப்போடியின் மகள் கந்தி என்பவள் மழுவெடுத்த செட்டி குலத்தவனை மணந்து பெற்ற பரம்பரையினரே கோவில்மேட்டுக் கோவிலைப் பராமரித்து வந்தார்கள். அவ்வம்சம் சந்ததியின்றி மறைந்தபோது இறக்காமக் கோவிலை பட்டிமேட்டுக்கு இடம்பெயர்த்ததற்கான காரணம் பரவணிக்கல்வெட்டில் தெளிவாக இல்லை.

அதற்கு அந்தக்கால அரசியல் காரணங்கள் பின்னணியில் இருக்கக்கூடும். இராசபக்ச முதலியார் ஏட்டிக்குப்போட்டியாக காரைதீவு கோவிலை அமைப்பதால், மழுவெடுத்த செட்டி குலத்தார் அவரோடு முரண்பட்டே அங்கிருந்து இடம்பெயர்ந்திருக்கவேண்டும். அம்மனை அவர்கள் இரகசியமாக “இராக்கொண்டு” (இரவில் கொண்டுபோய்) கோவில் அமைப்பதும் இங்கு நம் கவனத்தை ஈர்க்கிறது. “மழுவெடுத்த செட்டி” என்ற பெயரை ஒத்த “மழவராயன்” என்ற குலத்தாரே இன்று

பட்டிநகர் கண்ணகியம்மன் கோவிலைப் பரிபாலிக்கிறார்கள். அவர்களுக்கு "பட்டிமோட்டார்" என்ற செல்லப்பெயரும் உண்டு.

பதினெட்டாம் நூற்றாண்டளவில் பட்டிமேட்டுக் கோவில் மீது பாடப்பட்ட "பொற்புறா வந்த காவியம்" பரவணிக்கல்வெட்டு சொல்லும் தகவலோடு இணைத்துப் பார்க்கத்தக்கது. அதன்படி, சீதாவாக்கை மன்னனுக்கு பொற்புறா வடிவில் அருள்புரியும் நாகமங்கலை அம்மன், அவன் தலைநகரில் கொஞ்சநாள் கோவில் கொண்டிருந்து பின்னர் தனக்குப் பொருத்தமான அடியவர்களைத் தேடி ஊர்வலம் சென்று தம்பிலுவில், இறக்காமம் வெருகங்குடாவெளி, காரைதீவு, பட்டிநகர் ஆகிய இடங்களில் கோவில்கொள்கிறாள். அம்மனுக்குப் பூசைபுரிவதற்காக மழவராயர் அல்லது மழுவரசர் குலத்தில் தோன்றிய மங்கலப்போடி என்பவர் அம்மனை ஊர்வலம் கொண்டுசென்ற பெண்ணை மணக்கிறார் (கணபதிப்பிள்ளை 1971: 99104). இந்தக்கதைக்கும் 'மழுவெடுத்த செட்டி' கதைக்கும் உள்ள உறவை ஒப்பிடவேண்டும். கோவில்மேடே பொற்புறாவந்த காவியம் பாடுகின்ற வெருகங்குடாவெளி ஆகக்கூடும்.

இராசபக்ச முதலியாரால் என்றென்றும் காரைதீவு அம்மனுக்கென வழங்கப்பட்ட கோவில்மேடு கட்டாடியாவெளி வயற்காணிகள், நெவிலின் காலத்திலேயே காடடர்ந்து மறைந்துவிட்டன. அவற்றை பிரித்தானிய அரசு திருத்தி முடிக்குரிய காணிகளாக பிரகடனப்படுத்தியிருந்தது. அங்கு கண்ணகிக்குக் கோவில் அமைந்திருந்த கோவில்மேடு, தன் காலத்திலும் பத்தினித்தெய்வத்துக்குப் பிடித்தமான வம்மி மரங்கள் அடர்ந்ததாகக் காணப்படுவதை நெவில் பதிவுசெய்துள்ளார்.

கண்டி அரசனுக்கும் இப்பகுதி தமிழ் - சிங்கள - மு`ஸ்லிம் மக்களுக்கும் நிலவிய நெருக்கமும் பல இடங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றது. வலிப்பத்தான்சேனை, பைக்கிருகசேனை ஆகிய இடங்களில் அமைந்திருந்த இ`ஸ்லாமியப் பள்ளிவாசல்களுக்கு கண்டி மன்னன் கொடுத்த நிபந்தங்கள், மானியங்கள் இந்நூலில் விபரிக்கப்படுகின்றன. பைக்கிருகசேனை என்பது பக்கிரிச்சேனை. காரைதீவில் அமைந்திருந்த அந்தப்பள்ளிவாசல் இன்று மறைந்துவிட்டது.

அதேபோல், நக்கை விசாரம் என்று இந்நூலில் கூறப்படும் இன்றைய தீகவாபி விகாரம், தமிழர் சிங்களவர் வாழ்ந்த பல கிராமங்கள் இணைந்த நிலமானிய முறைப் பொருளாதாரத்தின் கீழ் செயற்பட்டு வந்ததும் கூறப்படுகின்றது. திருக்கோவிலுக்குப் பரிவட்டம் வெளுப்பதற்கான சலவைத்தொழிலாளரையும் இராசபக்ச முதலியாரிடம் மட்டுக்களப்பு வன்னியர்கள் கோரிப்பெற்றுக்கொள்கிறார்கள்.

பரவணிக் கல்வெட்டின் நாயகனான இராசபக்ச முதலியாரின் இறப்பும் அதன்பின் நிகழும் சம்பவங்களும் சற்று மிகைப்படுத்திச் சொல்லப்படுகின்றன. இராசபக்ச முதலியாரை பேராதனை அப்பு என்பவன் பேய்களை ஏவிக் கொல்கிறான். இராசபக்ச முதலியார் கொல்லப்பட்டதை நாதனை வில்லைகட்டிச் சடங்கு முடியும்போது அறியும் இராசகுலத் தெய்வம் சீற்றம் கொள்கிறது. யானை வடிவெடுத்து வயல்களை அழித்துச் சேதம் புரியும் அத்தெய்வம், வயலில் காவலில் இருந்த பேராதனை அப்புவைக் காலால் இடறிக்கொல்கிறது. அந்த யானையைப் பிடிக்கச் செல்லும் மட்டக்களப்பு வன்னிய மாரினதும் நாடுகாட்டு முதலிமாரினதும் படைகள் தங்களுக்குள் மோதி மடிந்து போகின்றன. அதனால் இனி நாடுகாட்டில் யாரும் குடியிருக்கக்கூடாது என்று ஆணை யிட்டு கண்டி மன்னன் மரத்தில் சாசனம் பொறிக்கிறான்.

ஆனால், நெவிலின் வாசிப்பால் அவிழும் மர்மமுடிச்சுகள், இதை ஒரு மாயமந்திரக்கதையாக அன்றி இயல்பான வரலாற்றுச் சம்பவமாகவே அதை விளங்கிக்கொள்ள வழிவகுக்கின்றன. இந்நூல் முழுவதும் வரும் பேய்கள் சுவாரசியமானவை. திருக்கோவில் பகுதியில் தனது காலத்தில் குறைந்த எண்ணிக்கையில் வசித்துக்கொண்டிருந்த சாலியர் குலத்தவர் தான் இங்கு வரும் பேய்கள் என்று இனங்காண்கிறார் நெவில்., சாலியர் தங்களை "பெ|/பெகார" (*pebhekra*) அல்லது "பேசக்கார" என்று அழைத்துக்கொண்டார்கள்.

சாலியர் என்பது நெசவாளர் சமூகம். சோழர் காலத்தில் இவர்கள் பட்டுவணிகராக இருந்ததும், கடலோடி வணிகக் குழுவாக விளங்கியதும் கல்வெட்டுக்களிலிருந்து தெரிகின்றது. சாலியர் அன்றைய மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏராளமான கிராமங்களில் பரவலாக வாழ்ந்ததையும், தொடர்ச்சியான மணவுறவுகளால் அவர்கள் எண்ணிக்கையில் குறைந்துபோவதையும், சில இடங்களில் வேளாளராக மாறுவதையும் நெவில் பதிவுசெய்துள்ளார் (1887b:137). மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் நூலில் சாலியர் குறிப்பிடப்படாவிடினும் ஏனைய நெசவாளர் - வணிக சமூகங்களான சேணியர், கைக்கோளர் பற்றிய குறிப்புக் கிடைக்கிறது.

பேராதனை அப்புவை இராசபக்ச முதலியாருக்கு எதிரான அரசவம்சத்தைச் சேர்ந்த ஒருவன் என்று நெவில் ஊகிக்கிறார். அப்போது இலங்கை அரசியலில் பெரும் முரணாக விளங்கிய கண்டி - ஐரோப்பிய மோதலுக்கும் கீழைக்கரையில் விளங்கிய இந்த ஆட்சியுரிமை முரண்பாட்டிற்கும் தொடர்பு இருந்திருக்கக்கூடும். இதுபற்றி தெளிவான குறிப்புகள் கிடைக்கவில்லை. பர வணிக்கல்வெட்டில் கிடைக்கும் குறிப்பின்படி, இராசபக்ச முதலியாருக்கு ஆதரவாக மட்டக்களப்பு வன்னியரும், எதிர்த்தரப்பு பேராதனை அப்புவின் ஆதரவாளர்களில் சாலியரும் இருந்திருக்கிறார்கள்.

இராசபக்ச முதலியாரை பேராதனை அப்புவின் ஏவலில் சாலியர்கள் கொன்றபோது, அவர் இடத்துக்கு பேராதனை அப்பு வருவதை விரும்பாத நாடுகாட்டின் முதலிமாரும் மட்டக்களப்பு வன்னியரும் பேராதனை அப்புவையும் கொல்வதாக மந்திராலோசனை செய்திருக்கிறார்கள். இது பெரும்பாலும் வன்னியரும் பொதுமக்களும் கூடுகின்ற நாதனை நாச்சிமார் கல்லடி பிள்ளையார் கோவில் வில்லைகட்டிச் சடங்கு 10 விழாவில் இடம்பெற்றிருக்கவேண்டும்.

அதை உளவறிந்த பேராதனை அப்புவின் சாலிய ஒற்றனொருவன் அவனிடம் இச்செய்தியைச் சொல்லியிருக்கிறான். தனக்கெதிரானோரை முன்கூட்டி நீங்களே கொல்லுங்கள் என்று சொன்ன பேராதனை அப்பு, வயற்காவலில் சென்று தூங்கும்போது மதயானை தாக்கி மாண்டுபோனான். அவன் இறந்ததை, இராசபக்ச முதலியாரின் ஆதரவாளர்கள், நாதனை இராசகுலத்துத் தெய்வம் (பிள்ளையார்) கொடுத்த தண்டனை என்று நம்பினார்கள். மறுதலையாக சாலியர்கள் அதை இராசபக்ச முதலியாரின் ஆதரவாளர்களின் சதி என்று கொண்டிருக்கக்கூடும். எனவே பேராதனை அப்பு சொன்னதுபோல அவர்கள் ஒரு கலகத்துக்கு திட்டமிட்டிருக்கிறார்கள்.

மதயானை வயல்களுக்கும் பெரும் சேதம் விளைவித்ததால், அந்த யானையைக் கொல்ல பல ஊரவர்கள் ஒன்றுகூடிச் சென்றிருக்கிறார்கள். சாலியர் திட்டமிட்ட கலவரத்தை அப்போது கட்டவிழ்க்க, "நாடுகாட்டுச் சனங்கள் தங்களுக்கு மாறிமாறி அடிபட்டுச் செத்துப்போனார்கள். அந்தப்பேய் செய்த காரியத்தாலே பட்டார்கள்".

## அடிக்குறிப்புகள்

1. அம்பாறை மாவட்ட மு`ச்லிம்களின் வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கு இந்நூல் பயன்பட்டிருக்கிறது (காதர், 1997:2729). இதையடுத்து கிடைக்கும் வேறு இரு அறிமுகக்கட்டுரைகள் (மைங்கணான் 2018.07.29:15, 2018.08.06:11) தவிர, பரவணிக் கல்வெட்டு பற்றி பிற்காலக் கட்டுரைகள் பெரிதாக வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை.

2. நெவிலின் குறிப்பின் படி (1887a:128), நாடுகாட்டின் சிங்களப்பெயரே நாதனை அல்லது நாதெணிய (நா|தெனிய – ndeiya, நாகமரப் பள்ளத்தாக்கு). நாதனை வன்னியன் மட்டக்களப்பு வன்னியர்களில் தலையாயவன் என்ற தொன்மம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவியது. இடச்சு வரைபடங்களின் படி, நாதனைப்பிரதேசம் இன்றைய நவகிரியாற்றுக்கும் நாமலோயாவுக்கும் (ஆந்தலோயா, தமிழ்ப்பெயர் மூங்கிலாறு) இடையே ஆரம்பித்து மேற்கே பெரும்வனப்பகுதியை உள்ளடக்கியிருந்தது. அண்மைக்காலம் வரை நாதனையில் புகழ்பெற்றிருந்த வில்லைகட்டிச் சடங்கு பற்றிய குறிப்பொன்றும் நாடுகாட்டுப்பரவணியில் வருவதை இங்கு நாம் ஊன்றிநோக்கலாம்.

3.மட்டக்களப்பின் 11 "மாகாணங்கள் – 1. ஏறாவூர், 2. மண்முனை, 3. எருவில், 4. போரதீவு, 5. கரைவாகு,

6. சம்மாந்துறை, 7. அக்கரைப்பற்று எனும் முக்குவர் ஆட்சிக்குட்பட்ட ஏழு பற்றுக்கள், தெற்கே இருந்த 8. பாணமை, மேற்கே இருந்த 9. நாடுகாடு (நாதனை உட்பட), வடக்கே இருந்த 10. கோறளை மற்றும் 11. கரவெட்டி (McGilvray, 2008:66).

4.தகவல்: எழுத்தாளர் முஹமட் சாக்கீர். சிங்கள ஆய்வாளர்கள் சிலரோடு கலந்துரையாடியபோது இத்தகவலைத் தனக்கு அவர்கள் கூறியதாகக் குறிப்பிட்டார்.

5.சிங்களம்: பட்டிப்பொல, paipola. இக்கிராமம் கல்லோயா நதிக்கரையில் அமைந்திருந்ததால் அந்நதிக்கு பட்டிப்பளையாறு என்ற பெயர் ஏற்பட்டிருந்தது. இந்தப் பட்டிப்பளையும் இன்று கொக்கட்டிச்சோலைக்கு அருகே உள்ள பட்டிப்பளைக் கிராமமும், நுவரெலியாவுக்குத் தெற்கேயுள்ள பட்டிப்பொலவும் வேறுவேறு இடங்கள்.

6.After that Rata Varusai Muthaliyar gave Awakan one Thiruvedaipanai at Thiru Kowil (Nevill, 1887b:139)

7.இந்நூலில் வரும் ”மதுரை என்ற குறிப்பை தென்னகத்தில் இருந்த ”மதுரை நாடு அல்லது ”மதுரை அரசு என்று வாசிக்கமுடிவது ஆர்வமூட்டுகிறது. மதுரை நாயக்கர் ஆட்சிக்காலத்திலேயே அந்நகரின் மீனாட்சி புகழ்பெற்ற தெய்வமாக வளர்ந்ததையும், பழைய நாடுகாட்டுப்பகுதியான நிந்தவூர் மாட்டுப்பளையில் பழைமைவாய்ந்த மீனாட்சியம்மன் கோவிலொன்று அமைந்திருப்பதையும் இங்கு இணைத்துச் சிந்திக்கலாம். தமிழகத்தில் இன்று பத்தினி வழிபாடு மறைந்துவிட்டபோதிலும் அங்கிருந்த பழைய கண்ணகி கோவில்களில் ஒன்றான செல்லத்தம்மன் கோவில் மதுரையில் தான் அமைந்திருக்கிறது..

8. ”போகொட என்றோரிடம் விந்தனைக்காட்டில் முன்பு அமைந்திருந்தது (இடச்சு வரைபடங்களிலிருந்து).

9.”புத்தூரார் மருங்கூரார் வீரச்சோலை புகழ் காரைக்காட்டாரும் கோங்கு ஐந்தும், வேளாளர் பிரிவுகள். (கமலநாதன் & கமலநாதன் 2005:91).

10. வெல்லாவெளி நாதனையில் இன்றுள்ள கல்லடிப்பிள்ளையார் கோவிலும் சுவாதியம்மன் கோவிலும் ஒரு காலத்தில் மட்டக்களப்பின் அதிகார வர்க்கங்கள் ஒன்றுகூடுகின்ற இடங்களாக இருந்தன. அங்கு இடம்பெற்றுவந்த காட்டுமாடுகளைப் பிடிக்கும் வதனமார் தெய்வத்துக்கான வில்லைகட்டிச் சடங்கு பிரசித்தி பெற்ற ஒன்று. பார்க்க: மகேஸ்வரலிங்கம் 2008:123129

## உசாத்துணைகள்:


1.கமலநாதன், சா. இ. கமலநாதன், கமலா. (2005). மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், கொழும்பு – சென்னை:குமரன் புத்தக இல்லம்.

2.கணபதிப்பிள்ளை, சி. (1971). மகாமாரித் திவ்விய கரணி, யாழ்ப்பாணம்: விவேகானந்த அச்சகம்.

3.காதர், எம்.எல்.ஏ. (1997). வரலாற்றுப் பாரம்பரியம், எ`ச். எச்.எம்.|செமில் (பதிப்பு)இல், அம்பாறை மாவட்ட மு`ச்லிம்கள், கொழும்பு: மு`ச்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

4.சலீம், ஏ.ஆர்.எம். (1990). அக்கரைப்பற்று வரலாறு. அக்கரைப்பற்று: ஃகிரா பப்ளிகேசன்`ச்.

5.நடராசா, எஃப்.எக்`ச்.சி. (1980). மட்டக்களப்பு வரலாற்றுச் சுருக்கம், எஃப்.எக்`ச்.சி.நடராசா (பதிப்பு)இல், ”மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும், மட்டக்களப்பு: இந்து வாலிபர் முன்னணி.

6.பத்திநாதன், க. (2022). கடலோர வேட்டுவ சமூகங்களுள் காணப்படும் குடிவழமைகள். எழுநா, https://ezhunaon line.com/இலிருந்து மீள்விக்கப்பட்டது.

7.பத்மநாதன், சி. (1976). நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டு. மட்டக்களப்பு மகாநாடு நினைவு மலர், மட்டக்களப்பு: அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற மட்டக்களப்பு மகாநாட்டு அமைப்புக்குழு. பப. 8290.

8. மைங்கணான், ம. (2018.07.29). ”அரசமானியம் பெற்ற பள்ளிவாசல், விகாரை ஊழியம் செய்த தமிழர், அரங்கம், இதழ் 19, ப.15.

9.மகேஸ்வரலிங்கம், க. (2008). நாதனை வில்லைகட்டிச் சடங்கு. க. இரகுபரன் (பதி) ”மட்டக்களப்பு: வாழ்வும் வழிபாடும் நூலில், கொழும்பு: தமிழ்ச்சங்கம்.

10.மைங்கணான், ம. (2018.08.06). ”பட்டிமேட்டு அம்மன், பாழடைந்த நாடுகாடு, அரங்கம், இதழ் 20, ப. 11.

11. Codrington, H.W. (1994). The Gadaladeniya Inscription of Senasammata Vikramabahu. in Codrington, H.W., & Paranavitane, S. (eds.) Epigraphia Zeylanica, Volume 4, pp. 815.

12. Nevill, H. (1887a). ”Nadukadu Record. Taproba nian (August 1887), pp. 128.

13. Nevill, H. (1887b). ”Nadukadu Record. Taprob anin (October 1887), pp. 137141.

4. Sessional Papers XV, (1959). Report of the Delimitation Commission, Colombo: Government Publications Bureau.

15. Yalman, Nur, (1967). Under the Bo Tree : Studies in caste, kinship, and marriage in the interior of Ceylon. Berkeley : University of California Press.



● பி. ஏ. காதர்


பி. ஏ. காதர் அவர்கள் நுவரெலியா ராகலையைச் சேர்ந்த எழுத்தாளர். அத்துடன் ஆய்வாளராகவும், சமூகச் செயற்பாட்டாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.
பாவா அப்துல் காதர் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் பல ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் முக்கியமானவையாக ‘சர்வதேச தேசிய இயக்கங்கள் வழங்கும் படிப்பினைகள்’, ‘சுயம் நிர்ணயம் உரிமை’ மற்றும் ‘மேதின வரலாறும் படிப்பினைகளும்’ போன்ற நூல்கள் அமைகின்றன.

இன்று இலங்கை எதிர்நோக்கியுள்ள வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. இது தற்செயலாக வெடித்த ஒன்றோ தற்காலிகமான ஒன்றோ அல்ல. இதன் வரலாற்று வேர்கள் ஆழமானவை, நீண்டவை. இந்நிலைமைக்கு நிதிநிர்வாகத் தவறுகளை மாத்திரம் காரணம் காட்டமுடியாது. அதனை விடவும், 1948 முதல் இதுவரை இலங்கையை ஆட்சிசெய்த செய்த அனைத்து தலைவர்களும் நடத்திய இனவாத அரசியலுக்கு நாடு கொடுத்த விலையே இதுவாகும். இதனை விளக்குவதாகவே இலங்கையின் ‘இனவாத அரசியல் – ஒரு வரலாற்றுப் பார்வை’ என்ற இத்தொடர் அமைகிறது. இதன்படி, 1915 க்கு முன்னர் இருந்து இன்றுவரை சிறுபான்மைத் தேசியங்கள் மீது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இன வன்முறை தாக்குதல்களையும், அவற்றின் பின்னணியையும் வரலாற்று பொருள்முதல்வாத கண்ணோட்டத்தில் நேரடி அனுபவங்கள் ஊடாகவும், நூல்கள், செய்திகள் உள்ளிட்ட ஏனைய ஆதாரங்கள் வழியாகவும் இந்தத் தொடர் ஆராய்கின்றது. இரு பகுதிகளாக அமையவுள்ள இந்தத் தொடரின் முதல் பகுதி, இலங்கையின் இனவாத அரசியலின் தோற்றம் பற்றியும் வளர்ச்சி பற்றியும் இரண்டாம் பகுதி இலங்கையின் அரசியல் நெருக்கடியிலும் பொருளாதார நெருக்கடியிலும் இனவாத அரசியலின் பாத்திரம் பற்றியும் ஆராய்கிறது.

# நிச்சயமற்ற கோப்பியின் வீழ்ச்சியும் நிலையான தேயிலையின் ஆதிக்கமும்

### கோப்பியின் பரிதாப வீழ்ச்சியும் மாற்று முயற்சிகளும்

**கோ**ப்பி நோய் சுனாமி போல் ஓரிரவுக்குள் கோப்பிப் பெருந்தோட்டத்தை அழித்துவிடவில்லை. அதன் பரவல் மெதுவாக ஆனால் நிச்சயமானதாக நடைபெற்றது. கோப்பிப் பெருந்தோட்ட உற்பத்தி முற்றாக அழிவதற்கு சுமார் 20 வருடம் பிடித்தது. பலரும்அறியாத ஒரு விடயம் என்னவென்றால் இந்நோய் 1861 ஆம் ஆண்டு கென்யாவில் வளர்ந்த காட்டுக் கோப்பியில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆயினும், ஸ்டுவர்ட் மெக்கூக் மற்றும் ஜான் வாண்டர்மீர் ஆகிய இருவரின் ஆய்வின்படி இலங்கையில் இருந்துதான் வீரியம் கூடிய ஹெமிலியா வஸ்டாட்ரிக்ஸ் (*Hemileia vastatrix*) என்ற இந்நோய் கோப்பி விளைகின்ற அனைத்து நாடுகளுக்கும் பரவியது. இந்நோயின் வேகமான பரவலைக் கட்டுப்படுத்துவதில் இலங்கைக்கு இங்கிலாந்திலிருந்து அவசரமாக 1880இல் அனுப்பப்பட்ட இளம் தாவர நோயியல் நிபுணர் ஹாரி மார்ஷல் வார்டு (Harry Marshall Ward) வருகையும் ஒரு காரணமாக அமைந்தது. அவர் கோப்பி நோயைத் தடுப்பதில் வெற்றிபெறாவிட்டாலும் அவர் தாவர நோயியல் பற்றிய ஆரம்ப அறிவியலை முன்வைத்தார். பூஞ்சைக்கும் நோய்க்கும் இடையிலான காரணத் தொடர்பை அவர் கண்டறிந்து அது காற்றாலும் மழை நீராலும் பரவுவதைத் தடுப்பதற்கு உயரமான மரங்களை வரிசையாக இடைக்கிடையே கோப்பித்தோட்டங்களில் நடுவதையும் நீர் வழிந்தோடுவதைத் தடுப்பதற்காக குறுக்கே நெடுகிலும் கான்கள் வெட்டுவதையும் சிபாரிசு செய்தார். இவரது சிபாரிசு அமுல்படுத்தப்பட்டதால் கோப்பிநோய் பரவும் வேகம் தடைபட்டது. அது



**இலங்கையில் முதலில் கோப்பி பயிரிடப்பட்ட ஊர் சிங்கப்பிட்டிய மற்றும் கோப்பி பயிர்ச்செய்கை தொழிலாளர்கள்.**

*மாத்திரமல்ல இந்த தடுப்பு முறைகள் பின்னர் தேயிலைப் பெருந்தோட்டங்களிலும் பின்பற்றப்பட்டன.*
*தோட்டத்துரைமார் இந்நோய், கோப்பிப் பெருந்தோட்ட உற்பத்தியை அழித்து விடும் என நம்ப மறுத்தனர். அப்போது உலக சந்தையில் கோப்பியின் விலை அதிகரித்து அது ஒரு இலாபம் தரும் துறையாக வளர்ந்திருந்ததால் அவர்கள் அதிக ஏக்கரில் புதிதாகப் பயிரிடத்தொடங்கினர். உலகின் மூன்றாவது பெரிய கோப்பி உற்பத்தி செய்யும் நாடாக இலங்கை அப்போதிருந்தது. ஆனால் கோப்பியின் அழிவு நிச்சயமாகிவிட்டது. கோப்பிக் காலம் முழுவதுமே விலைத்தளம்பல், காலநிலை மாற்றத்தின் பாதிப்பு, அறுவடைக்காலத்தில் தேவையான அளவு தொழிலாளர் கிடைக்காத நிலைமை போன்ற பல்வேறு காரணிகள் மனஉளைச்சல் தரும் அனுபவங்களையே தந்து கொண்டிருந்தன. எனவே கோப்பிக்கு மாற்றாக வேறு காசுப்பயிர்கள் அவ்வப்போது பரிசோதனை செய்யப்பட்டன. கோப்பிநோய் பரவியபோது அது கட்டுப்படுத்தப்படுமா அல்லது அழித்துவிடுமா என்ற சந்தேகத்தில் முன்ஜாக்கிரதையாகவே மாற்றுப் பயிர்களை கண்டறியும் தீவிர முயற்சியில் இறங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நோயினால் கோப்பியின் ஆட்சி முடிவுக்குவர இருபது வருடங்கள் பிடித்ததால் இதற்கான அவகாசமும் அவர்களுக்கிருந்தது.*

*ஆரம்பத்தில் அனைத்துச் சோதனைகளும் வெற்றியடையவில்லை. முதலில் கரும்புத் தோட்டம் 1837 இல் நிறுவப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த வெற்றியை அது தரவில்லை. கொக்கோவும் முயற்சி செய்யப்பட்டு குறைந்த ஏற்றுமதிகளில் ஒன்றாகத் தொடர்ந்தது. இதன் சிறப்பம்சம், கிராம விவசாயிகளையும் புதிதாக காசுப்பயிர் உற்பத்தியில் ஈடுபட வைத்தது. 1837 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இறப்பர் பின்னர் முக்கிய ஏற்றுமதியாக மாறியது. ஆனால் கோப்பி விளைந்த இடங்களை அதனால் நிரப்பமுடியவில்லை.*

*மலேரியா நோய்க்கு பயன்படுத்தப்படும் குயினைன் மாத்திரை தயாரிப்பதற்கு ஆதாரமான சிங்கோனா நடுகை, கோப்பி லாபகரமானதாக இருக்கும் வரை புறக்கணிக்கப்பட்டது. ஆனால் அதுவே கோப்பி வீழ்ச்சியுறத்தொடங்கிய காலத்தில் உயிர்காக்கும் படகைப்போல் சிறிது காலம் கை கொடுத்தது. 1873 ஆம் ஆண்டில், ஆள்பதி கிரகெரியின் கண்காணிப்பின் கீழ் சிங்கோனாத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. உற்பத்தி அதிகரித்து. ஆரம்பத்தில் இலவசமாக வழங்கப்பட்ட சிங்கோனா விதைகள் பின்னர் விற்பனை செய்யப்பட்டன. அதன் விற்பனை அதிகரித்தது. அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தனியார் நாற்றுமேடைகள் இரத்தினபுரி, மாத்தளை பகுதிகளில் அமைக்கப்பட்டன.*

இதற்கிடையில், 1876 ஆம் ஆண்டில், கிரிகெரி ஜாவாவிலிருந்து சிறந்த விதைகளைப் பெற முயன்றார், ஆனால் இவை போக்குவரத்தில் சேதமடைந்தன. இருப்பினும், 1872 இல் 500 ஆக இருந்த சிங்கோனாவின் பரப்பளவு 1876 இல் 6000 ஆக உயர்ந்தது. 1885 இல் சிங்கோனா உற்பத்தி செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 23,855 ஆகவும் உலக தேவையின் மூன்றில் ஒரு பங்கை வழங்குவதாகவும் இருந்தது. எனினும் சிங்கோனா ஒரு சுயாதீனப் பயிராக வளர்க்கப்படவில்லை, கோப்பித் தோட்டங்களில் ஒரு துணைப் பயிராக மட்டுமே வளர்க்கப்பட்டது. ஆயினும்கூட, பெருந்தோட்டத்தை அழிவிலிருந்து தப்பிப் பிழைக்க உதவுவதில் பயனுள்ள பங்கை வகித்தது. சிங்கோனாவால் கோப்பியின் இடத்தை நிரப்ப முடியாமல் போனமைக்கு அடிப்படைக்காரணம், அதற்கு உலக அரங்கில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட கிராக்கியே இருந்தமையாகும்.

கோப்பி உருவாக்கிய கட்டமைப்பால் பயன்பெற்ற தேயிலை 1848 வரை, கண்டியிலிருந்து 30 மைல்களுக்குள் கண்டிப் பகுதியில் தான் கிட்டத்தட்ட அனைத்துக் கோப்பித் தோட்டங்களும் திறக்கப்பட்டன. 1850 களில் டிம்புலவின் காடுகளால் மூடப்பட்ட மலைகள், சிவனொளி பாதமலை சிகரத்தைச் சுற்றியுள்ள பகுதி மற்றும் ஹப்புத்தளை (ஊவா), மற்றும் சப்ரகமுவ காடுகள்

**உலகின் மூன்றாவது பெரிய கோப்பி உற்பத்தி செய்யும் நாடாக இலங்கை அப்போதிருந்தது. ஆனால் கோப்பியின் அழிவு நிச்சயமாகிவிட்டது. கோப்பிக் காலம் முழுவதுமே விலைத்தளம்பல், காலநிலை மாற்றத்தின் பாதிப்பு, அறுவடைக்காலத்தில் தேவையான அளவு தொழிலாளர் கிடைக்காத நிலைமை போன்ற பல்வேறு காரணிகள் மனஉளைச்சல் தரும் அனுபவங்களையே தந்து கொண்டிருந்தன.**

ஆகிய உயர்மலைப் பிரதேசங்களுக்கு பரவின. ரயில் போக்குவரத்து வசதி காரணமாக போக்குவரத்து செலவுகள் வெகுவாகக் குறைந்ததனால் 1860 அளவில் கோப்பி தோட்டங்கள் தெற்கில் மலைப்பாங்கான மொரவக கோரளைக்கு விரிவடைந்தது. இக்காலப்பகுதியில் தான் உள்ளூர் விவசாயிகள் துணை வருமானத்தின் மூலம் பணம் சம்பாதிக்கும் முயற்சியில் இறங்கி கோப்பி தோட்டங்களை உருவாக்குவதிலும் சிங்கோனா நடுவதிலும் கொக்கோ பயிரிடுவதிலும் ஆர்வம் காட்டத் தொடங்கியிருந்தனர். 1870 களில் கோப்பி பெருந்தோட்டம் அதன் உச்சத்தை எட்டியது. இவ்வாறு கோப்பி தனது வெற்றிநடையைத் தொடர்ந்தபோதுதான் கோப்பி நோய் தொற்றியது. ஏற்கனவே கோப்பிக் காலத்தில் பெருந்தோட்ட உற்பத்திக்கு



**சிங்கோனா**

Image source - www.britannica.com

தேவையான கடினமான அடிப்படைப் பணிகள் பூர்த்தி யடைந்திருந்தன. வனவிலங்கு களும் அட்டைகளும் விசப்பாம்புகளும் மலிந்த அடர்ந்த காடுகள் வெட்டப்பட்டு, வேர்கள் அகற்றப்பட்டு, நிலம் செம்மைப்படுத்தப்பட்டிருந்தது. துரைமார் பங்களாக்கள், தொழிற்சாலைகள், நீர் வடிகால் அமைப்புகள் உருவாக்கப்பட்டிருந்தன. கோப்பித்தோட்டங்களை கொழும்பு துறைமுகத்தோடு இணைக்கும் விசாலமான உட்கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. பாதைகள், பெருந்தெருக்கள், ரயில்வே போக்குவரத்து, தொலைத்தொடர்பு என்பன பெரும் செலவில் அமைக்கப்பட்டிருந்தன. தென்னிந்தியாவிலிருந்து தோட்டங்களுக்குத் தேவையான தொழிலாளர்களை கொண்டுவருவதற்கான பொறிமுறையும் தோட்ட நிர்வாகத்தில் தேர்ச்சிபெற்ற நிர்வாகிகளும் தோட்டத் துறைக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்களும், மத்திய மலைநாட்டில் விளையும் கோப்பியை கொழும்பிலிருந்து இங்கிலாந்துக்கும் ஏனைய உலகநாடுகளுக்கும் கொண்டுசென்று விற்பனை செய்யும் சந்தை வலையமைப்பும் பின்னப்பட்டிருந்தது. இவை யாவற்றையும் முற்றாக இழந்து, நாடு தனது வருவாய்க்கு அநேகமாக முழுவதுமாக நம்பியிருந்த ஒரே பொருளாதாரத்தையும் இழந்து இக்கட்டான நிலையில் நிற்கவேண்டிய ஆபத்து அப்போது உருவாகி இருந்தது.

இந்த அவலமான நிலைமை ஏற்படாமல் தடுத்த பெருமை தேயிலையையே சாரும். அதனை அறிமுகப்படுத்தியதிலும் ஊக்கப்படுத்தியதிலும் அதற்கான விற்பனைச் சந்தையை உலகஅரங்கில் பெற்றுக்கொடுத்ததிலும் பலருக்கு பெரும் பங்குண்டு என்றாலும் அதனை வெற்றிகரமாக முதன்முதலில் பயிரிட்ட பெருமை ஜேம்ஸ் டெய்லரையே சாரும். அதற்கடுத்தபடியாக அதனை லண்டன் சந்தையில் கொடிகட்டி பறக்கவிட்ட லிப்டனைச் சாரும்.

## தேயிலையின் வரலாறு - தேயிலையில் சீனாவின் ஆதிக்கத்தின் வீழ்ச்சி

சீனப் பேரரசர் ஷென்நங் (Emperor Shen Nung) சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு தேநீரைக் கண்டுபிடித்ததாக நம்பப்படுகிறது, பல பெரிய விசயங்களைப் போலவே, அதுவும் தற்செயலாகவே கண்டுபிடிக்கப்பட்டது. வேட்டையாடச்சென்ற அவர் ஒரு மர நிழலில் இளைப்பாறும்போது அவர் பருகுவதற்கான தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்த வேளை, அம்மரத்தின் இலைகள் பானையில் விழுந்து மிதந்தன. அந்தக் கலவையைக் குடித்தபோது அவருக்கு வீரியமும் உற்சாகமும் பிறந்தது. அதன் பின்னர் அந்தப்பானம் அவரதும் அவரது அரச விருந்தினர்களினதும் ஆடம்பரப் பானமானது. படிப்படியாக இந்த ஆச்சரிய மருந்து தேநீராக உலகளாவிய நுகர்வில் தண்ணீருக்கு அடுத்தபடியான இடத்தைப்பிடித்தது.

1662 ஆம் ஆண்டில், மன்னர் இரண்டாம் சார்ள்ஸ் மணம்முடித்த கத்தரின் (Catherine) சீனத் தேநீரை விரும்பி அருந்தியதால், தேநீர் குடிப்பது இங்கிலாந்து அரச குடும்பத்தின் நாகரீகமாக மாறியது. பின்னர் படிப்படியாக இங்கிலாந்து மத்தியதர வர்க்கத்தின் நுகர்வுப்பொருளாக சீனத் தேயிலை மாறியது. அப்போது சீனத் தேநீர் 'ட்ச்சா' ('Tchaa) என்று அழைக்கப்பட்டது. அதன் விலை அதிகமாகவும் அலங்காரப் பெட்டகங்களில் அடைக்கப்பட்ட விலை உயர்ந்த ஆடம்பரப் பண்டமாகவும் இருந்தது. அந்தப்பெட்டகங்கள் 'கேட்டி' (caddy) எனப்பட்டது. இந்தப்பானம் பால் கலக்காமல் கைபிடி இல்லாத கோப்பையில் பரிமாறப்பட்டது.

இலங்கையில் தேயிலை உற்பத்தி செய்வதற்கு அதிக நாட்டம் அதுவரை காட்டப்படாததற்கு சீன தேயிலையின் ஆதிக்கம் பிரதான காரணமானது. அந்த நிலைமை 19ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு சாதகமாக மாறியது. நீண்ட காலமாக உலகம் சீனாவின் பச்சைத் தேயிலையை மட்டுமே அறிந்திருந்தது. ஐரோப்பாவின் மொத்த தேயிலைத் தேவையும் 1830களின் முற்பகுதி வரை சீனாவால் பூர்த்தி செய்யப்பட்டது, சீனாவுடனான வர்த்தகச் சிக்கல்களின் விளைவாக 1833 இல் கன்டனுடனான வர்த்தகத்தின் ஏகபோக



Coffee cultivation in SRI LANKA

Image source - cafebistro.lk

உரிமையை பிரிட்டிஷ் இழந்தது, இச்சமயத்தில் இந்திய - பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் பென்டிங்க், இந்தியாவில் தேயிலைத் தோட்டத்தைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய கல்கத்தாவில் ஒரு குழுவை நியமித்தார். சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதைகளுடன் கல்கத்தா தாவரவியல் பூங்காவில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அஸ்ஸாமில் காடுகளாக தேயிலை வளர்வதைக் கண்டறிந்தபோது சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை வகைகள் நிராகரிக்கப்பட்டு அஸ்ஸாமில் விளைந்த உள்நாட்டு தாவரங்களின் விதைகளிலிருந்து தேயிலைப்பயிர் விளைவிக்கப்பட்டு அமோக வெற்றி பெற்றது. அசாமில் தயாரிக்கப்பட்ட கறுப்புத் தேயிலை மலிவானதாகவும் சுவையானதாகவும் இருந்ததால் விரைவில் இங்கிலாந்துச் சந்தையைக்கவர்ந்தது. இந்தச் சாதக நிலைமையை இலங்கைத் துரைமார் சரியாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

## இலங்கையில் தேயிலை

தேயிலை இலங்கையில் நடும் முயற்சி பலராலும் முன்னெடுக்கப்பட்டு வந்தது. டெனன்ட் (Tennant) கூற்றுப்படி டச்சுக்காரர்களும் தேயிலையைப் பயிரிட முயன்றார், ஆனால் வெற்றி பெறவில்லை. **1805** ஆம் ஆண்டில், திருகோணமலைக்கு அருகில் தேயிலைச் செடி காடுகளாக வளர்ந்து கொண்டிருந்ததாகவும், படை வீரர்கள் இலைகளை உலர்த்தி, கொதிக்கவைத்து, கோப்பியை விட, அதனை விரும்பிக் குடித்ததாகவும் கார்டினர் (Cordiner) கூறுகிறார். இது டச்சுக்காரர்களால் கைவிடப்பட்ட தேயிலைத் தோட்டம் எனக் கருதப்படுகிறது. தேயிலைப் பயிர் முதன்முதலில் பிரிட்டிஷ் காலத்தில் கவர்னர் ஸ்டீவர்ட் மெக்கன்சியின் (Governor Stewart Mackenzie) வழிகாட்டுதலின் கீழ் **1839** இல் இலங்கையிலே அறிமுகப்படுத்தப்பட்டது எனினும் பின்னர் அதில் கூடிய கவனம் செலுத்தப்படவில்லை. கோப்பிக் காலத்தில் கூட பலர் தேயிலை நட முயன்றதற்கான ஆதாரங்கள் உண்டு. எனினும் அது பற்றி இங்கு விபரிக்கவில்லை.


இலங்கைத் தேயிலையின் ஸ்தாபகத் தந்தையாக ஜேம்ஸ் டெய்லர் (James Taylor ) மிகவும் சரியாகவே அடையாளம் காட்டப்படுகிறார். கோப்பி காலத்திலும் பின்னர் தேயிலைப் பெருந்தோட்டங்களிலும் பணிபுரிந்த பெரும்பாலான தோட்டத் துரைமார் முரடர்களாகவும் உல்லாசப் பிரியர்களாகவும் இருந்தனர். ஆனால் டெய்லர் ஒரு நுண்ணறிவு மிக்க செயற்திறனும் அர்ப்பணமும் கொண்ட ஒரு சிறந்த தோட்டநிர்வாகி. ஆயினும் அவர்

> 1865 இல் தோட்ட உரிமை கைமாறியதும் அவரது திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. புதிய உரிமையாளர்களில் ஒருவரான ஹரிசன் டெய்லரின் திறமையை நன்கு அறிந்தவர். 1866 அளவில் கோப்பியின் விலை வீழ்ச்சியடைந்தபோது மாற்றுப் பயிர்களைத் தேடுவதில் அவர் ஆர்வம் காட்டினார். அதனை நிறைவேறும் திறமை டெய்லரிடம் இருப்பதாக அவர் நம்பினார்.

கோப்பிப் பெருந்தோட்டத்தின் ஸ்தாபகரான ஜார்ஜ் பேர்ட் ( George Bird) போன்று ஒரு தோட்ட உரிமையாளராக இருக்கவில்லை. எனவே அவரால் சுயமாக அனைத்தையும் செய்ய முடியவில்லை. அவரது வெற்றியில் பலருக்கு பங்குண்டு. எனினும் அந்தப் பலரால் டெய்லர் இன்றி இந்தச் சாதனையைச் செய்திருக்க முடியாது. 1852 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி தனது 17ஆவது வயதில் டெய்லர் இலங்கைக்கு வந்தார். ஆரம்பத்தில் ஹேவாஹெட்டயில் இருந்த நாரஹேனா தோட்டத்திற்கு (தற்போது லூல்கந்தர Loolecondera - தோட்டத்தின் ஒரு பிரிவு), வயது முதிர்ந்த, கோபக்காரரான, அரைக்கிறுக்கான ஒரு பெரியதுரையின் கீழ் தொழில்பயின்றார். அப்போதே அவரது பொறுமையும் புத்தி சாதுர்யமும் வெளிப்பட்டது. கணக்கியல் மற்றும் பொறியியல் ஆகியவற்றில் அவருக்கு இயல்பான ஆர்வம் இருந்தது. உதாரண மாக, அசல் லூல்கந்தர கோப்பி தொழிற்சாலை யின் இயந்திரங்களும் வெலிஓயா கோப்பி தொழிற்சாலையும் அவரால் நிறுவப்பட்டன. தொழிலாளரின் நன்மதிப்பும் அவருக்குக்கிடைத்தது.

1865 இல் தோட்ட உரிமை கைமாறியதும் அவரது திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. புதிய உரிமையாளர்களில் ஒருவரான ஹரிசன் (G. D. B. Harrison) டெய்லரின் திறமையை நன்கு அறிந்தவர். 1866 அளவில் கோப்பியின் விலை வீழ்ச்சியடைந்தபோது மாற்றுப் பயிர்களைத் தேடுவதில் அவர் ஆர்வம் காட்டினார். அதனை நிறைவேறும் திறமை டெய்லரிடம் இருப்பதாக அவர் நம்பினார். முதலில் டெய்லருக்கு சிங்கோனாவை வளர்க்கும் பணி வழங்கப்பட்டது, அதில் அவர் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார். ஹரிசனின் பணிப்பின் பேரில் டெய்லர் (Taylor) அதே காலத்தில் பேராதனை தாவரவியல் பூங்காவிலிருந்து தேயிலை விதைகளைப் பெற்று சாலையோரங்களில் வேலியைப்போல நாட்டினார். அவைசெழிப்பாக வளர்ந்து நம்பிக்கையளித்தன. இதனைக் கண்காணித்த - அப்போது அரசில் மிகுந்த செல்வாக்கு செலுத்திய - தோட்டத் துரைமார் சங்கத்தின் செயலாளர் டபிள்யூ. எம். லீக், (W. M. Leake) விடுத்த கோரிக்கையை ஏற்ற ஆளுநர் அனுபவம் வாய்ந்த கோப்பி தோட்ட நிர்வாகியான திரு. ஆர்தர் மோரிஸை (Arthur Morice) தேயிலையை எவ்வாறு வளர்ப்பது என்பதை ஆய்வு செய்வதற்காக அசாமுக்கு அரசாங்க செலவில் அனுப்பிவைத்தார். அவரது 1866 ஆம் ஆண்டு அறிக்கையை துரைமார் ஏற்றுக்கொண்டனர். இதன்படி அசாமிலிருந்து பெறப்பட்ட முதலாவது தொகை விதை லூல்கந்தரவில் விதைப்பதற்காக ஜேம்ஸ் டெய்லரிடம் ஒப்படைக்கப்பட்டது. இது அவர்மீது துரைமார் சங்கத்திற்கும் இருந்த நம்பிக்கையையும் அதற்கான தகுதி அவரிடம் இருந்தது என்பதையும் காட்டுகிறது.

டெய்லர் அந்த நம்பிக்கையைக் காப்பாற்றத் தவறவில்லை. லூல்கந்தரவில் 19 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட நிலத்தொகுதி இதற்காக ஒதுக்கப்பட்டது. அதில் முதல் கட்டமாக 10 ஏக்கரில் டெய்லர் தேயிலையைப் பயிரிட்டார். தேயிலை உற்பத்தியின் அனைத்து சிக்கல்களையும் அறிந்த அசாமின் தேயிலை தாவரவியலாளரான ஜென்கின்ஸ் (Mr. Jenkins) என்பவரின் ஆலோசனை அவருக்குக் கிடைத்தமை இவருக்கு பேருதவியாக அமைந்தது. இயல்பாகவே ஒரு தொழில்நுட்ப வல்லுநராக இருந்த டெய்லர் அசாமிலிருந்து ஜென்கின்ஸ் அவர்களிடமிருந்து பெற்ற அடிப்படை அறிவை தனது நுண்ணறிவால் அபிவிருத்தி செய்தார். புதிய சோதனைகளை மேற்கொண்டார். களிமண் அடுப்பின் மீது இரும்புக் கம்பிகளைப் பரப்பி அதன்மீது போட்டு உலர்த்திய இவரது தேயிலைத்தூள் தயாரானது. இவ்வாறு இவர் தயாரித்த முதலாவது



**1880களில் இலங்கையின் பெருந்தோட்ட தொழிலாளிகள்**

Image source - specialcollections-blog.lib.cam.ac.uk




**லூல்கந்துர தோட்டத்தில் உள்ள ஜேம்ஸ் டெய்லரின் சிலை**

Image source - www.virakesari.lk

*தேயிலைத்தூளை 1872ஆம் ஆண்டு டெய்லரால் கண்டிச் சந்தையில் விற்க முடிந்தது. அடுத்தவருடம் லண்டனுக்கு அனுப்பப்பட்ட இவரின் தேயிலைத்தூள் மாதிரிகள் அங்கு நல்ல வரவேற்பைப்பெற்றன. அவர் தனது சுய அறிவைப் பயன்படுத்தி சீக்கிரமே தேயிலை தயாரிப்பதில் ஒரு நிபுணரானார். தயாரிப்பிலும் தரத்திலும் அசாம் தேயிலைக்கு சமமான தேயிலைகளை உற்பத்தி செய்யத் தொடங்கினார். இவர் சார்ந்த நிறுவனம் இந்தியத் தேயிலை விதைகளை தொடர்ந்து இறக்குமதி செய்து வந்தது, சீக்கிரமே லூல்கொண்டெரா தேயிலைகள் உலகின் சிறந்த தேயிலைக்கு சமமானவை என வகைப்படுத்தப்பட்டது. அப்போது லண்டனில் தேயிலை பரிசோதனையில் தலைசிறந்த நிபுணராகத் திகழ்ந்த கலாநிதி போல் (Dr. Paul) வாசனையிலும் தரத்திலும் சுவையிலும் இத்தேயிலையே சிறந்தது என சான்றிதழ் வழங்கினார். இருபது வருட மாகும்போது 1888இல் தேயிலை மிகவும் செழிப்பாக வளர்ந்து வருவதாக அறிவிக்கப்பட்டது. லூல்கந்தர சீக்கிரமே உள்ளூர்த் தேயிலையைப் பயிரிடுவதில் மாதிரித்தோட்டமாகப் பாராட்டப்பட்டது. இவ்வாறு கோப்பியின் யுகம் முடிவுக்கு வரும்போது ஒரு புதிய யுகம் - தேயிலை யுகம் - வாரிசு உரிமை கோரித் தயாராக நின்றது. அதனைத் தொடங்கிவைத்தவர் ஜேம்ஸ் டெய்லர். லூல்கந்தரவை நேசித்த டெய்லர் பிரம்மச்சாரியாகவே தனது வாழ்க்கையைக் கழித்தார். இலங்கையில் இருந்து ஒரே ஒருமுறைதான் 1874 இல் விடுமுறைக்காக வெளிநாடு சென்றார். அதுவும் இந்தியாவில் தலை சிறந்த தேயிலை விளையும் டார்ஜீலிங் (Darjeeling) பகுதிக்கு தேயிலைத் தயாரிப்புத் தொடர்பான தனது அறிவை வளர்த்துக் கொள்வ தற்காகத்தான். இப்படி தனது முழு வாழ்க்கையையும் தேயிலை ஆராய்ச்சியில் கழித்த அவர் வயிற்றுப்போக்கு நோயால் பாதிக்கப்பட்டு மே 2, 1892 அன்று 57 ஆவது வயதில் இறந்தார். டெய்லர் உடல் ரீதியாக ஒரு 240 பவுண்டுகள் எடைகொண்ட பருமனான மனிதர். அவரது உடல் தொழிலாளர்களால் கண்டிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மஹய்யாவையில் அடக்கம் செய்யப்பட்டது. அவருக்குப்பின் அவரிடத்துக்கு ஜி.எஃப். தீன் (G.F. Deen) நியமிக்கப்பட்டார். ஜேம்ஸ் டெய்லர் 1876 ஆம் ஆண்டில் - அதாவது கோப்பி நோய் தாக்குவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு - தனது தேயிலைத் தோட்டத்தைத் தொடங்கினார், இருபது ஆண்டுகளில், தீவின் முழுக் கோப்பிப் பெருந்தோட்டமும் அழிவதற்கு இடைப்பட்ட 22 வருட காலத்தில் தேயிலை கோப்பிக்கு மாற்றாக தேயிலையை அவர் உறுதியான நம்பிக்கை தரும் விடிவெள்ளியாக தந்துவிட்டே மறைந்தார். 1867 இல் 10 ஏக்கர் தேயிலை வணிக ரீதியாக இலங்கையில் டெய்லரால் பயிரிடப்பட்டது. அடுத்த, எட்டு ஆண்டுகளுக்குள் (1875) அது 1,080 ஏக்கராக உயர்ந்தது, அதன்பிறகு பத்து ஆண்டுகளுக்குள், 1885 இல் தேயிலை விளைந்த நிலம் 102,000 ஏக்கராக , பத்து மடங்கு அதிகரித்தது. அதன் பின்னர் இலங்கையின் வரலாறு தேயிலையோடு பிணைந்ததாகவே 150 வருட காலம் - ஏன் அதன் பின்னரும் கூட - தொடர்ந்தது. தேயிலை , கோப்பி விட்டுச்சென்ற அதே கட்டமைப்பின் மீது - அவற்றில் செய்யப்பட்ட முதலீடுகள் வீணாகாது காப்பாற்றி - பெருந்தோட்டப் பொருளாதாரத்தை மேலும் விரிவடையச் செய்தது, அது எப்படி அடுத்த ஒன்றரை நூறாண்டுகளுக்கு மேல் இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பாக மாறியது ? அதன் விளைவுகள் யாவை ?என்பதை நாம் பின்னர் பார்க்கப்போகிறோம்.*

*(தொடரும்)*

நம்மிடையே உள்ள பாரம்பரிய வேளாண்மை முறைமைகளில் நவீன நுட்பங்களை புகுத்தி, இலங்கையில் ஒரு விவசாயப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான நவீன விவசாயக் கொள்கைகளை உருவாக்கும் சாத்தியங்கள் குறித்து ஆராய்ச்சி முடிவுகளுடன் தர்க்கித்து, மக்களுக்கும், விவசாயத்துறை சார்ந்தவர்களுக்கும் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாது ஆராய்ச்சித் துறை மாணவர்களுக்கு உசாத்துணை ஆதாரமாகவும் 'இலங்கையின் வேளாண்முறைமையில் நவீன நுட்பங்கள்' என்ற இந்தக்கட்டுரைத்தொடர் அமைகிறது. இலங்கையின் பாரம்பரிய வேளாண்மை முறைமையில் உள்ள சாதக – பாதகங்கள், அதிலுள்ள போதாமைகளை நிவர்த்திக்கும் வகையில் நவீன நுட்பங்களைப் புகுத்துதல், நவீன நுட்பங்களால் உண்டாகக்கூடிய விளைவுகள், இலங்கையில் பசுமைப்புரட்சிக்காக முன்வைக்கப்படவேண்டிய விவசாயக் கொள்கைகள் என்பன பற்றி விரிவாகவும், ஆய்வுத்தளத்திலும் இந்தக்கட்டுரைத்தொடர் விபரிக்கின்றது.




**கந்தையா பகீரதன்**

கந்தையா பகீரதன் அவர்கள் 2009ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் விவசாய விஞ்ஞான இளமாணிப் பட்டத்தைப் பெற்று, அதே பல்கலைக்கழகத்தில் 2011ஆம் ஆண்டுமுதல் விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார். இவர் 2012ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்படிப்பிற்கான விவசாய நிறுவகத்தில் தாவர பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் தனது முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். பின்னர் இவரின் ஆராய்ச்சித் திறமைகளுக்காக 2014ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் வழங்கப்படும் பட்டப்பின் ஆராய்ச்சிக்கான புலமைப்பரிசில் மற்றும் அவுஸ்திரேலியன் முதுகலை விருதையும் (IPRS&APA) பெற்று அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்தில் மூலக்கூற்றியல் தாவர பாதுகாப்புப் பிரிவில் கலாநிதிப் பட்டத்தை 2017 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டார்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் மற்றும் விவசாய உயிரியல் துறையின் தலைவராகவும் பதவி வகிக்கின்றார். இவர் தனது ஆராய்ச்சி முடிவுகளை 30இற்கும் மேற்பட்ட தேசிய மற்றும் சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகளில் முன்னிலைப்படுத்தியதோடு மட்டுமல்லாது, உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற சஞ்சிகைகளிலும் தனது ஆராய்ச்சிக் கட்டுரைகளை பிரசுரித்துள்ளார். இவர் எழுதிய 'அந்நியக்களை பாதீனியம்: அடங்க மறுப்பது ஏன்? அறியாததும் புரியாததும்' என்ற நூல் வெளிவரவுள்ளது.


# நவீன விவசாயமும் உணவுப் புரட்சியும்

## அறிமுகம்

கடந்த பல நூற்றாண்டுகளாகப் பாரம்பரிய விவசாய முறைகளைப் பயன்படுத்தி வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப சுகாதாரமான உணவை, எமது விவசாயப் பெருமக்களால் அனைத்து மக்களுக்கும் வழங்க முடிந்தது. எனினும் நான்காம் அத்தியாயத்தில் குறிப்பிட்டது போல் 18 ஆம் நூற்றாண்டில் மனிதப் பெருக்கத்தின் அசுர வளர்ச்சியானது மிகப் பயங்கரமான உணவுப் பஞ்சம், இடப்பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை, காலநிலை மாற்றம், நாடுகளுக்கு இடையான போட்டி எனப் பல விளைவுகளை ஏற்படுத்தியது. பாரம்பரிய முறைகள் மூலமான உணவு உற்பத்தி போதுமானதாக இருக்கவில்லை என்பதே இவை அனைத்துக்கும் பிரதான காரணமாகும். இதற்கு மாற்றீடான தந்திரோபாயமாக பாரம்பரிய விவசாய முறைமைகளில் நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தி நவீன விவசாயத்துக்கு செல்லவேண்டியதன் கட்டாயத்தை உலகிற்கு உணர்த்தியது. இதற்கு உறுதுணையாக அந்தக்காலகட்டத்தில் ஏற்பட்ட இயந்திரத் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியும், விவசாயத்துறையில் மேற்கொள்ளப்பட்ட அயராத ஆராய்ச்சிகளுமே காரணம். தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளையும் விவசாய ஆராய்ச்சிகளையும் இணைத்து உணவு உற்பத்தியை பலமடங்கு அதிகரிக்கலாம் என அமெரிக்க விஞ்ஞானி நார்மன் போர்லாக் மெக்ஸிகோவில் செயற்படுத்திக் காட்டி பசுமைப் புரட்சியை உலகறியச் செய்து, உணவுப் புரட்சியை ஏற்படுத்திக் காட்டியதன் மூலம் இன்று பல நாடுகள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கும் வழிசமைத்தார். இந்த உணவுப் புரட்சிக்கு கணினி, விஞ்ஞானம் மற்றும் தொலைத்தொடர்பு துறையில் தினமும் நிகழும் மேம்பாடுகள் மற்றும் கண்டுபிடிப்புகள் மேலும் மேலும் நவீன உத்திகளாக விவசாயத்துறையில் உட்புகுத்தப்பட்டு நவீன விவசாயம் உலகம் முழுவதும் எவ்வாறு தொழில்நுட்ப விவசாயமாகப்



**உயர் தொழில்நுட்பப் பண்ணை இயந்திரங்கள்**
Image Source - justagriculture.in

பெருமளவு செலவைக் குறைத்ததோடு, முன்கூட்டியே நடவு செய்வதும், சரியான நேரத்தில் அறுவடை செய்வதும், மகசூல் சரியான நேரத்திற்குள் சேமிக்கப்படுவதையும், விவசாயிகள் மிகக் குறுகிய காலத்திற்குள் பரந்த அளவிலான உணவை உற்பத்தி செய்வதையும் உறுதி செய்தது. குறிப்பாக, இந்த இயந்திரங்களின் மேம்பாட்டில் இன்று ஓட்டுநர் தேவையில்லாத ஓட்டோபைலட் டிராக்டர்களில் ஜிபிஎஸ் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது (படம் 1).

பரிணமித்திருக்கிறது என்பதையே இந்த அத்தியாயம் ஆராய்கிறது.

### விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்கள் (Modern Technologies in Agriculture)

விவசாயத்தில் தொழில்நுட்பம் ஊடுருவத் தொடங்கியதில் இருந்து பல்வேறு வகையான கீழ் வரும் நவீன உபகரணங்களும் அவற்றினுடைய பல்வேறு பயன்பாடுகளும் விவசாயத்துறையில் மனித வலுவின் பயன்பாட்டையும், நேரத்தையும், மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ள இயற்கை வளங்கள் வீணாவதையும், அபரிமிதமான செயற்கை விவசாய இயற்கை உள்ளீடுகளின் பாவனையைக் குறைத்து, சூழல் மாசடைதலைத் தடுத்து, உற்பத்திச் செலவைக் கட்டுப்படுத்தி, குறைந்த காலத்தில் மிகையான உணவு உற்பத்தியைப் பெற வழி சமைத்துள்ளன.

**நவீன பண்ணை இயந்திரங்கள் (Modern Farm Machineries):**
பயிர்களை நடவும், விதைகளை விதைக்கவும், களைகளை அகற்றவும், மண்ணைப் பண்படுத்தவும் நவீன மற்றும் ஒருங்கிணைந்த அறுவடை மற்றும் நடவு இயந்திரங்களின் ஆதிக்கம் உலகம் முழுவதும் விவசாயத்தில்

இத்தகைய தொழில்நுட்பம் விவசாயத்தில் சிறந்த மற்றும் திறமையான விவசாய நடைமுறைகளை ஊக்குவிக்கிறது. எடுத்துக்காட்டாக, தன்னியக்க டிராக்டர்கள் மற்றும் தெளிப்பான்கள் கண்காணிப்பு அமைப்புகளுடன் பொருத்தப்பட்டுள்ளதனால், அவை மனிதனால் விடப்படக்கூடிய பிழையை நீக்குகின்றன மற்றும் இறுதியில் எரிபொருள் மற்றும் இதர வளங்களைச் சேமிக்கின்றன.

**Global Information System (GIS) மென்பொருள் மற்றும் Global Positioning System (GPS) விவசாயம்:**


GIS மென்பொருள் விவசாய நிலங்களின் வெப்பநிலை, மழைவீழ்ச்சி, பயிர் விளைச்சல், மண்ணின் வகை மற்றும் பலவற்றை வரைபடமாக்க அனுமதிக்கிறது. இந்தத் தரவுகள் பண்ணையாளர்களுக்கும், பண்ணைகளை வாங்க முனைபவர்களுக்கும் அல்லது பண்ணையில் முதலீடு செய்ய முனைபவர்களுக்கும் மற்றும் வணிக உரிமையாளர்களுக்கும் பண்ணையின் கடந்தகால உற்பத்தி மற்றும் விளைதிறன் நிலைமைகளைப் படிப்பதன் மூலம் எதிர்காலத்தைத் திட்டமிடவும் உதவும்.

மேலும் GPS உடன் இணைக்கப்பட்ட இந்தத் தொழில்நுட்பங்கள் தன்னியக்க டிராக்டர்கள், விதைகள் மற்றும் அறுவடை இயந்திரங்களை தூர இடங்களில் இருந்து இயக்கவும் மற்றும் ஒருங்கிணைத்து ஒரு துல்லியமான உத்தியைப் பின்பற்றி வயல்களில் வேலை செய்யவும் வழிகாட்டுகின்றன. GIS மென்பொருள் விவசாய அமைப்பில் ட்ரோன்கள் மற்றும் செயற்கைக்கோள்களைப் பயன்படுத்தி பயிரின் நிலைமை (உயரம், இலைகளின் நிறம்), உயிரிகள் (பீடைகள், நன்மை பயப்பவை, *etc*), களைகளின் இருப்பு, நிலப்பரப்பு மற்றும் வானிலை ஆகியவற்றை வான்வழி மதிப்பீடு செய்து பண்ணையாளர் அல்லது சேவை வழங்குநர் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் உதவுகிறது.

**மண் மற்றும் நீர் உணரிகள்**
**(Soil and Water Sensors):**

உயிரிகள் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பார்ப்பதற்கும், சூழல் மாற்றங்களை அறிவதற்கும் தங்களிடம் உள்ள புலன்களைப் பயன்படுத்துகின்றன. மனிதர்களும் இவ்வாறு வரையறுக்கப்பட்ட உணர்திறன் மிக்க புலன் அங்கங்களை விவசாயத்திலும் சில முடிவுகளை எடுக்கப் பயன்படுத்தினார்கள். ஆனால் மண்ணில் உள்ள போசணை அளவுகளை மற்றும் பயிரில் உள்ள போசணை அளவுகளை பரிசோதனை செய்ய முடியாமல் அல்லது உடனடியாக அறிய முடியாது தடுமாறினார்கள்.


ஆனால் இன்று விஞ்ஞான வளர்ச்சி தந்த செயற்கை உணரிகளால் (ரோபோடிக் சென்சார்கள்) (படம் 2), நாம் பார்ப்பதற்கு அப்பால் உள்ள தரவையும் வழங்குகின்றன. மண்வெப்பநிலை, மண்ணின் அமில காரத்தன்மை (*pH*), காற்றின் மற்றும் மண்ணின் ஈரப்பதம், தாவர ஆரோக்கியம் மற்றும் பூச்சி அழுத்தம் போன்ற அனைத்து நிலைகளையும் செயற்கை உணரிகளால் கண்காணித்து தரவுகளை உடனடியாக வழங்க முடியும். இன்று தொழில்நுட்ப மேம்பாட்டில் இயங்கும் பண்ணைகள் செயற்கை உணரிகள், உணரிகள் பொருத்திய ரோபோக்களைப் பயன்படுத்தப்படும்போது மனிதப் பிழையைக் குறைக்கலாம் மற்றும் வேலை நேரத்தை மிகவும் திறமையாக நிர்வகிக்கலாம். இந்த உணரிகள் மூலம் பெறப்படும் தகவல்கள் துல்லியமானவை மட்டுமல்ல, விவசாயிகளுக்கு விரைவாகவும் தொலைதூரத்திலும் தெரிவிக்கப்படுகின்றன. கணினிமயமாக்கப்பட்ட உணரிகளால் தரவுகளினை ஆராய்ந்து தேவையான செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள




**செயற்கை மண் மற்றும் நீர் உணரிகள்**

**Image Source - electronics360.globalspec.com**

முடியும். உதாரணமாக, மண்ணின் ஈரப்பதனை நிர்வகிக்கும் உணரிகள் மண்ணின் நீர் குறையும் போது கணினிக்கு அறிவித்து நீரைத் தேவையான அளவு பயிருக்கு இறைக்கின்றன. உணரிகள் வயல்களின் நிகழ்நேர நிலைமைகளின் அடிப்படையில் பயிர்களுக்கான பல்வேறு விளைவுகளை துல்லியமாக கணிக்கும் விவசாய வழிமுறையை உருவாக்கி விவசாயிகளுக்கு பயிர் இழப்புகளைத் தடுக்கவும், லாபத்தை அதிகரிக்கவும், திட்டமிடவும், விவசாய முறைமைகளை மாற்றியமைக்கவும் உதவும்.



செயற்கைக்கோள் தாவரப் புறத்தோற்ற அமைப்புப் படத் தொழில்நுட்பம்

Image Source - www.farmfoundation.org

**செயற்கைக்கோள் புறத்தோற்ற படத் தொழில்நுட்பம்**
**(Satellite Imaging and Phenotyping):**
செயற்கைக்கோள்கள் பல்வேறுபட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன, இவற்றில் ஒன்று, செயற்கைக்கோள்களை விவசாயத் தேவைகளுக்காகப் பயன்படுத்துதல். நவீன செயற்கைக்கோள்கள் விவசாய நிலங்களில் வளரும் பயிர்களின் துல்லியமான படங்களை விவசாயிகளுக்கு அனுப்பி, விவசாயிகள் அவற்றை பொருத்தமான நிறமாலைக் குறியீடுகளிலிருந்து தரவுகளை இணைக்க அனுமதிக்கின்றன.

விவசாயத்தில் நான்கு முக்கிய நிறமாலைக் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

Normalized Difference Vegetation Index (NDVI) [தாவரங்களின் இயல்பாக்கப்பட்ட வேறுபாட்டுக் குறியீடு]
Normalized Difference RedEdge (NDRE) [இயல்பாக்கப்பட்ட வேறுபாட்டு RedEdge]
Canopy Chlorophyll Content Index (CCCI) [விதான நிறப்பொருள் உள்ளடக்க அட்டவணை]
Modified SoilAdjusted Vegetation Index (MSAVI) மாற்றியமைக்கப்பட்ட மண்சரிசெய்யப்பட்ட தாவர அட்டவணை]

இதில் முதல் மூன்று நிறமாலைகளையும் பயன்படுத்தி பயிர்களின் நிறப்பொருள் அளவை ஆய்வு செய்து உரக் குறைபாட்டினால் (குறிப்பாக நைதரசன்) பயிர்கள் பாதிப்படையாமல் விவசாயிக்கு துல்லியமான உரங்களைத் தெளிக்க/வழங்க அனுமதிக்கும். விதைகள் விதைப்புச் செய்து அல்லது நாற்றுக்கள் இயந்திரங்கள் மூலம் நடவு செய்த தரைகளில் பயிர்கள் வளராத அல்லது பயிர்கள் பட்ட இடங்களைக் கண்டறிய MSAVI பயன்படுத்தப்பட்டு மேலதிக விதைப்புகளைச் செய்ய உதவுகிறது. இவற்றின் மூலம் மிகக் குறைந்த மனிதவலுவுடன் விவசாயி தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடியும். மேலும் ஆளில்லா விமானங்கள் எடுக்கும் செயற்கைக்கோள் படங்கள் மூலம் தாவர நோயினால் அல்லது பீடையினால் பாதிக்கப்பட்ட இடங்களை இனம் கண்கொண்டு அந்தப்பகுதிகளுக்கு மாத்திரம் தெளிக்கும் டிரோன் மூலம் தெரிவு செய்த பீடை நாசினிகளைத் தெளிப்பதன் (Intelligent spray) மூலம் செலவு குறைவடைவதோடு சுற்றுப் புறச் சூழல் மாசடைதலும் தவிர்க்கப்படும்.

**உட்புற விவசாயம் (Indoor Farming) :**
உட்புற விவசாயம் என்பது ஒரு மூடிய மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் பயிர் செய்வதைக் குறிக்கிறது. செயற்கை வளர்ச்சி விளக்குகள் உட்புற இடத்திற்குப்

பயன்படுத்தப்படுகின்றன, இது வளரும் செயல்முறையின் மீது அதிக கட்டுப்பாட்டை வழங்குகிறது. நகர்ப்புற உட்புற வீட்டு விவசாயம் மிகவும் பிரபலமாகி வருகிறது, இது சில பயிர்களை வளர்ப்பவர்களுக்கு வெளியில் உள்ள வானிலையைப் பொருட்படுத்தாமல் ஆண்டு முழுவதும் வளர வழி சமைக்கிறது. சமீபத்திய ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட ஒளிகாலும் இருவாயிகளைக் கொண்ட எல்.இ.டி மின்குமிழ்கள் மூலம் மலிவான மற்றும் சிறந்த முறையில் உருவாக்கப்பட்ட நவீன விவசாய தொழில்நுட்பக் கட்டமைப்புகள் மூலம் பயிர் உற்பத்தியை எளிதாக்கியுள்ளன.

இதைத் தவிர சிறிதளவு இடம் கிடைக்கக் கூடிய இடங்களில் குறிப்பாக நகர்ப்புற மொட்டை மாடிகளில் தானியங்கி வலை இல்லங்கள் (Auto mated Net House) அமைத்து மண் இந்திய விவசாயம் மூலம் அல்லது சாடி விவசாயம் மூலம் மிகக் குறைந்த மனித வலுவுடன் பீடைகளின் தாக்கம் இல்லாத மரக்கறிகள் மற்றும் பழங்களை அதிக விளைச்சலுடன் அதிகளவில் உற்பத்தி செய்ய முடியும்.

**செங்குத்து விவசாயம் (Vertical Farming)**



செங்குத்து விவசாய முறைகள் (Vertical Gardening)

Image Source - www.abouther.com

செங்குத்து விவசாயம் என்பது செங்குத்தாக உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளில் பயிர்களை வளர்ப்பதைக் குறிக்கிறது. பயிர்களை செங்குத்தாக வளர்ப்பதன் மூலம், விவசாயிக்கு வழக்கமான வரிசை விவசாயத்தை விட குறைவான நிலமே தேவைப்படுகிறது. இந்த நுட்பம் முதன்மையாக நகர்ப்புற அமைப்புகளில் பயன்படுத்தப்பட்டாலும், உற்பத்தியை அதிகரிக்க விரும்பும் எவரும் செங்குத்தாக வளர்வதன் மூலம் பயனடையலாம். செங்குத்து விவசாய நுட்பங்களில் மண்ணின் பாரம்பரிய பயன்பாடு, ஊட்டச்சத்து - அடர்ந்த நீரைப் பயன்படுத்தும் ஹைட்ரோபோனிக் நுட்பங்கள் மற்றும் நீர் மற்றும் ஊட்டச்சத்துக்களை தாவர வேர்களில் மட்டுமே தெளிக்கும் ஏரோபோனிக் நுட்பங்கள் ஆகிய இரண்டும் அடங்கும். பாரம்பரிய விவசாயத்தை விட செங்குத்து விவசாயத்திற்கு பொதுவாக 70 சதவீதம் குறைவான தண்ணீர் தேவைப்படுகிறது. செங்குத்து விவசாயத்திற்கான தொழிலாளர் தேவைகள் பெரும்பாலும் குறைவாகவே இருக்கும், மேலும் சில செங்குத்து பண்ணைகள் தொழிலாளர் தேவைகளை இன்னும் குறைக்க ரோபோ நடவு மற்றும் அறுவடையை செயல்படுத்துகின்றன.

**ரேடியோ அதிர்வெண் அடையாளத் தொழில்நுட்பத்துடன் (Radio Frequency Identification [RFID Technology] சந்தைப்படுத்தல்:**

'பார் கோட்' தொழில்நுட்பம் என்பது விவசாயத்திற்கு மட்டுமே சொந்தமானது அல்ல. நவீன விவசாயத்தில் ரேடியோ அதிர்வெண் அடையாள தொழில்நுட்பத்தை (RFID) இணைப்பது பயிர்க் கண்காணிப்பை மேம்படுத்தி இலகுவாக கலப்படம் இல்லாமல் சந்தைப்படுத்தலாம் என்று விவசாயிகள் கண்டறிந்துள்ளனர். RFID என்பது 'பார்கோட்' போன்றது. ஆனால் பல அடி தூரத்தில் இருந்தும், மண்ணின் வழியாகவும் ஸ்கான் செய்ய முடியும். RFID குறிச்சொற்களை 2 KB வரையிலான தரவுகளுடன் நிரலாக்க முடியும், பயிரின் பெயர், இனம், இடம் நடவு செய்த திகதி மற்றும் பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகள் ஆகியவற்றை சுட்டி இடுவதற்கு (Labelling) அவற்றை எளிதாக்குகிறது. RFID பண்ணைப் பொருட்கள் சந்தைக்கு அனுப்பப்படும்போது அவற்றைக் கண்காணிப்பதை எளிதாக்கும். ஒரு எளிய ஸ்கேன் மூலம் தயாரிப்பின் அத்தனை விபரத்தையும் வெளிப்படுத்தும். RFID தொழில்நுட்பம் தயாரிப்பில் தரவைப் பாதுகாப்பாகச் சேமிப்பதன் மூலம் மனிதப் பிழையைக் குறைக்கலாம். RFID தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் போது, சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் உணவுப் பொருட்களின் உண்மைத் தரவுகளை அறிந்து

நம்பிக்கையுடன் வாங்க முடியும். இவ்வாறாக வளர்ந்துவரும் நவீன தொழில்நுட்பங்களை தினம் தினம் விவசாயத்தில் புகுத்தி பசுமைக்கு புதுமை சேர்த்து உணவு உற்பத்தியில் பல நாடுகள் அதிக லாபத்தை ஈட்டிவருவதோடு, சிறிய நிலப்பரப்பில் இருந்து பன்மடங்கு விளைச்சலையும் பெறுகின்றன. இதற்கு உதாரணமாக மிகச் சிறிய நாடுகளாக இருக்கின்ற இஸ்ரேல், நெதர்லாந்து, ஜப்பான் மற்றும் தென்கொரியா போன்றவற்றைக் குறிப்பிடலாம். இருந்தாலும் இன்று உலக வல்லரசுகளாக தம்மை காட்டிக் கொள்ள போட்டி போட்டுக் கொண்டிருக்கின்ற நாடுகள் இவற்றை மிகப் பரந்த அளவில் பயன்படுத்தி தமது நாட்டில் தன்னிறைவு அடைந்தது மட்டுமல்லாமல் உலக மக்களுக்குத் தேவையான உணவின் பெரும் பகுதியை தாமே உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்து பணக்கார நாடுகளாக தொடர்ந்து வலம் வருகின்றன. இவற்றில் அபரிமிதமான உணவு உற்பத்தியில் ஈடுபடுகின்ற முதல் ஐந்து நாடுகளின் உணவு உற்பத்தித் தரங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| இல | நாடுகள் | உணவு உற்பத்தித்திறனும் சிறப்பு அம்சங்களும் |
|---|---|---|
| 1. | சீனா | உலகளாவிய விவசாயம் செய்யக்யக் கூடிய நிலத்தில் 10% ஐ வைத்து நவீன விவசாயத் தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி உலகின் தானிய உற்பத்தியின் 25% யும் மற்றும் காய்கறி உற்பத்தியின் கிட்டத்தட்ட 50% யும் (500 Million ton/Year) உற்பத்தி செய்கிறது. பழங்கள், காய்கறிகள், தானியங்கள் மற்றும் பருத்தி ஆகியவற்றில் சீனா உலகின் முன்னணி உற்பத்தியாளராக உள்ளது. இந்த மூன்று முக்கிய பயிர்களின் உற்பத்தி, இருப்பினும் கோதுமை, அரிசி மற்றும் மக்காச்சோளம் ஆகியவை சீனாவின் ஒட்டுமொத்த உணவு உற்பத்தியில் 90% க்கும் அதிகமானவை.<br>2019 ஆம் ஆண்டில் 133.1 பில்லியன் டாலர் ஏற்றுமதியுடன், சீனா அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியனை விஞ்சி உலகின் விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியில் முதலிடத்தில் உள்ளது. உள்ளூர் மக்கள் சாலையோரங்களில் காய்கறிகளை வளர்த்து, செங்குத்து விவசாயத்திற்கு மாறுவதன் மூலம் அல்லது சுவர்களில் நடவு செய்வதன் மூலம் தங்கள் விவசாயத்தை மேம்படுத்தும் நாடு. |
| 2. | அமரிக்கா | உலகின் அதிநவீன விவசாய தொழில்நுட்பங்கள் மற்றும் விவசாய அறிவியல், பயிர் பகுப்பாய்வு, மண் அறிவியல், மற்றும் அதிநவீன பண்ணை இயந்திரங்கள் என அனைத்தையும் மேம்படுத்தி தங்கத் தரம் வாய்ந்த விவசய்யத் தொழிநுட்ப நாடாக மிளிர்கிறது. விவசாய உற்பத்தியைப் பொறுத்தவரை, மக்காச் சோளம், மற்றும் சோயாபீன்ஸ், உலகளாவிய ரீதியில் அதிகமாக உற்பத்தி செய்யும் நாடாக விளங்குவதுடன் மற்றைய உணவுப் பொருட்களை கிட்டத்தட்ட தன்னிறைவு அடையும் அளவுக்கு உற்பத்தி செய்கிறது.<br>விவசாயப் பொருட்களின் உற்பத்தி ஆண்டு தோறும் 5% அதிகரித்துள்ளதோடு, ஒவ்வொரு விவசாயிக்கும் சராசரியாக ஆண்டுதோறும் 0.84% விவசாய உற்பத்தி அதிகரிப்பு. அமெரிக்க பண்ணைகளில் இருந்து கிடைக்கும் வெளியீகளின் பெறுமதி $134.7 பில்லியன் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.6% ஆகும். |
| 3. | பிரேசில் | பிரேசில் உலகின் மிகப்பெரிய காப்பி உற்பத்தியாளராகவும் மற்றும் உலகின் முன்னணி காப்பி ஏற்றுமதியாளராகவும் உள்ளது. விவசாயத் துறை அதன மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதன் காரணமாக, உலகின் ஒன்பதாவது பெரிய பொருளாதாரமாக தேசம் உள்ளது. நாட்டின் 41% நிலம் பிரேசிலில் விவசாய உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டது. சோயாபீன் விவசாயம் பிரேசிலின் மொத்தப் பயிரிடும் நிலத்தில் சுமார் 7% ஐ ஆக்கிரமித்துள்ளது. முக்கிய விவசாயப் பொருட்களான தானியங்கள், பீன்ஸ், சோளம் (மக்காச்சோளம்), வாழைப்பழங்கள், சாக்லேட் மற்றும் மரவள்ளிக்கிழங்கு ஆகியவற்றில் உலகிலேயே பிரேசில் மிகப்பெரிய உற்பத்தியாளராக உள்ளது. பிரேசிலில் விவசாயத்திற்காக சுமார் 867.4 மில்லியன் ஏக்கர் நிலம் பயன்படுத்தப்படுகிறது. கடந்த இரண்டு தசாப்தங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயம் 25% பங்களித்துள்ளது. பிரேசில் உலகின் சிறந்த பயிர் உற்பத்தியாளராகவும், ஒட்டுமொத்த உணவு உற்பத்தியில் நான்காவது பெரிய உற்பத்தியாளராகவும் உள்ளது. |
| 4. | இந்தியா | உலகில் உள்ள வேறு எந்த நாட்டையும் விட இந்தியா அதிக பால், சணல் மற்றும் பருப்பு வகைகளை உற்பத்தி செய்கிறது. பருத்தி, அரிசி, கோதுமை, நிலக்கடலை, கரும்பு, பழங்கள், காய்கறிகள் மற்றும் சர்க்கரை உற்பத்தியில் இது இரண்டாவது பெரிய உற்பத்தியாளராக உள்ளது. கூடுதலாக, இது தோட்டப் பயிர்கள், கால்நடைகள், கோழி மற்றும் மசாலாப் பொருட்களின் விவசாய உற்பத்தியில் பெரிதும் ஈடுபட்டுள்ளது. இந்தியர்கள் தங்கள் வருமானத்தில் 58% விவசாயத்தை நம்பியுள்ளனர். கடந்த 14 ஆண்டுகளில், இந்தியாவின் விவசாய உற்பத்தி 11% அதிகரித்து (87 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 397 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது.<br>சமீபத்திய தரவுகளின்படி, சுமார் 50% மக்கள் தங்கள் வருமானத்திற்காக விவசாய உற்பத்தித் துறையை முதன்மையாக நம்பியுள்ளனர், இதனால் இந்தியா தனது விவசாயத்தில் தொழினுட்பத்தை அதிகரித்து வருகிறது. |
| 5. | ரஷ்யா | ரஷ்யாவில், முக்கிய பயிர்கள் கம்பு, கோதுமை, பார்லி, ஓட்ஸ், சூரியகாந்தி விதைகள் மற்றும் உருளைக்கிழங்கு என அனைத்துமே நவீன விவசாயத் தொழிநுட்பங்களைப் பயன்படுத்தியே மேற்கொள்ளப் படுகிறது. ரஷ்யாவில் மொத்த விளை நிலங்களில் 21.9% விளை நிலத்தில் கோதுமை விளைகிறது. மேலும், தானிய பயிர்கள் உலகின் விளை நிலத்தில் ஏறக்குறைய பாதியில் வளர்க்கப்படுகின்றன. ரஷ்ய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாய உற்பத்தித் துறை மொத்தத்தில் 6% ஆக இருந்தாலும், ரஷ்யாவில், விவசாய உற்பத்தி என்பது வேலை வாய்ப்புகளை உருவாக்கும் ஒரு இலாபகரமான வணிகமாகும். ரஷ்யாவின் விவசாய உற்பத்தித் தொழிலில் உள்ள அனைத்து வேலை வாய்ப்புகளில் 16% பொது மக்களால் வழங்கப்படுகிறது. |

Reference: https://www.bookmycrop.com/blog-details/top-10-countries-for-agriculture-production-in-2022

**தொழில் நுட்ப விவசாயத்தினூடு உணவு உற்பத்தியில் உலகை ஆளும் ஐந்து நாடுகளும் அவற்றின் உற்பத்திச் சிறப்பு அம்சங்களும்**

இந்த நாடுகளைப் போல் நமது நாடும் விவசாய உற்பத்திக்கு முன்னுரிமை கொடுத்து உணவுத் தேவைக்காக மற்ற நாடுகளிடம் கையேந்தாது, விவசாயத்துறை சார் நிபுணர்களின் ஆலோசனையை செவிமடுத்து, அரசியல் தலையீடுகளையும் ஊழலையும் களைந்து தற்சார்பு நவீன விவசாயத்தின் மூலம் மற்ற நாடுகளுக்கு சவால் விடும் வகையில் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதே விவசாயத்தை நேசிக்கும் அனைவரினதும் விருப்பம்.

உசாத்துணை


*1. masschallenge.org/articles/agricultureinnovation*

*2. www.farmmanagement.pro/modernagriculturaltechnologyadoptionanditsimportance*

*3. theenterpriseworld.com/modernagriculturetechnology btcbank.bank/about/agriculturetechnologyinmodernfarming*

*4. www.plugandplaytechcenter.com/resources/newagriculturetechnologymodernfarming/*

*5. onetext.org/index.php/admin/OneText/contents_view/tm/Articles/232*

*6. www.bookmycrop.com/blogdetails/top10countriesforagricultureproductionin2022*


(தொடரும்)




எம். ஐ. எம். சாக்கீர்

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையைச் சேர்ந்த முஹம்மட் சாக்கீர் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம் பெற்றவர் தற்போது மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக பணிபுரிகிறார்.
வரலாறு, பண்பாட்டு ஆய்வு, நாட்டாரியல், ஆவணப்படுத்தல் போன்ற துறைகளில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 21வது வயதில் ‘சம்மாந்துறை பெயர் வரலாறு’ என்ற ஆய்வு நூலை வெளியிட்டார், சம்மாந்துறை பெரியபள்ளிவாசல் வரலாற்று ஆவணப்படம் போன்றவற்றிற்கு வசனம் எழுதியுள்ளார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் இன்கிலாப் சஞ்சிகை மீளுருவாக்க குழுவின் முன்னோடியான செயற்பாட்டாளரான இவர் 2019 இல் வெளியான சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும் எனும் நூலின் பதிப்பாசிரியர்களிலொருவரும் கட்டுரையாசிரியருமாவார். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, கலை, பண்பாடு, முதலான கருபொருள்களில் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.


கிழக்கிலங்கை இலங்கையில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசமாகும். இங்கு வாழ்கின்ற முஸ்லிம்களின் பண்பாட்டுக்கூறுகள் மட்டக்களப்புத் தமிழர்களின் பண்பாட்டுக்கூறுகளோடு பல விடயங்களில் ஒத்ததாகவும் வேறுப்பட்டும் காணப்படுவதோடு பிற முஸ்லிம் பிராந்திய கலாசாரகூறுகளிலிருந்தும் தனித்துவமாகக் காணப்படுகின்றன. கிழக்கிலங்கை முஸ்லிம்கள் கிழக்கின் பூர்வ பண்பாட்டுக்கூறுகளினை தமது மத நம்பிக்கைக்கு ஏற்ப மதத்தின் அடிப்படைக்கூறுகளில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பண்பாட்டுக்கட்டமைப்பை தகவமைத்துக் கொண்டனர். இப்பண்பாட்டுப் மறுமலர்ச்சியின் கூறுகளினை கலந்துரையாடுவதாக ‘கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டசைவுகள்’ என்ற இக்கட்டுரைத்தொடர் அமையும். இதன்படி, கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தாய்வழி குடிமரபு முறை, முஸ்லிம் குடிவழிமரபில் உள்ள மாற்றங்கள், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள் அவற்றில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், பாரம்பரிய பரிகார முறைகள், உறவுமுறைகள் மற்றும் குடும்ப அமைப்புகள், உணவுமுறைகள், ஆடை அணிகலன்களும் மரபுகள், வீடுகள் மற்றும் கட்டடக்கலை மரபுகள், பாரம்பரிய அனுஷ்டானங்கள், கலைகள் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தத் தொடர் பேசவுள்ளது.

# கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டசைவுகள்:
# தாய்வழிக் குடிவழிமுறை



*கிழக்கிலங்கை, இலங்கையில் முஸ்லிம்கள் செறிந்த வாழ்கின்ற பிரதேசமாகும். 2012 ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பின் பிரகாரம் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலேயே அதிக முஸ்லிம் சனத்தொகை சதவீதம் காணப்படுகின்றது[i]. இங்கு வாழ்கின்ற முஸ்லிம்களின் பண்பாட்டுக்கூறுகள் மட்டக்களப்புத் தமிழர்களின் பண்பாட்டுக்கூறுகளோடு பல விடயங்களில் ஒத்ததாகவும் வேறுபட்டும் காணப்படுவதோடு பிற முஸ்லிம் பிராந்திய கலாசாரக்கூறுகளிலிருந்தும் தனித்துவமானதாக காணப்படுகின்றது. கிழக்கில் தொன்றுதொட்டு வாழ்ந்துவரும் தமிழர்களோடு இஸ்லாமிய மதநம்பிக்கை கொண்ட மக்கள் ஆரம்பகாலங்களில் கொண்ட திருமணபந்த உறவினாலும், வங்காள விரிகுடாவின் வர்த்தக மொழியாகத் தமிழ் மொழி காணப்பட்டமையினாலும், சேரமண்டலக்கரையிலும,*

தென்னிந்தியக் கடற்துறைகளில் வர்த்தகத்தை மேற்கொண்ட பாரசீக அராபிய மற்றும் வர்த்தக உறவுகளினாலும் இஸ்லாத்தின் அறிமுகம் கிழக்கிலங்கையில் புதியதொரு பண்பாட்டுக் குழுமத்தின் தோற்றத்திற்கு ஏதுவாய் அமைந்தது.

இஸ்லாமிய மார்க்கத்தின் மத்ஹப் சிந்தனைப் பிரிவுகள் தோன்றுவதற்கு முன்பே இஸ்லாத்தை பின்பற்றும் மக்கள் குழுமம் இங்கு நிலவத் தொடங்கியிருந்தமையினால் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட புதிய மக்கள் குடிவரவுகளும் இந்தப்பிராந்தியக் கலாசாரத்தினுள் தங்களை இசைவாக்கிக் கொண்டனர்.
கிழக்கிலங்கை முஸ்லிம்கள் கிழக்கின் பூர்வ பண்பாட்டுக்கூறுகளினை தமது மதநம்பிக்கைக்கு ஏற்ப மதத்தின் அடிப்படைக்கூறுகளில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பண்பாட்டுக் கட்ட மைப்பைத் தகவமைத்துக் கொண்டனர். இந்தப்பண்பாட்டுப் படிமலர்ச்சிக் கூறுகளினை கலந்துரையாடுவதாக இந்தக்கட்டுரைத் தொடர் அமையும்.

கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை முஸ்லிம் மக்களிடம் ஏனைய பிரதேசங்களைப் போன்றே கலாசாரக்கூறுகளில் ஊருக்குஊர் நுண்ணிய வேறுபாடுகள் நிலவி வருகின்றன.
இந்தக்கட்டுரை தென்கிழக்குப்பிராந்திய முஸ்லிம் மக்களின் பண்பாட்டுக்கூறுகள் தொடர்பாகவே கலந்துரையாடவுள்ளது. கிழக்கிலங்கை முஸ்லிம்களிடையே நிலவி வருகின்ற தனித்துவமான பண்பாட்டுக் கூறுகளிலொன்றாக தாய்வழிக்குடிவழிமுறை (Matrilineal Clan System) காணப்படுகின்றது. இது இலங்கையின் ஏனைய பிரதேச முஸ்லிம்களிடம் காணப்படாத தனிச்சிறப்பியல்பாகும்.

## குடிவழிமுறை

குடிவழிமுறை எனப்படுவது மக்கள் தங்களைத் தமது தாய்வழிப் பரம்பரையின் இரத்த உறவுள்ள குழுக்களாக பகுத்துக் கொண்டுள்ள ஒரு வகை மக்கட்குழும முறையாகும். இம்முறை தொன்று தொட்டு இலங்கையின் கிழக்குப் பகுதியில் நிலவி வருகின்றது. இந்தக்குடிகளின் தலைமை யும் இவர்களது அதிகாரமும் செல்வாக்கும் காலத்துக்குக்காலம் மாறுபட்டு வந்துள்ளன. இதே போன்றதொரு தாய்வழிப்பண்பாடு கேரளத்தின் வடக்குப் பகுதியில் மாப்பிள்ளா முஸ்லிம்களிடம் வழக்கில் உள்ளது.[ii]

கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை வேட்டுவ சமூகங்களிலும் குடிவழிமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது. அவர்களிடம் உள்ள குடிகள் ஆண்மூதாதையரின் பெயர்களிலேயே தொடர்ந்து வருகின்றன. இவர்களின் மத்தியில்

> பழுவளசீயா
> ஆக்கமுத்துசீயா
> செல்லாப்பத்துசீயா
> கற்கோடாசீயா
> கிரிமடிசீயா
> திருக்காக்கனி சீயா
> வெருக சீயா – ஆகிய ஏழு குடிகள் வழக்கில்
> உள்ளதாக தில்லைநாதன் குறிப்பிடுகின்றார்
> (தில்லைநாதன் 2015.38)[iii]

மட்டக்களப்புத்தமிழர் குடிகளைப் பொறுத்த வரையில் மட்டக்களப்பில் காணப்படும் மரபுவழியான குலங்களினுள் பல்வேறு குடிகள் காணப்படுகின்றன. இவை தாய்வழியாகப் பேணப்பட்டு வருகின்றன. அதாவது ஒருவரது குடி அவரின் தாயின் குடியாகவே கருதப்படும். இதனால் குடி விருத்தியடைவது பெண்பிள்ளைகளின் பொருட்டேயாகும்.

திமிலர், முக்குவர், வன்னியர், வேளாளர், சீர்பாதர், கரையார், கோவிலார் போன்ற ஒவ்வொரு குலங்களினுள்ளும் குடிகள் காணப்படுகின்றன. இதே போல் கிழக்கிலங்கைச் சோனகர்களி டையே குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் மத்தியில் குடிவழி முறை இன்றும் வழக்கில் உள்ளது. இவற்றை சோனகக்குடிகள் என வகைப்படுத்துவதுண்டு.

## முஸ்லிம்களின் குடிவழிமுறை

இலங்கையில் முஸ்லிம்கள் தங்களை சமய இனக்குழுமமாக (Ethnoreligious Group) வரையறுத்துக் கொண்டுள்ளனர். அதேவேளை இலங்கையில் வாழ்கின்ற இஸ்லாமிய சமயத்தைப் பின்பற்றுகின்ற முஸ்லிம்களிடையே கலாசாரப் பல்வகைமையும் காணப்படுகின்றது. இது இஸ்லாத்தின் நெகிழ்வுத்தன்மையினாலேயே சாத்தியப்பட்டிருக்கின்றது எனலாம். அந்தவகையில் கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் காணப்படுகின்ற சிறப்பியல்புகளிலொன்றாக அவர்களிடம் நிலவி வருகின்ற தாய்வழிக்

குடிவழிமுறையைக் குறிப்பிடலாம். கிழக்கிலங்கை முஸ்லிம்களிடையே குடிவழிமுறை தோற்றம்பெற்ற முறை குறித்து பிரபல்யமான கர்ணபரம்பரைக்கதைகள் காணப்படுகின்றன.

தொன்று தொட்டு இலங்கையின் கிழக்குக்கரை நாகரிகம் பிறநாடுகளுடன் துறைமுகத் தொடர்புகளைப் பேணி வந்தள்ளது. மட்டக்களப்பு பூர்வசரித்திரத்தின் தகவல்களிலிருந்து காட்டான், சுல்தான், பட்டாணியர், சிக்கந்தர், துலுக்கர் போன்ற வகுப்பினர் கிழக்கிலங்கையில் வர்த்தகத்தின் பொருட்டு துறைமுகத்திற்கு வந்த சென்றுள்ளமையினை அறியமுடிகின்றது. அந்த வகையில் முக்குவர்கள் வாவியின் தென்பாகத்தில் குடியேற முயற்சித்த வேளை திமிலர்களால் ஏற்பட்ட தடைகளையும், சச்சரவுகளையும் நீக்கிக் கொள்ள அவர்களுடன் படைதிரட்டிப் போரிட்டனர். இந்தப்போரில் இவர்கள் பட்டாணியரின் உதவியினைப் பெற்று போரில் வெற்றி பெற்றனர் என்றும், தங்களுக்குத் துணையாக பட்டாணியரை நிலைநிறுத்துவதற்காக தம்முடைய குடிகளைச் சேர்ந்த பெண்டிரை படைவீரர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தமையினால் முஸ்லிம்களிடையே குடிவழிமுறை தோன்றக் காரணமானது என்ற கருத்து நிலவிவருகின்றது. இதனைக் “குடிமக்கள் வரவு“ என்ற ஏட்டுப்பிரதியின் சுவடிகளிலும் காணலாம்[iv].

.....பட்டாணிமாருக்குப் பரிமணமுடித்து
இட்டமா யவர்களுக்கிடமது கொடுத்துப்பின்
படைதனக்கஞ்சி யொதுங்கிய திமிலரை
நடவெனத்துரத்தி நாட்டினாரெல்லை

(குடிமக்கள் வரவு ஓலைப்பக்கம் ,24)

இதன்போது திருமணமுடித்துக் கொடுக்கப்பட்ட முக்குவர்குலத்தின் ஏழு குடிகளும் முஸ்லிம்களிடையே வழக்கில் இருந்துள்ளன.

ஆயினும் இந்தச்சம்பவத்திற்கு முன்னரும் முஸ்லிம்களிடையேயும் தமிழர்களிடையேயும் திருமணக்கலப்புகள் நடைபெற்றுள்ளன. ஏனெனில் முஸ்லிம்களிடையே வழக்கிலுள்ள குடிகளின் பட்டியலில் முக்குவகுடிகள் தவிர்த்து வேளாளகுடிகள், கரையார் குடிகள் என்பன காணப்படுகின்றன. அதேவேளை பிற்காலத்தில் புதிய குடிகளும் தோற்றம் பெற்றுள்ளன.

குலவிருதுகளும் குடிவிருதுகளும் குலவிருதுகள் எனப்படுபவை ஒவ்வொரு குலங்களுக்கும் தங்களைப் பிரதிநிதித்து வப்படுத்த வழங்கப்பட்டுள்ள சின்னங்களைக் குறிப்பனவாகும். பின்வரும் பாடல் மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்படு கின்ற பாண்டி மன்னன் வகுத்த குல விருதுகளைக் குறிப்பதாக காணப்படுகின்றது.

தோணி கரையார்க்குத் தொப்பி துலுக்கருக்கு
காணி யுழுமேழிசுளி காராளருக்கு
நாணி வில்லம்பு நாட்டிலுள்ள வேடுவர்க்கு
எழுத்தாணி சுளிமுற்குகர்க்கு கமலமலர் கோயிலார்க்கு
கைப்பிரம்பு பண்டாரப்பிள்ளைக்கு திமிலர்க்குப் பால்முட்டி
சேணியர்க்கு நூலச்சு அமலருக்குத் தேர்க்கொடிகள்
அம்பட்டருக்குக் கத்தரிக்கோல் விமலருக்குமத்துலகில்
வேதியர்க்கும் பூணுலாம்
வண்ணார்க்குக்கல்லு வாணிபர்க்குச் செக்கு
சுண்ணாம்புசுடும் கடையர்க்குக் கூடையாம் தொல்லு
வேந்தர்க்குச் செங்கோல் மேளமது வள்ளுவர்க்கு
சேர்ந்தகுயவருக்குக் கும்பகுடம் செப்புவேன் இன்னும்
தட்டார்க்குக் குறடு சாணார்க்குக்கத்தி செட்டிகுலத்தோர்க்குத் தோடு
தராசுபடி
இட்டமுடன் இந்த விதிப்படிக்கு எல்லாம் விருதெனவே
பட்டமது கட்டிவைத்தான் பாண்டிமன்னன்.

(மட்டக்களப்பு மான்மியம்)

இந்தக்குல விருதுச்சின்னங்களின் துலுக்கர் என்றழைக்கப்படுகின்ற முஸ்லிம்களுக்கு தொப்பிச்சின்னம் வழங்கப்பட்டாலும், முஸ்லிம்களிடையே வழக்கிலுள்ள ஒவ்வொரு குடிகளும் தங்களுக்கென பிரத்தியேகமான குடிவிருதுச்சின்னங்களைக் கொண்டுள்ளனர்.

பசு ,எருமை மாடுகள் வைத்திருப்பவர்கள் தங்களின் குடிக்குரிய சின்னத்தையும் உரிமையாளரின் குறியையும் சேர்த்து குறிசுடுவார்கள். இது மாடுகளை இனங்காண்பதற்காக பயன்பட்டுள்ளது. அதேவேளை பள்ளிவாசலுக்கு காணிக்கையாக கொடுக்க விரும்புகின்ற மாடுகளுக்கு பிறை

**திமிலர், முக்குவர், வன்னியர், வேளாளர், சீர்பாதர், கரையார், கோவிலார் போன்ற ஒவ்வொரு குலங்களினுள்ளும் குடிகள் காணப்படுகின்றன. இதே போல் கிழக்கிலங்கைச் சோனகர்களி டையே குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் மத்தியில் குடிவழி முறை இன்றும் வழக்கில் உள்ளது. இவற்றை சோனகக்குடிகள் என வகைப்படுத்துவதுண்டு.**

வடிவக் குறியை மட்டுமே இடுவது வழக்கமாக இருந்துள்ளது. (றாஸிக்,ஏ 2012. 19).[v]

## முஸ்லிம் குடிகள்

கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை ஏறத்தாழ நாற்பதுக்கும் மேற்பட்ட குடிகள் வழக்கில் உள்ளன. இவற்றுள் அதிக எண்ணிக்கையான குடிகள் சம்மாந்துறையில் காணப்படுகின்றன. குடிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் சம்மாந்துறையில் 32 குடிகளும், அக்கரைப்பற்றிலும் சாய்ந்தமருதிலும் 18 இற்கு மேற்பட்ட குடிகளும், இறக்காமம், நிந்தவூர், ஒலுவில் ஆகிய கிராமங்களில் 12 இற்கு மேற்பட்ட குடிகளும் மருதமுனையில் 10 இற்கு மேற்பட்ட குடிகளும் காணப்படுகின்றன. இக்குடிகளுள் 16 குடிகள் முஸ்லிம் மக்களிடையேயும் தமிழ் மக்களிடையேயும் பொதுவான குடிகளாக காணப்படுவதாக அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு குறிப்பிடுகின்றது. [vi]


**பொன்னாச்சி குடி**
**மூத்தநாச்சிகுடி**
**இளையநாச்சிகுடி**
**வரிசை நாச்சி குடி**
**உலகிப்போடி குடி**
**படையாண்ட குடி**
**பெத்தாண்ட குடி**
**பணிக்கனா குடி**
**வடக்கனா குடி**
**கச்சியான் குடி**
**கோப்பிகுடி**
**செட்டிகுடி**
**கலிங்கனார்குடி**
**உசவீடு குடி**
**ராசாம்பிள்ளைகுடி**
**சின்னக்கதிரன் குடி**

அதே வேளை முஸ்லிம்களிடையே மட்டும் வழக்கிலுள்ள குடிகளும் உண்டு. இவை தொடர்பில் அடுத்த கட்டுரையில் பார்க்கலாம்.

### அடிக்குறிப்புகள்

*[i]. இலங்கைத் தொகைமதிப்புத் திணைக்களம் 2011 தரவுகள்*
*[ii] Koya, S.M., (1979), January. Matriliny and Malabar Muslims. In Proceedings of the Indian History Congress (Vol. 40, pp. 419431). Indian History Con gress.*
*[iii] தில்லைநாதன், சா. (2005) மட்டக்களப்புத்தமிழர் பண்பாட்டு மரபுகள். குமரன் அச்சகம், கொழும்பு*

*[iv] குடிமக்கள் வரவு ஏடு எண்ணிமப்பிரதி. நூலகம் நிறுவணம் நூலக எண் S0163*



**குடிமக்கள் வரவு ஓலை 24**

Image Source - noolaham.net

*[v] றாஸிக். ஏ. (2012) முஸ்லிம்கள் மத்தியில் குடிவழிமுறை, குடிமரைக்காயர் சம்மேளனம், சம்மாந்துறை.*
*[vi] ஷம்சுத்தீன் மௌலானா, ஜே.எம், (1997) வாழ்வியலும் பண்பாடும் , அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் , கலாசார சமய அலுவல்கள் அமைச்சு*





● நவரத்தினம் கிரிதரன்

தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் எழுத்தாளர் வ.ந.கிரிதரன் இலங்கையைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளர். வவுனியா மகாவித்தியாலயம், யாழ். இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்ற இவர், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கட்டடக்கலைப் பட்டதாரி. "டொராண்டோ' சென்டனியல் கல்லூரியில் இலத்திரனியற் பொறியியல் துறையில் பட்டம், தகவற் தொழில் நுட்பம் நுட்பத்துறையில் பல்வேறு கல்வித் தகைமைகளைப் பெற்றவர். இலங்கையிலிருந்த காலத்தில் தன் எழுத்துலக வாழ்வினை ஆரம்பித்த புகலிடத்தில் தொடர்ந்து எழுதி வருகின்றார். பதிவுகள் என்னும் இணைய இதழினை 2000 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியராகவிருந்து நடாத்தி வருகின்றார். இவரது படைப்புகள் இலங்கை, தமிழகம் மற்றும் புகலிடத்தமிழர்கள் வெளியிட்ட சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. தமிழக ஆய்வரங்குகளில் இவரது புகலிடப்புனைகதைகளைப் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை இவரது எட்டு நூல்கள் வெளியாகியுள்ளன. மண்ணின் குரல் (நாவல், கவிதை, கட்டுரைத் தொகுப்பு), எழுக அதி மானுடா! (கவிதைத்தொகுப்பு), அமெரிக்கா (நாவல், சிறுகதைகளின் தொகுப்பு), நல்லூர் ராஜதானி நகர அமைப்பு (ஆய்வு) மண்ணின் குரல் (நாவல்களின் தொகுப்பு), குடிவரவாளன் (நாவல்), அமெரிக்கா (நாவல், திருத்திய இரண்டாவது பதிப்பு) மற்றும் கட்டடக்கா(கூ)ட்டு முயல்கள் (சிறுகதைத் தொகுப்பு) ஆகிய நூல்கள் வெளியாகியுள்ளன.

# சிங்கை நகர்

## பற்றியதொரு நோக்கு

சிங்கை நகர் நல்லூர் தமிழரசர்களின் இராஜதானியாக விளங்குவதற்கு முன்னர் விளங்கிய நகர். இதன் இருப்பு பற்றிப் பல்வேறு விதமான ஊகங்கள், கருதுகோள்கள் நிலவுகின்றன. ஒன்றிற்குப் பின் முரண்பாடான ஊகங்கள் ஆய்வாளர்களை மேலும் மேலும் குழப்பத்திலாத்தி வைப்பனவாகவுள்ளன. முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோர் வல்லிபுரமே சிங்கை நகராக இருந்திருக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளதாகக் கருதுவர். பேராசிரியர் சிற்றம்பலமோ நல்லூரரே சிங்கைநகரெனக் கருதுவார். கலாநிதி க.குணராசா, கலாநிதி ப. புஷ்பரட்ணம் ஆகியோர் பூநகரிப் பகுதியிலேயே சிங்கை நகர் அமைந்திருந்ததாகக் கருதுவர். ஆனால் கலாநிதி புஷ்பரட்ணத்தை மேற்கோள்காட்டி கலாநிதி குணராசா சிங்கை நகர் பூநகரிப் பகுதியில் இருந்ததை வலியுறுத்துவார். கலாநிதி புஷ்பரட்ணமோ கலாநிதி குணராசாவின் நூல்களை தனது சிங்கை நகர் வாதத்திற்கு வலு சேர்ப்பதற்காகக் குறிப்பிடுவார். ஆனால் இவர்கள் இருவருக்குமிடையிலும் கூட சிங்கை நகர் என்னும் பெயர் வந்ததற்கான காரணம், மற்றும் சிங்கை நகரின் தோற்றத்திற்கான காலகட்டம் ஆகியவற்றில் மாறுபட்ட குழப்பகரமான கருத்துக்களே நிலவுகின்றன. கலாநிதி புஷ்பரட்ணத்தின் தர்க்கத்தில் காணப்படும் முரண்பாடுகள் சிங்கை நகர் பற்றிய சுவாமி ஞானப்பிரகாசர் மற்றும் முதலியார் செ. இராசநாயகம் ஆகியோரின் சிங்கைநகர் பற்றிய கருதுகோள்களுக்கே வலுசேர்ப்பதாக அமைகின்றன.

சிங்கை நகர் பற்றிய கலாநிதி குணராசா பின்வருமாறு கூறுவார்: "... உக்கிரசிங்கன் புதிய தலைநகர்



"கோட்டகம" கல்வெட்டு

Image source - wikipedia.org

ஒன்றினைத் தன் இராச்சியத்தில் உருவாக்க விரும்பி வன்னிப் பிரதேசத்தில் திக் விஜயம் ஒன்றினை மேற்கொண்டான். அவன் வன்னி மார்க்கமாகச் செல்லுகையில் வன்னியர்கள் ஏழுபேரும் எதிர்கொண்டு வந்து வன்னி நாடுகளைத் திறை கொடுத்து ஆள உத்தரவு கேட்டார்கள். உக்கிரசிங்கன் அதற்குச் சம்மதித்தான். அப்பிரதேசத்தில் அவன் உருவாக்கிக் கொண்ட தலைநகர் சிங்கை நகராகும்..." (நூல்: 'யாழ்ப்பாண அரசபரம்பரை' க.குணராசா; பக்கம் 59).

வன்னியர்கள் வாழ்ந்த பகுதி அடங்காப்பற்று என அழைக்கப்பட்டது. இதற்குரிய முக்கிய காரணங்களிலொன்று வன்னிச் சிற்றரசர்கள் பலதடவைகள் யாழ்மன்னர்களுட்பட ஏனைய மன்னர்களுக்கு அடங்காமல் வாழ்ந்தவர்கள் என்னும் கூற்று. சில சமயங்களில் யாழ். மன்னர்களுக்கெதிராகக் கலகங்களையும் தூண்டிவிட்டுள்ளதை யாழ்ப்பாண வைபவமாலை (யாழ்ப்பாணவைபவமாலை, முதலியார் குலசபாநாதன் பதிப்பு; பக்கம் 3740) விபரிக்கும். மேலும் பழைய வரலாற்று நூல்களில் பூநகரி, பல்லவராயன் கட்டு போன்ற வன்னிப் பகுதிகளை 'வெளிநாடு' (யாழ்ப்பாணவைபவமாலை: பக்கம் 29) என்றுதான் அழைத்துள்ளார்கள். இவ்விதமான வெளிநாடொன்றிற்கு, அதிலும் அதிகளவில் எதிர்ப்புச் சூழல் நிலவியதொரு இடத்துக்கு எதற்காக இராஜதானி கதிரைமலையிலிருந்து மாற்றப்பட்டது?

"...சிங்கை நகர் என்ற பெயர் கலிங்கநாட்டு நகரங்களுள் ஒன்றாகிய ஸிங்கபுரத்தின் தொடர்புடைய பெயர் என்று கொள்ள இடமுண்டு.... சிங்கை நகர் என்ற பெயர், முதன் முதல் கதிரைமலையிலிருந்து தலைநகரை வேறிடத்திற்கு மாற்றிப் புதிய தலைநகர் ஒன்றினை உருவாக்கிய உக்கிரசிங்கனின் பெயரைத் தாங்கி சிங்க(ன்) நகர் என விளங்கியிருந்தது எனக் கொள்வதே சாலப் பொருத்தமானது." (நூல்: 'யாழ்ப்பாண அரசபரம்பரை' க.குணராசா; பக்கம் 59) என்பார் க.குணராசா.

இதுபற்றிய கலாநிதி புஷ்பரட்ணத்தின் கருதுகோள் வேறானது. அவர் சோழரே சிங்கைநகரென்னும் பெயர் ஏற்படக் காரணமென்பார்: "...இப்பெயர் ஒற்றுமை கூடக் கலிங்கநாட்டுச் சிங்கபுரத்தொடர்பால் நேரடியாக வட இலங்கைக்கு வந்ததெனக் கூறுவதைவிடத் தமிழகத்துடனான தொடர்பால் வந்ததெனக் கூறுவதே பொருத்தமாகத் தோன்றுகிறது. ஏனெனில் தமிழகத்திலும் இப்பெயர் நீண்டகாலமாகப் புழக்கத்திலிருந்து வந்துள்ளது. கி.பி. 7ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னன் சந்திராதித்ய காலச் செப்பேடு சிங்கபுர என்ற இடத்தில் இவன் அமைத்த ஆலயம் பற்றிக் கூறுகிறது..... அதே போல வட இலங்கையை வெற்றி கொண்ட முதலாம் பராந்தக சோழன் கால இரு நகரங்கள் சிங்கபுரம், சிங்கபுரநாடு என்ற பெயரைப் பெற்றிருந்தன. அத்துடன் கொங்கு மண்டலத்திலுள்ள காங்கேயநாடு சோழர் ஆட்சியின்போது சிங்கை என்ற இன்னொரு பெயரையும் பெற்றிருந்தது. இச்சிங்கை நாட்டு வேளாளத் தலைவர்களுக்கு சோழர்கள் இட்ட மறுபெயர் சிங்கைப் பல்லவராயர்

காலந்தோறும் பூகம்பங்களினாலும், பிரளயங்களினாலும் அழிக்கப்பட்டு, மேற்கே ஒன்றாயிருந்த பெருந்தீவகம் பலதீவுகளாகப் பிரிக்கப்பட்டது. காரைதீவு, வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு முதலிய தீவுகளும், வலிகாமமும் அப்பெருந்தீவகத்தின்பகுதிகளேயாம். அவ்வாறே கிழக்கே ஒன்றாகவிருந்த சிறுதீவகம் களப்புக் கடலால் வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளியென்னும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.

என்பதாகும். இவர்கள் சோழருடன் இணைந்து இலங்கை நாட்டுடனான அரசியலிலும், படையெடுப்புக்களிலும், வர்த்தகத்திலும் ஈடுபட்டதற்குப் பல சான்றுகள் உண்டு..” (நூல்: தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு - ப. புஷ்பரட்ணம்; பக்கம் 183)
முதலியார் இராசநாயகம் ‘கோட்டகம’ கல்வெட்டில் ‘பொங்கொலி நீர்ச் சிங்கை நகராரியன்’ எனக் குறிப்பிட்டிருப்பதைக் காரணம் காட்டி அதற்குரிய பிரதேசமாக வல்லிபுரமே அவ்விதமான துறைமுகப் பொலிவுள்ள நகரென்று கருதுவார். ஆனால் கலாநிதி க.குணராசாவோ இது பற்றிப் பின்வருமாறு கூறுவார்: “....யாழ்ப்பாணக் கடனீரேரி அன்று பொங்கு கடலாகவே விளங்கியது.....” (நூல்: ‘யாழ்ப்பாண அரசபரம்பரை’ க.குணராசா; பக்கம் 60)
பதினான்காம் நூற்றாண்டில் நிகழ்ந்த சம்பவத்தைக் கூறுவது கோட்டகம கல்வெட்டு. இக்காலகட்டத்தில் கலாநிதி க.குணராசா குறிப்பிடுவது போல் யாழ்ப்பாணக் கடனீரேரி பொங்கு கடலாக இருந்ததா என்பது சந்தேகத்திற்குரியது. இதற்குப் பல நூறு வருடங்களுக்கு முன்னரே மாந்தை கூடத் தன் முக்கியத்துவத்தினை இழந்து விட்டது. பொங்கு கடலாகவிருந்த யாழ்ப்பாணக் கடனீரேரி மிக விரைவாக அதன் இன்றைய நிலைக்கு மாறி விட்டதா?
இவ்விடத்தில் முதலியார் இராசநாயகத்தின் இவ்விடயம் சம்பந்தமான கருதுகோள்களை ஆராய்வதும் பயனுள்ளதே. இவரது ‘யாழ்ப்பாணச் சரித்திரம்’ பண்டைய யாழ்ப்பாணம் பற்றி விபரித்தபடியே தொடங்குவது குறிப்பிடத்தக்கது. அதில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது: “இப்போது குடாநாடாகவிருக்கும் யாழ்ப்பாணம், முன்னொரு காலத்தில் அதாவது கிறிஸ்துவுக்கு அநேக ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே, இரண்டு தீவுகளாகவிருந்தது. மேற்கே நாகதீவம், மணிநாகதீவம், மணிபுரம், மணிபல்லவம் என்னும் நாமங்களால் வழங்கப்பட்ட பெருந்தீவும், கிழக்கே எருமைத் முல்லைத்தீவு, எருமைதீவு என்று பெயர்பெற்ற சிறுதீவும் ஆக இரு பிரிவாக இருந்தது. காலந்தோறும் பூகம்பங்களினாலும், பிரளயங்களினாலும் அழிக்கப்பட்டு, மேற்கே ஒன்றாயிருந்த பெருந்தீவகம் பலதீவுகளாகப் பிரிக்கப்பட்டது. காரைதீவு, வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு முதலிய தீவுகளும், வலிகாமமும் அப்பெருந்தீவகத்தின்பகுதி களேயாம். அவ்வாறே கிழக்கே ஒன்றாகவிருந்த சிறுதீவகம் களப்புக் கடலால் வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளியென்னும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. பண்ணைக்கடல், பூநகரிக்கடல், யானையிறவுக்கடல் என்னுங் களப்புக்கடல்கள் முன்னே வங்காளக்குடாக்கடலுடன் சேர்ந்து, ஆழமும் அகலமும் உள்ளனவாயிருந்தன; அன்றியும் மேலைத்தேசங்களிலும், சீனம் முதலிய கீழைத்தேசங்களிலுமிருந்து போக்குவரவு செய்யுங் கப்பல்களுக்குப் பெரும் வழியாகவும், சோளகம் வாடைக்காற்றுக்கள் தொடங்குங் காலங்களில் உண்டாகும் புயல்களுக்கு, அக்கப்பல்களின் ஒதுக்கிடமும் உறைவிடமுமாகவும் இருந்தன” (‘யாழ்ப்பாணச்சரித்திரம்’; பக்கம்12).
இவ்விதமாகவிருந்த நிலை காலப்போக்கில் மாறி யாழ்ப்பாணக்குடாநாடு உருவாகியதற்குக்

காரணங்களாக வங்காளக்குடாக்கடலின் அலைகளால் ஒதுக்கப்படும் மணற்றிரளினையும், வடக்கில் முருகைக்கற்பூச்சினால் உண்டாக்கப்படும் கற்பாறை களையும், தெற்கிலிருந்து சோளகக்காற்றினால் கொண்டுவரப்படும் மணலினையும் சுட்டிக் காட்டுவார் முதலியார் இராசநாயகம்.

மேலும் இவரது ஆய்வின்படி கி. மு முதலாம் நூற்றாண்டி லிருந்து, கி. பி. மூன்றாம் நூற்றண்டுவரையில் மாதோட்டம் புகழ்மிக்க துறைமுகமாகவிருந்தது. கிரேக்கர், ரோமர் மற்றும் அராபியர்கள் எனப்பலர் மாதோட்டத்துறைமுகத்து தமது கீழைத்தேய வியாபாரநிமித்தம் வந்து போயினர். மன்னாரிலும், மாதோட்டத்திலுங் காணப்படும் பெருக்குமரங்கள் அராபியர்களால் கொண்டுவரப்பட்டவையே என்பது இவரது கருத்து. மாதோட்டம் பற்றி யாழ்ப்பாண இராச்சியம் பின்வருமாறு விபரிக்கும்: “அக்காலத்தில் இலங்கையின் பிரசித்த துறைமுகம் மாதோட்டம் என்னும் பெருந்துறையே. அதைப் பிரதான துறைமுகமாகக் கொண்டு வங்காளக் குடாக்கடலுக்கூடாய்க் கீழைத்தேசங்களுக்குப் போகும் மரக்கலங்களும், சீன தேசத்திலிருந்து வரும் மரக்கலங்களும் யானையிறவுக்கடலுக்கூடாகப் போக்குவரவு செய்வதுண்டு” (யாழ்ப்பாணச்சரித்திரம்’; பக்கம் 19). அக்காலகட்டத்தில் நாவாந்துறை, பூநகரி மற்றும் கல்முனை ஆகியனவும் துறைமுகங்களாக விளங்கியதாகவும், நாவாந்துறையிலிருந்து வழுக்கியாற்றின் வழியே தலைநகராயிருந்த கதிரைமலைக்கு சங்கடம் என்னுந் தோணிகளில் வியாபாரப்பண்டங்கள் ஏற்றி செல்லப்பட்டனவென்றும், இதனாலேயே நாவாந்துறைக்கு சங்கடநாவாந்துறையென்னும் பெயர் இப்பொழுதும் வழங்கிவருவதாகவும் இராசநாயகம் அவர்கள் மேலும் கருதுவார். இவ்விதமாகப் புகழ்பெற்று விளங்கிய மாதோட்டம் ‘மண்ணேறிட்டிருந்தபடியால் துறை உபயோகம் அருகி, ஒன்பதாம்



கோணேசர் கல்வெட்டு நூலின் முகப்புப் பகுதி
Image source - noolaham.org



யாழ்ப்பாணச் சரித்திரம் நூல்
Image source - noolaham.net

நூற்றாண்டளவில் கப்பல்கள் அத்துறைக்கு வருதல் முற்றாக ஒழிந்து, அதன் பின் முஸ்லீம்கள் வரத்தொடங்கிய காலத்தில் அவர்கள் நூல்களில் ‘கலா’வென்றழைக்கப்பட்ட ஊராத்துறை முக்கியத்துவம் பெற்றதென்று கருதுவார் இராசநாயகம் அவர்கள்.

சி.பத்மநாதனின் மாந்தை பற்றிய கருத்தும் இத்தகையதே. ‘சோழராட்சிக்குப் பிற்பட்ட காலத்தில் மாந்தை நகரம் வீழ்ச்சியுற்றது. பதினோராம் நூற்றாண்டின்பின் மாந்தைத் துறைமுகத்திற்குத் தூரதேசங்களிலிருந்து ஆழ்கடல் வழிச் செல்லும் பெருங்கப்பல்கள் வந்திருந்தமைக்குச் சான்றுகளில்லை. ஆழ்கடல் வழியான வாணிபத்தில் ஒரு பிரதானதொடர்பு நிலையம் என்ற நிலையினை இழந்தமையால் மாந்தையில் நகர வாழ்க்கை சீரழிந்தது. கி. பி.1050 ஆம் ஆண்டிற்குப் பிறபட்ட சாசனங்களிலும் இலக்கியங்களிலும் மாந்தையிலுள்ள வணிகரைப்பற்றியோ அங்கிருந்த கட்டட அமைப்புகளைப்பற்றியோ குறிப்புக்கள் காணப்படவில்லை’ என்பார் அவர் (கட்டுரை: ‘இலங்கை தமிழ வணிகக் கணங்களும் நகரங்களும்’ சி. பத்மநாதன்; ‘சிந்தனை’ ஆடி 1984 இதழிலில்) கி. மு காலத்திலிருந்தே வங்காளக்கடலினூடு தூர நாடுகளுக்குச் செல்லும் கப்பல்கள்


யானையிறவுக் கடலினூடு மாந்தை துறைமுகம் வழியாகப் பயணிக்க முடிந்ததால் அந்நகர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவிருந்தது. காலப்போக்கில் யானையிறவுக் கடல் மண்மேடிட்டுத் தூர்ந்ததால் அது தடைபடவே காலப்போக்கில் மாந்தை தன் முக்கியத்துவத்தினை இழந்தது.

இதேசமயம் பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த இபின் பதூத்தா என்னும் முஸ்லீம் பயணி ஆரிய மன்னனை இலங்கையின் சுல்தானெனவும், பல கப்பல்களுடன் விளங்கிய கடற்படையினை அவன் வைத்திருந்தது பற்றியும் தெரிவித்திருக்கின்றான். இத்தகைய மன்னனின் சிங்கை நகர் அமைந்திருக்கக் கூடிய இடம் வல்லிபுரம் போன்றதொரு பகுதியாக இருந்திருப்பதற்கே அதிகமான சாத்தியங்க ளுள்ளன.

**சிங்கைநகர் பூநகரிப்பகுதியில் இருந்திருக்கலாமென்று ப.புஷ்பரட்ணம் மற்றும் க.குணராசா ஆகியோர் கருதுவது காத்திரமான வாதமாகப்படவில்லை.**

இத்தகையதொரு நிலைமையில் க.குணராசா அவர்கள் 'யாழ்ப்பாணக் கடனீரேரி அன்று பொங்கு கடலாகவே விளங்கியது' என்று பொதுவாகக் கூறுவது பொருத்தமற்றதாகவேபடுகிறது. கோட்டகம் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள 'பொங்கொலி நீர்சிங்கைநகர்' பூநகரியினை அண்டிய வன்னி மாவட்டத்தில் இருப்பதை வலியுறுத்துவதற்காக அவ்விதம் கூறினார் போலும். அவர் கூறுவது உண்மையானால் கடந்த எட்டு நூற்றாண்டுகளுக்குள் பொங்கு கடலாக விளங்கிய யாழ்ப்பாணக் கடனீரேரி தூர்ந்து இன்றைய நிலையினை அடைந்திருக்க வேண்டும்.

மேலும் யாழ்பாடி பற்றிய யாழ்ப்பாண வைபவமாலையின் கூற்றினைக் குறிப்பிடும் கலாநிதி க.குணராசா பின்வருமாறு குறிப்பிடுவார்: "...கண்தெரியாத ஒரு யாழ்ப்பாடிக்கு இசைக்குப் பரிசாகத் தனது இராச்சியத்திற்கு வடக்கே இருந்து ஒரு மணல் வெளியே தமிழ்மன்னன் ஒருவன் பரிசளித்ததாகக் கூறும் இச்சம்பவத்தின் உண்மை பொய் எவ்வளவு என்பதை ஆராய்வதைவிடுத்து மணல் வெளியாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணம் வடக்கேயிருந்தது என்றால், அதைப் பரிசாகத் தந்த மன்னன் இருந்தவிடம் தென்நிலப்பரப்பாக இருந்தது என்பது ஏற்றுக் கொள்ளப்ப டத்தக்கதே.." ((நூல்: 'யாழ்ப்பாண அரசபரம்பரை' க.குணராசா; பக்கம் 62). இது பற்றிய கலாநிதி ப.புஷ்பரட்ணத்தின் கூற்றும் இத்தகையதே.




**இலங்கை தமிழர் பண்பாடு நூல்**

Image source - www.wikiwand.com

"... இதில் சிங்கை நகருக்கு வடக்கிலுள்ள நாடு மணற்றிடர் எனக் கூறப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் என்னும் பெயர் 15 ஆம் நூற்றாண்டில் ஏற்படும்வரை இது மணற்றி, மணவை, மணற்றிடர் என அழைக்கப்பட்டதற்கு ஆதாரங்களுண்டு...... இதில் வடக்காகவுள்ள இப்பிராந்தியத்தை சிங்கையில் இருந்து ஆட்சிபுரிந்த மன்னன் யாழ்ப்பாணனுக்கு வழங்கினான் எனக் கூறுவதிலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தெற்காக சிங்கையிருந்தது

*தெரிகிறது. இங்கே யாழ்ப்பாணத்திற்குத் தெற்காக வன்னிப் பிராந்தியமே இருப்பது கவனத்தில் எடுத்துக் கொள்ளத்தக்கது..." (நூல்:'தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு' ப.புஷ்பரட்ணம்; பக்கம்: 168).*

*உண்மையில் இவர்களிருவரும் கூறும் யாழ்ப்பாண வைபவமாலையில் ".... அரசன் அதைக்கேட்டு மிகுந்த சந்தோசம் கொண்டு அவனுக்குப் பரிசிலாக இலங்கையின் வட திசையிலுள்ள மணற்றிடர் என்னும் நாட்டைக் கொடுத்தான்.."(நூல்: 'யாழ்ப்பாண வைபவமாலை' - மயில்வாகனப்புலவர், முதலியார் குலசபாநாதன் பதிப்பு; பக்கம்:24) என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கை நகருக்கு வடக்கிலுள்ள நாடு மணற்றிடரென்று கூறப்படவில்லையே. 'இலங்கையின் வட திசையிலுள்ள மணற்றிடர்' என்றுதானே கூறப்பட்டுள்ளது. இலங்கையின் வடதிசையில்தானே யாழ்ப்பாணமுள்ளது. இதிலென்ன ஆச்சரியம்? சிங்கை நகரிலிருந்து ஆண்ட மன்னன் இலங்கையின் வடக்கிலுள்ள மணற்றிடரென்பதை ஏன் கலாநிதி குணராசாவும், கலாநிதி புஷ்பரட்ணமும் சிங்கை நகருக்கு வடக்கிலென்று வலிந்து பொருள்கண்டார்கள்? இலங்கை என யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிடப்படுவதை கலாநிதி குணராசாவும், கலாநிதி புஷ்பரட்ணமும் சிங்கைநகரினைக் குறிப்பதாகக் கருதுகின்றார்களா? ஏன்?*

*இவற்றையெல்லாம் பார்க்கும்போது சிங்கைநகர் பூநகரிப்பகுதியில் இருந்திருக்கலாமென்று ப. புஷ்பரட்ணம் மற்றும் க.குணராசா ஆகியோர் கருதுவது காத்திரமான வாதமாகப்படவில்லை. மேலும் ப.புஷ்பரட்ணம் அவர்கள் தனது சிங்கை நகர் பற்றிய கருத்தினை நிறுவுவதற்காக பூநகரிப்பகுதியில் கிடைக்கப்பெறும் கட்டடப்பகுதிகள், நாணயங்கள் மற்றும் இடப்பெயர்களையும் துணைக்கழைப்பார். ஆனால் இவையெல்லாம் அப்பகுதியின் வரலாற்று முக்கியத்துவத்தினை வலுப்படுத்துகின்றனவேயல்லாமல் அங்கொரு இராஜதானி இருந்திருப்பதற்கான உறுதியான சான்றுகளாகக் கருதமுடியாது. வரலாற்றில் கி.மு. காலகட்டத்திலிருந்தே முக்கியத்துவம் பெற்றிருந்த பூநகரிப்பகுதியில் அரசர்கள், சிற்றரசர்கள், வணிகக்கணங்கள் மற்றும் படைத்தலைவர்களுக்கெல்லாம் மாளிகைகள், வியாபாரநிலையங்கள், மற்றும் அரசமுக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள் இருந்திருப்பது இயல்பே. அத்தகைய பகுதியில் இதன் காரணமாகப் பெருமளவில் நாணயங்கள் கிடைக்கப்படுவதும், அரச முக்கியத்துவம் வாய்ந்த இடப்பெயர்கள் நிலவுவதும் பெரிதான ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல. இவற்றைக் கண்டுவிட்டு, விழுந்தடித்துக் கொண்டு, இதற்குக் காரணம் அங்கொரு அரசு இருந்ததுதான் என்று முடிவுக்கு வந்து விடுவது உறுதிமிக்க தர்க்கமாகப் படவில்லை. இதற்கு மாறாக கி.மு. காலத்திலிருந்தே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக விளங்கிய பூநகரிப் பகுதி பின்னர் சோழர் காலத்திலும், யாழ்ப்பாண அரசின் காலத்திலும் அதன் கேந்திர, வர்த்தக, இராணுவரீதியான முக்கியத்துவத்தினை இழக்காமலிருந்துள்ளதையே மேற்படி கட்டடச் சிதைவுகளும், இடப்பெயர்களும் மற்றும் கண்டெடுக்கப்பட்ட நாணயங்களும் உறுதிப்படுத்துகின்றன என்று வேண்டுமானால் வாதிடலாம். அது பொருத்தமாகவும், வலுவானதாகவுமிருக்கும்.*

## உசாத்துணை நூல்கள்


1. 'யாழ்ப்பாண வைபவமாலை' மாதகல் மயில்வாகனப் புலவர் (முதலியார் குல. சபாநாதன் பதிப்பு)
2. 'யாழ்ப்பாணச் சரித்திரம்' – முதலியார் செ. இராசநாயகம்
3. 'தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு' ப.புஷ்பரட்ணம்
4. 'யாழ்ப்பாண அரச பரம்பரை' – கலாநிதி க. குணராசா
5. 'இலங்கைத் தமிழ் வணிகக் கணங்களும் நகரங்களும் (கி.பி.1000 – 1250) சி.பத்மநாதன் (ஆய்வுக் கட்டுரை; 'சிந்தனை' ஆடி 1984 இதழ்).
6. 'இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை' – கலாநிதி கா.இந்திரபாலா



ஆங்கிலேயர்களின் ஆட்சியால் இலங்கைக்கு கிடைத்த சில பேறுகளில், மேலைத்தேச மருத்துவமுறையின் உள்நுழைவும் ஒன்றாகும். அதுவரை தனியே சுதேச மருத்துவத்தையே நம்பியிருந்த இலங்கை மக்கள், மேலைத்தேய மருத்துவத்தின் அறிமுகத்தோடு தீர்க்கப்படமுடியாத பல நோய்களையும் குணப்படுத்த முடிந்தது. இறப்புவீதம் பெருமளவுக்கு குறைந்தது. இவ்வாறான மேலைத்தேய மருத்துவத்துறையை இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் வளர்த்தெடுக்க, அமெரிக்க மருத்துவ மிஷனரிகள் மேற்கொண்ட பணிகள் அளப்பரியவை. அவ்வாறு மேலைத்தேய மருத்துவத்தை இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வளர்த்தெடுக்க தம் வாழ்வையே அர்ப்பணித்த மருத்துவர்களையும், அவர்களது பணிகளின் தனித்துவத்தையும், இலங்கையின் வடபகுதியில் மேலைத்தேச மருத்துவத்துறை 1820 முதல் இப்போதுவரை வளர்ந்து வந்த முறைமைகளையும் தொகுத்து தருவதாக 'யாழ்ப்பாண மருத்துவ வரலாறு' என்ற இந்தக் கட்டுரைத் தொடர் அமைகின்றது.


## பாலசுப்ரமணியம் துவாரகன்

பாலசுப்ரமணியம் துவாரகன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர். 2005–2008 காலப்பகுதியில் சுகாதார அமைச்சில் கடமையாற்றியுள்ளார். இக்காலப்பகுதியில் 10 இற்கும் மேற்பட்ட பல்வேறு துறைசார் ஆளுமைகளை நேர்காணல் செய்து கனடாவிலிருந்து வெளிவரும் 'வைகறை' வாரப்பத்திரிகையிலும் 'காலம்' சஞ்சிகையிலும் பிரசுரித்துள்ளார். கலாநிதி. சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு மலரின் பதிப்பாசிரியர்.

கடந்த 14 வருடங்களாக யாழ். போதனா மருத்துவமனையில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றும் துவாரகன் 2018 இல் யாழ். போதனா மருத்துவமனையில் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண மருத்துவ அருங்காட்சியகத்தில் மேலைத்தேச மருத்துவ வரலாற்றை ஆவணப்படுத்தியுள்ளார். இவர் மருத்துவ அருங்காட்சியகத்துக்குப் பொறுப்பு அலுவலராக விளங்குவதுடன் மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி அவர்களது வழிகாட்டலில் யாழ்ப்பாணத்தில் தனித்துவமான மருத்துவ அருங்காட்சியகம் உருவாகக் காரணமானவர். இங்குள்ள தொலைமருத்துவப் பிரிவில் பன்னாட்டு மருத்துவ வல்லுநர்கள், பேராசிரியர்கள் வாரந்தோறும் கலந்துகொள்ளும் இணையவழி தொலைமருத்துவக் கருத்தமர்வுகளின் இணைப்பாளராகவும் செயற்படுகின்றார்.


# மீட்பராக மருத்துவர் கிறீனது மீள்வருகை




**Image Source:** National Maritime Museum, Greenwich, London
A small trading brig entering the Bristol Avon, painted by Joseph Walter

*மருத்துவர் கிறீனது 2 ஆவது வருகை:*
*மருத்துவர் கிறீன் 1862 ஆம் ஆண்டு சனவரி மாதம் 7 ஆம் திகதி பிறதேசங்களுக்கு மிஷனரிகளை அனுப்பும் அமெரிக்க மிஷன் சங்கத்துக்கு (ABCFM) எழுதிய கடிதத்தில் தான் யாழ்ப்பாணம் புறப்படுவதற்குத் தயாராகி இருந்தமையைத் தெரிவித்திருந்தார். கப்பல் புறப்படுவதற்காக 5 மாதங்கள் வரை கிறீன் காத்திருக்க வேண்டியிருந்தது. நியூயோர்க்கிலிருந்த கிறீன், 82 வயதான தந்தையிடம் இறுதி பிரியாவிடை பெறுவதற்காக கிறீன் கில்லிற்குச் (Green Hill) சென்றிருந்தார்.*

*யாழ்ப்பாணம் புறப்பட 4 தினங்களுக்கு முன்னர் 1862.05.22 அன்று மருத்துவர் கிறீனுக்கும் திருவாட்டி மார்க்கிரட் பெல்ப்ஸ் உவில்லியம் என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது. போஸ்ரனிலிருந்து சமாதானத்தின் நட்சத்திரம் (Star of Peace) என்ற கப்பலில் கிறீனும் அவரது பாரியாரும் 1862.05.26 அன்று யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டனர். நான்கரை மாதங்களாக தரையைக் காணாத நீண்ட கடற்பயணத்தில் பாரிய அசம்பாவிதங்கள் ஏதுமின்றி ஒக்ரோபர் மாதமளவில் சென்னையை அடைந்தனர். சில வாரங்கள் சென்னையிலிருந்து பின்னர் கிறீன்*

**1862 ஆம் ஆண்டு வெளிவந்த அமெரிக்க இலங்கை மிஷன் ஆண்டறிக்கை மருத்துவர் கிறீனது மீள்வருகையைப் பற்றி சிலாகித்துக் குறிப்பிட்டிருந்தது. கிறீனது மீள்வருகையானது யாழ்ப்பாணத்திலே மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.**



The oath written in the shape of a cross (12th century); Vatican Manuscript Urbinus 64. folio 116

Image Source - wikipedia.org

தம்பதியினர் இரட்டைப் பாய்மரக் கப்பலிற்(Brig) புறப்பட்டு 1862.10.19 அன்று உடுப்பிட்டியை அடைந்து மானிப்பாய்க்குச் சென்றனர். மானிப்பாயிலே அமெரிக்க மிஷனரிகளும் கிறீனுடைய தமிழ் நண்பர்களும் இணைந்து அமெரிக்காவிலிருந்து திரும்பிய கிறீனுக்கும் முதற்தடவையாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த கிறீனது பாரியார் மார்க்கிரட் பெல்ப்ஸ் உவில்லியம் அம்மையாருக்கும் மகத்தான வரவேற்பு அளித்து மகிழ்ந்தனர்.

கிறீனுடைய மாணவன் மருத்துவர் மெக்கின்ரைய 1861 இல் ஆரம்பித்த மருத்துவ மாணவ அணியினர் மருத்துவர் கிறீனது மேற்பார்வையின் கீழ் வந்தனர்.


கிறீனது மூத்த சகோதரர் அன்ரூ கஸ்வெல் கிறீன் அவர்கள் நியூயோர்க் நகரிலே சட்டத்தரணியாகவும் நகர திட்டமிடல் அதிகாரியாகவும் கடமையாற்றினார்; பின்னர் இவர் நியூயோர்க் நகரின் தலைமைக் கணக்காளராகவும் (Comptroller) பணியாற்றினார். நியூயோர்க் நகரின் அடையாளச் சின்னங்களாக (Icons) விளங்கும் றிவர்சைட் ரைவ், மோர்ணிங் சைட் பார்க், மத்திய பூங்கா (சென்றல் பார்க்), அமெரிக்க இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் (American Museum of Natural History), நியூயோர்க் பொது நூலகம் (New York Public Library) ஆகியவற்றின் உருவாக்கத்துக்கு பிரதான உந்து சக்தியாக இருந்தவர் கிறீனது சகோதரர் அன்ரூ கஸ்வெல் கிறீன் அவர்களே.

மானிப்பாயை வந்தடைந்த கிறீன் 1862 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி தனது மூத்த சகோதரர் அன்ரூ அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் தனது பொறுப்பின் கீழ் வந்த புதிய மருத்துவ மாணவர் அணியைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

“என்னுடைய மருத்துவ மாணவர்களுக்கான விரிவுரையைப் பற்றி தங்களுக்கு விளக்கம் தரவேண்டும். மருத்துவ விஞ்ஞானம் பயில்வதில் மிகுந்த ஆர்வமும் பற்றுறுதியும் மதிநுட்பமுள்ள 11 இளம் மாணவர்கள் என்னிடம் கற்பதற்கு வந்துள்ளார்கள். 2 தொடக்கம் 3 மணி நேரம் வரை நீண்டு செல்லும் விரிவுரையில் அவர்கள் என்னையே பார்த்தவாறு இருப்பர். என்னில் மிகுந்த நம்பிக்கை கொண்டு எனது செயல்முறை விளக்கங்களைப் பணிவாகக் கேட்பார்கள். பின்னர் டிஸ்பென்சரிக்குச் சென்று நோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதைப் பார்வையிடுவார்கள். ”

1862 ஆம் ஆண்டு வெளிவந்த அமெரிக்க இலங்கை மிஷன் ஆண்டறிக்கை மருத்துவர் கிறீனது மீள்வருகையைப் பற்றி சிலாகித்துக் குறிப்பிட்டிருந்தது.

கிறீனது மீள்வருகையானது யாழ்ப்பாணத்திலே மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அமெரிக்க மருத்துவர் வெள்ளைக்கார பாதிரி மருத்துவர் சுகப்படுத்துபவர் கிறீன் யாழ்ப்பாணத்துக்கு மீளவும் வந்து விட்டார்



Hippocrates Refusing the Gifts of Artaxerxes 1792
Anne Louis Girodet Trioson 1767-1824 France
Image Source - Medical Museum, Paris

என்ற செய்தி யாழ்ப்பாணம் எங்கும் பரவியதும் வீடுகளிலே துன்பப்பட்டு முடங்கியிருந்த நோயாளிகளும் நடமாட முடியாத நிலையிலிருந்தவர்களும், அங்கவீனமடைந்த வர்களும் யாழ்ப்பாணத்தின் நாலா திக்குகளிலிருந்தும் கிறீனுக்கு முன் கொண்டு வரப்பட்டனர்.

ஈராயிரம் வருடங்களுக்கு முன்னர் இயேசு நாதர் ஒரு கிராமத்துக்கு வருகை தந்த செய்தி அறிந்து பல்வேறு பிணிகளால் துன்பப்பட்டோரும் அங்கவீனர்களும் அவரைத் தரிசித்தால் தமது துன்பம் போய்விடும் என்றும் அவரது ஆடையைத் தொட்டாலே தங்களது நோய் மாறிவிடும் என்றும் நம்பிக்கையோடு இயேசுவைக் காண மக்கள் முண்டியடித்து வந்தது போல் நோயினால் துன்பப்பட்ட யாழ்ப்பாண மக்கள் நம்பிக்கையோடு கிறீனுக்கு முன் கொண்டுவரப்பட்டனர்.

கிறீன் ஒரு மருத்துவராகவும் கிறித்துவ மறைபரப்பும் ஊழியராகவும் இருந்தபோதிலும் அவர் பிரார்த்தனையால் நோய் தீர்ப்பவரல்லர்; அவர் தகுதிவாய்ந்த மருத்துவர்; சத்திரசிகிச்சை நிபுணர்; நன்கு பயிற்சிபெற்று விஞ்ஞான மருத்துவ அறிவை தனது வாழ்விலே பின்பற்றியவர்; அன்று அமெரிக்கப் பல்கலைக்கழங்களிலே நடைமுறையிலிருந்த இருந்த பாடத்திட்டத்தை ஒத்த பாடத்திட்டத்தைப் பின்பற்றி மானிப்பாய் மருத்துவக் கல்லூரியில் மாணவர்களுக்கு முறைப்படி மேலைத்தேச மருத்துவத்தைப் போதித்து யாழ்ப்பாணத்திலே மருத்துவர்களை உருவாக்கியவர்; மருத்துவத்துறையின் தந்தை என்று போற்றப்படும் ஹிப்போகிரட்டீஸின் உறுதிமொழிப்படி மருத்துவம் பார்த்தவர்.

கிறீன் யாழ்ப்பாணம் வந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் மேலைத்தேச மருத்துவ விஞ்ஞான அறிவு மக்களிடையே பரவலடையவில்லை; நோய் தொடர்பில் அறியாமையும் தவறான நம்பிக்கைகளும் இறை அச்சமும் மிகுந்திருந்தது. யாழ்ப்பாணம் வருகைதந்த 3 ஆவது மிஷனரி மருத்துவரான கிறீன் அவர்கள் 4 வருட ஓய்வின் பின்னர் 2 ஆவது தடவையாக யாழ்ப்பாணம் வருகைதந்த போது அவரிடம் சிகிச்சை பெற வந்த மக்கள் கூட்டம் கிறீனையும் ஒரு தேவதூதராக, நோயிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் மீட்பராகக் கண்டனர்.

கிறீன் யாழ்ப்பாணம் வருகை தந்து 2 மாதங்கள் கழிந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் 9 தினங்கள்

தொடர்ச்சியாக மழை பெய்தது. இப்பெரு மழையால் 1862ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி காலைவேளையில் கிறீன் தங்கியிருந்த வீட்டின் கூரை முறிந்து விழுந்தது. இந்த அசம்பாவிதத்தின் போது கிறீனும் அவரது மனைவியும் மயிரிழையில் உயிர்தப்பினர். பெறுமதி வாய்ந்த பொருட்கள் சேதமடைந்தன. தற்காலிகமாகத் தமது இருப்பிடத்தை மாற்றினர். வீட்டை மீளமைப்பதற்கு கிறீனுக்கு 3 மாதங்கள் எடுத்தது.

ஆபத்துக்கு உதவி வைத்தியசாலையின் (FINS Hospital) அத்தியட்சகராகக் கடமையேற்ற கிறீன் யாழ். அரசாங்க அதிபராக இருந்த சேர் பேர்சிவல் அக்லண்ட் டைக் அவர்கள் யாழ். நகரத்திலிருந்த ஆபத்துக்குதவிச் சங்கத்தின் வைத்தியசாலையையும் மருந்துச்சாலையையும் பொறுப்பேற்குமாறு மருத்துவர் கிறீனிடம் கேட்டிருந்தார். 1863 ஆம் ஆண்டு இரு பிரதான காரணங்களுக்காக இப்பொறுப்பை மருத்துவர் கிறீன் ஏற்றுக்கொண்டார்.

முதலாவதாகக் கிடைக்கும் மேலதிக வருவாயின் மூலம் மருத்துவ நூல்களை மொழிபெயர்ப்பதற்கும் அவற்றை அச்சிடுவதற்கும் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வது, அடுத்தது தனது மாணவர்கள் பல்வேறு விதமான நோயாளிகளையும் பார்வையிடுவதன் மூலம் பரந்த அறிவைப் பெறுவார்கள் என்று கிறீன் கருதியிருந்தமை. மருத்துவர் கிறீன் வாரத்தில் 2 தினங்கள் ஆபத்துக்கு உதவி வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்காக வருடத்துக்கு 50 ஸ்ரேலிங் பவுண் நிதியை அமெரிக்க இலங்கை மிசனுக்கு வழங்குவதற்கும் மானிப்பாயிலிருந்து 5 மைல் தொலைவிலுள்ள யாழ்ப்பாணத்துக்கு கிறீனது போக்குவரத்துச் செலவுக்காக மேலதிகமாக 25 ஸ்ரேலிங் பவுண் நிதியை வருடாந்தம் வழங்குவதற்கும் அரசாங்கம் உடன்பட்டிருந்தது.

ஆரம்பத்தில் 3 மாதங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மருத்துவர் கிறீன் 5 வருடங்கள் இப்பதவியில் தொடர்ந்தார். இங்கு தனது மாணவர்களுக்கு உடற்கூற்றியல் பாட செய்முறைப் பயிற்சியின் போது உடல் அறுவைப் பகுப்பாய்வுக்கு போதிய வசதி கிடைத்ததையிட்டு கிறீன் மகிழ்ச்சியடைந்தார். 1863 ஆம் ஆண்டு ஆபத்துக்குதவி வைத்தியசாலையில் 8630 பேருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

1863 காலப்பகுதியில் மானிப்பாய் மருத்துவமனை மருத்துவர் மெக்கின்ரைய அவர்களது பொறுப்பில் இயங்கியது. இவருக்கு 3 மருத்துவ மாணவர்கள் உதவியாக இருந்தனர். 1863 இல் மானிப்பாய் மருத்துவமனையில் 1217 பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. 1863 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 ஆம் திகதி கிறீனது நாட்குறிப்பில் சங்குசேகரிப்போர் இருவர் சுறாவினால் தாக்கப்பட்டு பாரிய காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சைக்காகக் காலையில் ஆபத்துக்குதவி வைத்தியசாலைக்கு வந்திருந்தமையை மருத்துவர் இடன்போர்த் அனுப்பிய தகவலிலிருந்து பதிவிட்டிருந்தார்.

(தொடரும்)

கிறீன் யாழ்ப்பாணம் வந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் மேலைத்தேச மருத்துவ விஞ்ஞான அறிவு மக்களிடையே பரவலடையவில்லை; நோய் தொடர்பில் அறியாமையும் தவறான நம்பிக்கைகளும் இறை அச்சமும் மிகுந்திருந்தது. யாழ்ப்பாணம் வருகைதந்த 3 ஆவது மிஷனரி மருத்துவரான கிறீன் அவர்கள் 4 வருட ஓய்வின் பின்னர் 2 ஆவது தடவையாக யாழ்ப்பாணம் வருகைதந்த போது அவரிடம் சிகிச்சை பெற வந்த மக்கள் கூட்டம் கிறீனையும் ஒரு தேவதூதராக, நோயிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் மீட்பராகக் கண்டனர்.




● சுந்தரப்பிள்ளை சிவரெத்தினம்

கலாநிதி சு. சிவரெத்தினம் அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நுண்கலையில் இளமாணிப் பட்டத்தையும் முது தத்துவமாணிப்பட்டத்தையும் பெற்றவர். மதுரை காமராஜர் பல்கலைக்கழத்தில் கலைவரலாற்றில் கலாநிதிப் பட்டம் பெற்று, தற்போது சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கட்புல தொழில்நுட்பக் கலைகள் துறையின் தலைவராகப் பணிபுரிகின்றார்.
கலைவரலாற்றில் மட்டுமன்றி நாடகம், இலக்கியம், அரசியல், சமூகவியல் போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்க ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.


இலங்கையில் அதிகாரத்துக்காகவும் அதனை தக்க வைப்பதற்காகவும் சிங்கள, தமிழ் தலைவர்களினால் அடையாள அரசியல் முன்னிலைப்படுத்தப்பட்டது. அது இனத்துவ அரசியலாக வளர்ச்சியடைந்து சிறுபான்மையினரின் உரிமைகளையும் அவர்களின் இருப்பையும் இல்லாதொழிக்கும் அரசியலாக உச்சம் பெற்றது.இதன் தொடர்ச்சி இலங்கையில் உள்நாட்டு யுத்தத்திற்கு எவ்வாறு வழிவகுத்தது என்ற அடிப்படை காரணிகளை உள்ளார்ந்த ரீதியில் ஆய்வுசெய்ய 'இலங்கையில் அடையாள அரசியல் – சுதந்திர இலங்கை வரையிலான ஒரு வரலாற்று நிலைப் புரிதல்' என்ற இந்தக் கட்டுரைத்தொடர் எத்தனிக்கின்றது. இதன்படி, அடையாள அரசியல் என்றால் என்ன என்ற கோட்பாட்டுப் புரிதலை உண்டாக்கி, இலங்கையினுடைய அடையாள அரசியலின் வரலாற்றுப் போக்கினையும், தமிழ் தலைவர்களின் அணுகுமுறைகளையும் விமர்சன நிலையில் நோக்குவதற்கு இத்தொடர் முனைகிறது.

# தமிழ் கட்சிகளும் சாதி அடையாளமும்

*தமிழரசுக் கட்சியின் இந்த சமூக சமத்துவமின்மைக்குக் காரணம் அந்தக்கட்சி ஏற்கனவே குறிப்பிட்ட 'சைவமும் தமிழும்' என்ற கருத்துநிலையின் அரசியல் வடிவமாக இருந்ததோடு, அந்தக் கருத்துநிலையைப் பேணிப்பாதுகாக்கின்ற ஒரு அமைப்பாகவும் தொழிற்பட்டது. இந்த சாதி மேலாண்மை சிங்கள அரசின் தமிழ் இன, தமிழ் மொழி ஒடுக்குமுறை காரணமாக மூடிமறைக்கப்பட்டு தமிழ் இனம், தமிழ் மொழி எனும் அடையாளத்துக்குள் தமிழர்களை ஒன்று திரட்ட வாய்ப்பாகவும் அமைந்தது. இந்த வாய்ப்பினை மேலும் பலப்படுத்திக் கொள்ளவும் தமிழ் சமூகத்துக்குள் அகவய ரீதியாகக் கனன்று கொண்டிருந்த சமூக ஒடுக்கப்பாட்டைத் தணித்து அவர்களை இனஉணர்வுக்கு உட்படுத்தி அந்த மக்களை தமிழ்த் தேசிய அரசியலுக்குள் கரையச் செய்ய வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் உருவாகியிருந்தது. இதன் பொருட்டு தமிழரசுக் கட்சி சமூக சமத்துவம், சமூக நீதி என்பன பற்றி வெறுமனே ஏட்டளவிலாவது பேச வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை மனம் கொள்ள வேண்டும்.*

*1957 யூலையில் மட்டக்களப்பில் நடந்த மகாநாட்டில் தீண்டாமை பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "தமிழ் பேசும் மக்களில் ஒரு பகுதியினரிடையே இன்றளவும் நிலவி வரும் சமூக ஏற்றத் தாழ்வுகளையும் அநீதிகளையும் குறிப்பாகத் தீண்டாமையை ஒழிப்பதற்கு ,அகிம்சை நெறி வழுவாது சத்தியாக்கிரக வழியைக் கைக்கொண்டு அதற்கென ஓர் இயக்கத்தை ஆரம்பித்து உடனடி நடவடிக்கை எடுப்பதன் மூலம் வருங்காலச் சந்ததியினர் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தி ,ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வரும்படி தமது பூரண சுதந்திரத்துக்காகவும், சுயமரியாதைக்காகவும் போராடுகின்ற தமிழ் பேசும் மக்களுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இந்தத்தேசிய சிறப்பு மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது." (சபாரத்தினம்.த)*

*1958 மே 25 இல் வவுனியாவில் நடந்த மாநாட்டிலும் தீண்டாமை ஒழிப்புக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது. "சமூக ஏற்றத் தாழ்வுகளையும், அநீதிகளையும் அகற்றி பிளவுபட்டு நிற்கும் தமிழ் மக்களை ஒன்று திரட்டல் என்ற கட்சியின் அடிப்படை இலட்சியங்களுக்கேற்ப எமது மக்களின் ஒரு பகுதியினரை சிறப்புரிமையற்றவர்களாக*

வைத்திருப்பதை அகற்றி, அவர்களுக்கும் சம உரிமை வழங்க மக்களைத் தூண்டும் போராட்டத்தை நடத்துவதென்றும் அதற்கான தெரிவுக்குழுவுக்கு மக்கள் அனைவரையும் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுவதென்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தீர்மானிக்கிறது" (சபாரத்தினம்.த)

தமிழரசுக் கட்சியின் மேற்படி தீர்மானங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது கொண்ட அக்கறையினால் கொண்டுவரப்பட்டவை அல்ல. இந்தத் தீர்மானங்கள் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று வரலாற்று நிர்ப்பந்தமாகும். அத்துடன் 1957ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சமூகக் குறைபாடுகள் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்படுகிறது. இதன்படி சமூகத்தில் சாதியை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் அநீதிகள் தண்டனைக்குரிய குற்றமாகின்றன. எனவே இதிலிருந்து சட்ட ரீதியாக கட்சி உறுப்பினர்கள் தப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்பாகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் தமிழ்த் தேசியத்தை விட்டு விலகாதிருக்கவும் கட்சி இவ்வாறான ஒரு தீர்மானத்தினையும் கொள்கையினையும் கொண்டிருப்பது தவிர்க்க முடியாததாக இருந்தது.

மேலும் இந்தத் தீர்மானங்கள் அன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் வளர்ச்சியடைந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்களின் சமூகவிடுதலையினை திசைதிருப்பி, தங்களது யாழ் .வேளாள மேலாதிக்கத்தை அரசியலுக்கூடாக கட்டிக்காப்பதை நோக்கமாகக் கொண்டவை. இதற்கு தமிழ்த் தேசியம் எனும் கோசம் வாய்ப்பாக அமைந்திருந்தது. குறிப்பாக அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபையின் வளர்ச்சியும் செயற்பாடுகளும் இவர்களை அச்சமூட்டின. பருத்தித்துறைத் தொகுதியின் சுயேச்சை வேட்பாளரான பொன். கந்தையாவுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்த மக்கள் ஆதரவு தமது மேலாண்மைக்கு எதிரானது



1976 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

Image Source - thinakaran.lk

என்பதை அறிந்திருந்தனர். யாழ். வேளாள மேலாண்மையை விடுத்து எவரும் யாழ்ப்பாணத்தில் அதிகாரத்துக்கு வரக்கூடாது என்பதில் மிகக் கவனமாகச் செயற்பட்டனர். யாழ்ப்பாணத்தில் 40 சதவீதமாக இருந்த தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் தமிழ் காங்கிரசிலோ அல்லது தமிழரசுக் கட்சியிலோ 1977 வரை எந்தவொரு தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நியமனம் வழங்கப்படவில்லை. அந்த மக்களின் சார்பில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கியவர்கள் இடதுசாரிகள் மாத்திரமேயாகும். இவ்வாறு கட்சி தனக்குள்ளே சாதித்துவத்தை பாதுகாத்துக் கொண்டுதான் மேற்படி தீர்மானங்களை எடுத்ததே தவிர தாழ்த்தப்பட்ட மக்கள் மீது கொண்ட உண்மை யான அக்கறையுடனும் அதனைச் செயற்படுத்தும் நோக்கத்துடனும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அல்ல. இதனை தமிழரசுக் கட்சித் தலைவர்களின் நடத்தைகள் எடுத்துக்காட்டுகின்றன.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பிரவேசப் போராட்டத்தின் போது கோயில் விவகாரம் பற்றி எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களிடம் கேட்ட போது "ஒரு கிறிஸ்தவனாக நான் இருப்பதால் இந்துக் கோயில் விவகாரங்களில்

நான் தலையிட முடியாது” எனக் குறிப்பிட்டிருக்கிறார். இந்துக் கோயில்களில் மட்டும்தான் சாதிப்பாகுபாடுகள் பார்க்கப்பட்டன என்பதல்ல, சாதிவிடுதலையை வேண்டி கிறிஸ்தவத்துக்கு மதம்மாறிய தாழ்த்தப்பட்ட மக்கள் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் சாதிப்பாகுபாட்டிற்கு உள்ளானார்கள். “இளவாலை பெரியன்னம்மாள் தேவாலயத்தில் தலித் கிறிஸ்தவர்களுக்கு அவர்தம் கடமையை பூரணமாக செய்ய முடிவதில்லை. ‘முட்டு’ கொடுப்பது, திரு உருவம் சுமப்பது போன்ற பணிகளை கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய தலித்துக்கள் செய்ய அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. இளவாலையில் 1976 இல் அன்னம்மாள் தேவாலயத்தில் தலித் கிறிஸ்தவர்கள் அதற்கான உரிமைகோரிப் போராடியபோது பொய் வழக்குகள் பதியப்பட்டு பொலிசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அதற்குப் பின் நின்று செயற்பட்டவர்கள் வெள்ளாளப் பாதிரிமார்கள் என்பது வேதனைக்குரிய உண்மை. நிலைமை மோசமானபோது கோயிலைக் கூட பல நாட்களாக இழுத்து மூடிவிட்டனர். தமிழ் மக்களின் தானைத் தலைவர் என அழைக்கப்படும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களிடம் சென்று தலித் மக்கள் அது குறித்து நியாயம் கேட்ட போது, யாழ். மாவட்ட கத்தோலிக்க சபையின் ஆண்டகையிடம் இது விடயமாக கவனம் எடுக்கும்படி தான் கடிதம் எழுதுவதாகக் கூறினார். பிற்பாடு ஆண்டகையும் தலித் கிறிஸ்தவர்களை அழைத்து ’உங்களுக்கென்று தனியாக சில்லாலைக் கோடாலிக் காட்டில் 10 பரப்புக் காணியும் ஒரு அந்தோனியாரையும் தந்து கோயிலையும் கட்டித்தாறம்’ என்று வாக்களித்தார். இது பற்றி தோழர் டானியல் அவர்கள் ஓர் இடத்தில் குறிப்பிடும் போது “ஓம் , அவையள் தங்களுக்கு வெள்ளாள அந்தோனியாரை வைச்சுக்கொண்டு எங்களுக்கு பள்ள அந்தோனியாரைத்தானே தந்தவர்கள்” என்று வேடிக்கையாகவும் நக்கலாகவும் குறிப்பிட்டார்” (யோகரட்ணம்)

யாழ்ப்பாணத்தில் வளர்ச்சியடைந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்களின் சமூகவிடுதலையினை திசைதிருப்பி, தங்களது யாழ் .வேளாள மேலாதிக்கத்தை அரசியலுக்கூடாக கட்டி க்காப்பதை நோக்கமாகக் கொண்டவை. இதற்கு தமிழ்த் தேசியம் எனும் கோசம் வாய்ப்பாக அமைந்திருந்தது. குறிப்பாக அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபையின் வளர்ச்சியும் செயற்பாடுகளும் இவர்களை அச்சமூட்டின.

தமிழரசுக் கட்சி தனது தீர்மானத்தில் தமிழ் சமூகத்தில் இருக்கின்ற சமூக ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும் என்றே தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மதநிலை கடந்து கட்சியின் கொள்கையினையும் அதன் தீர்மானத்தினையும் கடைப்பிடிக்க வேண்டியது ஒவ்வொரு கட்சித் தொண்டனுடைய கடமையாகும் ஆனால் கட்சியின் தலைவரே கட்சியின் தீர்மானத்தினைப் பொருட்படுத்தாது தான் கிறிஸ்தவன் இந்துக் கோயில் விவகாரத்தில் தலையிட முடியாது என்பதும் கிறிஸ்தவர்கள் விடயத்தில் ஆண்டகைக்கு கடிதம் எழுதியதும் அதன் பயனாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனியான ஒரு கோயில் கட்டிக் கொடுக்கின்ற நடவடிக்கையும் எந்த அடிப்படையில் தமிழ் சமூகத்தின் சமூக ஒடுக்குமுறையினை முடிவுக்கு கொண்டு வரும்? என்பது தொடர்பாக எந்தவொரு தமிழரசுக் கட்சி உறுப்பினரும் கேள்வி கேட்டது கிடையாது. ஏனெனில் அந்தக் கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரும் சைவக் கருத்துநிலையின் விம்பங்களாகவே இருந்தனர். இதுதான் கட்சிக் கொள்கைக்கும் நடைமுறைக்குமுள்ள வேறுபாடாகும்.

இவை பற்றிக் கேள்வி எழுப்பாதது ஒருபுறமிருக்க “சாதியக் கலவரம் பற்றி திரு. அமிர்தலிங்கம் கூறிய பதிலோ அதைவிட வேடிக்கையானது அது சின்ன வியட்நாம் போர் அது பள்ளர் என்ற சமூகத்தவர்க்கும் கோவியர் என்ற சமூகத்தவர்க்கும் இடையேயான போர் என்றும் கூறியதுடன் இது சீன கம்யூனிஸ்டுகளின் வேலை என்றும் நாடாளுமன்றத்தில் கூறினார்...... அடுத்து வவுனியா திரு. சி. சுந்தரலிங்கம்

என்பவர். கல்விமான், அடங்காத் தமிழன், தனிநாடு கேட்ட தலைவர், லண்டன் மகாராணிக்கு கணக்குச் சொல்லிக் கொடுத்தவர் என்றெல்லாம் இவருக்குப் பெருமையுண்டு. இவர்தான் மாவிட்டபுரவாசலில் நின்று தன் காடையர்களுடன் சேர்ந்து கோயிலுக்குக்குள் தலித்துக்கள் பிரவேசிக்கக் கூடாதென மிக மூர்க்கமாகத் தடுத்தவர். கோயிலுக்குள் பக்தர் தம் கடமையைச் செய்யவிடாது தடுத்த குற்றத்திற்காக மல்லாகம் நீதிமன்றம் , சட்டமேதை சி. சுந்தரலிங்கத்துக்கு 50 ரூபா அபராதம் விதித்தது. இந்த அபராதத்தைக் கட்ட மறுத்து பல ஆயிரம் ரூபா செலவு செய்து லண்டன் பிரிவு கவுன்சிலில் மேல் முறையீடு செய்தவர். இருந்தபோதும் மல்லாகம் நீதிபதியின் தீர்ப்பு சரியானது என்பதாகவே பிரிவுக் கவுன்சிலும் தீர்ப்பளித்தது." (யோகரட்ணம்)

கட்சியின் தீர்மானங்களைக் கடைப்பிடிக்க வேண்டிய தமிழ்த் தலைவர்களே இவ்வாறு நடந்து கொண்டபோது கட்சித் தொண்டர்களோ அனைத்து அடக்கு முறைகளின் செயல்வீரர்களாக இருந்தனர். இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் கட்சி உறுப்பினர் வேறு ,சமூகம் வேறு என்று அர்த்தமல்ல. எனவே யாழ். வேளாளர் என்ற அடையாளமும் அதன் அடக்குமுறையும் யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் யாழ். தவிர்ந்த ஏனைய பிரதேச மக்களுக்கும் பொதுவான விடயமாக இருந்தன.
இந்த யாழ். வேளாள மேலாண்மைக்கு எதிராக 1970 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் பதிலளித்தனர். அதாவது தமிழரசுக் கட்சியினதும் தமிழ் காங்கிரஸ் கட்சியினதும் முக்கியமான உறுப்பினர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். அந்தவகையில் அ. அமிர்தலிங்கம், ஜி. ஜி. பொன்னம்பலம், மு. சிவசிதம்பரம், ஈ. எம். வி. நாகநாதன், ரீ. சிவசிதம்பரம் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கம்

யாழ். வேளாள மேலாண்மையைப் பாதுகாப்பதற்காக தமிழ் இனம், தமிழ் மொழி என்பவற்றைப் துணைக்கெடுத்துக் கொண்டு எதிரும் புதிருமாகப் போட்டியிட்டு ,தாங்கள்தான் தமிழர்களை மீட்க வந்த மீட்பர்கள் என பேசிக்கொண்டு, ஆளுக்காள் வசைபாடிக் கொண்டு திரிந்த தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரசும் தங்கள் சாதி, வர்க்க நலனைப் பாதுகாக்கும் பொருட்டு ஒன்று சேர்ந்து செயற்படுவதென முடிவெடுத்து அதனை மேலும் பலமுள்ளதாக்கும் பொருட்டு தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் மட்டக்களப்பு மக்களால் விரும்பப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியின்நாடாளுமன்ற உறுப்பின ராக இருந்த கே. டபிள்யூ. தேவநாயகம் போன்ற வர்களை இணைத்துக் கொண்டு 1976 ஆம் ஆண்டு 'தமிழர் விடுதலைக் கூட்டணி' எனும் புதிய அரசியல் கட்சியை உருவாக்கினர். இதன் தலை வர்களாக எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜி. ஜி. பொன்னம்பலம், சௌமியமூர்த்தி தொண்டமான், கே. டபிள்யூ. தேவநாயகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜி. ஜி. பொன்னம்ப லம் போன்றவர்கள் நோயுற்றதைத் தொடர்ந்து கட்சியின் சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் ஆகிய இருவரும் இருந்தனர். இவ்விருவரும் எந்தவொரு தேர்தலிலும் தோற்கக் கூடாது என்பதற்காக மிகச் சாதுர்யமாகத் திட்டமிட்டுச் செயற்பட்டனர். அதாவது "பொதுத் தேர்தலில் (21.07.1977) தமிழீழக் கோரிக்கையினை முன்வைத்து தேர்தலில் களமிறங்குவதென மேற்கூறிய இருவரும் தீர்மானம் மேற்கொண்டனர். இவ்விடயத்தினை அறிந்த சௌமியமூர்த்தி தொண்டமான், கே. டபிள்யூ. தேவநாயகம் ஆகிய இருவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேறினர். வெளியேறியதற்கான காரணம் தமிழீழக் கோரிக்கையினை தாம் ஏற்பதற்கு தயாரில்லை என்பதனையும் ஏற்கனவே தமிழர் விடுதலைக் கூட்டணி ஸ்தாபிக்கப்பட்டபோது அவ்வாறான கருத்துக்கள் எதனையும் தம்மிடம் கூறவில்லை எனவும் தெரிவித்திருந்தனர். இந்நிலை யிலேயே வடக்கு கிழக்கில் தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி யினர் களம் இறங்கிய நிகழ்வு இடம்பெற்றது." (குமாரதுரை அருணாசலம்) எனவே தமிழீழக் கோரிக்கை என்பது தமிழர்களின் சிறுபான்மை யினருடையது கூடக் கிடையாது. ஆனால் ஊடகங்களும் அதற்கான பிரசாரங்களும் அதனை ஒட்டு மொத்த தமிழர்களுடைய கோரிக்கையாக, பிரகடனமாகக் கட்டமைத்தன. இதற்கு உரமூட்டும் வகையில் சிங்கள அரசின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. அவை யாழ். வேளாள அதிகார வர்க்கத்துக்கு வாய்ப்பாக அமைந்தன.

(தொடரும்)




● பால. சிவகடாட்சம்

பாலட சிவகடாட்சம் அவர்கள் இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தாவரவியலை பிரதான பாடமாகக் கொண்டு உயிரியல் விஞ்ஞானத்துறையில் (B.Sc. Hons) சிறப்புப் பட்டம் பெற்றவர். இலண்டன் இம்பீரியல் கல்லூரியில் (London Imperial College) டிப்ளோமா சான்றிதழும், இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளதுடன் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் B.Ed பட்டமும் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய உயிரியற் பீடத்தில் மூத்த விரிவுரையாளராகவும் அதன் தலைவராகவும் பதவி வகித்த இவர் பின்னர் கனடாவில் உள்ள ரொறொன்ரோ கல்விச்சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள மார்க் கார்னோ கல்லூரியில் விஞ்ஞான மற்றும் உயிரியற் பாட ஆசிரியராகப் பணியாற்றினார்.

இலங்கையிலிருந்து 1971 1973 காலப் பகுதியில் விஞ்ஞானக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்த 'ஊற்று' என்ற மாத சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும், 1970–1971 காலப்பகுதியில் வெளிவந்த தமிழமுது இலக்கிய மாத இதழின் ஆசிரியர் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றிய சிவகடாட்சம் (அவர்கள்) தொடர்ச்சியாக ஆய்வுக்கட்டுரைகளையும் இலக்கிய கட்டுரைகளையும் எழுதி வருகின்றார்.


ஈழத்தில் தோன்றிய வைத்தியம் தொடர்பான நூல்களில் ஒன்று செகராசசேகரம். கி.பி.15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் செகராஜசேகரன் என்னும் பெயருடன் நல்லூரில் இருந்து ஆட்சிசெய்த மன்னன் குடிமக்களுக்காக இந்தியாவில் இருந்து பண்டிதர்களை வரவழைத்து செகராசசேகரம் என்னும் வைத்தியநூலை ஆக்குவித்தான். இதில் பல பகுதிகள் தற்போது அழிந்துள்ளன. தற்போது கிடைக்கும் செகராசேகரம் நூலில் உள்ள 'இரசவர்க்கம்' என்ற பகுதியில் சொல்லப்பட்டுள்ள, பாரம்பரிய வைத்திய முறைமைகள், மூலிகைகளின் மருத்துவக் குணங்கள், நோய்களுக்கான சிகிச்சைகள் பற்றி தெளிவுபடுத்துவதாக 'யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த இரசவர்க்கம்' என்ற இந்தக் கட்டுரைத் தொடர் அமைகிறது.

# இரசவர்க்கம் தாவரநெய்கள்



வேப்பெண்ணெய்

Image Source - www.updatenews360.com

## வேப்பெண்ணெய்

**வாதம்போம் பித்தமிகும் மாறாக்கிரந்திபோ**
**மோதுங்கரப்பன் சிரங்கோடிப்போம்–போதவே**
**வேப்பெண்ணெய் கொண்டால் விசம்மீழும் சன்னிபோம்**
**காப்புடைய கையாளே காண்**

**இதன் பொருள்:** காப்பு அணிந்த கைகளை உடையவளே காண்பாயாக. வேப்பெண்ணெயால் வாதம் போகும். பித்தம் கூடும். மாறாத கிரந்தி மாறும். கரப்பனும் சிரங்கும் மாறும். கடிவிஷம் இறங்கும். சன்னிநோய் குணமாகும்.

மேலதிக விபரம்: வேப்பிலைத்தூளை வேப்பெண்ணெயுடன் கலந்து பெறப்பட்ட தைலத்தை, வலிப்பு, சன்னி என்பவற்றால் பாதிக்கப்பட்ட பாகங்களுக்குப் பூசிவர நிவாரணம் கிடைக்கும்.
வெற்றிலையில் வேப்பெண்ணெய் தடவி, அதனைத் தணலில் வாட்டி, இலேசான சூட்டுடன் உடலில் வீக்கம் உள்ள இடத்தில் வைத்துக்கட்ட வீக்கம் குறையும் என்று தமிழ் மருத்துவர்கள் கூறுகிறார்கள்.
வெப்பமும் புழுக்கமும் கூடிய கோடைகாலத்தில் தோன்றும் தேமல் எனப்படும் தோல் நிறமாற்றங்கள் தோலில் வாழும் ஒரு பங்கசுவால் (*Tinea versicolor*) தோற்றுவிக்கப்படுகின்றன. வேப்பிலைகளை அரைத்து அதனுடன் தேங்காய் எண்ணெயும் தேன்மெழுகும் சேர்த்து ஒருபசையாகத் தயாரித்துத் தேமல் உள்ள இடத்தில் நான்கு இரவுகள் பூசிவர தேமல்

மறையும். சொறி, சிரங்கு, எக்சிமா, புண் போன்ற தோல் வியாதிகளுக்கு 1 மேசைக்கரண்டி வேப்பெண்ணெயை 8 மேசைக்கரண்டி திராட்சைவிதை எண்ணெய் (grape seed oil) அல்லது நல்லெண்ணெயுடன் கலந்து ஒரு நாளைக்கு இரு தடவை தோலில் பாதிக்கப்பட்ட இடத்தில் பூசவும். தோலில் அரிப்பு ஏற்பட்டால் இந்தக்கலவையில் வேப்பெண்ணெயின் அளவைக் குறைக்கவும்.

தலையில் பொடுகுப்பிரச்சினை இருந்தால் நீங்கள் பயன்படுத்தும் 'ஷம்பூ' வுடன் சிலதுளி வேப்பெண்ணெய் சேர்த்துப்பயன்படுத்தவும். வேப்பம்பூக்களை நல்லெண்ணெயில் கொதிக்கவைத்து வடித்து எடுத்த எண்ணெயைத் தலையில் தேய்த்து வந்தாலும் பொடுகு இல்லாமல் போய்விடும் என்றும் கூறப்படுகிறது. தலையில் பேன்களை அகற்ற வேப்பெண்ணெயும் நல்லெண்ணெயும் சரிசமமாகக்கலந்து தலைக்கு வைத்து தேய்த்து ஒரு மணி நேரம் கடந்தபின் ஷம்பூவால் கழுவிவிடவும். கிழமைக்கு ஒரு தடவையாக தொடர்ந்து மூன்று கிழமைகள் அல்லது பேன் தொல்லை தீரும்வரை இவ்வாறு செய்யவும்.

நுளம்பு (கொசு)த் தொல்லையைத் தவிர்க்க வேப்பெண்ணெயுடன் 5 மடங்கு வசலின் (Vase line) அல்லது நல்லெண்ணெய் சேர்த்துக் கலந்து தோலில் பூசிவிடவும். விளக்கு எரிக்கப்பயன்படும் எண்ணெயுடன் 5% தொடக்கம் 10% வேப்பெண்ணெய் கலந்து எரித்தால் நுளம்புகளை அண்டவிடாமல் தவிர்க்கலாம். வேப்பெண்ணெய் பாதுகாப்பான பூச்சிகொல்லி மருந்தாகும். வீட்டின் உள்ளேயும் வெளியேயும் நீங்கள் வளர்க்கும் செடிகொடிகளைப் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க வேப்பெண்ணெய் பயன்படும் ஒரு லீற்றர் தண்ணீரில் 30 மில்லிலீற்றர் அல்லது 2 மேசைக்கரண்டி வேப்பெண்ணெயைக் கலக்கவேண்டும். இதனுடன் 1 மில்லி லீற்றர் டிஷ் வாஷிங் திரவத்தையும் (Dish washing liquid) சேர்க்கவும். (வேப்பெண்ணெய் தண்ணீருடன் சீராகக் கலப்பதற்கு டிஷ்வாஷிங் திரவம் உதவுகிறது) நன்றாகக் கலக்கியபின் உடனடியாக இந்தக் கலவையை இலைகளின் மேற்புறத்திலும் பூச்சிகள் வழக்கமாக ஒளிந்திருக்கும் கீழ்ப்புறத்திலும் விசிறிவிடவும். வேர்களைச் சுற்றியும் விசிறி விடலாம். இந்தக்கலவையைத் தயாரித்து வைத்திருக்கக்கூடாது.



புங்கெண்ணெய்

Image Source - www.healthline.com

வீட்டுச் செல்லப்பிராணிகளில் தொற்றியிருக்கும் பேன், மூட்டைப்பூச்சி போன்றவற்றை ஒழிக்க பேபி ஷம்பூவுடன் (baby shampoo) எட்டில் ஒரு பங்கு வேப்பெண்ணெய் கலந்து தேய்த்துக்கழுவிவிடவும். வேப்பெண்ணெய்க்குரிய வாசம் பலருக்கும் பிடிப்பதில்லை. இதனைத்தவிர்க்க லவெண்டர் (lavender) எண்ணெய் போன்ற உங்களுக்குப்பிடித்த வாசனை எண்ணெய் ஒன்றின் சிலதுளிகளை வேப்பெண்ணெயுடன் கலந்துவிடுவதன் மூலம் வேப்பெண்ணெய் வாசத்தை மறைத்துவிடலாம்.

வேம்பின் சகல பாகங்களும் மருத்துவக் குணங்கள் நிரம்பப் பெற்றவை என்ற உண்மை இன்று விஞ்ஞான ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. Neem oil (நீம் ஒயில்) என்பது வேப்பெண்ணெயின் வர்த்தகப்பெயர். *Azadirachta indica A. JUSS.* என்பது வேம்பின் இலத்தீன் விஞ்ஞானப்பெயர்.

## புங்கெண்ணெய்

**அங்கமழகிடுமே ஆன புங்கெண்ணெய்க்கு**
**தங்கம்போல் மேனி தணியுமே திங்கள்நுதல்**
**மானே கரப்பன்போம் வன்சொறியும் சிரங்கும்**
**தானே விலகுமெனச் சாற்று**

இதன்பொருள்: இளம்பிறையை ஒத்த நெற்றியை உடையவளே! புங்கம்விதையில் இருந்து பெறப்படும் புங்கெண்ணெய் மேனிக்குப் பளபளப்பைக் கொடுக்கும். கரப்பன் ,சொறி ,சிரங்கு என்னும் தோல் வியாதிகளைக் குணமாக்கும்.

மேலதிகவிபரம்: இது தொற்று நீக்கும் குணங்களைக் கொண்டுள்ளது, முக்கியமாக உலர்ந்த, சேதமடைந்த, பிளவடைந்த தோல் படைகளைக் குணப்படுத்தவும் முதிர்ச்சியடைந்த சருமத்தைப் பேணவும் உதவுகின்றது. 'எக்ஸிமா' எனப்படும் கிரந்தி, இலேசான சொறியுடன் கூடிய தோற்செதில், தோற்புண்கள் என்பவற்றுக்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுகிறது.

சொறி ,சிரங்கு, கரப்பன் போன்ற தோல்வியாதி களுக்குப் புங்கெண்ணெய் மேற்பூச்சாய்ப் பயன்படும். இந்த எண்ணெயைத் துத்தநாகத்து டன் (zinc oxide) கலந்து பூச எக்ஸிமா (eczema) குணமாகும் என்று கூறப்படுகிறது.

புங்கெண்ணெயுடன் எலுமிச்சைச் சாறு சம அளவில் சேர்த்து மூட்டு வாதம், மூட்டு நோவு, தசைநார் பிடிப்பு என்பவற்றுக்கு ஒத்தடம் கொடுக்கவும் பயன்படுகிறது. *Karanja* என்பது புங்கின் சம்ஸ்கிருதப்பெயர். இப்பெயரே இதன் வர்த்தகப்பெயர். புங்கெண்ணெய் கரஞ்சா எண்ணெய் என்னும் பெயராலும் அறியப்படுகின்றது. *Pongamia pinnata VENT*. என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப்பெயர்.

## இலுப்பை எண்ணெய்

**இலுப்பெண்ணெய் கொண்டால் எடுக்கும் கரப்பன் வலிப்பாம் இடுப்புவலி தீரும் மலைப்பாம் செய்யபெலனும் உண்டாம் செங்கனிவாய் மொழியே மெய்யப்படி அழகாம் என்று**

இதன்பொருள்: கனிமொழி மாதே! இலுப்பெண்ணெயால் கரப்பன், இடுப்புவலி என்பன தீரும். உடலுக்குப் பலத்தையும் அழகையும் கொடுக்கும்.

தோல்வரட்சியைப் போக்கி இதம் அளிக்கும் இலுப்பெண்ணெய், பல்வேறு தோல்வியாதிகளுக்கும் வாதம், தலைவலி என்பவற்றுக்கும் மருந்தாகப் பயன்பட்டு வந்துள்ளது. தொடர்ந்து மலச்சிக்கலால் (constipa tion) அவதிப்படுவோருக்கு இது ஒரு மலமிளக்கியாக (laxative) பயன்படும். மூலவியாதி உள்ளவர்களுக்கும் பயன்படும்.

மேலதிகவிபரம்: 'சனிநீராடு' என்றார் ஔவை யார். சனிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் வழக்கம் நம்மவர் மத்தியில் நெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. அவ்வாறு சனிநீராடும்போது கூந்தலில் மேலதிகமாக உள்ள எண்ணெயைப் போக்குவதற்கு சிகைக்காய் அல்லது அரப்பு வைத்து முழுகுவது வழக்கம். இலுப்பை விதைகளில் இருந்து எண்ணெய்



**இலுப்பை எண்ணெய்**

Image Source - thamilkural.net

எடுத்தபின் மிஞ்சும் இலுப்பைப் புண்ணாக்கே 'அரப்பு' எனப்படும்.

மரணக்கிரியையின்போது இறந்தவரது உடலைக் குளிப்பாட்டும்முன்னர் அவரது தலையில் அரப்பு வைப்பதற்கு இறந்தவரின் நெருங்கிய உறவினர்கள் அழைக்கப்படுவது இன்றும் இருந்துவரும் ஒரு வழக்கமாகும். *Mahua oil* என்பது இலுப்பெண்ணெயின் வர்த்தகப்பெயர். *Butternut tree* என்பது இலுப்பையின் ஆங்கிலப்பெயர். *Madhuca longifolia (KOEN.) MACLER* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப்பெயர்.

## அஞ்செண்ணெய்

**அஞ்செண்ணெய்க் குணத்தை அறிய உரை செய்வேன்**
**தஞ்சமென வாதம் தணியுமே—பஞ்சாய்ப்**
**பறக்குமே சன்னியெல்லாம் பாரில் மனிதருக்குச்**
**சிறக்குமே நோய்தீரும் செப்பு**

இதன் பொருள்: அஞ்செண்ணெயின் குணத்தைக்கூறுகிறேன் கேட்பாயாக. வாதம் அடங்கிப்போகும். சன்னிரோகம் எல்லாம் பஞ்சாய்ப்பறந்துபோகும்.

மேலதிகவிபரம்: விளக்கெண்ணெய் எனப்படும் ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், புன்னை எண்ணெய், மற்றும் புங்கெண்ணெய் சேர்ந்த கலவையே அஞ்செண்ணெய் என ஒருசிலர் கருதுவர். வேறுசிலரோ ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய் என்பவற்றுடன் தேங்கா யெண்ணெய், இலுப்பெண்ணெய் மற்றும் பசுநெய் சேர்ந்ததே அஞ்செண்ணெய் என்று கூறுவர்.
ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய், இலுப்பெண்ணெய், பசுநெய் ஒவ்வொன்றும் சம அளவில் கலந்து ஒருநாள் வெய்யிலில் காயவைத்து எடுத்து அடுத்தநாள்முதல் பூசிவர மூட்டுவலி, அடிபட்ட வீக்கம், சுளுக்கு என்பன குணமாகும் என்று கூறப்படுகிறது.

## நல்லெண்ணெய்

ஆங்கிலத்தில் "ஒயில்" (*oil*) என்பதற்கு "நெய்" என்பதுதான் சரியான தமிழ்ப்பதம். எனினும் இப்போது நெய் என்றால் எமது நினைவுக்கு வருவது பசுநெய்தான்.

உண்மையில் எள்ளில் இருந்து எடுக்கப்படும் நெய்தான் 'எண்ணெய்' (எள்நெய்) என்னும் பெயருக்கு உரியது. எனினும் இன்று எண்ணெய் என்பது எல்லா ஒயில்களுக்கும் பொதுவான பெயராகிவிட்டது. மண்ணில் இருந்து பெறப்பட்ட மண்நெய்கூட (*kerosene*) மண்ணெண்ணெய் ஆகிவிட்டது. எனவேதான் உண்மையான எள்நெய்க்கு 'நல்ல' என்னும் அடைமொழிகொடுத்து அதனை நல்லெண்ணெய் (நல்+எள்+நெய்) ஆக்கிவிட்டோம்.

நல்லெண்ணெய் பற்றிய இரசவர்க்கப்பாடல் எனக்குக் கிடைத்த ஏட்டுச்சுவடியில் விடுபட்டுப்போயிற்று. அதற்காக தமிழ்மக்களின் அடையாளங்களுள் ஒன்றான நல்லெண்ணெயை விட்டுவிடமுடியுமா? எனவேதான் தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியிட்ட அகத்தியர் இரண்டாயிரம் பாகம் 3 என்னும் நூலில் காணப்படும் நல்லெண்ணெய் பற்றிய பாடல் ஒன்றையும் சி. கண்ணுசாமிப்பிள்ளை என்பவர் தொகுத்த சித்தவைத்திய பதார்த்த குணவிளக்கம் என்னும் நூலில் 'எள்ளின் நெய்' என்னும் தலைப்பில் தரப்பட்டுள்ள பாடலையும் இங்கு தரத் தீர்மானித்தேன்.

இந்தியாவில் அகத்தியர் இரண்டாயிரம் என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ள நூலில் காணப்படும் பாடல்களுள் மிகப் பெரும்பாலானவை யாழ்ப்பாணத்தில் ஆக்கப்பெற்ற செகராசசேகரம் என்னும் நூலுக்குரியவையே என்பதை ஏட்டுச்சுவடி ஆதாரங்களுடன் ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளேன் (மணற்கேணி இதழ் 49 பக்கம் 40 பெப்ரவரிமார்ச் 2020). அதுபோன்றே இரசவர்க்கத்தில் உள்ள சில பாடல்கள் கண்ணுசாமிப் பிள்ளையின் தொகுப்பிலும் இடம்பெற்றுள்ளன.

**எண்ணெயிற் குணம் ஏதென்னில் இளமையும் ஒளிவு முண்டாம்**
**கண்ணினில் விழியும் நோயுங் காசமும் கனிவுமற்றும்**
**புண்ணினில் நோவும் போக்கும் புணிற் தடற் பொறிவுமாறுந்**
**திண்ணிய கயமுங் காத்துச் சிரசினில் ரத்தம் போமே**

**(அகத்தியர் 2000)**

இதன் பொருள்: நல்லெண்ணெயின் குணம் என்னவென்று கேட்பீராகில் உடலுக்கு இளமையும் பளபளப்பும் தரும். கண்ணிலே ஏற்படக்கூடிய விழிநோய்கள், படலம், சுருக்கம் மற்றும் புண்ணில் ஏற்படும் நோவு என்பவற்றைப் போக்குவிக்கும். புண்ணினால் தோலில் ஏற்பட்ட

வடுக்கள் மற்றும் கயரோகத்தையும் குணப்படுத்தும்.

**புத்திநயனக் குளிர்ச்சி பூரிப்பு மெய்ப்புளகம்**
**சத்துவங் காந்தி தனியிளமை மெத்தவுண்டாம்**
**கண்ணோய் செவிநோய் கபால அழல் காசநோய்**
**புண்ணோய்போம் எண்ணெய்யாற் போற்று**

**(பதார்த்தகுண விளக்கம்)**

இதன் பொருள்: தெளிவான சிந்தனை, கண்குளிர்ச்சி, மகிழ்ச்சி, உடல்பூரிப்பு, சாந்தகுணம், அழகு, இளமை என்பவற்றைப் பேணி வளர்க்கும் குணம் கொண்டது நல்லெண்ணெய். மேலும் கண்ணோய், காது நோய், தலைச்சூடு, காசநோய், புண்கள் என்பவற்றுக்கும் மருந்தாகப் பயன்படும் எள்நெய்யைப் போற்றுவாயாக.

மேலதிகவிபரம்: நல்லெண்ணெயின் நல்ல பயன்பாடுகள் குறித்து எமது மூதாதையர் கூறிவைத்துள்ள பலவிடயங்கள் இன்று விஞ்ஞானபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றன. சிறுகுழந்தைகளின் உடல் முழுவதும் எண்ணெய் தேய்த்து இளவெயிலில் கிடத்துவது; பருவம் அடைந்த இளம்பெண்களுக்கு நல்லெண்ணெய் குடிக்கக் கொடுப்பது; ஒவ்வொருநாளும் சிறிதளவு எண்ணெய் எடுத்துத் தலையில் தேய்த்துக் கொள்வது; சனிக்கிழமைதோறும் நல்லெண்ணெய் தேய்த்து நீராடுவது போன்ற எம்மவர் வழக்கங்கள் உடல்நலத்தையும் உளநலத்தையும் ஒருங்கே பேணுபவை என்பது இப்போது உறுதியாகிவிட்டது. நிறைவுறாக் கொழுப்புகள் (*unsatu rated fats*) அதிக அளவில் உள்ள உணவு இருதய



**சொறி ,சிரங்கு, கரப்பன் போன்ற தோல்வியாதி களுக்குப் புங்கெண்ணெய் மேற்பூச்சாய்ப் பயன்படும். இந்த எண்ணெயைத் துத்தநாகத்து டன் (zinc oxide) கலந்து பூச எக்ஸிமா (eczema) குணமாகும் என்று கூறப்படுகிறது.**

ஆரோக்கியத்திற்கு நல்லது. நல்லெண்ணெயில் 82% நிறைவுறாக் கொழுப்பு அமிலங்கள் உள்ளன. குறிப்பாக, இதில் ஒமேகா 6 கொழுப்பு அமிலங்கள் நிறைந்துள்ளன. ஒமேகா 6 கொழுப்பு அமிலம் மற்றும் ஒமேகா 3 அமிலம் ஆகியன இருதயநோய்த் தடுப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. நிறைவுற்ற கொழுப்புகள் (*saturated fats*) அதிகம் உள்ள எண்ணெய்களுக்குப் பதிலாக நல்லெண்ணெய் பயன்படுத்துவது இரத்தத்தில் கொலெஸ்ரெறோலின் (*cholesterol*) அளவைக் குறைக்க உதவும். தினமும் 4 தேக்கரண்டி நல்லெண்ணெயை உட்கொள்பவர்கள், ஆலிவ் எண்ணெயை உட்கொள்பவர்களிலும் பார்க்கக் குறைந்த அளவில் கெட்ட கொலெஸ்ரெறோலை யும் ட்ரைகிளிசரைட்டுகளையும் (*triglycerides*) கொண்டிருப்பது ஆய்வுகள்மூலம் கண்டறி யப்பட்டது. ஆரோக்கியம் உடையவர்கள் நல்லெண்ணெயை உட்கொள்வதன்மூலம் இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கமுடியும் என்பதும் அறியப்பட்டுள்ளது.

தீங்கு விளைவிக்கும் அல்ரா வயலெட் (*Ultra Violet*) சூரியக் கதிர்களில் இருந்து சருமத்தைப் பாதுகாக்க நல்லெண்ணெய் உதவுகின்றது.
நல்லெண்ணெயுடன் மசாஜ் செய்வது கை மற்றும் கால் வலியைக் குறைக்க உதவும் என்று சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நல்லெண்ணெயில் உள்ள இரசாயனப்பொருள்கள் தலைமுடியின் பளபளப்பையும் வலிமையையும் கூட்டி கூந்தலின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன.
இரசவர்க்கம் என்னும் நூலின் ஏட்டுப்பிரதிகள் ஈழத்தில் வேறு எவரிடம் இருந்தாலும் அவற்றை வெளிக்கொண்டுவருவது தமிழுக்குச் செய்யும் ஒரு நற்பணியாக இருக்கும்.

(தொடரும்)

இலங்கைத் தமிழர்களுக்கு 2500 ஆண்டுகளுக்குக் குறையாத வரலாறு மற்றும் வழிபாட்டு பாரம்பரியம் உள்ளது. பண்டைய இலங்கைத் தமிழர் பற்றி இதுவரை பலரும் அறிந்திராத, இதுவரை வெளிச்சத்துக்கு வராத, அரிய உண்மைகளை வெளிக்கொணர வேண்டும் எனும் நோக்கத்தை அடிப்படையாக கொண்டதாக இலங்கையில் 'பிராமி மற்றும் சிங்கள கல்வெட்டுக்களில் தமிழர்' எனும் இவ்வாய்வு அமைகிறது. இலங்கையில் வாழ்ந்த தமிழர் பற்றிய முக்கிய சான்றாக விளங்குவது 2300 ஆண்டுகளுக்கு முன்பு கற்குகைகளில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களாகும். இவ்வாறான ஐந்து பிராமிக் கல்வெட்டுக்கள் இலங்கையில் காணப்படுகின்றன. அந்த கல்வெட்டுக்களில் தமிழர்கள் தொடர்பில் குறிப்பி டப்பட்ட விடயங்களை இக்கட்டுரைத்தொடர் வெளிப்படுத்துகின்றது. அத்தோடு சில ஆண்டு களுக்கு முன்பு ஆரம்பித்த ஒரு வேலைத் திட்டத்தில், இலங்கையில் காணப்படும், 1500 பிராமிக் கல்வெட்டுகளை மீள்வாசிப்பு செய்ததன் பயனாக வெளிக்கொணரப்பட்ட பல்வேறு அம்சங்களை ஆதாரங்களுடன் தெளிவுப்படுத்துவதாகவும் இத்தொடர் அமைகிறது. இவ் ஆய்வில் தமிழர் பற்றி கூறும் மேலும் பல பிராமிக் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. அத்துடன் சோழர் காலத்திற்கு முன்பு பொறிக்கப்பட்ட சுமார் 600 சிங்களக் கல்வெட்டுக்களையும் ஆராய்ந்து அவற்றிலும் தமிழர் பற்றிக் கூறப்பட்டுள்ள பல விபரங்கள் பற்றியும் இத்தொடர் கட்டுரை கூறுகிறது.





● என். கே. எஸ். திருச்செல்வம்

கடந்த 24 வருடங்களாக இலங்கைத் தமிழர் வரலாறு, கல்வெட்டுகள், பாரம்பரியம், இந்து சமயம் என்பன தொடர்பாக ஆய்வுப் பணிகளில் ஈட்டுவரும் கலாபூஷணம் என்.கே.எஸ். திருச்செல்வம் அவர்கள் வரலாற்றுத்துறையில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றவர். தனது எழுத்துப் பணிக்காகப் பல விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் இதுவரை பல உள்நாட்டு மற்றும் சர்வதேச கருத்தரங்குகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளதுடன் 14இற்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் 'தென்னிலங்கையின் புராதன இந்துக்கோயில்கள்', 'புதையுண்ட புராதன இந்துக் கோயில்கள்', 'இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்', 'யார் இந்த இராவணன்', 'முன்னேஸ்வரம் தொன்மையும் வரலாறும்', 'பண்டைய தமிழ் நூல்களில் சிவன்' போன்றன குறிப்பிடத்தக்கவையாகும்.


# தமிழ் அதிகாரி மகாசாத்தான் பற்றி குறிப்பிடும்

# தாமரவெவ தூண் கல்வெட்டு



தமிழ் அதிகாரி மகாசாத்தான் பற்றிக் குறிப்பிடும் தாமரவெவ கல்வெட்டின் படியெடுக்கப்பட்ட பிரதி

அநுராதபுரம் மாவட்டத்தில் தமிழர் பற்றிக் குறிப்பிடும் இன்னுமோர் கல்வெட்டு துடுவ துலான என்னுமிடத்தில் அமைந்துள்ள தாமரவெவ எனும் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டது.

தாமரவெவ கல்வெட்டும் இலங்கையை ஆட்சி செய்த 2ஆம் சேனன் காலத்தில் (பொ.ஆ. 853 முதல் 887 வரை) பொறிக்கப்பட்டுள்ளது. மன்னனின் (2ஆம் சேனன்) 31ஆவது ஆட்சி ஆண்டில் இக்கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. 35 ஆண்டுகள் இலங்கையின் மன்னனாக 2ஆம் சேனன் ஆட்சி செய்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக்கல்வெட்டு 7 அடி உயரமும், 14 அங்குல சதுரமும் கொண்ட கற்றூணின் நான்கு பக்கங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளது. தூணின் உச்சிப்பகுதியில் தாமரை இதழ்களின் வடிவமைப்புகள் பொறிக்கப்பட்டுள்ளன. தூணின் A பக்கத்தில் 10 வரிகளிலும், B பக்கத்தில் 17 வரிகளிலும், C பக்கத்தில் 14 வரிகளிலும், D


பக்கத்தில் *11* வரிகளிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் C பக்கத்தில் *5* ஆம், *6* ஆம், *7* ஆம் வரிகளில் தமிழர் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"இச தெமழ அதிகார மஹசத்தானவன்.." இது "தமிழ் அதிகாரி மகாசாத்தான்" எனப் பொருள்படுகிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரு கல்வெட்டுக்களிலும் தமிழ் அதிகாரியின் பெயர் சிதைந்து காணப்படுகிறது. ஆனால் இக்கல்வெட்டின் நான்கு பக்கங்களிலும் உள்ள எழுத்துக்கள் அனைத்தும் சிதையாமல் மிகத் தெளிவாக காணப்படுவதால் தமிழ் அதிகாரியின் பெயரையும் தெளிவாக வாசிக்கக் கூடியதாக உள்ளது.

### தமிழ் அதிகாரி பற்றியும் வல்வெட்டித்துறை பற்றியும் குறிப்பிடும் கல்வெட்டு

பொ. ஆ. *891* முதல் *908* வரையான காலப்பகுதியில் அனுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆட்சி செய்த மன்னனான *4* ஆம் மகிந்தனின் காலத்தில் வல்வெட்டித்துறை பற்றிய இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. தற்போது இக்கல்வெட்டு கொழும்பு தேசிய தொல்பொருள் நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மூன்று துண்டுகளாக உடைந்துள்ள ஒரு கற்தூணின் நான்கு பக்கங்களிலும் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. *1907* ஆம் ஆண்டு முதன் முதலாக இத்தூணில் உள்ள கல்வெட்டு தொல்லியல் ஆய்வு செய்யப்பட்டது. *7* அடி உயரமும், *8* அங்குல சதுரமும் கொண்ட தூணில் எழுத்துக்கள் காணப்படுகின்றன. முதலாவது மற்றும் இரண்டாவது பக்கங்களில் தலா *32* வரிகளிலும், மூன்றாவது பக்கம் *33* வரிகளிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. நான்காவது பக்கம் *17* வரிகளில் எழுத்துக்களும், அரிவாள், விசிறி, காகம், நாய் ஆகிய வற்றின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.
இந்தக்கல்வெட்டானது சேனன் எனும் தலைமை அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க குறிப்பிட்ட ஒரு நிலத்திற்கு வழங்கப்பட்ட நன்கொடை தொடர்பான செய்திகளைக் கூறுகிறது. கல்வெட்டில் *6* துணை அதிகாரிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் முதல் இருவர் அரசனின் தளபதிகளாவர். மேலும் இருவர் பிரிட்டி ரட்ட எனும் பிரதேசத்தின் முதன்மை அதிகாரிகள் ஆவார். ஐந்தாவதாக





**தமிழ் அதிகாரி பற்றியும், வல்வெட்டித்துறை பற்றியும் குறிப்பிடும் கல்வெட்டின் படியெடுக்கப்பட்ட பிரதி**

குறிப்பிடப்பட்டுள்ளவர் தலைமை அதிகாரிக்கு உதவியாக உள்ளவர். ஆறாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளவர் ஒரு தமிழ் அதிகாரியாவர். இவரை "உத்தர பாண்டி ரட்ட எனும் பிரதேசத்தின் தெமழ அதிகாரி" எனக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இது "வடக்கு பாண்டி நாட்டை நிர்வகிக்கும் தமிழ் அதிகாரி" எனப் பொருள்படுகிறது.

தமிழ் அதிகாரி பற்றி குறிப்பிடும் முதலாவது கல்வெட்டு இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. மகா பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் இருந்த "ஆதிக்கா" எனும் தமிழ் அதிகாரி பற்றி சூளவம்சத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வெட்டின் சில வரிகள் இங்கே குறிப்பிட்டு கூறக்கூடியவையாக உள்ளன. முதலாவது பக்கத்தில் (Side A) *28* ஆம் வரியில் உள்ள "வல்விட்டி" எனும் சொல்லும், இரண்டாவது பக்கத்தில் (Side B) *4*ஆம், *5*ஆம் வரிகளில் உள்ள "தெமழ கபல்ல" எனும் சொற்களும், மூன்றாவது

பக்கத்தில் (Side C) 8 முதல் 11 வரையான வரிகளில் உள்ள "தெமழ அதிகாரி உத்தர் பாண்டி ரட்ட" எனும் சொற்களும் முக்கியமானவை.


கிரித்தலே கல்வெட்டின் படியெடுக்கப்பட்ட பிரதி

இவ்வரிகளில் கூறப்பட்டுள்ள விடயமானது, "சேனல்நாகன் எனும் தலைமை அதிகாரி தனக்கு சொந்தமான தமிழ் நிலங்களில் வட மாகாணத்தில் வல்வெட்டி எனும் பிரதேசத்தின் கீழ் இருந்த கணகாமி என்னும் கிராமத்தை அரச குடும்பத்தில் இருந்து ஒதுக்கி வைக்க வேண்டும்" என கல்வெட்டின் முதலாம், இரண்டாம் பக்கங்களில் கூறப்பட்டுள்ளது. கல்வெட்டின் மூன்றாம் பக்கத்தில் ஆறு அதிகாரிகள் பற்றிய குறிப்பில் "உத்தர பாண்டிநாடான தமிழர் நிலத்தின் தலைமை அதிகாரி உட்பட ஆறு அதிகாரிகளும் குறிப்பிட்ட நன்கொடைக்கு தங்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் தலைமை அதிகாரியான சேனல் நாகன் என்பவன் 4ஆம் மகிந்தன் எனும் மன்னன் காலத்தில் தலைமை படைத்தளப தியாக இருந்து நாட்டை நிர்வகித்த சேனன் எனும் தமிழன் ஆவான். 4ஆம் மகிந்தனின் பின் அவனின் மகனான 5ஆம் சேனன் 12 வயதில் மன்னனாக முடிசூட்டப்பட்டான். இருப்பினும் படைத்தளபதி சேனனே நாட்டை நிர்வகித்து வந்தான்.

இக்கால கட்டத்தில் தளபதி சேனன் இந்தியாவுக்கு சென்று 95 ஆயிரம் தமிழ்ப் படையினருடன் வந்து இலங்கைப் படைகளைத் தாக்கி இலங்கையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி 10 வருடங்கள் இலங்கையை ஆட்சி செய்தான் என ராஜவலிய கூறுகிறது.

அதன்பின்பு இலங்கையில் எந்தவித போர்களும் நடைபெறவில்லை. சேனனின் தமிழ்ப் படையினர் அனுராதபுரத்தை சுற்றியுள்ள பகுதிகளிலும், பொலநறுவை, மற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் குடியமர்த்தப்பட்டனர். இக்காலப்பகுதியில் அநுராதபுரம் மற்றும் பொலநறுவை ஆகிய பிரதேசங்கள் தமிழர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலே கல்வெட்டில் கூறப்பட்டுள்ள குறிப்புக்கள் மூலம் தமிழர் மற்றும் தமிழர் நாடு பற்றிய சில முக்கியமான விடயங்களைக் உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது. 1200 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 8 ஆம், 9 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கையின் வடபகுதி உத்தர பாண்டிநாடு எனப் பெயர்பெற்று விளங்கியுள்ளமையும், வல்வெட்டித் துறை எனும் இடம் உத்தர பாண்டி நாட்டில் உள்ள தமிழர் நிலத்தின் சில ஊர்களின் தலைப்பட்டினமாக விளங்கியுள்ளமையும் தெரிய வருகிறது.

கிழக்கில் உள்ள தமிழர் நிலம் பற்றிக் கூறும் கிரித்தலே கல்வெட்டு

பொ. ஆ. 929 - 932 காலப்பகுதியில் இலங்கையின் மன்னனாக விளங்கிய 2ஆம் உதயன் காலத்தில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டும் குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியின் வறுமையைப் போக்கி செழிப்படைய செய்யும் வகையில் வழங்கப்பட்ட நன்கொடை தொடர்பான செய்தியைப் பதிவு செய்கிறது. பொலநறுவையில் இருந்து 10 கி.மீ தூரத்தில் கிரித்தலே என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கிருந்து ஒரு உடைந்த தூண் அநுராதபுரம் தொல்லியல் திணைக்களத்திற்கு கொண்டு வரப்பட்டது.

4 அடி 7 அங்குலம் உயரம் கொண்ட இத்தூணின் இரண்டு பக்கங்களில் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருந்தது. இக்கல்வெட்டு 1905ஆம் ஆண்டு எச்.சி.பி.பெல் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, எழுத்துக்கள் படி எடுக்கப்பட்டன. தூணின் முதலாம் பக்கம் 33 வரிகளிலும், 3ஆம் பக்கம் 33 வரிகளிலும் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. 2ஆம் பக்கமும், 4ஆம் பக்கமும் எழுத்துக்கள் காணப்படவில்லை. கல்வெட்டின் முதலாம் பக்கத்தில் 31, 32 ஆம் வரிகளில் தமிழர் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"செனக் ஹுளு தெமலத் வலதெமின .." இதன் பொருள், "கிழக்குப்பகுதியில் தமிழர் நிலத்தில் உள்ள பரிசக்குழிய என்னுமிடத்தில்..." என்பதாகும். இக்கல்வெட்டின் மூலம் 9ஆம், 10ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கையின் கிழக்குப் பகுதியில் தமிழர்களின் நிலங்கள் இருந்தமை பற்றி உறுதியாகக் கூறக்கூடியதாக உள்ளது.

(தொடரும்)

இலங்கையைப் பொறுத்தமட்டில் குறிப்பாக வடமாகாணத்தில் குயர் மக்களுக்கான உரிமைக் குரல்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணமுடிகிறது. ‘வடபுல பண்பாட்டுத் தளத்தில் குயர் அரசியல்’ என்ற இத் தொடரானது, வடபுல மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியுள்ள பிற்போக்கான கருத்தியல்கள் பால்நிலைச் சமத்துவத்திற்கு அச்சுறுத்தலாக அமைதல், குயர் மக்கள் இந்தச் சமூகத்தின் மத்தியில் வன்முறைகளையும் பாரபட்சங்களையும் எதிர்கொள்வதற்குக் கலாசாரம் சமய அல்லது மத கட்டமைப்புக்களின் பங்கு, வடபுலத்தில் குயர் அரசியல், குயர் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய குயர் செயற்பாட்டாளர்களின் சமத்துவம் நோக்கிய முன்னெடுப்புக்கள், கல்வியலாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட மையக்கருத்து வெளிப்பாட்டளர்கள் குயர் அரசியல் அல்லது அதுசார்ந்த விடயங்களில் பேணும் மௌனிப்பு என்பன பற்றி பேசவிழைகின்றது.




● அனுதர்சி கபிலன்

அனுதர்சி கபிலன் அவர்கள் தனது இளமாணிப் பட்டத்தைத் திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் இதழியலில் ”டிப்ளோமா” பட்டத்தைக் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஊடகக் கற்கைகள் துறையில் விரிவுரையாளராகப் பணிப்புரியும் அனுதர்சி முதுமாணிப் பட்டப்படிப்பைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாளி வளாகத்தில் வெகுஜன ஊடகவியலில் தொடர்கின்றார்.
‘இலங்கை அரசியல் அரசியல்வாதிகள்’ என்ற தலைப்பில் 2015 இல் அவரால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நேர்காணல்கள் 2017 இல் நூல் வடிவில் வெளியிடப்பட்டது.


# வடபுல சமூகமும் திருநர்களும்

**திருநங்கைகளுடைய வாழ்வில் திருமணம் மற்றும் குழந்தை என்பன பிரச்சினைக்குரிய விடயங்களாகப் பார்க்கப்படுகின்றன. திருநர்களுடைய திருமணங்கள் சிக்கலுக்குரியவையாக மாறுவதற்கு இந்தச் சமூகமும் ஒரு காரணம் எனலாம்.**

வடபுல சமூகத்தளத்தில் தன்பாலீர்ப்பை விலக்கப்பட்ட(Taboo) ஒரு விடயமாகப் பார்க்கும் பெரும்பாலானவர்கள் திருநர்களை ஏற்றுக் கொள்வதாகக் குறிப்பிடுகிறார்கள். இன்றைய காலகட்டத்தில் திருநர்களைப் பற்றிய தெளிவு பெரும்பாலானவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது எனலாம். இருந்தாலும் கூட எவ்வாறு, தந்தையாதிக்கச் சமூகங்களில் பெண் வன்முறைகளையும் பாரபட்சங்களையும் எதிர்கொள்கிறாளோ அதே போல் திருநங்கைகளும் திருநம்பிகளும் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்கொள்கிறார்கள்.

குடும்பத்தால் புறக்கணிக்கப்படுவதாலேயே பெரும்பாலான திருநர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது. “அன்று என் தந்தை வார்த்தையாலும் பிரம்பாலும் என்னைத் தாக்கிப் புறக்கணிக்காமல் விட்டிருந்தால், என் வாழ்க்கை மாறியிருக்கும்” என்பது திருநங்கை ஒருவரது கருத்தாகும். இது போலவே திருநர்கள் பலரும் கருதுகிறார்கள். பெரும்பாலான திருநர்கள் தமது பால்நிலை அடையாளங்களை வெளிப்படுத்தும் போது தாம் சார்ந்த குடும்பம், உறவுகள் மற்றும் சமூகத்திடமிருந்து தனிமைப்படுத்தப்படுகிறார்கள். இதனால் இவர்களது அடிப்படைத்தேவைகளான உணவு, உடை, வசிப்பிடம், மருத்துவ தேவைகள்(ஹோமோன்ஸ்) போன்றவற்றுக்கும் வேலைவாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்கும் போராடுகிறார்கள். “சமூகத்தில் என்னைத் திருநங்கையாக வெளிப்படுத்துவதே மிகப்பெரிய

சவாலாகும்” என மற்றுமொரு திருநங்கை குறிப்பிட்டார். வடபுலத்தை எடுத்துக்கொண்டால் பெரும்பாலான திருநர்கள் சுயதொழிலில் ஈடுபடுபவர்களாகவும் அரச மற்றும் தனியார் தொழிலில் ஈடுபடுபவர்களாகவும் இருக்கிறார்கள். அதேவேளை தமது பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்தவர்களும், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தமது கல்வியைத் தொடரமுடியாதவர்களாகவும்

**குடும்பத்தால் புறக்கணிக்கப்படு வதாலேயே பெரும்பாலான திருநர்களின் எதிர்காலம் கேள்விக்குறி யாகின்றது. ”அன்று என் தந்தை வார்த்தையாலும் பிரம்பாலும் என்னைத் தாக்கிப் புறக்கணிக்காமல் விட்டிருந்தால், என் வாழ்க்கை மாறியிருக்கும் என்பது திருநங்கை ஒருவரது கருத்தாகும்.**





**யாழ்ப்பாணத் திருநர் வலையமைப்பு முன்னெடுத்த சுயமரியாதை நடை**

Image Source - www.virakesari.lk

இருக்கிறார்கள். தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்த அல்லது பணிபுரிகின்ற சிலருக்கு அவர்களது வேலைத்தளம் மிகப் பிடித்த இடமாகவும் சிலருக்கு சக பணியாளர்களால் ஒதுக்கப்படும் இடமாகவும் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், திருநர்களில் பெரும்பாலானவர்களுக்குத் தங்களுடைய மாற்றம் குறித்தும் பால்நிலை குறித்துமான புரிதல் போதாமல் இருக்கிறது. ஏனெனில் இலங்கை போன்ற நாடுகளில் அடிப்படைக் கல்வியில் இதுபோன்ற விடயங்கள் இல்லை. எனவே அவர்கள் தம்மைப் போன்றவர்களை இனங்கண்டே தம்மைப் பற்றிப் புரிந்துகொள்ள முடிகிறது. கொழும்பில் 1990 களில் இருந்து திருநர்களுக்கான அமைப்புகள் அவர்களுக்கான உதவிகளை வழங்கினாலும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் 2017 ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் தமிழ் பேசும் குயர் மக்களுக்கான அமைப்பொன்று தோற்றம் பெற்றது. அதன் பின்னர் யாழ்ப்பாணத் திருநர் வலையமைப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன், அண்மைக் காலத்தில் *Voice of Equality*, விளிம்பின் குரல் ஆகிய அமைப்புக்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இவ் அமைப்புக்கள் 2017 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் குயர் மக்களை ஒன்றிணைத்து அவர்கள் குறித்த புரிதலை ஏற்படுத்துவதுடன் அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் கரிசனை காட்டிவருகின்றன. மேலும் குயர் மக்களுக்கான உரிமைகள்

தொடர்பிலும் இவை முனைப்புடன் இயங்கிவருகின்றன. இவ் அமைப்புகளின் உதவியுடனும் சக திருநர்களின் உதவியுடனும் சமூகத்தில் இலைமறை காயாகத் தம்மை வெளிப்படுத்த முடியாமல் இருந்த பல திருநர்கள் தமது பாலின அடையாளங்களை வெளிப்படுத்த ஆரம்பித்தார்கள்.

அண்மைக்காலத்தில் திருநர்களுக்கான நிறுவனங்கள் இருப்பதனாலும் அவை அவர்களது உரிமைகள் சார்ந்து செயற்படுவதனாலும், 2000 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் திருநர்களின் வாழ்வில் மட்டுமல்லாது சமூகத்திலும் திருநர் குறித்த புரிதலில் பாரியளவு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தமிழ் வானவில் பெருமிதம், யாழ்ப்பாணக் குயர் விழா போன்ற விழாக்கள் திருநர்கள் உட்பட ஒட்டுமொத்தக் குயர் மக்களின் இருப்பை வெளிப்படுத்துவதுடன் அவர்களின் உரிமைக்கான குரலாகவும் விளங்குகின்றன. சமூக மாற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது எனக் குறிப்பிட்டாலும் கூட திருநர்வெறுப்புச்(Transphobia) சமூகத்தில் புரையோடிப் போயிருக்கிறது என்பதில் மாற்றமில்லை. கேலி செய்தல், கிண்டல், பாரபட்சம், சுரண்டல் மற்றும் பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள் போன்றவற்றை திருநர்கள் பொதுவெளியிலும் தொழிலிடங்கள் போன்றவற்றிலும் எதிர்கொள்கிறார்கள். திருநங்கைகள் எதிர்கொள்ளும் மிக மோசமான சவாலாக இருப்பது பாலியல் ரீதியான வன்முறைகளாகும். இவையெல்லாவற்றையும் திருநர் வெறுப்பின் வடிவங்களாகவே கொள்ளமுடியும். இது போன்ற ஆதிக்கமனோபாவங்களை இல்லாதொழித்தல் என்பது சமத்துவம், சமூக நீதி மற்றும் பன்மைத்துவம் போன்ற விடயங்களைப் பெயரளவில் கொண்டிருக்கும் சமூகத்தில் சிக்கலானது. இது இளையவர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரிடமும், ஆழவேரூன்றியுள்ள மனோபாவம் திருநர்வெறுப்பை மேற்கொள்கின்றது என்று தான் சொல்லவேண்டும். பெண்ணைத் தெய்வமாகப் போற்றுகின்றோம் என்கிற சமூகத்திலேயே, பெண் அதிகமாகத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகிறாள்.




அதுபோலவே திருநர்களை ஏற்றுக்கொள்கிறோம், புரிந்துகொள்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இந்தச் சமூகத்தில் பலர் திருநர்களுக்கெதிரான வன்முறைளை இழைக்கிறார்கள்.

பாடசாலை, அரச, தனியார் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் வைத்தியசாலைகள் போன்றவை முற்று முழுதாக சமத்துவத்துடன் சேவையாற்றுகின்றன எனச் சொல்லமுடியாது. திருநர்களுக்கெதிரான வன்முறைகள் பாடசாலைகளிலேயே ஆரம்பித்துவிடுகின்றன. பல திருநர்களின் கல்வி பாதிக்கப்படுவதற்கு அவர்கள் பாடசாலைகளில் எதிர்கொண்ட கேலி, கிண்டல், பாரபட்சம் மற்றும் வன்முறைகள் என்பன காரணம் எனலாம். சரியாக வழிநடத்த வேண்டிய ஆசிரியர்களே பல திருநர்களை பாரபட்சமாக நடத்தியிருக்கிறார்கள் என்பது கவலைக்குரிய விடயமாகும். வடபுலத்தில் இதுபோன்ற எந்த பொது இடத்திலும் பால்நிலைச் சமத்துவம் மிக்க மலசலகூடங்களைக்(gender neutral toilets) காணமுடியாதுள்ளது. திருநர்கள் பொதுவைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் போது அசௌகரியங்களை எதிர்கொள்கிறார்கள்.

திருநங்கைகளுடைய வாழ்வில் திருமணம் மற்றும் குழந்தை என்பன பிரச்சினைக்குரிய விடயங்களாகப் பார்க்கப்படுகின்றன. திருநர்களுடைய திருமணங்கள்

சிக்கலுக்குரியவையாக மாறுவதற்கு இந்தச் சமூகமும் ஒரு காரணம் எனலாம். இந்தச் சமூகம் திருநர்களின் காதலையும் திருமணத்தையும் ஆதரிப்பதாக இல்லை. அதற்கெதிரான விமர்சனங்களையே எப்போதும் முன்வைக்கின்றது.

வடபுலத்தில் திருநம்பிகளை விடத் திருநங்கைகளே அதிகம் இருப்பதனை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இதன் பின்னணியில் கூட ஆதிக்கக் கருத்தியல்கள் காரணமாக இருக்கலாம். யாழ்ப்பாணத்தில் வேறு பிரதேசங்களைச் சேர்ந்த திருநர்கள் பலர் வசிக்கிறார்கள். அவர்கள் யாழ்ப்பா ணத்தில் தனியார் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் தொழில்புரிபவர்களாகவும் சுயதொழிலில் ஈடுபடுபவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களுடைய சொந்த இடங்களை விடவும் யாழ்ப்பாணம் அவர்களுக்கு வாழ்வதற்கான சூழலை வழங்குவதுடன் தமது பால்நிலை அடையாளங்களை தமது விருப்பத்திற்கு ஏற்ப வெளிக்காட்டவும் உதவுகின்றது எனலாம். இது போன்ற விடயங்களை நோக்கும் போது வடபுலம் திருநர்களுக்கான ஓரளவு பாதுகாப்பான இடமாகத் தான் இருக்கிறது. அதேவேளை வடபுலத்தில் இருக்கக்கூடிய திருநர்கள், வடபுலத்திற்கு வெளியே தாம் சுதந்திரமாக உணர்வதாகக் குறிப்பிடுகிறார்கள். தாம் சார்ந்த சமூகத்திலிருந்து வெளிவரும் போதுதான் தாம் தாமாக இருப்பதற்கான வெளி ஒன்றை உணர்வதாகச் சிலர் குறிப்பிடுகின்றனர். இலங்கையில் ஒருவரின் பாலின அடையாளத்தை நிகராக்குவதற்கு ஒருவரின்



**எங்களை சமூகத்தில் சராசரி மனிதர்களாக நினைக்கிறார்கள் இல்லை, விசித்திரமாகப் பார்க்கிறார்கள் என்ற கருத்து திருநர்கள் பலரின் மத்தியில் இருக்கிறது. எங்களைப் பெண்ணாகப் பாருங்கள் என்பது திருநங்கைகளின் கருத்தாகவும் எங்களை ஆணாகப் பாருங்கள் என்பது திருநம்பிகளின் கருத்தாகவும் இருக்கிறது.**

பாலின அடையாளத்தை மாற்றக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. சுகாதார அமைச்சானது இந்த நடைமுறையை இலகுபடுத்துவதற்கு உதவுகின்றது. திருநர்கள் தமது மருத்துவச் சான்றிதழ்களை சமர்ப்பிப்பதன் மூலம் தேசிய அடையாள அட்டைகள், கடவுசீட்டுகள் மற்றும் பிறப்புச் சான்றிதழ்களில் மாற்றங்களைச் செய்யலாம். “ஆள் அடையாளப்படுத்தும் கடிதத்துடனேயே நடமாடவேண்டியிருக்கிறது” என்கிறார் திருநங்கை ஒருவர். அதாவது அடையாள அட்டையை மாற்றாதவிடத்தும் திருநராக முற்றுமுழுதாக மாறாத சந்தர்ப்பத்திலும் அவர்கள் தம்மை ஆணாகவோ பெண்ணாகவோ அடையாளப்படுத்துவதில் சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். இதுபோன்ற ஆவணங்களை மாற்றுதல் எல்லாத் திருநர்களுக்கும் இலகுவானதாக இல்லை. பால்நிலையை மாற்றுவதற்கான வாய்ப்புகள் இலங்கையில் காணப்படுகின்றபோதும் அரசாங்கத்திடமிருந்து சலுகைகள் என்ற ரீதியில் எவையும் வழங்கப்படுவதில்லை என்று தான் சொல்லவேண்டும். அதுமட்டுமல்லாமல் இலங்கையில் பால்மாற்று அறுவைச்சிகிச்சைக்கான வசதிகளும் குறைவாகக் காணப்படுகின்றன.

“எங்களை சமூகத்தில் சராசரி மனிதர்களாக நினைக்கிறார்கள் இல்லை, விசித்திரமாகப் பார்க்கிறார்கள்” என்ற கருத்து திருநர்கள் பலரின் மத்தியில் இருக்கிறது. எங்களைப் பெண்ணாகப் பாருங்கள் என்பது திருநங்கைகளின் கருத்தாகவும் எங்களை ஆணாகப் பாருங்கள் என்பது திருநம்பிகளின் கருத்தாகவும் இருக்கிறது. இந்தச் சமூகம் திருநர்களையும் சக மனிதர்களாக நேசிக்கப் பக்குவப்படவேண்டும். (தொடரும்)



மலையக சமூகத்தினரது சமூகநல விடயங்களையும், உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக்கல்வி குறித்த விடயங்களையும், தொழிற்சங்கம், அரசியல் மற்றும் மலையக மக்களின் வாக்குரிமை பிரச்சினைகளையும், தோட்ட தொழிலாளர்களின் வேதன மாற்றங்கள், அது குறித்த கொள்கைகள், கூட்டு ஒப்பந்த நடவடிக்கைகள் போன்ற விடயங்களையும், வீட்டுரிமை, உணவுப் பாதுகாப்பு போன்ற பிரச்சினைகளையும் மையப்படுத்தியதாக 'மலையகம் : சமூக – பொருளாதார அரசியல் பரிமாணங்கள்' இந்தத்தொடர் அமைகின்றது. அத்தோடு இந்தத்தொடர் மலையத்தில் தேயிலை கைத்தொழில் மற்றும் சமூக மேம்பாடு தொடர்பான கொள்கை முன்மொழிவுகள், தொழிலாளர்களின் வறுமை, பொருளாதாரப் பிரச்சினைகள் போன்ற விடயங்களையும் வளர்ச்சிப் போக்கு கண்ணோட்டத்தில் ஆராய்ந்து, அவற்றுக்கான தீர்வுகள் எவ்வாறு அமையலாம் என்பதற்கான பொறிமுறைகளையும் முன்வைக்கின்றது.


**முத்துவடிவு சின்னத்தம்பி**

முத்துவடிவு சின்னத்தம்பி அவர்கள் 1965ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் சிறப்புப் பட்டத்தைப் பெற்று அதே பீடத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றி இரண்டு வருடங்களில் நிரந்தர விரிவுரையாளராகினார். 1969இல் இங்கிலாந்தின் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் பொருளியல் முதுமாணிப் பட்டத்தைப்பெற்றார். 1993ஆம் ஆண்டு பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்ற முத்துவடிவு சின்னத்தம்பி 2006ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தை அலங்கரித்த மலையகத்தின் முதலாவது பேராசிரியர் என்ற சிறப்புக்குரியவர்.


# பிரதேசம் சாராத மக்களுக்குரிய பொருளாதாரப் பரிமாணங்கள்:

# இலங்கைப் பெருந்தோட்டத் தமிழர்களின் விவகாரம்




## அறிமுகம்

இலங்கையில் பிரதேசம் சாராத சமூகங்களில் பெருந்தோட்டத் தமிழ்ச் சமூகமும் ஒன்று. இந்தச் சமூகத்தின் ஒட்டு மொத்தமான பொருளாதாரப் பரிமாணங்களை இந்தக் கட்டுரை ஆராய முற்படுகின்றது. இந்தச் சமூகம் உற்பத்தி செய்யும் நிதி எவ்வளவு, அபிவிருத்தி நோக்கங்களுக்காக அது முதலீடுகளின் வடிவத்தில் அரசிடமிருந்து எவ்வளவு நிதியைப் பெற்றுக்கொள்கின்றது என்பதை இந்தக்கட்டுரை ஆராய முற்படுகின்றது. இந்த அம்சங்களை சரிவரப் புரிந்து கொள்வதற்கு முதலில் இந்தச் சமூகத்தின் மானுட, சமூக, அபிவிருத்தியை வரலாற்று ரீதியில் தடங்காண வேண்டும். இரண்டாவதாக இந்தத்துறையில் உருவாக்கப்படும் நிதிபற்றியும் அதற்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகள், நிதி ஒதுக்கீடுகள் பற்றியும் சுருக்கமாக ஆராயப்பட இருக்கின்றது. இறுதியில், இவற்றின் அடிப்படையில் சில முடிவுகள் பெறப்பட்டு அதற்கமைய யோசனைகள் தெரிவிக்கப்படும்.

## பின்னணி

நவீன உலகில், மானுட அபிவிருத்தி பொருளாதாரக் கொள்கையின் மையக்கருத்தமைப்பாக ஏற்கப்பட்டுள்ளது. பொருளாதாரச் செயற்பாடுகளின் பாரிய நோக்கமாக, சமூக முதலீட்டின் முக்கிய குறிக்கோளாக அது மாறியிருக்கின்றது. ஒரு நாட்டினதும், அது போலவே ஒரு இனப்பிரிவினதும் சமூக அபிவிருத்தியில், முதலீட்டுப் போக்கு ஒரு திட்டவட்டமான, சக்தி வாய்ந்த அம்சமாகும். இலங்கை சமூகத்துறையில் 1930ஆம் ஆண்டு பிற்பகுதியில் இருந்து பாரியளவு முதலீடுகளைச் செய்திருக்கின்றது. இந்த அம்சமே சமூக,



மானுட அபிவிருத்தித் துறையில் நாடு கணிசமான முன்னேற்றத்தை அடைவதற்கு உதவியுள்ளது. நாட்டில் ஆள் ஒருவருக்கான வருமானம் குறைவாக இருந்த போதிலும், சர்வதேச அடிப்படையில் பார்க்கும் போது சமூக மானுட அபிவிருத்தித் துறையில் நாடு உயர்ந்த நிலையில் உள்ளது. துருக்கியின் மானுட அபிவிருத்திச் சாதனைகளின் அளவைப் போல இலங்கையினது சாதனைகளும் சிறப்பாக உள்ளன. துருக்கியின் ஆள் ஒருவருக்கான வருமானம் இலங்கையைப் போல ஏறக்குறைய இரண்டு மடங்காகும். இலங்கையின் மானுட அபிவிருத்தி குறிகாட்டியானது, சீனா, இந்தியா, இந்தோனேசியா போன்ற ஒரேயளவு வருமானமுள்ள ஏனைய ஆசிய நாடுகளை விட உயர்வானது. மேலும், தெற்காசிய நாடுகள் மத்தியில் இலங்கை உச்சநிலையில் உள்ளது பெருமைக்குரியது என அடிக்கடி சுட்டிக்காட்டப்படும் இந்தச் சாதனைகள் நாட்டில் வாழும் பல்வேறு சமூகங்கள் மத்தியில் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்க உண்மையாகும். இந்திய வம்சாவளித் தமிழ்ச் சமூகத்தின் பெரும் பகுதியினரைக் கொண்ட பெருந்தோட்ட தமிழ் மக்கள், ஏனையோரைவிட பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். இவர்கள் எந்த சமூக குறியிலக்குகளை அடிப்படையாகக் கொண்டு பார்த்தாலும் எல்லா வகையிலும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றனர். இந்த ஆய்வுக்கட்டுரை குறிப்பாக தனியார் மயமாக்கத்திற்குப் பின்னரான காலகட்டத்தில் பெருந்தோட்டத்துறையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் சமூகத்தின் சமூக அபிவிருத்தியுடன் அதற்குள்ள பிணைப்புகள் ஆகியன பற்றி அக்கறை செலுத்துகின்றது.

நாட்டில் திறந்த பொருளாதாரக் கொள்கை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது பாரியளவிலான சமூக, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியது. இதன் பரிமாணமும் சிக்கல் தன்மைகளும் பல்வேறுபட்டவை. வரலாற்று ரீதியில் வளர்ச்சி குன்றிய நிலைக்குட்பட்ட இந்தியத் தமிழ்ச் சமூகம், புதிய சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. புது நிலைமைகளினால் உருவான வாய்ப்புகளையும் அது கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. தேசிய மட்டத்தை அடைவதற்குத் தேவையான துரித முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்குப் புதுமையான, சர்வ அம்சங்களும் தழுவிய மூலோபாயங்களை வகுப்பது அவசியமாகியது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முக்கியமான கவனம், யுத்தத்தால் சீர்குலைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் புனர்நிர்மாணம் செய்வது, உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளவர்களையும் அகதிகளையும் மீளக்குடியேற்றுவது, அவர்களுக்கு மறுவாழ்வளிப்பது இந்தக் கடமைகளைச் செயலூக்கமான முறையில் மேற்கொள்வதற்குப் பொருத்தமான இடைக்கால நிறுவக, நிர்வாகப் பொறியமைவுகளை நிர்ணயிப்பது ஆகியன தொடர்பான பிரச்சினைகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. காலப்போக்கில் நிலைத்திருக்கக்கூடிய சமாதானத்தை அடைவதற்கு சமூகங்கள் மத்தியில் அதிகாரப் பகிர்வு சம்பந்தமான முக்கியமான அரசியல் பிரச்சினைகள் பற்றிக்

கலந்துரையாடித் தீர்வு கண்டாக வேண்டும். அத்தகைய கலந்துரையாடல்கள் மனப்பூர்வமானவையாகவும் நாட்டின் பலஇன, பலகலாசாரத்தன்மையை மனதிற் கொண்டவையாகவும் இருக்க வேண்டும். அவை, பிரதேசம் சார்ந்த, பிரதேசம் சாராத சமூகங்களின் அக்கறைகளை ஒருங்கிணைப்பவையாகவும் இருக்க வேண்டும்.

இலங்கையின் சனத்தொகைக் கணிப்பில் நான்கு பாரிய இனச் சமூகங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. (1) சிங்களவர்கள், (2) இலங்கைத்தமிழர்கள் (3) முஸ்லிம்கள் (4) இந்தியத்தமிழர்கள் இலங்கைத்தமிழர்கள், இலங்கையின் வடக்குகிழக்கில் தமது பூர்வீகத்தையும் தாயகத்தையும் கொண்டவர்கள். முஸ்லிம்கள் நாடு முழுவதிலும் பரந்து காணப்படுகின்றார்கள். இவர்களில் சுமார் 30 சதவீதமானவர்கள் வடக்கு கிழக்கில் வாழ்கின்றனர். பெரும்பான்மையானவர்கள் அம்பாறை மாவட்டத்தில் செறிந்துள்ளனர்.

> நாட்டின் மொத்த சனத்தொகையில், சுமார் 15 இலட்சம்பேர் இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்தினர். இவர்கள் இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் 8 சதவீதத்தினர். இவர்களில் 12 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்ந்து பணியாற்றுகின்றனர். நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இவர்கள் செறிந்து வாழ்கின்றனர்.

### இந்திய வம்சாவளி தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றுப் பின்னணி

இந்தியாவின் தமிழகத்தில் இருந்து 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் குடியேறியவர்களின் வழித்தோன்றல்களே சனத்தொகைக் கணிப்பு சம்பந்தமான இன ரீதியிலான வகைப்படுத்தலில் இந்தியத்தமிழர் என்ற உத்தியோக பூர்வமான பதத்தின் மூலம் இனங்காணப்பட்டுள்ளனர். இலங்கையின் மத்திய பகுதியில் பிரிட்டிசார் ஆரம்பித்த பெருந்தோட்டங்களில் தொழில் புரிவதற்காகவே இவர்கள் வந்து குடியேறினர். ஆரம்பத்தில் குடியேறியவர்களில் சுமார் 20 சதவீதத்தினர் அரசாங்க மற்றும் வர்த்தகத்துறை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டவர்களும், நகர்ப்புற தொழிலாளர்களும் ஆவர். மேலும் ஒரு கணிசமான பகுதியினர் வர்த்தக நோக்கங்களுக்காக வந்தார்கள். காலப்போக்கில் சுலபமாக இனங்காணக்கூடிய, தனித்துவமான ஒரு வர்த்தக சமூகம் தோன்றியது. இவ்வாறு குடியேறியவர்களில் சிலர், குறிப்பாகக் கண்டி, மாத்தளை, பதுளை ஆகிய மாவட்டங்களில் சிறு நிலவுடமையாளர்களாகவும் குடியமர்ந்தனர். கைவினைத்துறை சார்ந்த பிரிவினரும் இருந்த போதிலும் அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவே.

வர்த்தக சமூகத்தினர் வட இந்தியாவில் இருந்தும் தென் இந்தியாவில் இருந்தும் வந்தனர். தமிழ்நாட்டில் இருந்து வந்த வர்த்தகர்களில் பெரும்பாலானவர்கள் பெருந்தோட்டங்களில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்துடன் மிகவும் குறைவான தொடர்பையே வைத்திருந்தனர். இந்த வர்த்தகப் பிரிவினர் சுதந்திரத்திற்குப் பின்னரான காலகட்டத்தில் நாட்டை விட்டு படிப்படியாக வெளியேறினர். இவர்களின் இடத்தை, பெருந்தோட்ட தமிழ்ச் சமூகத்தின் மேல் நோக்கி நகர்ந்த பிரிவினர் இப்போது வகிக்கின்றனர். பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு ஆள்திரட்டும் முகவர்களாகவும் விளங்கிய பெரிய கங்காணிமார் தோட்டங்களில் கடைகளைத் திறந்தனர். பிற்காலத்தில் இவர்களில் சிலர் அருகிலுள்ள நகர மையங்களிலும், கொழும்பிலும் தமது சொந்த வர்த்தக நிறுவனங்களை நிறுவினர். நாம் ஏற்கனவே கூறியதைப் போல, ஆரம்ப காலத்திலிருந்து வர்த்தகப் பிரிவினரில் ஒரு சிலரே இப்போது எஞ்சியிருக்கின்றனர். தற்காலத்து இந்தியத்தமிழ் வர்த்தகர்கள் பெரும்பாலும் பெருந்தோட்ட வம்சாவளியினரே. தற்கால இந்தியத் தமிழ் வர்த்தகச் சமூகத்துக்கும் பெருந்தோட்டத் தமிழர்களுக்கும் இடையே ஒரு இரத்த உறவு இருக்கின்றது. இருதரப்பாருமே ஒரே சமூகத்தைச்

சேர்ந்தவர்கள்.

இந்தியத் தமிழ் வர்த்தகச் சமூகத்தினர் எண்ணற்ற சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. இவர்களுக்கு அரசியல் பக்கபலமும் அனுசரணையும் இருக்கவில்லை. மேலும், அவர்கள் அடுத்தடுத்து நிகழ்ந்த இன வன்முறை அலைகளினால் பாரதூரமாக பாதிக்கப்பட்டனர். இவர்களில் சிலர் கலவரங்களின் போது தமது சொத்து முழுவதையும் இழந்தார்கள். ஆயினும் இந்த சமூகத்தைச் சேர்ந்த சிலர் தமது கடின உழைப்பாலும் பிறப்பிலேயே உருவான தொழில் முயற்சியாலும் புத்துயிர் பெற்றார்கள்.



தோட்டத்தொழிலாளர்கள்

Image source - www.br.freepik.com

கொழும்பிலும், கண்டி, ஹட்டன், நுவரெலியா, பண்டாரவளை, பதுளை, மாத்தளை போன்ற பிற நகரங்களிலும் வர்த்தகத்தையும் தொழில்களையும் ஏற்படுத்தினர். இன்று இலங்கையில் சிறப்பாக நடாத்தப்படும் இந்தியத்தமிழ் வர்த்தக நிறுவனங்கள் பல உள்ளன. அரசாங்கத்துறைகளிலும் நிபுணத்துவ துறைகளிலும் தொழில் பெற்ற, இந்தியத்தமிழர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். இதற்கு, மிகச் சமீப காலம் வரையில் கல்வியைப் பெறுவதற்குப் போதிய வாய்ப்பு இல்லாமல் இருந்ததே காரணமாகும்.

சமீப ஆண்டுகளில் குறிப்பாக இடைநிலைக்குப் பிற்பட்ட கல்வி ஓரளவு வளர்ச்சியடைந்ததால் இந்தச் சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்தது. எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறுவோரின் தொகை அதிகரித்திருக்கின்றது. உயர்கல்விக்கான விழிப்புணர்வும் அதிகரித்துள்ளது. உயர் கல்வி பெற்ற ஒரு பிரிவினரும் தோன்றியுள்ளனர். இந்தப்பிரிவினர், உயர் அல்லது நிபுணத்துவம் சார்ந்த தகுதிகள் தேவைப்படும் பல்வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர். இலங்கையில் உயர் கல்வி பெறுவதில் சிரமப்படும் வசதிபடைத்த இந்தியத் தமிழர்கள், உயர் கல்விக்காக இந்தியப் பல்கலைக்கழகங்களுக்குத் தமது பிள்ளைகளை அனுப்புகின்றனர்.

## சமூகத்தின் தற்போதைய செறிவு நிலை

நாட்டின் மொத்த சனத்தொகையில், சுமார் 15 இலட்சம்பேர் இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்தினர். இவர்கள் இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் 8 சதவீதத்தினர். இவர்களில் 12 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்ந்து பணியாற்றுகின்றனர். நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இவர்கள் செறிந்து வாழ்கின்றனர். இந்த மூன்று மாவட்டங்களில் மாத்திரமன்றி கண்டி, மாத்தளை, கேகாலை, களுத்துறை, காலி, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் உள்ள தோட்டங்களிலும் கொழும்பு மாவட்டத்திலும் கணிசமான தொகையினர் வாழ்கின்றனர். நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களின் சனத்தொகையில், இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் மாவட்ட வாரியானவிகிதாசாரம் முறையே, 52.5%, 21.1%, 9.3%, 6.8%,11.1%, 6.4%, ஆகும். இது தவிர, இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மலையகத்தில் இருந்து வட கிழக்கு மாவட்டங்களான மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகியவற்றுக்குக் குடிபெயர்ந்தும் உள்ளனர்.

தற்போது இந்திய வம்சாவளித் தமிழ் மக்களில் 81.4%, சதவீதமானவர்கள் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர். இந்தியத் தமிழர்களில் எஞ்சியோர்

பெருந்தோட்டங்களைச் சூழவுள்ள நகரங்களிலும் கொழும்பிலும் வாழ்கின்றனர். இந்த இரண்டு தரத்தினரையும் நாம் கவனத்தில் கொண்டோமேயானால், பெரும்பான்மையான இந்திய வம்சாவளி மக்கள் பெருந்தோட்டபகுதிகளிலேயே செறிந்து வாழ்கின்றனர். குறைந்த சதவீதத்தினர் பெருந்தோட்ட மாவட்டங்களுக்கு வெளியே வாழ்கின்றனர். அவர்கள் கிராமப்புற விவசாயத்தில் அல்லது நகர்ப்புறங்களில் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். என்பதை அவதானிக்க முடியும். சுமார் 90 சதவீதமான பெருந்தோட்ட தொழிலாளர் அணியினர் இந்திய வம்சாவளி தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 2001ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சனத்தொகை மற்றும் வீடமைப்புக் கணிப்பின் நிர்வாக அறிக்கையின்படி, அந்த ஆண்டில் இலங்கையில் வாழ்ந்த மொத்த தோட்ட (பெருந்தோட்டம் என்று அழைக்கப்படுகின்றது) மக்களின் எண்ணிக்கை 900,713 இதில் 88.4 சதவீதத்தினர் தமிழர்கள், பெருந்தோட்டங்களில் வாழும் மொத்த தமிழ் சனத்தொகையில் 95.9 சதவீதத்தினர் தோட்ட தொழிலாளர் குடும்பங்களை சேர்ந்தவர்கள். எனவே, பெருந்தோட்டத் தமிழர்கள் என்ற பதம் இந்திய வம்சாவளி தமிழர்களை வகைப்படுத்துவதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது.

## சமூகச் சூழலில் பின்னடைவுகள்

காலத்தால் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டபோதிலுங்கூட, ஆரம்ப காலத்துப் பெருந்தோட்டங்களைக் குணாம்சப்படுத்திய காரணிகள் தொடர்ந்து நிலவின. பெருந்தோட்ட சமூக மக்களின் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தின. வரிசைக்கிரமமான வீடமைப்பு, எதேச்சாதிகார நிர்வாக முறை, பிரதான நீரோட்ட அபிவிருத்தி நிகழ்வுப்போக்கிலிருந்து இன்னமும் தூரத்தில் விலக்கி வைக்கப்பட்டிருப்பது ஆகியன குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். மனித உரிமைகளுக்கு இங்கு மதிப்பும் இல்லை. குறிப்பிடத்தக்க அளவுக்குச் சமூக வளர்ச்சியில்லாத சமூகக் கட்டமைப்புக்குள் வரம்பிடப்பட்டு, சிறைவாழ்க்கையான உழைப்பு அமைப்புக்குள் சிக்குண்டு, பெருந்தோட்ட தமிழர்கள் இன்னமும் சுலபமாக சமூக ரீதியில் முன்னேற முடியாமல் உள்ளனர். கல்வி, பயிற்சி ஆகியவற்றைப் போதியளவு பெறமுடியாமலும் தமக்கென சொந்த வாழ்க்கை முறையை பின்பற்ற முடியாமலும் இன்னமும் துன்பப்படுகின்றனர். தொழில் வாய்ப்பு, லயன் காம்பிரா வசதி, தோட்டத்தினால் வழங்கப்படும் சுகாதார வசதிகள் ஆகியனவும் ஏனைய பல அம்சங்களும் அவர்களைப் பெருமளவுக்குத் தோட்ட நிர்வாகத்தின் மீது சார்ந்து இருக்கச் செய்கின்றன. எனவே, அவர்களது அபிவிருத்தி போக்கும் பெருந்தோட்டங்களின் பரிமாணத்துக்கும் இடையிலான பிணைப்பு மிக மிகப் பலமானது. பெருந்தோட்டச் சமூகத்தின் வரலாறு முழுவதிலும் அதன் வளர்ச்சியில்லாத போக்கு, பெருந்தோட்ட அமைப்பின் முழுமையான அபிவிருத்திப் போக்கின் ஒருங்கிணைந்த பகுதியாகவே இருந்து வந்திருக்கின்றது என்பதை இதுவரை கிடைத்துள்ள ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் கடந்த கால அபிவிருத்திக் கொள்கைகளுக்குப் பலியானவர்கள் என்பதை இதன்மூலம் காணமுடியும். இது, அவர்களது வளர்ச்சியின்மைக்கும், சமூக பொருளாதார ரீதியில் ஒதுக்கப்படுவதற்கும் வழிவகுத்தது. காலனியாதிக்கத்துடன் இணைந்த அடக்கு முறையாலும் கட்டுப்பாடுகளாலும் கூட அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தோட்டங்களின் அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், வரலாற்று ரீதியிலான பின்னடைவை வெற்றிகொள்வதில் இன்னமும் வலுவான சவால்களை அவர்கள் எதிர்நோக்குகின்றனர்.

இந்த பின்தங்கிய நிலைமைக்கும் தேக்க நிலைக்கும் பாரிய காரணிகளில் ஒன்று போதிய அளவு பிரதிநிதித்துவம் இல்லாமல் இருந்ததுதான் சுதந்திரத்துக்குப் பின்னர் கடுமையான சட்டங்கள் மூலம் இந்த சமூகத்தின் குடியுரிமை பறிக்கப்பட்டது. வாக்குரிமையில்லாத காரணத்தினால் அரசியல் ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் போக்கில் அவர்களுக்கு எந்தவிதமான வாய்ப்பும் இருக்கவில்லை. இந்த நிலைமை, 1980ஆம் ஆண்டு பிற்பகுதியில் நாடற்றவர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்ட பின்னரே மாறியது. 1964ஆம் ஆண்டு புள்ளிவிபரங்களுக்கு அமைய இலங்கையில் வசித்து வரும் சுமார் 160,000 நாடற்றவர்களுக்கும் அவர்களது வழித்தோன்றல்களுக்கும் குடியுரிமை வழங்கும் உத்தேச சட்டம் அமுலுக்கு வந்ததும் அந்த



நிலைமை மேலும் மாற்றமடையும்.
ஒரு ஒட்டுமொத்தமான மதிப்பீட்டில் இருந்து பார்த்தால் இந்திய வம்சாவளி தமிழர்கள் இனவாதத்திற்கு பலியான முதல் மக்களாவார். இனப் பாரபட்சம் போதிய பொருளாதார சந்தர்ப்பங்கள் வழங்கப்படாமை, போதிய கல்வி வசதிகள் இல்லாமை, தோட்டங்களுக்கு வெளியே தொழில்வாய்ப்புக்கு போதிய வாய்ப்புகள் இல்லாமை ஆகிய மிக மோசமான வடிவங்களில் இந்த இனவாதம் உருவானது. உண்மையில் அவர்களுக்குத் தோட்டங்களிலும் நகர்ப்புறங்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார வாய்ப்புகளே உள்ளன. அவர்கள் போதிய அளவு பொருளாதார வாய்ப்பு இல்லாமலும் வேலையில்லாப் பிரச்சினையாலும் துன்பப்படுகின்றனர். மேலும், தோட்டங்களில் குறைந்த சம்பளம், அதிக உழைப்பு நிலைமைகள் போன்றவற்றின் மூலம் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர்.

## கடந்தகால அபிவிருத்தி அனுபவங்கள்

தோட்டங்கள் யாவும் முன்னர் தனித்த ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்தன என்பதை நாம் பார்த்தோம். ஆனால் இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்கவில்லை. சிறையில் அடைக்கப்பட்டவர்கள் போலவே அவர்கள் இருந்தனர். அவர்களது வாழ்க்கை முறை ஓரளவிற்கு அடிமைத்தனமாகவே இருந்தது. 1975ஆம் ஆண்டு அரசாங்கம் தோட்டங்களைப் பொறுப்பேற்றது. அல்லது தேசியமயமாக்கியது. இது பெருந்தோட்டங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவங்களில் குறிப்பிடத்தக்கதாகும். ஏஜென்சி நிறுவனங்களிடம் இருந்த தோட்ட நிலங்களையும் தோட்ட தொழில்களையும் அரசுடமையாக்கியது. நிர்வாகங்களின் கட்டுப்பாடு அரசின் கீழ் வந்தது. அரசின் தலையீடு சட்டபூர்வமானது. இந்த சட்டபூர்வ தன்மை சமூக நீதிக்கு ஒரு கருவியாகியது. இந்த சமூகத்துக்கு இழைக்கப்பட்ட சமூக அநீதிகளை அரசின் தலையீடு நிவர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது. தோட்டக்காணிகளும் நிர்வாகமும் அரசின் பொறுப்பில் வந்தன. இது, தொழிலாளர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் அரசின் கீழ் வரும் தொழிலாள வர்க்கத்தின் ஓர் அங்கமாக்கியது. இந்த மாற்றம் காரணமாக, பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொறுப்பு, சமூக நல்வாழ்வை மேற்கொள்ளும்

பணி, வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தும் கடமை ஆகிய யாவும் அரசின் கீழ் வந்தன. இதனால் இந்த மக்களின் வாழ்விலும் உழைப்பு நிலைமைகளிலும் சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டன.
இந்திய வம்சாவளி தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சி இலங்கையில் உள்ள ஏனைய சமூகங்களின் வளர்ச்சியுடன் எவ்விதத்திலும் ஒப்பிடக்கூடியதாக இல்லை. இந்தச்சமூகத்தின் அபிவிருத்தியை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டாலும் அதனால் கிடைத்த பலாபலன்கள் குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளைக்கூட ஈடுசெய்யக்கூடியவையாக இருக்கவில்லை. இருந்த போதிலும் அரசு பொறுப்பேற்றதால் பெருந்தோட்ட அமைப்பின் இயல்பு தன்மை ஆகியவற்றில் முக்கியமான மாற்றம் ஏற்பட்டது. இதை இங்கு குறிப்பிடுவது முக்கியமானது. இந்த சமூகத்தின் வளர்ச்சி பற்றிய எந்தவொரு ஆராய்ச்சியிலும் இந்த அம்சம் போதுமான அளவிற்கு உரிய கவனத்தைப் பெறவேண்டும்.

1970ஆம் ஆண்டுகளில், தோட்டப் பாடசாலைகளில் அரசாங்கம் பொறுப்பேற்றது. இது, கல்வித்துறையில் குறிப்பாக ஆரம்ப பாடசாலை மட்டத்தில் சாதகமான பலாபலன்களைத் தந்தது. 1972ஆம் ஆண்டுக்கும் 1975ஆம் ஆண்டுக்குமிடையே தோட்டங்களின் உரிமையும் நிர்வாகமும் கை மாறின. இதனால் பெருந்தோட்டங்களில் அரசாங்கம் சமூக நலதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வழிபிறந்தது. 1980ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் நாடற்றவர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டது. இதனால், அவர்கள் பாராளுமன்றத்திலும் மாகாண சபையிலும் பிரதிநிதித்துவம் பெற முடிந்தது. இது குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவம் வாய்ந்த அம்சம். இந்த சமூகத்திற்கு அரசியல் அதிகாரத்தில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்த அரசியல் அதிகாரம், இளைய சமுதாயத்தின் அபிவிருத்தி எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்யும் பாதையில் பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக, உயர்கல்வி, தொழில் வாய்ப்புக்கள், ஆகியனவே இந்த எதிர்பார்ப்புகளாகும்.

மேலும் இன மோதல் இலங்கைச் சமூகத்தில் ஒரு பெரும் முரண்பாடான தோற்றத்தைப் பெற்றது. இந்த அம்சம் நாட்டின் சமாதானம், ஸ்திர நிலை ஆகியவற்றுக்குத் தோட்டத் தொழிலாளர்களைப் பெரும் முக்கியத்துவம் மிக்கவர்களாக்கியது. இந்தப்பின்னணியில் பார்த்தோமேயானால், இந்தச் சமூகம் எதிர்நோக்கும் அபிவிருத்திப் பிரச்சினைகளுக்கு துரித கதியில் தீர்வுகான வேண்டும். இது ஒரு அதிக அவசரமான பிரச்சினை. இதற்குத் தீர்வு காணாவிட்டால் புதிய முரண்பாடுகளும், மோதல்களும் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

பெருந்தோட்டச் சமூகம் எதிர்நோக்கும் பாரிய அபிவிருத்தி சவால்கள் உள்ளன. அவற்றில் ஒன்று அதன் இளம் தலைமுறையினர் பற்றியது. அவர்களின் பொருளாதார அபிலாஷைகளை நிறைவேற்றுவதுடன் சம்பந்தப்பட்டது. இது இந்த நாட்டில் இளம் தலைமுறையினர் உயிர் வாழ்வதை உத்தரவாதம் செய்யும் பிரச்சினை பற்றியது. கடந்த பத்து வருடகாலத்தில் தோட்ட இளைஞர்கள் பொருளாதார ரீதியில் மிகவும் குறைந்த அளவையே அனுபவித்தனர். அவர்களுக்குச் சமூக பாதுகாப்பு, சுய பாதுகாப்பு, தொழில் போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டன. இந்த இளைஞர்களின் குடும்பங்களும் பொருளாதார சிரமங்களை எதிர்நோக்கின. இதனால், இவர்களின் பொருளாதார



சங்கடங்களும் அதிகரித்துவிட்டன. இவை யாவும் இந்த இளைஞர்கள் மத்தியில் விரக்தி, அதிருப்தி ஆகியவற்றை ஏற்படுத்தின. சமூகத்தில் அமைதி குலையக்கூடிய நிலையை உருவாக்கின. இது தான், இந்தச் சமூகத்தின் வாழ்க்கையில் ஆர்வங் கொண்டவர்கள் இப்பிரச்சினை பற்றி சிந்தனை செய்வதற்கு தூண்டியது.

தோட்டப்புற இளைஞர்கள் எந்த அளவிற்கு வளர்ச்சி குன்றியவர்களாக இருக்கின்றார்கள்? நாட்டின் ஏனைய சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களிடமிருந்து இவர்கள் எவ்வாறு வித்தியாசப்படுகின்றார்கள்? இந்த நிலைமையை மாற்ற வேண்டிய அவசரமான தேவை ஏன் ஏற்பட்டிருக்கின்றது? இவ்வாறான கேள்விகளுக்கு அவர்கள் விடைகாண முயன்றார்கள்.

## பொருளாதாரத்துக்குப் பங்களிப்பு

உள்நாட்டின் விவசாயத்துறை மொத்த உற்பத்தியில் பெருந்தோட்டத்துறையின் பங்கு சுமார் 15 சதவீதம். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 3 சதவீதம். வெளிநாட்டுச் சம்பாத்தியத்தில் 19 சதவீதம் பெருந்தோட்டத் தொழில்கள் மூலமே கிடைக்கின்றது. அந்தப் பங்களிப்பு ஓரளவு குறைந்ததாக இருந்தாலும் 2000ஆம் ஆண்டில் இது கணிசமானது. தேயிலை மூலம் 500 மில்லியன் அமெரிக்க டொலரை (இலங்கை ரூபா 53.132 மில்லியன்) கூடுதல் சம்பாத்தியமாக பெற்றுக்கொண்டது. சேவைகளும் வர்த்தகமும் முக்கியமான பங்கை வகிக்கின்றன. இவை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கணிசமான பங்களிப்பையும் செய்கின்றன. பெருந்தோட்டத்துறையில், பெருந்தோட்டத்தைச் சேர்ந்த தமிழச் சமூகமே பெரும் பங்களிப்பைச் செலுத்துகின்றது.

## தோட்டத்துறை சம்பந்தமான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

### அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

பெருந்தோட்டங்களில் பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலமே அபிவிருத்திக்கும் சேமநல நடவடிக்கைகளுக்கும் நிதி வழங்கப்படுகின்றது. இந்த அரசாங்க நிறுவனங்களை நேரடியானவை, மறைமுகமானவை என்று பிரித்துக் காட்டலாம். கல்வி, சுகாதாரம், பிராந்திய அபிவிருத்தி ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைச்சுகள் மறைமுகமானவைப் பட்டியலில் உள்ளன. பெருந்தோட்ட அமைச்சு, தோட்ட உட்கட்டமைச்சு, சமூக அபிவிருத்தி அமைச்சு என்பன நேரடியாக சம்பந்தப்பட்டவை. நேரடியாகச் சம்பந்தப்பட்ட அமைச்சுகள், அவற்றின் செயற்பாடுகள் நிதி ஒதுக்கீடு என்பனவற்றை பின்வரும் பந்திகளில் பார்ப்போம்.
சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் பொறுப்புகள் பற்றி வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றை கீழே தருகின்றோம்.

#### 1. பெருந்தோட்டத் தொழில் அமைச்சு

இந்த அமைச்சு, கடந்த 30 ஆண்டுகளாக செயற்பட்டு வருகின்றது. தோட்டப் பயிர்களின் உற்பத்திக்கு ஊக்கம் அளிப்பதே அதன் பிரதான பொறுப்பாகும். சமூக அபிவிருத்தி பொறுப்பாக இருக்கும் அமைப்புக்களில் தோட்ட வீடமைப்பு, சமூகநல நம்பிக்கை நிதியமும் ஒன்று. (இப்பொழுது இந்த அமைப்பு தோட்ட உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.) இது 1992ஆம் ஆண்டு தோட்டங்கள் தனியார்மயமாக்கப்பட்ட பின்னர் உருவாக்கப்பட்டது. 2002ஆம் ஆண்டில், இதன் பெயர் மனிதவள அபிவிருத்தி நிதியம் என்று மாற்றம் செய்யப்பட்டது. இதன் நோக்கம், மனித வள அபிவிருத்தியில் அதன் பங்கை வலியுறுத்துவதாகும். தோட்டங்களில் சமூக நல அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிடுவதும் நடைமுறைப்படுத்துவதும் இதன் கடமைகள். தனியார்மயமாக்கப்படுவதற்கு முன்னர் தோட்டங்களை இரண்டு அரசாங்க நிறுவனங்கள் பராமரித்து வந்தன. இவற்றில் சமூக அபிவிருத்திப் பிரிவுகள் இருந்தன. இந்தப் பிரிவுகளின் பணிகளில் சிலவற்றை பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமூகநல நம்பிக்கை நிதியம் பொறுப்பேற்றுக் கொண்டது. பெருந்தோட்ட தொழில் அமைச்சு மேற்கொண்ட பெருந்தோட்ட சமூக



காட்மோர் தோட்டத்தின் லயன் அறைகள்

Image source - wsws.org

அபிவிருத்தித் திட்டங்களை இதுவே அமுல்படுத்திற்று.

**2. வீடமைப்பு, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு**

1997ஆம் ஆண்டு தனியாகத் தோட்ட உட்கட்டமைப்பு அமைப்பு உருவாக்கப்பட்டது. தோட்டப்பகுதிகளில் அரசாங்கம் மேற்கொள்ளும் சேம நலச்சேவை முயற்சிகளைப் பலப்படுத்துவது இதன் குறிக்கோள். அபிவிருத்தித் திட்டங்களில் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்கள் ஈடுபாடு கொள்ளச் செய்வதற்காகவே இந்த அமைச்சு உருவாக்கப்பட்டது. இவர்களைப் பல்வேறுபட்ட திட்டங்கள் மூலம் பிரதான நீரோட்டத்திற்குள் இணைப்பதே இதன் நோக்கமாகும். பெருந்தோட்டச் சமூகத்தின் பொருளாதார, சமூக வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குப் பொருத்தமான செயற்பாடுகள் அனைத்தையும் இந்த அமைச்சு ஒருங்கே இணைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. மின்சார வசதி, பாடசாலைகள், மருத்துவமனைகள், தபால் அலுவலகங்கள், வீட்டு வசதி, சனசமூக நிலையங்கள் போன்றவை கூடுதல் கவனத்தைப் பெற்றன. 2001ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தது. இந்த அமைச்சிடம் இருந்த சில பொறுப்புகள் வீடமைப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டன. பாதைகள், மின்சாரம், வீட்டுவசதி போன்றவற்றை மாத்திரம் கொண்ட பொருளாதார உட்கட்டமைப்பு மாத்திரமே இந்த அமைச்சுக்கு மிஞ்சியது. சமூக வசதிகளை ஏற்படுத்தும் பொறுப்புகள் சமூக அபிவிருத்தி அமைச்சிடம் வழங்கப்பட்டன. இந்த அமைச்சு புதிதாக உருவாக்கப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்குரிய வேலைத்திட்டங்களை அமுல்படுத்த அரசாங்கம் 1,146 மில்லியன் ரூபாவை வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்குவதற்கு இணங்கியது. இந்தத் தொகை 2000ஆம் ஆண்டுக்கும் 2002ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குரியது.

**3. சமூக அபிவிருத்தி அமைச்சு**

2001ஆம் ஆண்டு அரசு மாறிய போது இந்த அமைச்சிடமிருந்த சில பொறுப்புகள் வீடமைப்பு அமைச்சோடு இணைக்கப்பட்டது. பாதைகள், மின்சாரம், வீட்டு வசதி போன்றவை தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சாக வீடமைப்பு அமைச்சோடு இணைக்கப்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட சமூக அபிவிருத்தி அமைச்சிடம் கல்வி மற்றும் பல சமூக வசதிகளை ஏற்படுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டது. சமூக அபிவிருத்தி அமைச்சுக்கு அமைச்சரவை

*அந்தஸ்த்து அளிக்கப்பட்டது. இப்பொழுது அமைச்சு பொறுப்புக்களில் மேலும் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. பெருந்தோட்ட சமூக அபிவருத்தி வீடமைப்பு, மின்சாரம் போன்ற திட்டங்களை நாட்டின் இதர பகுதிகளுக்கு ஒதுக்கப்படும் நிதிகளோடு ஒப்பீடு செய்வது அவசியமாகும். பெருந்தோட்ட சமூகத்தின் தேவைகளை கணக்கிடும் போது ஒதுக்கப்படும் நிதி மிகக் குறைவாகவே உள்ளது.*

*வெளிநாட்டு நிதி உதவியுடன் பெருந்தோட்டத்துறையில் ஐந்து மிகப்பெரிய சமூக அபிவிருத்தித் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்கள் பற்றிய விபரங்களைக் கீழே தருகின்றோம். NORAD, ADB, OECD, SIDA, போன்ற வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனங்கள் இந்தத் திட்டங்களுக்கு நிதி வழங்கின.*

## ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்கள் அமுல்படுத்திய திட்டங்கள்

*தோட்டப்பகுதிகளின் வளர்ச்சியில் ஏனைய அரசாங்க சார்பற்ற சர்வதேச நிறுவனங்களும் ஈடுபட்டிருக்கின்றன. இந்த அரசாங்க சார்பற்ற ஸ்தாபனங்கள் பல துறைகளில் கவனஞ் செலுத்துகின்றன. மனித வளத்தை அபிவிருத்தி செய்வது வருமானத்தை உருவாக்குவது, தொழில் பயிற்சி வழங்குவது, சமூகத்தின் மத்தியில் இயங்கி வரும் ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்வது போன்றவற்றில் இவை கவனஞ் செலுத்துகின்றன. இந்தத் திட்டங்களுக்கு கனடிய உலகப் பல்கலைக்கழகச் சேவை நிறுவனம் (WUSC), CARE, இலங்கை - கனடா அபிவிருத்தி நிதியம் என்பனவே நிதி வழங்குகின்றன.*

## அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் அமுல் செய்த திட்டங்கள் வருமாறு:

1. கல்வி மூலமாகவும் பயிற்சி மூலமாகவும் புனர்வாழ்வை அளிப்பதற்கான திட்டம்
2. (PRETT) என அழைக்கப்படும் இந்தத் திட்டத்துக்கு WUSC நிதி தருகிறது.
3. தொழில் அபிவிருத்திக்கும் நிர்வாக அபிவிருத்திக்குமாக தேயிலைத் தோட்டங்களில் வசிப்பவர்களைப் பயிற்றுவிப்பது (TEAM எனப்படும் இந்தத் திட்டத்துக்குக் CARE ஸ்தாபனம் உதவி வழங்குகின்றது).
4. பெண்களுக்குத் தொழில் பயிற்சி (GTZ எனப்படும் நிறுவனத்தின் இந்தத்திட்டம் ஏவுறு என அழைக்கப்படுகின்றது).
5. சர்வதேச தொழிலாளர். ஸ்தாபனத்தின் (ILO) உதவியுடன் தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்குப் பயிற்சி அளிக்கும் திட்டம்.
6. தொழில் முயற்சியில் ஈடுபடுவோரை உருவாக்கும் திட்டம் (ILO நிறுவனத்தின்CEFE திட்டம்).
7. இலங்கை – கனடா அபிவிருத்தி நிறுவனத்தின் பெருந்தோட்டத் துறைக்கான வேலைத்திட்டங்கள். (SLCDE).

## துறைவாரியாக மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

*1996ஆம் ஆண்டில் பெருந்தோட்டங்கள் தனியார் மயமாக்கப்படுவது பூர்த்தியடைந்தது. அதன் பின்னர், பெருந்தோட்டங்களில் தொழிலை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கென ஏழு திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இவை பாரிய துறைவாரியான அபிவருத்தித் திட்டங்கள். இந்தத் திட்டங்கள் இரு பெரும் குறிக்கோள்களைக் கொண்டிருக்கின்றன.*

*1. பெருந்தோட்டத் தொழில் துறையில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதேசமயம், தொழிலாளர்களுக்கு நிலையான வாய்ப்பு வழங்க வேண்டும். அவர்களின் வருமானமும் நிலையாக இருக்க வேண்டும். கீழ்காணும் முயற்சிகள் மூலம் இந்தக் குறிக்கோள் அடையப்படும் என்று கூறப்பட்டது.*

1. தோட்டத்தைத் (தேயிலைக் காணிகளை) நிர்வகிப்பது,
2. பல்வேறு பயிர்களை விளைவிப்பது,
3. 
4. சந்தைப்படுத்துவது,
5. தொழிற்சாலைகளை நவீனமாக்குவது,
6. நிர்வாக முறைகளைப் பலப்படுத்துவது,
7. சுற்றாடலை மாசடையாமல் பாதுகாப்பது, இதில் வனவளத்தையும் நீர் வளத்தையும்; உபயோகிப்பதும் இவை மாசுபடுவதைக் கட்டுப்படுவதும் அடங்கும்.

*2. தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளையும் சமூக அந்தஸ்த்தையும்*

மேம்படுத்த வேண்டும். சுகாதாரம், சிறார் பராமரிப்புப் பணிகளைச் சீரமைக்க வேண்டும். சனசமூக நிலையங்களில் வசதிகளை அதிகரிக்க வேண்டும். இதற்கென சமூக அபிவிருத்தி வங்கியொன்றை ஏற்படுத்த வேண்டும். இவைதான் இரண்டு மிகப் பெரிய நோக்கங்கள்.

**பாரிய துறைவாரியான அபிவிருத்தித் திட்டங்களும் முதலீட்டு மார்க்கங்களும்**

இந்த முதலீடுகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), ஜப்பானிய சர்வதேச நிர்மான வங்கி (JBIC), அமெரிக்க அபிவிருத்தி நிறுவனம் (USDA), ஜெர்மன் நிறுவனமான GTZ ஆகியன நிதி வழங்குகின்றன. அது போலவே, நோர்வே, நெதர்லாந்து அரசாங்கங்களும் நிதியுதவி வழங்குகின்றன. முதலீட்டுத்திட்டங்களில் ஒரு முக்கியமான அம்சம் உண்டு. அதாவது, மொத்தத் தொகையில் 92.6 சதவீதம் கடன் வாயிலாக முதலீடு செய்யப்படுகின்றது. மிகுதி உதவித் தொகையாகும். இந்தக் கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். முதலீடு மூலம் எதிர்பார்க்கப்பட்டபலன்கள் கிடைக்காவிட்டால், அது தோட்ட தொழில் துறைக்கும் பொருளாதாரத்திற்கும் பெரும் சுமைகளை ஏற்படுத்தும்.

மேற்கூறப்பட்ட திட்டங்களில் பெருந்தோட்டச் சீர்திருத்தத் திட்டம் (PRP) ஏற்கனவே பூர்த்தியடைந்து விட்டது. ஏனையவை பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. பெருந்தோட்ட அபிவிருத்தித் திட்டம் (PDP) இதற்கு விதிவிலக்கு. இந்தத் திட்டத்தின் அமுலாக்கம் பின்னர் தான் ஆரம்பமாகியது. இதற்கு ஆதரவு வழங்கும் குழுவின் (PSP) 2002 கூற்றுப்படி, மொத்தமாக ஆயிரத்து நூறு கோடி ரூபா (11 பில்லியன்) தோட்டங்கள் தனியார்மயமாக்கப்பட்ட பின்னர் முதலீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது, தோட்டக் கம்பெனி ஒவ்வொன்றுக்கும் சராசரியாக 55கோடி ரூபா (550 மில்லியன்) கிடைத்துள்ளது. முழுமையான முதலீட்டை இவ்வாறு பிரித்துப் பார்க்க முடியும்.

தோட்டக் காணிக்கான முதலீட்டில் 80 சதவீதம் மரநடுகைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதேயளவு தொகை தொழிற்சாலை அபிவிருத்திக்கும் புதிய இயந்திர சாதனக் கொள்வனவுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. தோட்டச் சமூகத்துக்கு தேவையான பொது வசதிகளை வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணம் மிகமிகக் குறைவானதாகும். இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தையும் தோட்ட மக்களின் தேவைகளையும் ஒப்பிட்டால் அவை மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வித்தியாசத்தைப் போன்றது. சமூகத்தின் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள செலவுத் தொகையில் பெரும் பகுதி (அதாவது 45 சதவீதம்) தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகும். நீர் விநியோகத்துக்கு 19 சதவீதமும் மலசலகூடங்களை அமைப்பதற்கு 18 சதவீதமும் ஒதுக்கப்பட்டுள்ளன. மிகுதியான 18 சதவீதமே ஏனைய சேவைகளை வழங்குவதற்கு முதலிடப்பட்டுள்ளது.
செலவுக்கு ஏற்ற பயன் கிடைத்துள்ளதா என பார்த்தால், தொழிலாளருக்கு வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முதலீட்டின் பங்கு மிகவும் மோசமானதே. இந்த சமூகத்திற்கு ஏனைய அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்காகச் செய்யப்பட்ட முதலீடும் மிகவும் குறைவாகவே உள்ளது. எனவேதான், செலவுக்கு ஏற்ப கிடைத்த நன்மைகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே, இந்தச் சேவைகளை வழங்க வேண்டியதன் முக்கியத்துவம் உணரப்பட வேண்டும். முதலீட்டுக்கு முன்னுரிமை கொடுப்பதில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கருதுவது விரும்பத்தக்கது. முதலீட்டுத் திட்டங்களின் மூலம் கிடைக்கும் பொருளாதாரப் பலாபலன்கள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே, தோட்டங்களில் வாழும் தமிழ்ச் சமூகத்தின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தவதற்கு முதலீட்டை அதிகரிப்பது அத்தியாவசியத் தேவையாகும்.



(தொடரும்)



திரை கடலோடி திரவியம் தேடியவர்கள் தமிழர்கள். உலக வணிகத்துறையில் மிகமுக்கியமான இடம் தமிழர்களுக்கு இருந்தது. ஆனால் அவையெல்லாம் இன்றோ பழங்கதைகளாகிவிட்டன. வணிகம் என்றாலே, தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லாதது போலவும், தம்மால் ஒருபோதும் வணிகத்துறையில் சாதிக்கவே முடியாதென்பது போலவும் நம்மவர்கள் ஒதுங்கி, ஒடுங்கிக் கொண்டுள்ளனர். உண்மையில் இத்தகைய முற்கற்பிதங்கள் தான் வணிகத்துறையில் அவர்கள் நுழைவதற்கும், சாதிப்பதற்கும் தடைக்கற்களாக இருக்கின்றன. அவற்றைக் களைந்து, சரியான படிமுறைகளுக்கூடாக, உலகின் எதிர்காலத்துக்குப் பொருத்தமான வணிகத்தில் காலடி எடுத்து வைத்தால், நம்மாலும் சாதிக்க முடியும். இவை வெறுமனே மேம்போக்கான வார்த்தைகள் அல்ல. ஈழத்தில், புலோலி என்ற கிராமத்தில் பிறந்து, அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கில் வணிகத்துறையில் சாதித்த பின்னர் வெளிவருகின்ற கட்டுரையாளரது பட்டறிவின் மொழிதலே இது. 'ஈழத்திலிருந்து சிலிக்கன் வலி வரை' என்ற இக்கட்டுரைத்தொடர் உலகில் மிகப்பிரபலமான தொழில் நுட்பதாரிகளைப்பற்றியும் அவர்களது ஆரம்ப நிலை தொழில் நிறுவனங்களை (Startup Companies) அமைக்கும் போது எதிர் கொண்ட சில முக்கியமான நுணுக்கங்களை (Nuances) அடிப்படையாகக் கொண்டும், கட்டுரையாளரின் வணிகரீதியான சாதிப்பு அனுபவங்களைப் பகிர்வதாக அமைகிறது.


**● கணபதிப்பிள்ளை ரூபன்**

கந்தரூபன் (ரூபன்) கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ் மாவட்டத்தின் புலோலியைச் சேர்ந்தவர். போர் காரணமாக ஆபிரிக்காவுக்கு இடம்பெயர்ந்து பின் அங்கிருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்று இளமாணி, முதுமாணிப் பட்டங்களை இயந்திரவியலில் பெற்றுள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களில் பல புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கி பல கோடி டொலருக்கு விற்றுள்ளார். மேலும் இவர் "Accidental Entrepeneur by Ruban என்ற தலைப்பில் நூற்றிற்கு மேற்பட்ட கட்டுரைகளை தன்னுடைய அனுபவங்களை உள்ளடக்கி ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.




# வாணிபம் ஆரம்பிக்க தேவையான 4 நிதி தொடர் அடிப்படைகள்

**"தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க தூங்காது செய்யும் வினை" - திருக்குறள் (672)**

**மு.வரததாசனார் விளக்கம்:**
காலந்தாழ்த்தி செய்யத் தக்கவற்றைக் காலந் தாழ்ந்தே செய்ய வேண்டும், காலந்தாழ்த்தாமல் விரைந்து செய்யவேண்டிய செயல்களைச் செய்ய காலந்தாழ்த்தக்கூடாது.

நான் ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்ப தொழில் நிறுவனங்களைத் தொடங்கியபோது, ஈழத்தில் சின்ன வயதில் கற்ற மற்றும் அனுபவித்த பல விடயங்கள் எனக்கு மிக்க துணையாக இருந்தன. அவற்றில் சில விடயங்கள் வகுப்பறைகளில் படித்தவை, மற்றவை வெளியே அனுபவரீதியாகக் கற்றுக்கொண்டவை.

எனது குடும்பம் யாழ்ப்பாணத்திலுள்ள கிராமமொன்றில் பலசரக்குக் கடை ஒருபக்கமும், விவசாயம் மற்றும் கட்டடப் பொருட்கள் விற்பனை செய்யும் கடை மற்றப்பக்கமும் வைத்திருந்தது. அதோடு பருவக்காலங்களுக்கேற்ப விவசாயங்களும் செய்து வந்தோம்.

அதனால் சின்ன வயதிலிருந்தே வணிகம் செய்வதற்கும் அதன் மூலம் பல நடைமுறைக் கொள்கைகளைக் கற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது. நானும் என் அண்ணாமாரும் பள்ளிக்கூட நேரங்களைத்தவிர மற்ற நேரங்களில் கடையில் வேலை செய்வோம். சில நாட்களில் பள்ளிக்கூடம் போக முன் தோட்டத்துக்குப் போய் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிவிட்டு, அதன் பிறகே பள்ளிக்குப் போவோம். அறுவடைக் காலம் எல்லோரும் தேவையான வேலைகளைச் செய்வோம். இப்போதும் இரவில் பெற்றோமாக்ஸ் வெளிச்சத்தில் வெங்காயத்தை காய வைத்து, அதை அணையாகக் கட்டி, தூக்கில் போட்டது நினைவுக்கு வருகிறது. இப்படி நாங்களும் சேர்ந்து வேலை செய்ததால் வேலையும் விரைவாக முடியும், அத்தோடு வேலையின் சிக்கல்களையும் அறியக்கூடியதாக இருந்தது. அதை வைத்து புதிய முறைகளில் வேலை செய்யக்கூடியதாகவும் இருந்தது. இதையே ஐக்கிய அமெரிக்காவில் தொழில் நிறுவனங்கள் செய்யும் போது தொடர்ந்து செய்தேன். அதன் மூலம் எனது அணியினரின் மதிப்பைப் பெற்றது மட்டுமன்றி அவர்களின் கஷ்டங்களையும் புரிந்து, எமக்கான இலக்கை வெற்றிகரமாக முடிக்க முடிந்தது.

உலகில் வணிகத்துறையிலும் முதலீட்டுத்துறையிலும் முன்னணியில் இருப்பவர்களில் ஒருவர் கோடீஸ்வரரான வோறன் பஃபெட் (*Warren Buffet*). அவர் பிறந்து வளர்ந்தது அமெரிக்காவில் கொஞ்சம் பின்தங்கிய ஊரான ஒமாகாவில்.( நெப்ராஸ்கா மாநிலத்தில் உள்ளது) . அவரது வாழ்வுமுறை மிகச் சிக்கனமானது. அவர் முதலீட்டைக் கொண்டு நிறுவனங்களைக் கொள்வனவு செய்வார். அவரது முதலீட்டுக் கொள்கையை மற்றவர்கள் “மதிப்பு முதலீடு” (*Value Investing*) என்று கூறுவார்கள். அவர் ஒரு நிறுவனத்தின் “மதிப்பை” பல பொருளாதார அடிப்படைகளையும் அதனால் கிடைக்கும் நன்மைகளையும் ஆராய்ந்து முதலீடு செய்வார். அப்படியான சில அடிப்படைகளை இந்தக் கட்டுரை மூலம் கூறலாமென்று இருக்கிறேன்.



**Warren Buffett**
Image Source - finance.yahoo.com

**விநியோகமும் தேவையும் அதன் சமநிலையும்**
**(Supply Demand and their equilibrium):**
திறந்த சந்தையில், பொருட்களை உருவாக்கும் உற்பத்தியாளர்கள் தாங்கள் உருவாக்கிய பொருட்களையோ சேவைகளையோ விற்பதற்கு ஒரு விலையை வைத்திருப்பார்கள். அப்போது விநியோகம் பாவனையிலும் அதிகமானால் பொருளின் விலை மேலே கீழே போகச் சந்தர்ப்பம் அதிகம், கூடுதலாக விலை குறையும்.அதே போல் பாவனை விநியோகத்திலும் அதிகமென்றால் விலை கூடும். இதனால் பொருட்களை உற்பத்தி செய்வோர் சந்தை அறிவை அறிந்து அதற்கேற்ப உற்பத்தி செய்வது அவசியம்.

நான் சிறுவயதில், போர்க்காலத்தில் வாழ்ந்த போது, இது ஒரு முக்கியமான படிப்பாக இருந்தது. அப்போது எமது கடையின் வாடிக்கையாளர் குறைவான வருமானத்துடன் இருந்தார்கள். அதே நேரம், போரினால் பொருட்களின் விநியோகங்களும் குறைவாக இருந்தது. அத்தோடு பொருட்களை மற்றைய இடங்களிலிருந்து வாங்குவதும் கடினமாக இருந்தது. இவற்றையெல்லாம் அறிந்து ஆராய்ந்து பொருட்களை விற்க வேண்டியிருந்தது. இப்போதும் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் விநியோகத்தின் சமநிலை குறையும் சந்தர்ப்பங்களில், நான் இந்தப் பாடத்தை எனது ஆரம்பத் தொழில் நிறுவனங்களில் பாவிக்க வேண்டி வந்தது. நான் இதைப் பிரயோகித்து பொருட்களின் விலைகளையும் ஆக்குவிக்கும் பொருட்களின் எண்ணிக்கைகளையும் திட்டமிட்டுச் செய்தோம்.

**விளையாட்டு கோட்பாடும் அதன் பாவனையும் (Game Theory and Its applications):**

பொருளியல் பாடங்களை அதிகமாக பல்கலைக்கழகத்தில் நான் எடுக்க முக்கியமான காரணம் “விளையாட்டுக் கோட்பாடு” (*Game Theory*) என்ற பகுதி. இந்தப் பாடத்தில் விநியோகம்/ தேவையைத் தவிர வேறுசில மன விளையாட்டு தந்திரங்களையும் பிரயோகிக்க வேண்டி வரும். இந்தத் தந்திரோபாயங்களை பொருளியலில் மட்டுமன்றி அரசியல், சட்டம் என ஏனைய துறையினரும் பயன்படுத்துவார்கள்.

**நுண் பொருளியல்/பேரினப் பொருளியல் (Micro and Macro Economics):**

வணிகத்தைத் தொடங்க முதல் பொருளியலைப்பற்றி தெரிந்து கொள்வது முக்கியம். நுண் பொருளியலானது ஒரு தனிமனிதரின் பொருளியல் அனுபவங்கள், அவரது ஆதாயம் மற்றும் பரிமாற்றங்களைக் குறிப்பாகக் கொண்டது. அதே நேரம் பேரினப் பொருளியல் மக்களை ஒரு குழுவாகப் பார்த்து முடிவு எடுக்கப்படுவதைக் குறிக்கும்.

எனது பல்கலைக்கழக நாட்களில் முதலாவது பாடமாக நுண் பொருளியல் எடுத்தேன். அப்போது சமூகத்தில் ஒவ்வொருவரும் எடுக்கும் முடிவுகள் எப்படி சமூகத்தைத் தாக்குமென்று கற்றுக்கொண்டேன். அதை எனது ஆரம்பத் தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களைப் பணியமர்த்தும் போது பாவனை செய்தேன். இதன் மூலம் வாணிப நுணுக்கமுள்ளவர்களை அணிக்குச் சேர்க்க முடிந்தது.

**சந்தர்ப்ப விலை (Opportunity Cost):**

இதன் நேரடி அர்த்தம் ஒரு முடிவு எடுக்கும் போது அந்த முடிவால் தள்ளப்பட்ட மற்ற முடிவுகளால் ஏற்படக்கூடிய இழப்பு. இதைத் தொடக்கத்திலிருந்தே நன்றாக ஆராய்ந்து செய்ய வேண்டும். இதை முறையாகப் பகுப்பாய்வு செய்து ஒரு முடிவின் நன்மை தீமைகளை அறிந்து மேற்கொண்டால் சந்தர்ப்ப வலை என்னும் பொறியிலிருந்து தப்பிக்கமுடியும். அது மட்டுமன்றி முறையாகப் பகுப்பாய்ந்து, அதை எழுதி வைத்தால், சில சந்தர்ப்பங்களில் நாம் பிரயோகித்த முறைமை பிழையாக இருந்தாலும் கூட, திரும்பவும் அதே தவறைச் செய்யாமல் வேலையை முடிக்கக் கூடியதாக இருக்கும்.

இப்படியான நிதி தொடர்பான அடிப்படைக் கொள்கைகளை சிறு வயதிலேயே இலங்கையில் படித்து அனுபவித்தமையானது, என் வாழ்க்கையில் பின்னைய நாட்களில் நான் வெற்றிகரமாக இருக்க முடிந்தது. வோரன் பஃபற் சின்ன வயதிலிருந்தே மிக்க சிக்கனமாக இருந்தவர்.



அவர் கோடீஸ்வரர் என்றாலும் இப்போதும் பழைய காரைத்தான் வைத்திருக்கிறார். அவரது வீடும் மிகச் சிறியது. அவர் நிதி முதலிடும் போது அந்த நிறுவனம் நீண்ட காலத்தில் எப்படி இருக்குமென்றும் அதனுடன் அந்த நிறுவனத்தின் மேலாளர்கள் கவனமாக நடத்துகிறார்களா என்று பார்த்தே முதலிடுவார். வாணிபம் தொடங்க நினைப்பவர்கள் இப்படியான நிதி தொடர்பான அடிப்படைகளைத் தெரிவதன் மூலம் தவறுகளைக் குறைத்து பெரும் வெற்றி பெறலாம். இது உங்கள் வெற்றிக்கு அடிக்கல்லாக இருக்கும்.

(தொடரும்)

இலங்கைத் தீவின் பூர்வீக குடிகளாக சிங்களவர்களையும் மற்றும் தமிழர்களையும் அவர் தம் பேரினவாத சிந்தனையானது, பல வரலாற்று புனைவுகளின் ஊடாக இற்றை வரை தொடர்ந்து முன்வைத்துக்கொண்டிருக்கின்றது. ஆனால் இந்நாட்டின் பூர்வீகக் குடிகள் வேடுவர் என்பதை எவரும் மறுக்கவியலாது. அதனடிப்படையில், கிழக்குக் கரையோரம் எங்கும் வாழும் இன்று தமிழை பேசு மொழியாகக் கொண்டுள்ள வேடுவர்களின் இருப்பியல் பற்றியும், அவர் தம் தேவை பற்றியும் 'வேடர் மானிடவியல்' என்ற இந்தக் கட்டுரைத்தொடர் ஆய்வுப்பாங்கில் விவரிக் கின்றது. வேடுவர்களுக்கே உரித்தான அடையாளங்களை வெளிக்கொணர்வதாகவும், இது வரை நாம் அறிந்திடாத வேடுவர் குணமாக்கல் சடங்குகள், இயற்கையுடன் பின்னிப்பிணைந்த அவர்களின் வாழ்வியல், வேடுவர் மீதான ஆதிக்க சாதியினரின் பாகுபாடுகள் என்பன உள்ளி ருந்து மரபு மீட்கும் நோக்கில் பிரதானமாகக் கண்டறியப்பட்டு, அவை தொடரின் ஊடாக முன் வைக்கப்படுகின்றன. அத்துடன் காலனிய எண்ண மேலாதிக்கத்துள் சிக்குண்டு அழிந்து கொண்டிருக்கும், அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அவர் தம் மானுட நகர்வுகள் முதலான பல அல்லோல கல்லோல நிலைமைகளும் இதில் விரிவாகப் பேசப்படுகின்றன.




● கமலநாதன் பத்திநாதன்

கமலநாதன் பத்திநாதன் அவர்கள் கிழக்குப் பல் கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற் கைகள் நிறுவகத்தில் நடன நாடகத்துறையில் நாடகமும் அரங்கியலும் கற்கைநெறியில் இள மானி சிறப்புப்பட்டம் பெற்றவர். கிழக்கிலங்கை யின் பூர்வ குடிகளான வேடர் சமூகத்தைச் சேர்ந்த இவர் இலங்கையில் தமிழ் பேசும் வேட் டுவ மக்கள் சார்ந்து பல ஆய்வுகளை மேற் கொண்டு வருகின்றார். அவ்வகையில் 'வேடர் மானிடவியல்' எனும் விடயத்தின் கீழ் பல ஆய் வுக் கட்டுரைகளை தொடரச்சியாக வெளியிட்டு வருகின்றார்.

மேலும் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு நாளி தழ்கள், சஞ்சிகைகளில் வேடர் சமூகத்தின் சமயம், வரலாறு, தமிழ் இலக்கியம், பண்பாட்டு ஆய்வு சார்ந்த கட்டுரைகளையும் வெளியிட்டுள்ள பத்தி நாதன் தற்பொழுது இலங்கை நூலக நிறுவனத் தில் கள ஆய்வாளராகக் கடமையாற்றுகின்றார்.


# கிழக்கிலங்கை தொல்குடிகள் மீதான நில ஆக்கிரமிப்பும்

## குவேனி பழங்குடி அமைப்பின் தோற்றமும்

இற்றைக்கு 28000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அதாவது இடைக்கற்கால காலத்தில் இருந்தே இலங்கையில் வேடர் சமூகம் வாழ்ந்து வருகின்றது என்பதனை, இலங்கை மானிடவியல் மற்றும் வரலாற்று ஆய்வுகள் தமது வரையறைக்கு எட்டியவரை எடுத்துக்காட்டி நிற்கின்றன. இயக்கர், நாகர் என்னும் வரலாற்றுக்கு முந்தைய குடிகளை தமது மூதாதையர்களாக சிங்கள மற்றும் தமிழ் மக்கள் அடையாளப்படுத்தும் முயற்சியில் இருக்கும் சூழ்நிலையில் அந்தக் குடிகளின் காலத்துக்கு எத்தனையோ ஆயிரமாண்டு முந்தைய காலகட்டத்தில் வாழ்ந்த குடிகளாகவும் இன்றும் பழங்குடி அடையாளங்களுடன் தொடரும் குடிகளாகவும், கிழக்கிலங்கை வேட்டுவ குடிகள் காணப்படுகின்றனர் என்னும் தன்மை , அவர் தம் வாழ்வின் தொன்மையை எடுத்தியம்புவதாக அமைகின்றது.

அம்பாறை தொடங்கி மட்டக்களப்பு, திருகோணமலை என மிக நீண்டதான கரையோரத்துடன் அண்டியதாக கடலோர வேடர் குடிப்பரம்பலை இன்றும் காணமுடிகிறது. கிழக்கின் இனக்கலப்பில் இன்றும் பழங்குடிகளின் அடையாளங்கள் சடங்கார்ந்த நடவடிக்கைகள் ஊடாக வெளிக்கிளம்பியே உள்ளன.

கிழக்கிலங்கையில் வாகரை, வெருகல், மூதூர் பாட்டாலிபுரம், இலக்கந்தை, சந்தோசபுரம், வெருகல், இலங்கைத்துறை மாங்கேணி, கழுவாக்கேணி காயங்கேணி, பனிச்சங்கேணி, மதுரங்குளம், கிரிமிச்சை, உறியக்காடு, கதிரவெளி, கட்டுமுறிவு, அமந்தனாவெளி, வாகரை, புன்னைக்கிளங்கு, குஞ்சான்குளம், மட்டக்களப்பு வேடர் குடியிருப்பு (குடியிருப்பு), தளவாய், சித்தாங்கேணி, களுவன்கேணி, நாசிவன் தீவு, இறால் ஓடை, பொண்டுகள் சேனை, கொங்கனை, பால்சேனை, திராய்மடு, வாகனேரி, முறுத்தானை, தம்பானை, கொக்கட்டிச்சோலை, கழுமுந்தன் வெளி, கரடியன்குளம், வேப்பவெட்டுவான், குசலன்மலை, விந்தனை, நாடுகாடு எனப் பல இடங்களில் பழங்குடி மக்கள் தமது இன அடையாளத்தினை சடங்கின் அடியாக இன்றும்



**கடல் வேடுவர்**
**100 வருடங்களுக்கு முன்னர் செலிக்மன் வாகரையில் எடுத்த புகைப்படம்**

**Image source - www.namathumalayagam.com**

*பாதுகாத்து வருகின்றனர்.*
*வளப்போட்டிகள் அதிகம் நிறைந்த கிழக்கு மாகாணத்தில் நவீன வாழ்க்கை முறையை உட்செரித்துக் கொண்ட, போட்டிகள் நிறைந்த சமூகச் சூழல், பொருளாதாரம் மற்றும் பாடசாலைக் கல்வியறிவு முதலானவற்றில் இற்றை வரைக்கும் தொல்குடிகள் போராட வேண்டிய நிலையே காணப்படுகின்றது. காலனிய நுகர்வுச் சூழல், பேரினவாதச் சிந்தனை, ஆரியக்கலப்புடனான தமிழ்க்காலனியம் முதலான பண்பாட்டசைவுக் கூறுகள் பூர்வகுடிகள் தம் நிலங்களை, வளங்களை மற்றும் பண்பாடுகளைச் சிதைப்புச் செய்வதற்கும், சூறையாடுவதற்கும் ஏற்ற சூழ்நிலையை இன்றைய காலகட்டத்தில் மிகப் பெருவாரியாக ஏற்படுத்தி இருக்கின்றன.*

*கிழக்கிலங்கை கடலோர வேடர்கள் இன்றும் பெருவாரியாக வாழ்ந்து வரும் இடங்களான மூதூர், வெருகல் பகுதிகளில் பிற சமூகத்தவர்களாலும், சுதேச அரச பிரிவுகளா லும் நிகழ்த்தப்பட்ட ஆக்கிரமிப்புகளையும் அநீதிகளையும் இங்கு விரிவாகப் பார்க்கலாம்.*

*1. யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் அரச படைகளால் மலை நீலி அம்மன் கோவில் ஆக்கிரமிக்கப்பட்டு மலையில் பௌத்த வழிபாடு நடத்தப்படுகிறது. இலங்கை முகத்துவாரம் பெரியசாமி கோயில் சிதைக்கப்பட்டு முழுமையாக பௌத்த கோயிலாக மாற்றப்பட்டுள்ளது.*

*2. பூர்வகுடிகளின் பிரதான பூர்வீகத் தொழில்களான வேட்டையாடுதல், தேன் எடுத்தல், விறகு வெட்டுதல், சிறுகடல் பெருங்கடல் மீன்பிடித்தல், நன்னீர் மீன் பிடித்தல், பலவகை கிழங்கு மற்றும் சேனைப் பயிர்ச்செய்கை, கூலித்தொழில் என்பனவற்றை மேற்கொள்ளும்போது சக சமூகத்தினரில் சிலர் காடுகளை அழிப்பது மற்றும் மிருகங்களை வேட்டையாடுவதை காரணம் சொல்லி வனப் பாதுகாப்பு சபை, வனவிலங்கு பாதுகாப்பு சபை, பொலிஸ் என்பவற்றின் ஊடாக மக்களை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தி அபராதம் விதிக்கின்றனர்.*

*3. 2006 ஆம் ஆண்டு யுத்தம் மற்றும் சுனாமி காரணமாக வெருகல் முகத்துவாரப் பகுதி மக்கள் சூரநகர் என்னும் பகுதிக்கு இடமாற்றப்பட்டார்கள். மக்கள் வெளியேற்றப்பட்ட வெருகல் முகத்துவாரப் பகுதி முழுவதையும் ஏறத்தாழ 1000 ஏக்கர் நிலப்பரப்பையும் வனப்பாதுகாப்பு சபை ஆக்கிரமித்து வைத்துள்ளது.*

*4. கிறவல் குழி (சந்தோசபுரம்) கிராமத்து மக்களின் குடியிருப்பு காணிகள், விவசாயக் காணிகள், நிரந்தர வீடுகள், மலசலகூடங்கள், வழிபாட்டு இடங்கள் என்பன அரசின் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக அவர்கள் சேனையூர் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு உட்பட்ட சீதனவெளி என்னும் கிராமத்தில் குடியேற்றப்பட்டிருக்கும் சூழ்நிலையில், கல்வி, பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைந்த சமூகத்தவர் மத்தியில் போட்டிபோட்டு வாழ முடியாமல் பூர்வகுடிகள் பெரும் நெருக்கடிகளுக்கும்,*

புறக்கணிப்புகளுக்கும் உள்ளாகிறார்கள். அந்தக்கிராமத்திற்கென ஒதுக்கப்படும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒதுக்கீடுகளில் பாரபட்சம் காட்டப்பட்டு மிகச் சிறிய பகுதியே பழங்குடி மக்களுக்கு கிடைக்கிறது.

5. 2006 இல் இடம்பெயர்ந்து போன பகுதிகளை முஸ்லிம் சமூகத்தவர்கள் உள்ளூரில் இருக்கும் சில முஸ்லிம் அதிகாரிகள், அரசியல்வாதிகளின் துணைகொண்டு அரசாங்க சட்டங்களில் இருக்கும் ஓட்டைகளைப் பயன்படுத்தி உப்பூரல் மற்றும் நல்லூருக்கு இடைப்பட்ட பகுதிகளில் இருந்த மாவடியூற்று என்னும் பழங்குடிக் கிராமத்தில் 20092010 காலகட்டத்தில் முஸ்லிம்கள் முன்பு இருந்த பகுதிகளாக அறிவித்து குடியேற்றி இன்று தாகிப் நகர் என்னும் சட்டவிரோதப் பகுதியை உருவாக்கியிருக்கிறார்கள். தாகிப் நகர் என்னும் சட்டவிரோதப் பகுதி உருவாக்கத்துடன் அதை அண்டியுள்ள பழங்குடியினர் மீன் பிடிக்கும் கடல் பகுதியையும், சிறு கடல் பகுதியையும் சில முஸ்லிம் மீனவர்கள் ஆக்கிரமித்துள்ளார்கள்.

6. வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட உப்பூரலுக்கும் மட்டப்புக்கழி பகுதிகளுக்கும் இடைப்பட்ட கடலோரப் பகுதியில் 100 ஏக்கர்களுக்கு மேலான நிலப்பகுதியை “Ceylon Business Private Matter Company” என்னும் பெயரில் உள்ள ஒரு கம்பனி மூலம் தோப்பூர் முஸ்லிம்கள் பெரும் ஆக்கிரமிப்பை செய்திருக்கிறார்கள். போராட்டங்களுக்கூடாக பழங்குடி மக்கள் இந்த நிலங்களை மீட்டுவருகின்றனர்.

7.மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தொல்குடிக் கிராமமான சந்தனவெட்டை பகுதியில் மூதூரைச் சார்ந்த சில முஸ்லிம்கள் அதிகாரத்தையும், அரசியல் செல்வாக்கையும் பயன்படுத்தி காணி அபகரிப்பைச் செய்து வருகின்றனர். இதன் பிரதான ஆக்கிரமிப்பாக எந்த அடிப்படையான மனச்சாட்சியும் இன்றி தொல்குடிகளின் இடுகாட்டையும் ஆக்கிரமித்துள்ளனர். பழங்குடி மக்கள் தேன் மற்றும் பழங்கள் பெறும் பகுதிகளும் இந்த ஆக்கிரமிப்பிற்குள் அடங்குகின்றன. இந்தப் பகுதியில் மக்கள் பயன்படுத்தும் சிறு மலையை வெடிவைத்து கல்லெடுக்கும் பாதகமான வேலை அதே மக்களில் சிலரால் மேற்கொள்ளப்படுகிறது.


வெருகலம்பதி சித்திர வேலாயுதசாமி கோயில்
Image Source - pagetamil.com

இந்தக்கிராமத்தில் 2009 - 2010 காலட்டத்தில் மீள்குடியிருப்புச் செய்யப்பட்டது. இன்றுவரை இக்கிராமத்திற்கென வீதி புனரமைப்பு, குடிநீர் வசதி, சமுர்த்தி வசதி, நிரந்தர வீட்டுத்திட்டம் போன்ற எந்தப்பணிகளும் உள்ளூர் அதிகார சபைகளால் மேற்கொள்ளப்படவில்லை. இந்தக்கிராமத்தில் 25 சதவீதமான குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக இருக்கும் சூழ்நிலையில், சில முதியோரும் பெண்களும் பிச்சை எடுத்து வாழும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

8. நல்லூர், பாட்டாளிபுரம், வீரமாநகர், நீனாக்கேணி ஆகிய பூர்வீகப் பழங்குடிக் கிராம மக்களின் ஒரே ஒரு விவசாயக் குளமாக இருந்த உல்லைக் குளம் டி. எஸ் சேனநாயக்கா ஆட்சிக் காலத்திலும் வெள்ளைக்காரர்களாலும் இந்த மக்களுக்காக 1917-18 காலப்பகுதிகளில் அவர்களைக் கொண்டே வெட்டி உரு வாக்கப்பட்டது.

ஒரு குடும்பத்திற்கு மூன்று தொடக்கம் நான்கு ஏக்கர் வரை காணி வழங்கப்பட்டிருந்தது. இதற்கு பட்டாங்கட்டி என்னும் ஒரு தலைவர் நியமிக்கப்பட்டு அரசாங்கத்தால் அவருக்குச் சம்பளமும் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. இந்தக்குளத்திற்கு அண்மையில் பத்தினி அம்மன்



வாகரை, வெருகல் மற்றும் மூதூரை
அண்டிய பகுதியில் வாழும் பழங்குடியினர்
Image Source - globaltamilnews.net

வழிபாட்டிடமும் உருவாக்கப்பட்டு, இதற்கு ஒரு தீர்த்தக் கிணறும் அமைக்கப்பட்டது. பத்தினி அம்மன் விவசாய சம்மேளனம் என்னும் பெயரில் ஒரு விவசாய அமைப்பும் உருவாக்கப்பட்டிருந்தது.

1935 மற்றும் 1950-55 காலப்பகுதிகளில் பழங்குடி மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இந்தக் காலப்பகுதியில் இருந்து 2006 வரை இந்தக் குளத்தை எமது மக்களே நிர்வகித்து வந்திருக்கிறார்கள். 2006 இல் ஏற்பட்ட யுத்தத்தினால் இடம்பெயர்ந்து 2009 2010 இல் மீள்குடியேறும் காலப்பகுதிக்குள் தோப்பூரைச் சேர்ந்த முஸ்லிம் ஆக்கிரமிப்பாளர்களால் ஏறத்தாழ 1000 ஏக்கர் விவசாய நிலப்பரப்பு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கூடவே இந்தப்பகுதியை ஒட்டிய கடல் துறைமுகத்தினையும் அவர்கள் ஆக்கிரமிப்புச் செய்திருப்பதுடன் பேச்சுவார்த்தைகள் அனைத்திலும் அதிகாரத்துடன் நடந்து கொள்ளும் பண்பையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

9. சாலையூர் என்று அழைக்கப்படும் கிராமம் தொல்குடிகளின் உத்தியாக்கள் காலத்தில் ரோட்டுச்சேனை என்று அழைக்கப்பட்டு வந்தது. 1975 76 காலப்பகுதியில் அவ்வூரைச் சூழவிருந்த கல்வி பொருளாதார ரீதியில் வளர்ச்சி கண்டிருந்த தமிழ் மக்களில் ஒரு பிரிவினர் தொல்குடிகளை ஆடு மாடு மேய்த்தல், தோட்டத்தில் கூலிவேலைகள், வீட்டு வேலைகள், தங்கள் விவசாயப் பயிர்களுக்கான இரவு பகல் காவல் வேலைகள் புரிதல் போன்றவற்றிற்கு பயன்படுத்திக் கொண்டனர். இதற்கு ஊதியமாக சிறு தொகை பணம், குறுநெல் அரிசி, உடைகள் என்பவற்றை மட்டும் வழங்கி வந்தனர். வறுமை நிலையில் கடனாளிகளாக மாறிய இவர்களிடம் வெற்றுப் பத்திரங்களில் கைநாட்டுகளை பெற்று அவர்களின் நிலங்களையும் சிலர் அபகரித்துக் கொண்டார்கள். இதை அறிந்து இப்போது சந்தோசபுரம் என அழைக்கப்படும் கிறவற்குளியில் இருந்த மக்கள் நீதிகேட்டு படையெடுத்து சாலையூர் சென்றார்கள். நிலங்களை ஆக்கிரமித்திருந்த குடும்பங்களில் போராட்ட இயக்கத்தில் உறுப்பினராக இருந்தவர்களை குண்டர்கள் போல பயன்படுத்தி பூர்வகுடிகளை அவர்கள் விரட்டியடித்தார்கள். விரட்டியடிக்கப்பட்ட பூர்வகுடிமக்கள் சந்தோசபுரம் மற்றும் சந்தனவெட்டை என்னும் கிராமங்களில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர்.

**1935 மற்றும் 1950–55 காலப்பகுதிகளில் பழங்குடி மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இந்தக் காலப்பகுதியில் இருந்து 2006 வரை இந்தக் குளத்தை எமது மக்களே நிர்வகித்து வந்திருக்கிறார்கள். 2006 இல் ஏற்பட்ட யுத்தத்தினால் இடம்பெயர்ந்து 2009 – 2010 இல் மீள்குடியேறும் காலப்பகுதிக்குள் தோப்பூரைச் சேர்ந்த முஸ்லிம் ஆக்கிரமிப்பாளர்களால் ஏறத்தாழ 1000 ஏக்கர் விவசாய நிலப்பரப்பு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.**

*10. வெருகலம்பதி சித்திர வேலாயுதசாமி கோயிலில் பழங்குடி மக்கள் பூர்வீகமாகச் செய்து வந்த பதின்மூன்றாம் திருவிழாவான வேட்டைத் திருவிழா செய்யும் உரிமை அந்தக் கோயிலை நிர்வகிக்கும் தமிழ் மக்களில் ஒரு பிரிவுக் குடியினரால் திட்டமிட்டு மறுக்கப்பட்டிருக்கிறது.*

*11. வெருகல் பகுதியில் உள்ள வட்டவன் என்னும் கிராமத்தில் பழங்குடி மக்களின் விவசாய நிலங்கள் தமிழ் சமூகத்தில் உள்ள ஒரு பிரிவினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.*

*12. மூதூர்ப் பகுதியில் உள்ள சந்தோசபுரம் பழங்குடி கிராம மக்களின் பிரதான நன்னீர் மீன்பிடிக் குளமான சம்புக்கழி குளத்தினை தமிழ் சமூகத்தை சேர்ந்த சிலர் விவசாயப் பண்ணை அமைக்கும் திட்டத்துடன் நிரந்தரமாக மூடும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறார்கள்.*

*13. இளக்கந்தை பூர்வீகப் பழங்குடிக் கிராமத்தினுடைய விவசாய இடமான பாலைவனக் குளம் சம்பூரைச் சார்ந்த சிலரால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளது.*

*14. பழங்குடி மக்களின் பல கிராமங்களில் கிறிஸ்தவ சபைகள் பழங்குடி மக்களின் வறுமை, அறியாமையைப் பயன்படுத்தி சிறு சலுகைகள், உலர் உணவுப் பொதிகள், சிறு பண உதவிகள் என்னும் வழிமுறைகளூடாக அந்த மக்களின் பூர்வீக நம்பிக்கைகளை சிதைத்து கிறிஸ்தவ மதத்திற்கு இழுத்துச் செல்கிறார்கள். சர்வதேச அளவில் இருக்கும் கிறிஸ்தவமத வலைப்பின்னலை பயன்படுத்தி மட்டக்களப்பு தொடக்கம் திருகோணமலை வரை இருக்கும் சிறு சமூகமாகிய பழங்குடி மக்களின் பண்பாடு, கலை, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகளை திட்டமிட்டு சிதைக்கும் வேலையை இவ்வமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன.*

*புதிய ஏற்பாடுச் சபை, கிருபை ஐக்கிய சபை, மெதடிஸ்த சபை, ஆர்மோன் சபை, கல்வாரி சுவிசேஷ சபை, ஏயோச்சி சபை என பல கிறிஸ்தவ சபைகள் எமது மக்கள் மீது பண்பாட்டு படையெடுப்பை செய்கின்றன. மதமாற்றத்தின் பாதிப்பு என்பது பூர்வகுடிமக்கள் மத்தியில் பிரிவினையைத் தோற்றுவிக்கிறது.*

*பழங்குடிக் குடும்பம் ஒன்றில் ஒருவர் மதம் மாற்றப்படும் பொழுது மரணச்சடங்கு என்பது கூட எந்த முறைப்படி செய்வது என்னும் குழப்பத்தில் அந்தக் குடும்பமும் கிராமமும் பெரும் குழப்பத்திற்கு உள்ளாவதை இதற்கு ஒரு சிறு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.*

*இவ்வாறான பல சொல்லொணா நெருக்கடிகளை இன்றைய காலத்தில் வாழும் கிழக்கிலங்கை பூர்வகுடிகள் எதிர்கொள்கின்றனர். தமிழ்க்காலனியத்தின் திணிப்பால் இவர்களின் மொழியானது வெறும் சடங்காசாரங்களுடன் வடிகட்டப்பட்டு விட்டது. இயற்கை மற்றும் செயற்கைக் கலப்புக்களால் இவர்களுக்கே உரித்தான பண்பாடும் படிப்படியாக சிதைந்து கொண்டு போகின்றது. இது பற்றி சிந்திப்பது யாருடைய கடமை?*

*(தொடரும்)*

*தகவல் நடராசா கனகரட்ணம்*
*நாகரெட்டினம் வரதன்*
*(குவேனி பழங்குடி அமைப்பு - கிழக்கிலங்கை)*



இலங்கை முஸ்லிம்களின் இனத்துவ (ethnic) மூலத்தையும், வரலாற்றையும், இலங்கை முஸ்லிம்கள் எனும் இன அடையாளத்தினுள் கரைந்திருக்கும் பன்முக இன மரபுகளின் கலவையையும் தேடிய பக்கச்சார்போ, புனித நோக்குகளோ அற்ற ஒரு பரந்த அறிவியல்தன்மையுடன் கூடிய ஆய்வாக 'இலங்கை முஸ்லிம்கள் – இனத்துவ மரபும் சமூகவியலும்' என்ற இந்த கட்டுரைத்தொடர் அமைகிறது. குறிப்பாக இலங்கை முஸ்லிம்கள் என்போர் இன மரபு சார்ந்து அரபு மூலத்தையா அல்லது தமிழ் மூலத்தையா தங்கள் இனத் தொடர்ச்சியாகக் கொண்டுள்ளனர், இலங்கை முஸ்லிம்களின் இனத்துவ அடையாளமாக தமிழைக்கொள்ள முடியுமா?, ஒரு சமூகமாக இலங்கை முஸ்லிம்களுக்குள்ளே இருக்கும் பண்பாட்டு வேறுபாடுகள், உள்ளக வேறுபாடுகள் மற்றும் முரண்கள் அவற்றின் சமூகவியல் தன்மை ஆகியவற்றை இந்தத் தொடர் பரந்த ஆய்வுக்குட்படுத்துகிறது.


**ஜிஃப்ரி ஹாசன்**

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையைச் சேர்ந்த ஜிஃப்ரி ஹாசன் அவர்கள் சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் பட்டம் பெற்றவர். மேலும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியலிலும் பட்டப் பின் டிப்ளோமா பட்டம் பெற்ற இவர், தற்போது ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம், பண்பாட்டு ஆய்வு, மொழிபெயர்ப்பு என விரிந்த தளத்தில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 'போர்க்குணம் கொண்ட ஆடுகள்', 'அகாலத்தில் கரைந்த நிழல்' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு சார்ந்து இவரது நூல்கள் பல வெளிவந்துள்ளன.

இலங்கை முஸ்லிம் பண்பாடு, சமூகவியல், ஈழ இலக்கியம், சிங்கள இலக்கியம் முதலான கருபொருள்களில் ஆழமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.


# இலங்கை முஸ்லிம்களின் உப மரபினங்கள் : இலங்கை மலாயர்கள்

## மலாயர்கள் (Malays)

*இலங்கை முஸ்லிம் உப மரபினங்களில் மற்றொரு பிரிவினர் மலாயர்களாவர். இலங்கைச் சோனகரோடு மத அடிப்படையில் ஒரே சமூகமாக இணைந்து கொண்ட உப மரபினங்களில் மலாயர்களே ஏனைய உபமரபினங்களை விட எண்ணிக்கையில் அதிகமானவர்கள். இலங்கையில் கிட்டத்தட்ட மலாயர் சனத்தொகை அறுபதாயிரம். நாட்டின் மொத்த சனத்தொகையில் கிட்டத்தட்ட இது 0.3 சதவீதமாகும். நாட்டின் மொத்த முஸ்லிம் சனத்தொகையில் கிட்டத்தட்ட 4 சதவீதமாகும்.[i]*

*இந்த எண்ணிக்கையை ஆசிஃப் ஹுஸெய்ன் 2011 இல் மூன்றாவது பதிப்பாக வெளிவந்த தனது செரண்டிப் என்கிற நூலில் தருகிறார். அதேநேரம், 1993 இல், அதாவது செரண்டிப்புக்கு கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்கு முன்*



Sri Lankan Malay Father and Son

Image Source - wikimedia.org

*எம். எம். எம். மஹ்ரூஃப் தான் எழுதிய Community of Sri Lanka Malays: Notes Toward a SocioHistorical Analysis என்கிற கட்டுரையில் மலாயர் சனத்தொகை ஐம்பதாயிரத்துக்கும் குறைவு என்கிறார். அவர்கள் மொத்த முஸ்லிம் மக்கள் தொகையில் இருபதுக்கு ஒன்று என்றும், நாட்டின் மொத்த சனத்தொகையில் முந்நூறுக்கு ஒன்று என்ற எண்ணிக்கையிலும் உள்ளனர்.[ii]*

*இந்த முடிவுகளின்படி பார்த்தால் ஒரு இருபது வருட காலப்பகுதிக்குள் அவர்களின் சனத்தொகை கிட்டத்தட்ட 10,000 பேரால் வளர்ச்சியடைந்திருக்கிறது. ஆனால் விக்கிபீடியாவின் தகவலின்படி - 2012 சனத்தொகைக் கணக்கெடுப்புக்கிணங்க, மலாயர்களின் மொத்த சனத்தொகை 40,189 ஆகும். அதாவது நாட்டின் மொத்த சனத்தொகையில் 0.2 சதவீதமாகும்.*

*மலாயர்கள் இலங்கைக்கு 17 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில், ஒல்லாந்தரால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டனர். அவர்கள் ஒல்லாந்தரால் நாடு கடத்தப்பட்டவர்களாகவோ அல்லது தங்களின் இராணுவத்தில் சேவையாற்றுவதற்காகவோ கொண்டு வரப்பட்டனர் என பேராசிரியர் எம். ஏ. நுஃமான், மலாயர்கள் இலங்கைக்கு வந்ததன் பின்னணியைச் சொல்கிறார். இப்படி நாடுகடத்தப்பட்டவர்களில் மன்னர்கள், இளவரசர்கள், தளபதிகள், உயர்குடிகள் என முக்கியமானவர்களும் உள்ளடங்கி இருந்தனர். மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் டச்சுச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இவர்கள் சவாலாக விளங்கியதனால் நாடு கடத்தப்பட்டனர்.[iii]*

*ஆயினும் அதற்கு முன்னரே மலாயர்களுக்கு இலங்கையுடன் தொடர்பு இருந்து வந்திருப்பதை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். நுஃமானும் தனது ஆய்வில் அதனைக் குறிப்பிடுகிறார். இலங்கையின் வரலாற்று நூலான சூளவம்சத்தின்படி மலேசியத் தீபகற்பத்தின் மன்னனான சந்திரபானு 13ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் இலங்கையை ஆக்கிரமித்து யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாக ஆனான்.[iv]*



Three Malay ladies
Image Source - www.roots.gov.sg

*தவிர, இலங்கையின் புவியியல் அமைவிடமும் மலாயர்களின் இலங்கை வருகைக்கு ஒரு காரணமாக இருந்தது. இந்தோனோசியத் தீவுக்கூட்டத்துக்கும், மடகஸ்காருக்குமிடையே இந்து சமுத்திரத்தின் மத்திய பகுதியில் இலங்கை அமைந்திருந்ததால் கடல்வழி மலாயர்கள் தங்கள் பயணப்பாதையில் தங்குவதற்காக இலங்கையை நாடிக் குடியேறிய வரலாற்றுச் சம்பவத்தை பேராசிரியர்களான ஹ ஸைன்மியா, எம்.ஏ. நுஃமான் போன்றவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அவர்கள் சாவகச்சேரி (ஜாவகச்சேரி Java settlement) எனுமிடத்தில் குடியேற்றத்தை அமைத்தனர். தெற்கில் ஹம்பாந்தோட்டையில் குடியேறினர். மலாய் மொழியில் படகைக் குறிக்கும் Sampan என்ற சொல்லில் இருந்தே ஹம்பாந்தோட்டை எனும் பெயர் உருவாகி இருக்கிறது. சிங்களத்தில் "ச" என்பதற்கு பதிலாக "ஹ" வையும் சாதாரணமாகப் பயன்படுத்துகின்றனர். இதன் மூலம் சிங்களப் பண்பாட்டோடு ஓரளவு மலாய்ப் பண்பாட்டுக்கு ஒட்டுறவு ஏற்பட்டிருப்பதையும்*


அறிய முடிகிறது. படகைக் குறிக்கும் 'ஒறுவ' எனும் சொல்லை இவர்களிடமிருந்தே சிங்களமொழி பெற்றுக்கொண்டது. இலங்கை மலாய் சமூகத்தைச் சேர்ந்த பேராசிரியரான ஹுஸைன்மியா ஒல்லாந்தர் காலத்தில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட மலாயர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து நோக்குகிறார். முதல் குழுவினர் இந்தோனோசியாவிலிருந்து அரசியல் காரணங்களுக்காக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர்கள். இரண்டாவது குழுவினர் இராணுவ சேவை உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக ஒல்லாந்தரால் மலேசியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவர்கள் என்கிறார்.



Malay Girl

Image Source - www.imagesofceylon.com


இலங்கையில் மலாயர்களின் குடியேற்றத்தைப் பொறுத்தவரை மேல் மாகாணத்திலும், மத்திய மாகாணத்திலுமே எண்ணிக்கையில் அதிகமாக உள்ளனர். இதற்குக் காரணம் மேல் மாகாணம் காலனித்துவ சக்திகளின் முக்கியமான தளமாக விளங்கியது. அவர்களது படைச்சேவகர்களாகவும், பணியாளர்களாகவும் அவர்கள் செயற்பட்டதால் மேல்மாகாணம் அவர்களுக்கு தோதான இடமாக அமைந்தது. மத்திய மாகாணமும் கண்டி இராச்சியத்தின் முக்கிய நகரமாக விளங்கியது. அதனால் அங்கும் மலாயர் சனத்தொகை ஏனைய இடங்களோடு ஒப்பிடுகையில் சற்று அதிகமாக இருப்பதாக மஹ்ரூஃப் குறிப்பிடுகிறார். ஏனைய இடங்கள் அவர்களது விசேட ஆற்றல்களுக்குப் பொருத்தமான களம் அல்ல என அவர்கள் உணர்ந்ததனால் தங்களது குடியேற்றங்களை மலாயர்கள் அடர்த்தியாக அமைக்கவில்லை எனவும் கூறுகிறார். முதன்மையான அசல் மலாயர்கள் ஒல்லாந்தரால் நிர்வகிக்கப்பட்டு வந்த நீர்கொழும்பு, கல்பிட்டி போன்ற டச்சுக் கோட்டைகளைத் தளமாகக் கொண்ட இடங்களில் குடியேற்றங்களை அமைத்திருந்தனர். அவை படைக்குடியிருப்புகளாகவே கருதப்பட்டன. ஒல்லாந்தரின் இராணுவத்தில் பணியாற்றிய மலாய் ஆண்களின் குடியிருப்பாக அது இருந்தது. பின்னர் அவர்கள் குடும்பமாக அங்கு குடியமர்த்தப்பட்டனர். அவர்களுக்கான தொழுகையறையும் அங்கு அமைக்கப்பட்டது. பின்னர் அது பள்ளிவாசலாக வளர்ச்சியடைந்தது. பள்ளிவாசல் பராமரிப்புக்கான முஅத்தின்கள், இமாம்கள் என இன்னும் மக்கள் தொகை சற்றே அதிகரித்தது. ஒரு குடியிருப்பிலிருந்த மலாய் சிப்பாய் இன்னொரு குடியிருப்புக்கு இடமாற்றம் செய்யப்படும்போது அந்த வெற்றிடத்துக்கு இன்னொரு மலாய் சிப்பாய் வந்து சேர்வார். இப்படி அந்தக் குடியிருப்பின் தொடர்ச்சி பேணப்பட்டது.



Malay Man

Image Source - www.imagesofceylon.com

மலாயர்கள் ஒல்லாந்தருக்குப் பின்னர் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்திலும் தங்களது இராணுவசேவையைத் தொடர்ந்து மேற்கொண்டனர். இலங்கையின் கரையோரப் பகுதி ஒல்லாந்தர் வசம் இருந்தபோது ஒல்லாந்தர் தங்களது கோட்டைகளையும், கட்டுப்பாட்டுப் பகுதிகளையும் பாதுகாப்பதில் மலாயர்களையே சார்ந்திருந்தனர். ஆங்கிலேயர்




Unique Malay club – oct. 1927

இலங்கையைக் கைப்பற்ற முனைந்தபோது கடல்மார்க்கத்தில் ஒல்லாந்துப் படைகளோடு சேர்ந்து பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக மலாயர் படையும் போரிட்டது. பின்னர் ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்றும் போராட்டத்திலும் மலாயரின் உதவி அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.
இலங்கை மலாயர்கள் தங்களை இன அடையாளம் சார்ந்து மலாய் மக்கள் (The Malay People) அல்லது ஜாவா மக்கள் (People of Java) என்றே அழைத்துக் கொள்கின்றனர். தமிழில் சாவாகர் (Cavakar) எனக் குறிக்கப்படுகின்றனர். இலங்கை முஸ்லிம்கள் இவர்களை ஜாவாக்கள் என்றே அழைக்கின்றனர். சிங்கள மக்கள் இவர்களை "ஜா மினிஸ்சு" என அழைக்கின்றனர்.

இலங்கை மலாயர்கள் மலாய் மொழியையே பேசி வந்தனர். ஒரு காலத்தில் இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவையில் "மலாயர் மஞ்சரி" என்றொரு சமூகச் சித்திர நிகழ்ச்சி மலாய் மொழியில் ஒலிபரப்பாகியது. ஆனால் இலங்கையில் கல்விமொழியாக மலாய் மொழி ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதனால் காலப்போக்கில் அது மலாயர்களின் வீட்டு மொழியாக மட்டும் சுருங்கியது.
அவர்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் இவற்றில் ஏதேனுமொரு மொழியையே தங்கள் கல்வி மொழியாகத் தேர்வு செய்ய வேண்டி இருந்தது. 1950களில், சுதேசமொழிக் கல்வி அறிமுகப்படுத்தப்படும் வரை, பெரும்பாலான இலங்கை மலாய்க்காரர்கள் தங்கள் கல்வி மொழிமூலமாக ஆங்கிலத்தைத் தேர்ந்தெடுத்தனர். 1950களில் அவர்களில் பெரும்பாலானோர் சிங்கள மொழிக்கு மாறினர். ஒப்பீட்டளவில் சிறிய எண்ணிக்கையினர் தமிழ் மொழிக்கும் மாறினர்.[v]

சோனகரிடமிருந்து அவர்களை பண்பாட்டு ரீதியாக வேறுபடுத்திக் காட்டியது மொழி மட்டுமே ஆகும். அவர்கள் தமிழுக்கு மாறியதுடன் அந்த தனித்துவத்தையும் இழந்தனர். இப்படித்தான் இலங்கை மலாயர்கள் தங்களது மொழி அடையாளத்தை இழந்தனர். பிறகு மத அடையாளம் சார்ந்து பார்த்தால் அவர்கள் சோனகருடனேயே இணைய வேண்டி இருந்தது.
ஆனாலும் அவர்கள் தங்களை ஒரு தனியான (அவர்கள் உண்மையில் ஒரு தனியான மரபினமே), தேசிய இனமாக அங்கீகரிக்குமாறு

ஆங்கிலேயரிடம் கோரிக்கை விடுத்தனர். இதன் தொடர்ச்சியாக இலங்கை வாழ் மலாயர்களை ஒன்றிணைக்கவும், மலாய் இன அடையாளத்தை வலியுறுத்தவும் அகில இலங்கை மலாய் சங்கம் (All Ceylon Malay Association) என்றொரு அமைப்பை 1922 இல் உருவாக்கினர். சட்டசபையில் தங்களுக்கான தனிப் பிரதிநிதித்துவத்தையும் கோரினர். தவிர இந்த அமைப்பு மலாயர்களின் தனித்துவ அடையாளத்தை வலுப்படுத்தும் பொருட்டு அந்த மொழியில் இலக்கியப் படைப்புகளை உருவாக்கவும் விரும்பியது. ஆனால் எதுவும் வெற்றிபெறாமல் கடைசியில் அவர்கள் சோனகர்களுடன் உட்திருமணங்களைப் புரிந்து கலந்து இலங்கை முஸ்லிம்கள் என்ற பேரடையாளத்துள் நுழைந்தனர்.

1900 ஆண்டுவாக்கில் இலங்கை முஸ்லிம்களின் சமூக அமைப்பு வேறுபட்ட வகைகளில் காணப்பட்டது. உண்மையில், இலங்கையரை இன அடிப்படையிலான அரசியல் சமூகங்களாக பிரித்தானியரே மாற்றியமைத்தனர். இலங்கையை பிரதானமாக மூன்று சமூகங்களாகவே அவர்கள் ஆக்கினர். இலங்கையரை இப்படி ஆழமாக இனரீதியாகவும், அரசியல்ரீதியாகவும் பிளவுபடுத்தியவர்கள் பிரித்தானியர்களே. தமிழ் பேசும் சமூகத்தையும் அவர்கள் இரு சமூகங்களாகவே ஆக்கினர். தமிழர்கள் - சோனகர்கள் என இருசமூகங்களாக தமிழ் பேசும் மக்கள் அரசியல் அர்த்தத்தில் இரு இனங்களாக பிளவுற்றனர். இவ்வாறு இனங்களை அரசியல் மற்றும் பண்பாட்டு ரீதியாக வேறுபடுத்திவிட்டு அதேநேரம் ஒவ்வொரு சமூகத்தையும் உள்ளகரீதியாக ஒழுங்குபடுத்தினர். இலங்கையில் குடியேறி இருந்த மலாயர்கள் இந்தோனோசியாவிலிருந்தும், மலேசியாவிலிருந்தும் வந்தவர்கள் என்பதைப் பார்த்தோம். பிரித்தானியரது காலத்தில் அவர்கள் அனைவரும் மலாயர் எனும் ஓர் இன அடையாளத்துக்குள் கொண்டுவரப்பட்டனர். இதனையே சிங்கள சமூகத்திலும், தமிழ்ச் சமூகத்திலும் செய்தனர். வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழ்ந்த பழங்குடிகளையும், ஏனைய உப மரபினங்களையும் சிங்களவர்களோடு இணைத்தனர். அதேபோன்று கிழக்கிலிருந்த பழங்குடிகளையும், உப மரபினங்களையும் தமிழரோடு இணைத்தனர். இவ்வாறே மலாயர்களும் மதரீதியாக இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்கள் என்பதால் சோனகரோடு இணைந்து தங்களது இன அடையாளத்தை பண்பாட்டுரீதியாக ஒழுங்கமைத்துக் கொள்வதற்கான சாத்தியங்களுக்கு வழிகோலினர். இப்படித்தான் (ஓரளவு) பிரித்தானியர் காலத்திலேயும், அதற்குப்பின்னரும் இங்கு இஸ்லாத்தை மதமாகப் பின்பற்றி வந்த பல்வேறு இனக்குழுக்களும் சோனகரோடு இணைந்து இலங்கை முஸ்லிம்கள் என்ற பேரடையாளத்தைப் பூண்டனர்.

ஆனால் உண்மையில் மலாயர்கள் ஒரு தனித்துவமான மரபினம் தான். இலங்கை அரசியல் சூழலைக் கவனத்திற்கொண்டும், அவர்களது எதிர்கால நலன்களைக் கவனத்திற்கொண்டும் அரசியல் ரீதியாக மலாயர்கள் இலங்கை முஸ்லிம்கள் என்ற அடையாளத்துள் தங்களை பொருத்தியுள்ளனர். ஆயினும், அவர்கள் பெரும்பாலும் இந்த மரபின வேறுபாட்டைக் கவனத்திற்கொண்டு சில இடங்களில் அதனைப் பேணவும் செய்கின்றனர். கிழக்கில் மலாயர்கள் இன்று மிகச் சொற்பமான எண்ணிக்கையிலேயே வாழ்கின்றனர். அவர்களை முஸ்லிம்கள் ஜாவாக்கள் என்றே அழைக்கின்றனர். முஸ்லிம்களுடன் மேற்கொள்ளப்பட்ட திருமண உறவு மூலம் அவர்கள் முஸ்லிம்களுடன் தனித்துவ எல்லைகளற்றுக் கரைந்துள்ளனர். ஆயினும் சில ஆண்களுக்கு மட்டும் இன்றும் துவான் என்ற பெயரைச் சூட்டுகின்றனர். இன்றைய புதிய தலைமுறையில் அந்த மரபும் மிகவும் அருகிக் கொண்டு வருவது போலவே தோன்றுகின்றது.

**அடிகுறிப்புகள்**

*[i] Asiff Hussein -Sarandib (Neptune publication) p. 650*
*[ii] M.M.M. Mahroof The sub communities of the Muslims of SriLanka. (Exploring SriLankan Muslims: selected writing of MMM.Mahroof, edited by M.L.A. Cader, South Eastern University of Sri Lanka) p. 45*
*[iii] ibid p.21*
*[iv] M.A.Nuhman Sri Lankan Muslims: Ethnic Identity within Cultural Diversity (International Centre for Ethnic Studies) p. 21*
*[v] ibid p.22*

(தொடரும்)

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப்பட்டிருக்கும் சூழலில், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அந்தவகையில் 'இலங்கையின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள்' என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.




● பரமு புஷ்பரட்ணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம் அவர்கள், தனது இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தைத் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார்.
இவர் எழுதிய பதினைந்து நூல்களில் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும், மூன்று நூல்கள் மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றன. இவர் 82இற்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், இதுவரை 55 சர்வதேச மற்றும் தேசிய கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார்.
வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 18 இடங்களில் இவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் மூன்று அகழ்வாய்வுகள் தொடர்பான விடயங்கள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.


# அம்பாறை மாவட்டத்தின் வரலாற்றில் இருந்து மறைந்து போகும் ஒரு சைவத் தமிழ்க் கிராமம்

அண்மையில் மட்டக்களப்பின் சமூக ஆர்வலரும், வரலாற்றுப் பட்டதாரியுமான திரு. வை. சத்தியமாறன் இணையத்தளம் ஒன்றில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள புராதன சிவன் ஆலயம் ஒன்றின் புகைப்படங்களைப் பிரசுரித்து அவ்வாலயம் தமிழர்களால் பாதுகாக்கப்படவேண்டும் என்ற தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார். அந்தப்புகைப்படங்களில் இருந்து அது ஒரு புராதன ஆலயமாக இருக்கலாம் என்பதை கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் எஸ். சிவகணேசனிடம் எடுத்துக் கூறிய போது அவ்விடத்தில் ஆய்வு செய்வதற்கான சகல ஏற்பாடுகளையும் அவர் மேற்கொண்டிருந்தார். அவரின் முயற்சிக்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர், கலைப்பீடாதிபதி ஆகியோர் வழங்கிய ஆதரவும், உதவிகளும் ஆய்வுக் குழுவினரைப் பெரிதும் உற்சாகப்படுத்தின. இந்த ஆய்வுக்குழுவில் வரலாற்றுத் துறை தலைவர் எஸ். சிவகணேசன், மற்றும் விரிவுரையாளர் செல்வி கிறிஸ்ரினா, நிரோசினி, ஊடகவியலாளர் வை.சத்தியமாறன் ஆகியோருடன் கிழக்குப்



அம்பாறை மாவட்டத்தில் ஆலங்குளம் என்ற இடத்தில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வின்போது

பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி தில்லைநாதன் அவர்களும் இணைந்து கொண்டமை ஆலயம் அமைந்துள்ள வட்டாரத்தின் சமூக நிலைமைகளை அறிந்துகொள்ளப் பெரிதும் உதவியது.

இந்த ஆலயம் அம்பாறை மாவட்டத்தில் தீகவாபி, குடுவில் ஆகிய வட்டாரங்களை

உள்ளடக்கிய ஆலங்குளம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இவ்வட்டாரத்தில் புழக்கத்தில் இருந்து வரும் பல இடப்பெயர்கள் பண்டுதொட்டு இங்கு தமிழர்கள் வாழ்ந்து வந்ததன் அடையாளங்களாகக் காணப்படுகின்றன. ஆயினும் தற்போது இங்கு ஒரு தமிழ்க் குடியிருப்பைத் தானும் காணமுடியவில்லை. இந்நிலையில் ஆலயச் சுற்றாடலில் பரந்த அளவில் வாழ்ந்து வரும் ஏனைய இன மக்கள் தமிழர்கள் இங்கு வாழவில்லை எனவும் அவர்கள் கரும்புத் தோட்டங்களில் வேலைசெய்வதற்காக இங்கு வந்த போது அவர்களின் வழிபாட்டுக்காகவே முன்பொரு காலத்தில் கட்டப்பட்ட ஆலயமே தற்போது அழிவடைந்த நிலையில் காணப்படுகிறது என அவர்கள் எம்மிடம் கூறிய புதுக்கதை எமக்கு அதிர்ச்சியான செய்தியாக இருந்தது.

ஏனெனில் இற்றைக்கு ஐந்து சகாப்தங்களுக்கு முன்னரே குடுவில் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களை ஆய்வு செய்த பேராசிரியர் பரணவிதான அக்கல்வெட்டுக்களில் ஒன்றை ஆதாரமாகக் காட்டி இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்விடத்தில் வாழ்ந்த “திஸ” என்ற தமிழ்ப் பெண்ணின் தலைமையில் தமிழ் வணிகர்கள் ஒன்று சேர்ந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதை உறுதிப்படுத்தி இருந்தார்.

பேராசிரியர் இந்திரபாலா இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் மொழியால் ஒரு இனக்குழுவாக வாழத் தொடங்கியதற்கு இந்தக்கல்வெட்டையும் முக்கிய ஆதாரமாகக் காட்டுகின்றார்.

அண்மையில் கிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வில் எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள்



**அம்பாறை மாவட்டத்தில் ஆலங்குளம் என்ற இடத்தில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வின்போது**

பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தச்சாசனங்கள் தமிழ் மொழியில் தமிழ் வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ளன.

அவற்றுள் நாகன், ணாகன், தம்பன், வண்ணக்கன் முதலான பெயர்கள் பொறித்த சாசனங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இந்தச்சாசனங்கள் பற்றி பேராசிரியர் பத்மநாதன் அண்மையில் வெளியிடப்பட்ட நூல் ஒன்றில் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இவ்வகையான மட்பாண்டச் சாசனங்கள் தமிழகத்தை அடுத்து கிழக்கிலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை கிழக்கிலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றுக்கு புதுவெளிச்சமூட்டுவதாக உள்ளது. தொல்லியல் அறிஞர்கள் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு பெருங்கற்காலப் பண்பாடு என்ற புதிய நாகரிகத்தை அறிமுகப்படுத்தியவர்கள் நாக இன மக்கள் எனக் கூறுகின்றனர். இப்பண்பாட்டு மக்கள் கிழக்கிலங்கையில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களில் நாகன், ணாகன் முதலான பெயர்கள் இடம்பெற்றிருப்பது கிழக்கிலங்கையில் வாழ்ந்த பூர்வீக தமிழர்கள் நாக இனக்குழுவைச்



**அம்பாறை ஆலங்குள ஆலயத்தின் தோற்றம்**



**அம்பாறை மாவட்டத்தில் ஆலங்குளம் என்ற இடத்தில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வின்போது**

சேர்ந்தவர்கள் என்பதை மேலும் உறுதி செய்வதாக உள்ளது.

இவ்வரலாற்றுப் பின்னணியிலேயே அம்பாறை ஆலங்குள ஆலயத்தின் தோற்றத்திற்கான காரணங்களை நோக்குவது பொருத்தமாகும். நீண்ட காலத்திற்கு முன்னரே ஆலங்கேணியில் வாழ்ந்த தமிழர்கள் இவ்வாலயத்தைக் கைவிட்டதன் காரணமாக தற்போது இவ்வாலயம் பெருமளவுக்கு அழிவடைந்து ஆலமரங்களுக்கு மத்தியில் வழிபட முடியாத ஆபத்தைத் தரும் வெறும் கட்டடமாகக் காணப்படுகின்றது.

ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் வளர்ந்துள்ள பெரிய ஆலமரங்களின் கிளைகளும், வேர்களும் ஆலயச் சுவர்கள் சிலவற்றிற்கு பாதுகாப்பு அரண்களாக உள்ளன. இவ்வாலயம் சிறிய விமானத்துடன் கூடிய கர்ப்பக்கிரகம், அந்தராளம், முன்மண்டபம், பலிபீடம், கொடிக்கம்பம் என்பவற்றைக் கொண்டு கட்டப்பட்டதை ஆய்வுக் குழுவினரால் அடையாளப்படுத்த முடிந்தது.

நீண்டகால வரலாற்றைக் கொண்டிருக்கும் இவ்வாலயம் பிற்காலத்தில் சீமெந்து கொண்டு மீள் உருவாக்கம் செய்யப்பட்டதை ஆலயத்தின் கட்டட வடிவங்களும் விமானத்தின் கலை வடிவங்களும் உறுதி செய்கின்றன. ஆயினும் இவ்வாலயம் மிகத் தொன்மையானதென்பதை ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் புதையுண்டு காணப்படும் பெருமளவு செங்கற்கள் உறுதிசெய்கின்றன. அதிலும் கற்பக்கிரகம், அந்தராளம் என்பவற்றின் உட்பாகங்கள் முழுக்க செங்கற்களால் கட்டப்பட்டவையாகக் காணப்படுகின்றன. செங்கற்கள் கொண்டு கட்டப்பட்ட அந்தராளத்தின் முன்பக்கச் சுவர் சீமெந்து கொண்டு பூசப்பட்ட நிலையில் செங்கற் சுவர் தெளிவாகக் காணப்படுகிறது. இந்த வேறுபாடுகளைக் கொண்டு செங்கற்களால் கட்டப்பட்ட கர்ப்பக்கிரகம், அந்தராளம் ஆலயத்தின் தொடக்ககால நிலையில் அதன் வெளிப்புறம் மட்டும் பிற்காலத்தில் சீமெந்து கொண்டு மீள் உருவாக்கம் செய்யப்பட்டதாகவும், முன் மண்டபம், பலிபீடம் முதலான கட்டடங்கள் ஆலயம் தோன்றிய கால அத்திபாரங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டதாக அல்லது ஆலயத்தை விரிவுபடுத்த பிற்காலத்தில் சீமெந்து கொண்டு கட்டப்பட்ட ஆலயப் பாகங்களாக இருக்கலாம் எனக் கூறமுடியும்.

இவ்வாலயத்தின் தோற்றகாலத்தை உறுதியாகக் கூறக்கூடிய கல்வெட்டுக்களோ விக்கிரகங்களோ இதுவரை கிடைக்கவில்லை. ஆலயத்தின் கர்ப்பக்கிரகம், அந்தராளம் என்பவற்றிற்கு உள் நுழைய முடியாதவாறு பெரிய ஆலமர வேர்கள் காணப்படுகின்றன. அதற்குள் கொடிய விசப்பாம்புகள் குடியிருப்பதற்குரிய தடயங்கள்

பரவலாகக் காணப்படுகின்றன. இதனால் அச்சமின்றி அந்தக்கட்டடப் பகுதிகளுக்குச் சென்று ஆய்வை மேற்கொள்ள முடியவில்லை. இருப்பினும் வெளியில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு கர்ப்பக்கிரகத்தில் தெய்வ விக்கிரகங்களை வைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பீடம் முழுமையாக சிதைவடைந்துள்ளமை தெரிகின்றது. அவ்விடம் ஆழமாகத் தோண்டப்பட்டு பீடம் இருந்த இடம் பெரும் குழியாகக் காணப்படுகின்றது. பீடத்தின் பின்பக்கச் சுவரில் இருக்கும் திருவாசி புகைபடர்ந்த நிலையில் அதன் கலை வடிவங்கள் தெளிவற்றுக் காணப்படுகின்றன.

இருப்பினும் எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு இவ்வாலயம் மிகப் பழமையானது என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. அவற்றுள் கர்பக்கிரகத்தின் மேற்பக்கச் சுவரில் குறுக்காகவைக்கப்பட்ட நான்கு கற்பலகைகள் மீது மேல் நோக்கி வட்டமாக இரு தளங்களில் கட்டப்பட்ட விமானத்தின் அமைப்பு, விமானம் அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட செங்கற்களின் அமைப்பும் அவற்றின் நீள அகலங்கள், கர்ப்பக்கிரகம், அந்தராளம் என்பவற்றின் வடிவமைப்பு, அவற்றின் நீள அகலங்கள், வாசற்பகுதிகளில் அமைக்கப்பட்ட அகலமான கற்தூண்கள் என்பன 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொலநறுவை, திருமங்களாய் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட சோழர் கால ஆலயங்களை நினைவுபடுத்துவதாக உள்ளன.

எதிர்காலத்தில் தொல்லியல் திணைக்கள



அம்பாறை ஆலங்குள ஆலயத்தின் தோற்றம்



அம்பாறை ஆலங்குள ஆலயத்தின் தோற்றம்

அனுமதியுடன் இவ்வாலயப் பகுதியில் விரிவான தொல்லியல் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டால் இவ்வாலயத்தின் தோற்றகாலம், அதன் கலைமரபுகள், வழிபடப்பட்ட தெய்வங்கள், காலரீதியான ஆலய வளர்ச்சி மாற்றம் ,ஆலயத்திற்கு சொந்தமாக இருந்த அசையும் அசையாத சொத்துக்கள் , ஆலயத்தைப் பராமரித்த மக்கள், வழிபாட்டு மரபுகள் தொடர்பான பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும் என்பதில் ஐயமில்லை. (தொடரும்)



அம்பாறை ஆலங்குள ஆலயத்தின் தோற்றம்




மரியநாயகம் நியூட்டன்

சமூக ஆய்வாளர் மரியநாயகம் நியூட்டன் அவர்கள் 14 வயதில் ஈழத்திலிருந்து நோர்வே நாட்டுக்கு புலம்பெயர்ந்தவர். The Arctic University of Norway and NORD University Bod, Norway பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்த இவர் இன்று வரை இலங்கையின் அரசியல், சமூக விடயங்கள் சார்ந்து பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். நோர்வே மாநில மற்றும் நகராட்சி நிர்வாகங்களில் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். தற்போது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அரசியல் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றார்.



‘காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்’ என்ற இந்தக் கட்டுரைத் தொடரானது இலங்கையின் வடக்குக் கடற்பகுதி மீன்பிடி சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பரிமாணம் பற்றி ஆராய்கின்றது. இந்து சமுத்திரப் பிராந்திய கடல் அரசியலை விமர்சனப் பார்வையுடன் ஆராய்கின்ற இந்தத் தொடரானது, இலங்கையின் கடல் வளம் எவ்வாறு சர்வதேச சக்திகளால் கூறுபோடப்பட்டு சுரண்டப்படுகின்றது என்பதையும் அதன் பின்னணியிலுள்ள உள்ளூர் சக்திகளை ஆதாரங்களுடன் வெளிப்படுத்துவதாகவும் அமைகிறது. மேலும், இலங்கைத் தமிழ் கடல்சார் மக்களின் கடல் தொடர்பான இறைமை, அதில் அவர்கள் சுதந்திரமாக மீன்பிடித்து தமது வாழ்வாதாரத்தை தேடும் உருத்து என்பவை தொடர்பிலும் இந்தக் கட்டுரைத் தொடர் பேசவுள்ளது.


# பட்டினியாக நாங்களும் களவாடப்படும் எங்கள் நீலப் பிரபஞ்சமும்

### பாரம்பரிய மீன்பிடித்தல் மற்றும் கடலுணவு விவசாயம்

பூமியின் மேற்பரப்பின் பெரும்பகுதி கடலாகவுள்ளது. மனிதர்களாகிய நாம் எண்ணற்ற வழிகளில் கடலைச் சார்ந்திருக்கின்றோம். கடலில் இருந்து வரும் உணவானது, மீன்பிடித்தல் மற்றும் மீன்வளர்ப்பு ஆகிய இரண்டு தொழில்வகை மூலம் நமக்குக் கிடைக்கிறது. கடலுணவானது மலிவானதும், இலகுவாகவும் கிடைக்கக்கூடிய ஊட்டச்சத்து ஆகும். அத்துடன், கடலுணவு உற்பத்தியானது, பல கோடி பேருக்கு தொழில் வாய்ப்பை வழங்குவதன் மூலம், பெரும் வாழ்வாதார அடிப்படையாகவும் உள்ளது.

கடல் உணவுத் துறையானது ‘பாரம்பரிய மீன்பிடித்தல்’ மற்றும் ‘கடலுணவு விவசாயம்’ ஆகிய இரண்டு தொழில் முறைகளிலும் பாரிய வளர்ச்சியை கண்டவண்ணமுள்ளது. கடலுணவு விவசாயம் கடந்த 20 வருடங்களில் பாரிய வளர்ச்சியைக் கண்டு வருகிறது. ஆனாலும், இந்த வளர்ச்சியானது பாரம்பரிய மீன்பிடியை சார்ந்ததாகவே இருந்து வருகிறது.



- பாரம்பரிய தொழில் செய்யும் கடற்பிரதேசத்தை ஆக்கிரமித்து கடல்விவசாயப் பண்ணைகளை உருவாக்கல்.
- சுயாதீன மீன்பிடித் தொழிலாளர்களை கடல் விவசாயத் தொழிற்துறையின் கூலிகளாக்குதல்.
- கடலுணவு விவசாயத்திற்கு முக்கியமான பொருட்களில் ஒன்றான, வளர்ப்பு மீனினத்துக்கான / இறால் / நண்டு இனத்துக்கான தீவன உற்பத்தியில் வழமையான மீன் பிடியைச் சார்ந்திருத்தல்.


அதாவது, ரோலர் மற்றும் ஆள் கடல் மீன்பிடியில் பெறப்படும் சிறு மீனினங்கள் (சூடை, சாளை, நெத்தலி போன்றவை) உலர்த்தப்பட்டு, அரைத்து வளர்ப்பு மீன்களுக்கான தீவனமாக ஆக்கப்படுத்தல்.

சர்வதேச வர்த்தகத்தில் கடலுணவு விவசாயமானது தனது செல்வாக்கை அதிகரித்து கொண்டு போகும் இன்றைய நிலையில், மேற்கூறிய காரணங்களினால், இவ் வளர்ச்சியானது அடிப்படையில் சூழலுக்கும், சமூக பொருளாதாரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் நிலையே அதிகரித்து வருகிறது.

இதில் குறிப்பாக கடல் விவசாயத்துக்கான தீவன உற்பத்திக்கு மீன்களை உபயோகிப்பது கடல்வளத்துக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்து வருகிறது. கடலின் இயற்கைக்கும், அதன் மீன்வளத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தாமல் மீன்பிடித் தொழில் செய்வதானால், கடலின் மீன்வளத்தில் 35 சதவீதத்தில் இருந்து அதிக பட்சம் 50 வீதம் வரை பிடிக்கலாம். ஆனால், இன்று அது 80 - 90 விகிதமாக அதிகரித்துள்ளது. இந்த தகவலை UNs Food and Agriculture Organization (FAO)/ உலக உணவு அமைப்பு (FAO, 2019 "Blue Growth") வெளியிட்டு, கடலின் மீன்வளத்தின் எதிர்காலம் சம்பந்தமாக கவலையைத் தெரிவித்துள்ளது.

மேற்படி கட்டற்ற மீன்பிடியின் அதிகரிப்புக்கு மிக முக்கியமான காரணமாக கடந்த 20 வருடங்களில் பாரிய வளர்ச்சியைப் பெற்றுவருவது கடல் விவசாயமென ஐக்கியநாடுகள் சபையின் உலக உணவு விவசாய அமைப்பு கூறுகிறது. கடலிலிருந்து பிடிக்கப்படும் 35 விகிதத்திற்கும் அதிகமான அளவு மீன்வளங்கள், கடல் விவசாயத்துக்குப் பயன்படும் தீவன உற்பத்திக்கே உபயோகப்படுத்தப்படுகின்றன.

நேரடியாகவே மனிதர்களால் உணவாக உண்ணக் கூடிய மிகவும் புரதம் நிறைந்த இந்த மீன்வகைகள், பெருமெடுப்பிலான கடல் விவசாயத்தில் தீவனமாக மாற்றப்படுகிறன. சர்வதேச தீவன வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகள், குறிப்பாக அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும், தமது கடல்வளத்தை பாதுகாத்தபடி, ஆசியஆபிரிக்க, தென் பசுபிக் சமுத்திர கடல்களில் மேற்கொள்ளும் கடல்வளக்




Sri Lankan territory and Exclusive Economic Zone (EEZ)

Image Source - www.news.lk

கொள்ளையை ஊக்குவிக்கின்றன. இந்த நாடுகளே சீனா, இந்தியா போன்ற நாடுகளிடமிருந்து தீவனத்தை பெருமளவில் இறக்குமதி செய்பவை. அதேவேளை, சீனா, இந்தியா போன்ற நாடுகள் பல வருடங்களுக்கு முன்பேயே தமது கடல்வளங்களில் பெரும்பகுதியை கட்டுப்பாடற்ற மீன்பிடியால்

அழித்து விட்டன.
சர்வதேச அரசியல், சூழலியல் மற்றும் சமூக முன்னேற்றம் போன்ற விடயங்களில் அதி உச்ச அபிவிருத்தி கண்டதாக கூறப்படும் நாடுகளின் முதல் வரிசையில் நிற்பவை ஸ்கண்டிநேவிய நாடுகளாகும். இதில், கடல் சார்ந்த உணவு உற்பத்தியில் உலக அளவில் முன்னிலை வகிக்கும் நாடு நோர்வேயாகும். இந்த நாடு தனது கடல்விவசாயத்துக்கு தேவையான தீவனத்தை சர்வதேசச் சந்தையிலேயே வாங்குகிறது. பல நூறு கோடி டொலர் பெறுமதியான தீவன வர்த்தகத்தை நோர்வே பெரும்பாலும் சீனாவுடனேயே செய்து கொள்கிறது.



சீன மீன்பிடிக் கப்பல்களானவை பல தசாப்தங்களுக்கு முன்பே தமது சொந்த கடல்வளத்தை துடைத்து அழித்து விட்டன. இப்போது, இந்து சமுத்திர கடற்பிராந்தியம், ஆபிரிக்கக் கண்டத்தின் மேற்கு மற்றும் கிழக்குக்கரையோரப் கடற்பிராந்தியம் மற்றும் வசதி கிடைக்கும் போதெல்லாம் பசுபிக் சமுத்திரத்தின் தென்பகுதியிலும் தீவன உற்பத்திக்கான மீன்களை சீனா பெருந்தொகையில் பிடிக்கின்றது.

மேலே கூறப்பட்ட கடற்பிராந்தியங்களுக்கு உரித்தான நாடுகள் பொருளாதார ரீதியான நன்மைகளையோ அல்லது பாதுகாப்பு அடிப்படையிலான காரணங்களையோ முன்னிறுத்தி சீனாவின் இந்தக் கடல்வளக் கொள்ளையைக் கண்டும் மௌனித்து இருக்கின்றன. இந்த வகையிலேயே நமது நெத்தலியும், சூடையும் பெருமெடுப்பில் களவாடப்படுகின்றன.

உதாரணமாக, இலங்கையின் கடற்பொருளாதார வலயத்துக்குள்ளும், அதற்கு வெளியிலிருக்கும் கடற்பகுதியிலும் சீனாவின் ரோலர்கள் இலட்சக் கணக்கான தொன் அளவில் சாளை, சூடை மற்றும் நெத்தலி போன்ற மீனினங்களைப் பிடிக்கின்றன. பிடித்த மீன்கள், மீன்பிடிக் கப்பல்களுடன் இணைத்து செயற்படும் தொழிற்சாலைக் கப்பலுக்கு மாற்றப்பட்டு, அங்கே தீவன உற்பத்தி நடைபெறும். உற்பத்தி செய்யப்பட்ட தீவனமானது அருகில் இருக்கும் துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து தீவனத்துக்கு 'ஓர்டர்' கொடுத்த நாடுகளுக்கு அனுப்பப்படும். சில சமயங்களில் நேரடியாகவே சீன வணிகக் கப்பல்களில் கடலில் வைத்தே தீவனப் பொதிகள் ஏற்றப்பட்டு அவை சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பப்படும்.

இந்தத் தீவனத்தை இறக்குமதி செய்யும் நோர்வே, தனது சல்மன் மீன்வளர்ப்பு பண்ணைகளுக்கு இத்தீவனத்தை உபயோகப்படுத்துகிறது. இலங்கையின் கடலில் பிடித்த நெத்தலி, சூடை, சாளை மீன்களினால் செய்யப்பட்ட தீவனம், நோர்வேயின் வடகடல் (North Sea) மீன்வளர்ப்பில் சல்மன் மீனுக்கு உணவாகப் போடப்படும். அந்த மீன்கள் 1422 மாதங்களில் 45 கிலோ நிறையை அடையும் போது, வளர்ப்பு கண்டிகளிலிருந்து பிடிக்கப்படும். பின்பு அவை 24 மணிநேரத்துக்கு உள்ளாகவே, இந்திய, சீன, ஜப்பானிய, ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் சந்தைகளுக்கு, தரை மற்றும் விமான மார்க்கங்கள் ஊடாக அனுப்பப்படும்.

எமது கடலில் பிடிக்கப்படும் / களவாடப்படும் மீன்வளத்தினால் இங்கு முதற்கட்ட இலாபத்தை சீனாவும், இரண்டாம் கட்டத்தில் பெருமளவு இலாபத்தை நோர்வேயும் பெற்றுக்கொள்கின்றன. அதேவேளை, இலங்கைக் கடலில் பிடிக்கப்படும் நெத்தலி மீனோ அல்லது சாளையோ எந்தவித மறு உற்பத்திக்கும் உட்படுத்தப்படாமலேயே மக்களால் உண்ணக் கூடியவை. நிறைந்த புரதத்தைக் கொண்டவை. இந்த மீன்களை சீனா பிடித்து மறு உற்பத்திக்கு உள்ளாக்கி மேலதிக பெறுமதியை கூட்டிக்கொள்கிறது (Value Added Production) பெரும் இலாபத்தையும் ஈட்டிக்கொள்கிறது.

இந்தப் பெறுமதி சேர்ப்பானது பொருளாதார/ சந்தை ரீதியில் விலையை அதிகரிக்கிறதே தவிர, அந்த மீன்களின் மனித உணவு சார்ந்த பயன்பாட்டின் அடிப்படையில் அல்ல. அந்த மீன்களை நேரடியாக சந்தையில் விற்றால் ஒரு

தொன் மீனின் விலை 30,000.(1000 kg X 30,) ரூபா. அவற்றை அரைத்து தீனியாக மாற்றும் போது, அண்ணளவாக, 200 kg தீவனமும், 120 லீட்டர் மீன் எண்ணெயும், உபரியாக 680 லீட்டர் நீரும் கிடைக்கும். தற்போதுள்ள சர்வதேசச் சந்தையின் மதிப்பில் (12.2022) 1kg தீவனம் 1.5 டொலருக்கும், 1 லீட்டர் மீன் எண்ணெய் 2 டொலருக்கும் விற்கப்படுகிறது. மார்கழி 2022 இல் சர்வதேச நாணய மதிப்பில் ஒரு அமெரிக்க டொலரின் பெறுமதி 360 ரூபா. இதன் மூலம் தீவனத்துக்கு 10,8000 ரூபாவையும், மீன் எண்ணெய்க்கு 86,400 ரூபாவையும் சீனா பெற்றுக்கொள்கிறது.

மொத்தத்தில் இலங்கை கடலில் கொள்ளை யடிக்கப்படும் ஒவ்வொரு தொன் சாளை, சூடை, நெத்தலி இன மீன்களுக்கு குறைந்தது 19,4400 ரூபாவை சர்வதேச தீவனச் சந்தையில் இலாப மீட்டுகிறது சீனா. இதில் உபரியாக கிடைக்கும் நீர் கூட (ஒரு தொன் மீனில் 680 லீட்டர் மீன் தண்ணீர் கிடைக்கிறது ) சர்வதேசச் சந்தையில் உணவு சுவையூட்டிகளை உருவாக்கும் தொழிற்றுறைக்கு விற்கப்படுகிறது. இதன் வருமானம் பற்றிய சரியான தகவலைப் பெற முடியவில்லை.

இலங்கை ஒரு அபிவிருத்தி அடையாத மீன் பிடி நாடு. உலக அளவில் பாரிய கடல்வளத்தைக் கொண்டிருக்கும் இலங்கையிடம், அந்த வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான மூலதனம், தொழில் நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு கிடையாது. நெத்தலியும், சூடையும், சாளையும் வாடைக்காற்று வீசும் பருவகாலத்தில் இலங்கையின் கரையிலிருந்து 50 கிலோ மீற்றருக்கு நெருக்கமாகவுள்ள கடற்பரப்பிற்குள் வரும்போது அவற்றைப் பிடிக்கும் திறனே நம்மிடமுள்ளது. ஆனால் சீன ரோலர்கள் வருடத்தில் எல்லாக் காலத்திலும், எந்தத் தூரத்திலும் வைத்து அம் மீன்களைப் பிடித்துக்கொள்ளும் திறன் வாய்ந்தவை.

வளம் குறைவான நாடாக நாம் இருந்த போதும், இலங்கையின் கடற்றொழிலாளர்களால் நமது மீன்வளம் பிடிக்கப்படும் போது அது நம் நாட்டின் மக்களுக்கு உணவாகிறது. சிறுவர்களுக்குப் போஷாக்காகிறது. பசிப்பிணி ஓரளவுக்குத் தீர்க்கப்படுகிறது. அத்துடன், பாரம்பரிய மீன்பிடி முறையை அல்லது சிறிய தொகையிலான மீன்களைப் பிடிக்கும் முறைமையை இலங்கை மீனவர்கள் உபயோகப்படுத்தும் போது (Sustainable Fishery Production), கடல்வளத்தை - மீன்வளர்ச்சியை பாதிக்கும் அளவில் பிடிக்க மாட்டார்கள். இதனால், கடல்வளம் பாதுகாக்கப்படும். மீன்வளம் தொடர்ச்சியாகப் பெருகிக்கொண்டே இருக்கும்.

இன்று சர்வதேச அளவில் நடைபெறும் கடல்வளக் கொள்ளையை நிறுத்த பல ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும் அவை எவற்றையும் கடலாதிக்கத்தை கொண்டிருக்கும் நாடுகளான சீனா, இந்தியா போன்ற நாடுகள் மதிப்பதில்லை . இலங்கை சர்வதேச அளவில் அதிகாரமற்ற நாடாக இருந்தாலும் கூட, தனது கடல்வளம் திருடப்படுவதை சர்வதேச சபைகளில் அம்பலப்படுத்த அதற்கு எந்தவித தடையுமில்லை. மக்கள் நலனைவிட, நமது வயிற்றுப் பசியைவிட, அன்றாடங்காய்ச்சிகளான வறுமைப்பட்ட சிறுவர்களின் போசாக்கு குறைபாடு என்பதைவிட இலங்கையின் அதிகார வர்க்கமும் நமது ஆட்சியாளர்களும், ஆதிக்க நாடுகளுக்கு அடிமைச் சேவகம் செய்வதே 'இலங்கை தேசத்தின் இறைமை' என்பது போல நடந்து கொள்கிறார்கள். கடல்



அழிவையும், இயற்கைவளக் கொள்ளையையும் எதிர்த்த போராட்டமும், சுபீட்சமான விடுதலையடைந்த சமுதாயத்தை உருவாக்கும் போராட்டமும் என்பது ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போலானவை என்பதை நமது நாட்டின் சமூக சிந்தனையாளர்கள் ஆழமாகப் புரிந்து கொள்ளல் வேண்டும்.

**உசாத்துணை :**


*Vera Mo . Norske penger i global sjømat Framtiden i våre hender / Etisk bankguide Rapport april — 2020 framtiden.no/aktuellerap porter/880retningslostilhavsnorskepengeriglobalsjomat/file.html*

*Steinar Alsos og Mattias Roligned Bergset «Enorme utslepp frå norsk lakseeksport» 13.03.2020 framtiden.no/202003057552/aktuelt/mat/enormeutsleppfranorsk lakseeksport.html*

*Bellona. 25.03..2007 «Fôrregnskap for oppdrett av laksefisk» bellona.no/nyheter/ukategorisert/200703forregnskapforoppdrettavlak sefisk*


(தொடரும்)





சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்

கால்நடை மருத்துவரான சி. கிருபானந்தகுமரன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கால்நடை மருத்துவ பட்டப்படிப்பினை மேற்கொண்டார் (BVSc, MVS). தமிழக, இலங்கை ஊடகங்களில் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் நடத்தைகள் தொடர்பான தொடர்களை எழுதி வருகிறார்.


கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிகமுக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையை பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைப்பதாக ‘இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரம்’ என்ற இத்தொடர் அமைகிறது.

# கால்நடைகளில் குடற்புழுக்களால் ஏற்படும் பொருளாதார இழப்புகளும் தீர்வுகளும்




Common internal parasites

Image Source - www.zoetis.com.

*இலங்கையின் பாலுற்பத்திக் குறைவில், கால்நடைகளில் ஏற்படும் குடற்புழுக்களின் தாக்கம் முக்கிய பங்கை வகிக்கிறது. குடற்புழுக்கள் கால்நடைகளின் குடல், இரப்பை போன்ற உறுப்புகளில் இருந்துகொண்டு ஊட்டச்சத்துகளையும் இரத்தத்தையும் உறிஞ்சுவதுடன் ஏராளமான நோய்கள் ஏற்படுவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துகின்றன. இவற்றைத் அழிக்கும் முறையான நீக்க மருந்துகளை எமது பண்ணையாளர்கள் வழங்குவதில்லை. குடற்புழு நீக்கம் என்னும் மிக முக்கியமான முகாமைத்துவ நடவடிக்கையை புறக்கணிப்பதால் பல கால்நடைகள் உற்பத்தி மட்டத்தில்*



**குடற்புழு தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கும் கால்நடை**

குறைவடைவதுடன் கணிசமான அளவில் இறந்தும் போகின்றன. கால்நடை உற்பத்தியில் முன்னணியில் உள்ள பல நாடுகளில் இந்த குடற்புழு நீக்கம் தொடர்பாக பல முக்கியமான ஆய்வுகள் செய்யப்பட்டு காலத்துக்கு ஏற்ப முறையான மருத்துவ முறைகள், உணவூட்டல் மற்றும் ஏனைய முகாமைத்துவ முறைகளை மேம்படுத்தி குடற்புழுத்தாக்கத்தில் இருந்து தமது கால்நடைகளின் இழப்பை குறைகின்றனர். இந்த கட்டுரை குடற்புழுக்களின் தாக்கம் அவற்றின் பொருளாதாரம் மற்றும் அவற்றை கட்டுப்படுத்துதல் போன்றவற்றை ஆராய்கிறது.

ஒவ்வொரு வருடமும் மாரி மழையின் பின்னரான காலப்பகுதியில் ஆடு, மாடு எருமை போன்ற கால்நடைகளில் கடும் வயிற்றோட்டம் மற்றும் பலவீனமான உடல் நிலையை அவதானிக்க முடியும். இது பெரும்பாலும் குடற்புழுக்களின் தாக்கத்தின் காரணமாகவே ஏற்படுகிறது. [இங்கு நான் குடற்புழு குறிப்பிடுவது வட்டப் புழுக்கள் [roundworms],கொக்கிப் புழுக்கள் [whipworm], நாடாப் புழுக்கள் [tapeworms], தட்டைப் புழுக்கள் [flatworms] போன்ற அக ஒட்டுண்ணிகளையே]

கால்நடைகளில் மேற்படி குடற்புழுத் தாக்கம் வருடம் முழுவதும் காணப்படுகின்ற பொழுதிலும் மழைக்காலத்தின் பின்னரான காலப்பகுதியில் தான் அதிக அளவு அவதானிக்கப்படுகிறது. மழைக்காலத்தில் நிலவும் ஈரலிப்பான சூழல் குடற்புழுக்கள் பெருகுவதற்கு சாதகமானது என்பதுடன் குடற்புழுக்களின் வாழ்க்கை வட்டம் பூர்த்தியாகக் கூடிய இடை நிலைக்காவிகளான [intermediate host] நத்தைகளின் பெருக்கமும் நிகழும் காலம் என்பதாலும் மழைக்கு பின்னரான மாதங்களில் அதிகளவில் குடற்புழு நோய் தாக்கத்தையும் இழப்புகளையும் அவதானிக்க முடிகிறது.

### குடற்புழு தாக்கத்தின் அறிகுறிகள்


· கால்நடைகளின் உடல் கடுமையாக மெலிவடையும்
· வயிறு பானை போல திரவம் நிறைந்து காணப்படும் [Ascitis]
· உரோமம் சிலிர்த்து காணப்படும். சிலவேளைகளில் உரோமம் வரண்டும் காணப்படும்

· கழுத்துப் பகுதி வீங்கியது போல காணப்படும். இதனை தந்தம் வீங்கியது என்றும் சொல்வார்கள் [ bottle jaw]
· கால்நடைகளின் கண் மடல், முரசு பகுதிகள் வெளிறிய இரத்தச் சோகை நிலமை அவதானிக்கப்படும் [Anemia]

· கழிச்சல் அவதானிக்கப்படும். சில வேளைகளில் இரத்தத்துடன் கூடியதான கழிச்சலை காண முடியும். தொடர்ச்சியான கழிச்சல் காரணமாக கால்நடைகளின் பின்புறம் எப்போதுமே ஈரமாகவும் சாணம்/புழுக்கை ஒட்டியபடி இருக்கும். ஆடுகளில் புழுக்கை சாணம் போலவும், கழிச்சலாகவும் காணப்படும். தொடர்ச்சியான கழிச்சல் மற்றும் இரத்த சோகை காரணமாக கால்நடைகள் பலவீனமாகி விழுந்தும் காணப்படும். இறுதி விளைவாக இறப்பு நிகழும். அதிகளவில் இளம் பராயத்து விலங்குகளில் இறப்பு அதிகளவில் நிகழும்.

பொதுவாக கழிச்சல் காரணமாக நீர்ச்சத்து மற்றும் கனியுப்புக்களின் இழப்பு ஏற்படுகிறது. இதன் காரணமாக கால்நடைகள் இறக்கின்றன. சிலவகை புழுக்கள் தமது கொக்கி போன்ற உறுப்பினால் கடித்து இரத்தத்தை அதிகளவில் உறிஞ்சுவதன் காரணமாக இரத்தசோகை நிலைமை ஏற்படுகிறது. குடல் போன்ற உறுப்புகளில் கடிப்பதன் காரணமாகவும் நச்சுப் பொருட்களை சுரப்பதன் காரணமாகவும் கடி காயங்களில்

ஏற்படுகின்ற இரண்டாம் நிலை நுண்ணயிர்களின் தொற்று காரணமாகவும் கால்நடைகளில் கழிச்சல் நிலைமை ஏற்படுகின்றது. இந்த காரணிகளை ஒன்று சேர்த்து அழிக்காத வரையில் மேற்படி கழிச்சல் நிலை தொடர்வதோடு விலங்குகள் பாதிப்படைகின்றன. பல இடங்களில் சிகிச்சைகள் வெறுமனே ஒரு காரணியை மாத்திரம் கருதி வழங்கப்படுவதால் குடற்புழு தாக்கத்தின் கழிச்சல் இலகுவில் குணமடைவதில்லை. குடற்புழு தாக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட கால்நடைகளை மீட்டெடுக்க கடுமையான சிகிச்சை தேவை. அதற்கு அதிக செலவும் சிரமும் அவசியம்.




Stomach Worm life Cycle

Image Source - www.bimectin.com

சில புழுக்கள் நுரையீரலை தாக்குகின்றன. இவற்றின் தாக்கம் காரணமாக கால்நடைகள் இருமும், சளி போன்ற திரவங்கள் வடியும். சுவாசிக்க சிரமப்படும். இவற்றின் நீட்சியாக நியுமோனியா நிலை தோன்றி இறப்பு வரை செல்லக் கூடும். சில புழுக்கள் கால்களைத் துளைத்துக் கொண்டு சென்று அரிப்பு நிலையை தோற்றுவிக்கும். சில புழுக்கள் கால்நடைகளின் கண் பகுதிக்குள் பாதிப்பை தரவல்லன. மேலும் கால்நடைகளில் ஏற்படும் சில குடற்புழுக்கள் மனிதனையும் பாதித்து நோய்களை ஏற்படுத்தக்கூடியன. அதாவது கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்வது அவற்றை மாத்திரமல்ல அவற்றுடன் தொடர்புடைய மனிதர்களின் ஆரோக்கியத்துக்கும் முக்கியமான நடவடிக்கையாகும்.

**குடற்புழுத் தாக்கத்தின் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற எதிர்மறை விளைவுகள்**

· கால்நடைகளை உற்பத்தித்திறன் பாதிக்கப்படுகிறது [ productivity]

· உணவு உட்கொள்ளுகின்ற ஆற்றல் குறைவடைகின்றது.

. உணவு மாற்றுத்திறன் குறைவடைகிறது.[ Feed conversion ratio] கால்நடைகளில் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது அதாவது வயதுக்கு ஏற்ற வளர்ச்சி இருக்காது.

· கால்நடைகளின் இனப்பெருக்க ஆற்றல் பாதிக்கப்படும் குறிப்பாக சினை வேட்கைக்கு வருகின்ற அளவு குறைவடையும். வேட்கை அறிகுறிகளை [Heat signs] தெளிவாக அவதானிக்க முடியாத நிலை தோன்றுகிறது. மேலும் குடற்புழு தாக்கம் காரணமாக கால்நடைகள் சினைக்கு வருவதும் சினைப்படுதலும் குறைவடையும்.

· சில புழுக்கள் குடலில் முடிச்சுக்களை [pimply gut] ஏற்படுத்தி உணவு அகத்துறிஞ்சலை பாதிக்கின்றன. முக்கிய சுரப்புகளை சுரக்கும் இரப்பைப் கலங்கள் பாதிப்படைவதால் அவை சுரக்கும் அவசியமான சுரப்புகள் குறைவடைந்து உணவு செரிமானமும் பாதிக்கப்படுகிறது.

· தொடர்ச்சியான குடற்புழு தாக்கம் காரணமாக

நோய் எதிர்ப்பு சக்தி [*immune suppression*] குறைவடைந்து பல்வேறு நோய்களுக்கு இந்த கால்நடைகள் உட்படுகின்றன.

### கால்நடைகளுக்கு குடற்புழுத் தாக்கம் எப்படி ஏற்படுகிறது ?

கால்நடைகள் அதிகளவில் குடற்புழுக்களை மேய்ச்சலின் போதே பெற்றுக் கொள்கின்றன. குறிப்பாக நீர்நிலைகளை அண்டிய மேய்ச்சல் தரைகளில் இளம் பராயத்து புழுக்கள் அதிகம் இருக்கும். அதுவும் வெயில் வர முன்னரும் மாலை நேரத்திலும் புற்களின் நுனிப்பகுதியில் அவை காணப்படும். அவற்றை உண்ணும் உண்ணும் கால்நடைகள் தொற்றுக்கு உள்ளாகின்றன. மேலும் வயதான கால்நடைகளுடன் ஒன்றாக வளர்க்கப்படும் இளம்பராயத்துக் கால்நடைகள் தொற்றுக்கு உள்ளாகின்றன. சுகாதாரமில்லாத கால்நடைக் கொட்டகைகளின் காரணமாகவும் பொதுவான மேய்ச்சல் தரைகளினாலும் தொற்றுக்கள் ஏற்படுகின்றன. யாழ்ப்பாணம் தவிர்ந்த வடக்கு கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் எரு விற்பனை செய்வதற்காக கால்நடைகளின் சாணம் அப்படியே பட்டிகளில் பல நாட்கள் விடப்படுகின்றன. இதனால் பல கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக இளம் கால்நடைகள் அதாவது எரு விற்று பெறும் வருமானத்தை விட அந்த எருக்களால் பரவும் குடற்புழுக்களின் தாக்கம் காரணமாக ஏற்படும் பொருளாதார இழப்பு அதிகம். இதனை பல பண்ணையாளர்கள் உணர்வது கிடையாது.

### குடற் புழுக்களைக் கட்டுப்படுத்துதல்

மருத்துவத்தில் எப்பொழுதுமே வருமுன் காப்பதுதான் சிறந்தது. நடைமுறையில் கால்நடைப் பண்ணையாளர்கள் கால்நடைகள் பாதிக்கப்பட்ட பிறகு அதாவது கழிச்சல் அல்லது கால்நடைகள் விழுந்த பிறகுதான் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க மருந்தைக் கொடுக்க வேண்டும் என்று கால்நடை வைத்தியரிடம் வருவார்கள். அவர்கள் அப்படி வரும்பொழுது அவர்களுடைய பண்ணையில் ஏராளமான கால்நடைகள் மீள முடியாத நோய் நிலையோ அதிகளவில் மரணமடைந்த நிலையோ தான் காணப்படும். பெரும்பாலானவர்களுக்கு தங்களுடைய கால்நடைகள் இந்த



குடற்புழு தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கும் கால்நடை

குடற்புழுக்களின் தாக்கத்தின் காரணமாகத்தான் இறந்தன என்பது தெரியாமல் இருக்கும். வைத்தியரிடம் வேறு வேறு துணைக்காரணிகளைச் சொல்லி சிகிச்சையை செய்யக் கேட்பார்கள். வைத்தியரல்லாத சட்ட விரோத சிகிச்சையாளர்கள் மற்றும் பண்ணைக் பொருள் விற்கும் கடைக்காரர்கள் பண்ணையாளர்கள் கூறும் துணைக் காரணிகளுக்கு சிகிச்சையை வழங்கச் சென்று கால்நடைகள் மேலும் இறக்கின்றன.

நடைமுறையில் கால்நடைகளுக்கு குடற்புழு மருந்துகள் கால்நடைகளின் உடல் நிறைக்கு ஏற்பவே வழங்கப்படும். எனினும் பெரும்பாலான பண்ணையாளர்கள் உடல் நிலையை சரியாக கணிப்பது கிடையாது. உண்மையான நிறையை

விட குறைந்த அளவு நிறையே அவர்கள் அனுமானிப்பதன் காரணமாக தேவைக்கும் குறைந்த அதாவது புழுக்களை முற்றிலும் அழிக்க முடியாத அளவிலேயே வழங்கப்படுகிறது. இதனால் குடற்புழுக்கள் தப்பிப் பிழைத்து அந்த மருந்துக்கு எதிரான எதிர்ப்பு நிலையை தோற்றுவிக்கின்றன. மேலும் தொடர்ச்சியாக ஒரே மருந்தை வழங்குவதாலும் இந்த மாதிரியான எதிர்ப்பு நிலை தோன்றுகிறது. எனது அனுபவத்தில் சில குறித்த பண்ணையாளர்கள் கால்நடைகளின் இறைச்சி நிறையை மாத்திரமே அதாவது கிட்டத்தட்ட உண்மை நிறையின் அரைவாசியையே அவர்கள் கால்நடைகளின் நிறையாக கருதுவார்கள். வைத்தியரிடம் சொல்லுவார்கள். மேலும் குடற்புழு மருந்துகளை ஆங்காங்கே காணப்படுகின்ற பண்ணைக் கடைகளிலேயே வாங்குவார்கள். அந்தக் குடற்புழு மருந்துகள் காலத்துக்கு பொருத்தமற்றதாகவும் பெரும்பாலான குடற்புழுக்களை நீக்க முடியாததாகவும் காணப்படுகின்ற சூழ்நிலையில் இந்த குடற்புழு மருந்துகளை கொடுப்பது வீண். ஒவ்வொரு புழுவும் ஒவ்வொரு காலத்தில் காணப்படும். அதற்கு பிரத்தியேகமான மருந்துகளை கொடுக்க வேண்டும். சில வேலைகளில் குடற்புழு மருந்துகளை நீண்ட காலம் வாங்கி வைத்திருப்பார்கள் இதனால் அவை காலாவதியாகியும் காணப்படும். வெயில் மழையில் காணப்படும். அந்த மருந்துகளையும் கொடுத்து விடுவார்கள். அவை முறையாக வேலை செய்யாது.

திரவமாக மாத்திரையாக தூளாக என பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றன. அந்தந்த குடற்புழு மருந்துகளை அந்தந்த முறையில் தான் கொடுக்க வேண்டும் சிலவேளைகளில் மாத்திரைகளை இடித்துக் கொடுப்பார்கள். அது பிரயோசனம் கிடையாது. சில குடற்புழு மருந்துகள் மாத்திரையாக இருக்கும் பொழுது நீண்ட நேரத்துக்கு உடலில் தங்கி கரைந்து கொஞ்சம் கொஞ்சமாக அவை வேலை செய்யும். அவற்றை தூளாக்கிக் கொடுக்கும் பொழுது அவை உடலில் தங்காது உடனடியாகவே வெளியேறிவிடும் இதன் காரணமாக அந்த குடற்புழுக்களுக்கு எதிராக அந்த மருந்து தொழிற்பட முடியாத நிலைமை ஏற்படுகிறது. எனவே அந்தந்த வடிவத்தில் இருக்கின்ற குடற்புழு மருந்துகளை அந்தந்த வடிவத்திலேயே நீங்கள் கட்டாயம் கொடுக்க வேண்டும். நாங்கள் பொதுவாக குடற்புழு மருந்துகளை ஓரளவு வெறும் வயிறாக காணப்படுகின்ற காலை நேரங்களிலேயே கொடுக்கச் சொல்லுவோம் இதன் காரணமாக உச்சபட்ச பயனை பெற்றுக் கொள்ள முடியும். சில வேலைகளில் உணவு கால்வாய் தொகுதியில் குடற்புழு மருந்தை கொடுப்பதற்கு பதிலாக பிரக்கடிப்பது மூலம் சுவாச பகுதிக்குள் குடற்புழு மருந்து சென்றால் அந்த கால்நடைகள் பிரக்கடிப்பு காரணமாக இறக்க வாய்ப்பிருக்கிறது. சிலவேளைகளில் மிதமிஞ்சிய அளவில் குடற்புழு மருந்துகளை கொடுத்தாலும் குறிப்பாக இளம் கால்நடைகளுக்கு பாதிப்பினையே தரக்கூடியது..

குடற்புழு மருந்துகள் பரந்த வீச்சினை கொண்டிருக்க வேண்டும் அவை முதிர்ந்த, இளம் புழுக்கள் மற்றும் குடம்பி, முட்டைகளை அழிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுடன் கால்நடைகளுக்கு இலகுவாக வழங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். விலை கட்டுப்படக் கூடியதாக இருக்க வேண்டும். அத்துடன் மனித பாதுகாப்பு இங்கே மிக முக்கியமான விடயமாக கருதப்பட வேண்டும். சில குடற்புழு மருந்துகள் பால், இறைச்சியினூடாக, விலங்குகளின் கழிவின் ஊடாக ஏனைய கால்நடைகள் மற்றும் மனிதர்களுக்கு செல்லக் கூடியன. அதனையும் கவனமாக பரிசீலிக்க வேண்டும். முடிந்தவரை பக்க விளைவற்ற / பக்க விளைவு குறைந்த மருந்துகளை கொடுக்க வேண்டும். நான் முன்பு கூறியது போல ஒரே மருந்தினை தொடர்ச்சியாக கொடுப்பதும் பிரயோசனம் கிடையாது. குடற்புழுக்கள் அந்த மருந்துக்கு இயைபாக்கம் அடைந்து விடும். எனவே கால்நடை வைத்தியரின் பரிந்துரைக்க அமைய மாறுபட்ட மருந்துகளை பொருத்தமான மருந்துகளை கொடுக்க வேண்டும்

பெரும்பாலும் குடற்புழு நோய்த் தாக்கம் இளம் கன்றுகள், குட்டிகளையே பாதிக்கின்றன. அதிக அளவில் இறக்கின்றன. ஏனெனில் அவை குடற்புழுக்களுக்கு அவற்றின் நச்சுகளுக்கு இயைபாக்கம் அடைந்திருக்காது. ஓரளவு பெரிய மாடுகள் குடற்புழுவுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியினை [immunity] பெற்றிருக்கின்றன. அவை மெதுவாக நோய் எதிர்ப்பு சக்தியினை அடைந்திருக்கும். வெளிநாட்டு இன மாடுகள்

மற்றும் கலப்பு இன மாடுகளை விட உள்ளூர் இன மாடுகள் குறிப்பாக நாட்டு மாடுகள் அந்தந்த ஊர்களில் உள்ள குடற்புழுத் தாக்கத்திற்கு எதிரான இயைபாக்கத்தினையும் எதிர்ப்பு சக்தியினையும் பெற்றிருக்கும். இளம் பராயத்து விலங்குகளின் இழப்பு அன்றைய பண்ணையின் வருமானத்தை பாதிப்பதுடன் எதிர்காலத்தின் பண்ணையின் இருப்பையும் கேள்விக்கு உட்படுத்தும் இழப்பாகும். எனவே முடிந்தவரை இளம் விலங்குகளுக்கு குடற்புழு வரக் கூடிய சாத்தியங்களை குறைப்பதுடன் முறையான மருந்துகளை கிரமமாக வழங்க வேண்டும்.

பொதுவாகப் பண்ணையாளர்கள் சினைப்பட்ட மாடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுக்கத் தயங்குவதை காண முடிகின்றது. ஆரம்ப காலத்தில் இருந்த குடற்புழு மருந்துகள் சிலவேளைகளில் அவற்றுக்கு பிரச்சினையை ஏற்படுத்தி இருந்தாலும் தற்காலத்தில் இது தொடர்பாக செய்யப்பட்ட பல விஞ்ஞான ஆய்வுகளிடம் அடிப்படையில் சினைக்காலத்திலும் பாதுகாப்பாக பாவிக்கத்தக்க மருந்துகள் தற்பொழுது சந்தையில் இருக்கின்றன. அதனை நீங்கள் பொருத்தமான கால்நடை வைத்தியரிடம் பரிந்துரையைக் கேட்டு அவரிடம் இருந்து பெற்றுக் கொள்வது சிறப்பானது. பொதுவாக மாடுகளுக்கு முன் சினை காலத்திலும் பின் சினை காலத்திலும் கொடுக்காமல் இடைப்பட்ட காலத்தில் *[between 47 months]* வழங்கலாம். முன் சினைக் காலம் கருவின் உடல் கட்டமைப்புகள் தோற்றம் பெறுகின்ற காலம் என்பதுடன் அப்போது ஏற்படும் சிறிய அழுத்தமும் கருவை பாதிக்ககூடும். பின் சினைக் காலப்பகுதியிலும் மாடுகளுக்கு அழுத்தம் தரக் கூடாது என்பதால் குடற்புழு நீக்க மருந்துகளை நாங்கள் பரிந்துரைப்பது கிடையாது. எனினும் சில மேம்படுத்தப்பட்ட மருந்துகள் அந்தக் காலத்திலும் பாவிக்கக் கூடியதாக தற்பொழுது காணப்படுகின்றன.

மேலும் மக்கள் மழைக்காலத்தில் குடற்புழு நீக்க மருந்துகளை கொடுப்பதனை தவிர்க்கின்றனர். இதுவும் தவறான ஒரு நடைமுறை. எங்களுடைய நாட்டில் வடகிழக்கு பருவமழை அக்டோபர் நவம்பர் டிசம்பர் மாதங்களில் பெய்கிறது. இந்த காலத்தில் தான் நீர்நிலைகள் நிரம்புகின்றன. ஏராளமான நத்தைகள் பெருகின்றன. பெரும்பாலான குடற்புழுக்கள் நத்தைகளின் மூலமே பரவல் அடைகின்றன. இந்த நேரத்தில் கால்நடைகள் அந்தந்த பகுதியில் மேய்ச்சல் செய்கின்ற பொழுது இந்த குடற்புழு இலகுவில் கால்நடைகளுக்கு தொற்றுகிறது. எனவே மழை காலத்துக்கு முன்னரும் மழைக்காலத்திலும் மழைக்காலத்தின் பின்னரும் கட்டாயம் இந்த குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்க வேண்டும் அப்பொழுதுதான் இந்த நத்தைகள் மூலம் பரவுகின்ற குடற்புழுக்களின் பாதிப்பினை

**பெரும்பாலும் குடற்புழு நோய்த் தாக்கம் இளம் கன்றுகள், குட்டிகளையே பாதிக்கின்றன. அதிக அளவில் இறக்கின்றன. ஏனெனில் அவை குடற்புழுக்களுக்கு அவற்றின் நச்சுகளுக்கு இயைபாக்கம் அடைந்திருக்காது. ஓரளவு பெரிய மாடுகள் குடற்புழுவுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியினை [immuni ty] பெற்றிருக்கின்றன.**

நாங்கள் குறைத்துக் கொள்ள முடியும். மேற்படி காலத்தில் தான் அதிகளவில் ஆடுகள் குட்டி ஈனுகின்றன. மாடுகள் கன்று ஈனுகின்றன. இந்த இளம்பராயத்து கால்நடைகளுக்கு கட்டாயம் குடற்புழு நீக்க மருந்தினை கொடுத்தே ஆகவேண்டும். அது மழை காலமாக இருந்தாலும் இல்லையெனினும் பரவாயில்லை.

மழை காலத்தின் பின்னர் பொதுவாக கால்நடைகள், குளங்களை அண்மித்த பகுதிகளில் மேய்ச்சலில் ஈடுபடும்போது பெரும்பாலானவை குடற்புழுத் தாக்கத்துக்கு உள்ளாவதோடு வறட்சியான காலப்பகுதில் செறிவாக எஞ்சிய நீர்நிலைகளின் தண்ணீரை அருந்துவது மூலமும்

**இலங்கையில் உலர் வலயத்தில் மழைக்காலத்தின் பின் பரம்பிஸ்ட்ரோம் என்று சொல்லப்படுகின்ற ஒருவித தட்டைப்புழு அதிகளவு பாதிப்பினை ஏற்படுத்தி கால்நடைகளின் பெரும் இறப்புக்கு காரணமாக அமைகிறது.**

சில வகையான புழுக்களின் தொற்றுகைக்கு உள்ளாகின்றன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

குடற்புழு நீக்க மருந்தினை பொறுத்தவரையில் கன்றுகள் பிறந்து மூன்று கிழமைகளில் முதலாவது தடவை குடற்புழு நீக்க மருந்து கொடுக்க வேண்டும் அதன் பின் ஒவ்வொரு மாதமும் ஆறு மாதம் வரையில் கொடுக்க வேண்டும். அதன்பின் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை ஒரு வருடம் வரை கொடுக்க வேண்டும். அதன் பின் ஆறு மாதத்திற்கு ஒரு தடவை கொடுக்க வேண்டும் அந்தந்த பகுதியில் தன்மைக்கு ஏற்ப கால்நடை வைத்தியரின் பரிந்துரைக்கு அமைய ஏற்ப மாற்றம் செய்யலாம். ஒரே மருந்தை தொடர்ச்சியாக கொடுக்காமல் மாற்றி மாற்றி கொடுக்க வேண்டும். ஆடுகளைப் பொறுத்தவரையில் மூன்று கிழமைகளில் குடற்புழு மருந்தினை தொடங்க வேண்டும். அதன் பின் ஒவ்வொரு மாதமும் 3 மாதம் வரையில் மருந்துகளை கொடுக்க வேண்டும். அதன்பின் ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை மருந்தினை கொடுக்க வேண்டும் எருமை மாடுகளை பொறுத்தவரை அவை தாயின் கருப்பையில் இருந்தே குடற்புழுக்களை பெற்றுக் கொள்கின்றன. இதன் காரணமாக முதற் கிழமையிலேயே நாங்கள் அவற்றிற்கு குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்க பரிந்துரைக்கிறோம். அதேபோன்று எருமை மாடுகளின் தாய் மாடுக ளுக்கும் இறுதிச் சினைக் காலத்திலும் குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்க வேண்டும். இலங்கையில் உலர் வலயத்தில் மழைக்காலத்தின் பின் பரம்பிஸ்ட்ரோம் என்று சொல்லப்படுகின்ற ஒருவித தட்டைப்புழு அதிகளவு பாதிப்பினை ஏற்படுத்தி கால்நடைகளின் பெரும் இறப்புக்கு காரணமாக அமைகிறது. அது தொடர்பாக கூடிய கவனத்தை செலுத்துதல் வேண்டும். ஒரே நேரத்தில் பல புழுக்கள் கால்நடைகளை பாதிப்பதால் வீரியம் மிக்க புதிய கூட்டிணைவுடன் கூடிய நவீன மருந்துகளை கொடுப்பது சாலச் சிறந்தது.

நான் முன்பு கூறியதைப் போல குடற்புழுக்களின் பாதிப்பை முறையான கொட்டகை சுத்தம், மேய்ச்சல் முகாமைத்துவம், பருவத்துக்கு ஏற்ற குடற்புழு மருந்துகளை வழங்குவதன் மூலம் குறைக்க முடியும். பண்ணையாளர்களுக்கு தெரியாத வகையில் குடற்புழுத் தாக்கம் கால்நடைகளைப் பாதிப்பதோடு வருடாந்தம் கணிசமான பொருளாதார இழப்பையும் ஏற்படுத்துகின்றது. மேலை நாடுகளில் இது தொடர்பாக பல ஆய்வுகள் பொருளாதார ரீதியாக செய்யப்படுகின்ற போதும் இலங்கையில் இவ்வாறான நடவடிக்கைகள் மிக மிகக் குறைவு என்பது முக்கிய குறைபாடு ஆகும். குடற்புழுத் தாக்கத்தால் ஏற்படும் கால்நடைகளின் வளர்ச்சிக் குறைவு அவற்றின் பருவமடைதலை தாமதப்படுத்துகின்றது, அவை சினைப்பட்டு கன்றை ஈனுவது தாமதமடைகிறது. இதனால் பால் உற்பத்தி செய்யத் தொடங்குவதும் தாமதமடைகிறது. இது மேலதிக பாரமரிப்பு செலவை ஏற்படுத்துகிறது. குடற்புழுத் தாக்கத்துக்கு உட்படும் மாடுகள் பொதுவாக குறைவான பாலையே உற்பத்தி செய்கின்றன. கால்நடைகள் கன்றை ஈனும் போது மறை சக்தி இழப்பு காரணமாக உடல் நிறை கணிசமாக குறைகின்றன. மேலதிகமாக குடல் புழுக்களின் தாக்கமும் ஒன்று சேர்வது மூலம் மேலும் மேலும் பாதிப்பையே தருகின்றன. அடுத்த முறை சினைப்படுதலும் பாதிக்கப்படும். கால்நடைகளில் உற்பத்தி தொடர்பான பல நோய்களும் ஏற்பட ஏதுவாகின்றன. அத்துடன் உடல் வளர்ச்சி குறைவதால் இறைச்சிக்கு விற்கும் மாடுகளின் நிறை குறைந்து பெறுமதியும் குறைகிறது. கன்றுகளின் இழப்பு எதிர்கால மாடுகளுக்கு பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது. சிகிச்சையின் செலவு மேலதிக பொருளாதார நட்டத்தை தருகின்றது. இப்படியாக பார்ப்பதற்கு சாதாரண விடயம் போல் தெரியும் குடற்புழுக்கள் கணிசமான பொருளாதார வீழ்ச்சியை இலங்கையின் கால்நடைத் துறைக்கு தருகின்றன. எனவே இதனை முறையாக கையாள்வதன் மூலம் இந்த இழப்புகளை தவிர்க்க முடியும்.

(தொடரும்)

ஆங்கிலேயர்களின் ஆட்சியால் இலங்கைக்கு கிடைத்த சில பேறுகளில், மேலைத்தேச மருத்து வமுறையின் உள்நுழைவும் ஒன்றாகும். அதுவரை தனியே சுதேச மருத்துவத்தையே நம்பியி ருந்த இலங்கை மக்கள், மேலைத்தேய மருத்துவத்தின் அறிமுகத்தோடு தீர்க்கப்படமுடியாத பல நோய்களையும் குணப்படுத்த முடிந்தது. இறப்புவீதம் பெருமளவுக்கு குறைந்தது. இவ்வாறான மேலைத்தேய மருத்துவத்துறையை இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் வளர்த்தெடுக்க, அமெரிக்க மருத்துவ மிஷனரிகள் மேற்கொண்ட பணிகள் அளப்பரியவை. அவ்வாறு மேலைத் தேய மருத்துவத்தை இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வளர்த்தெடுக்க தம் வாழ்வையே அர்ப்பணித்த மருத்துவர்களையும், அவர்களது பணிகளின் தனித்துவத்தையும், இலங்கையின் வடபகுதியில் மேலைத்தேச மருத்துவத்துறை 1820 முதல் இப்போதுவரை வளர்ந்து வந்த முறைமைகளையும் தொகுத்து தருவதாக 'யாழ்ப்பாண மருத்துவ வரலாறு' என்ற இந்தக் கட்டு ரைத் தொடர் அமைகின்றது.





## பாலசுப்ரமணியம் துவாரகன்

பாலசுப்ரமணியம் துவாரகன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர். 2005 2008 காலப்பகுதியில் சுகாதார அமைச்சில் கடமையாற்றியுள்ளார். இக்காலப்பகுதியில் 10 இற்கும் மேற்பட்ட பல்வேறு துறைசார் ஆளுமைகளை நேர்காணல் செய்து கனடாவிலிருந்து வெளிவரும் 'வைகறை' வாரப்பத்திரிகையிலும் 'காலம்' சஞ்சிகையிலும் பிரசுரித்துள்ளார். கலாநிதி. சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு மலரின் பதிப்பாசிரியர்.

கடந்த 14 வருடங்களாக யாழ். போதனா மருத்துவமனையில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றும் துவாரகன் 2018 இல் யாழ். போதனா மருத்துவமனையில் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண மருத்துவ அருங்காட்சியகத்தில் மேலைத்தேச மருத்துவ வரலாற்றை ஆவணப்படுத்தியுள்ளார். இவர் மருத்துவ அருங்காட்சிய கத்துக்குப் பொறுப்பு அலுவலராக விளங்குவதுடன் மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி அவர்களது வழிகாட்டலில் யாழ்ப்பாணத்தில் தனித்துவமான மருத்துவ அருங்காட்சியகம் உருவாகக் காரணமானவர். இங்குள்ள தொலைமருத்துவப் பிரிவில் பன்னாட்டு மருத்துவ வல்லுநர்கள், பேராசிரியர்கள் வாரந்தோறும் கலந்துகொள்ளும் இணையவழி தொலைமருத்துவக் கருத்தமர்வுகளின் இணைப்பாளராகவும் செயற்படுகின்றார்.


# யாழ்ப்பாண மருத்துவ வரலாறு : 1864



Ac.239 NOT TO BE TAKEN AWAY CEYLON

PART IV—EDUCATION, SCIENCE, AND ART (C)

Administration Report of the Director of Medical and Sanitary Services for 1948

(Dr. W. G. WICKREMESINGHE, O.B.E.)

NOVEMBER, 1949

Printed on the Orders of Government

Printed at the CEYLON GOVERNMENT PRESS

Administration report of the director of medical and sanitary service for 1948

Image Source - wellcomecollection.org

எழுதிய கடிதத்தில் தமக்கு முதலாவது மகவு பிறந்த மகிழ்ச்சியான செய்தியைக் குறிப்பிட்டிருந்தார். யூலியா என்ற தனது மூத்த சகோதரியின் பெயரையே அந்தப் பெண் குழந்தைக்கு கிறீன் சூட்டினார்.

பின்னாளில் யூலியா தான் பிறந்த யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து 1906 1910 வரையான காலப்பகுதியில் அமெரிக்க இலங்கை மிஷனுக்காக 5 வருடகாலம் சேவையாற்றினார். கீழைத்தேசத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் முன்னொருபோது யாழிசையில் வல்ல யாழ்ப்பாணனுக்கு வழங்கப்பட்ட மணற்றி என்னும் நிலத்திலே, ஆங்கிலேயர்களால் ஒரு நிருவாகக் குடையின் கீழ் கொண்டுவரப்பட்ட சிலோன் என்னும் இலங்கைத் தீவில் சொல்லு தமிழையும் சுருதியையும் தமிழ்கூறும் நல்லுலகில் விளங்க வைத்த நல்லை நகர் நாவலர் பெருமான் பிறந்த யாழ்ப்பாணத்தில், 19 ஆம் நூற்றாண்டில், ஏறத்தாழ 160 வருடங்களுக்கு முன்னர் ஆங்கில மருத்துவத்தைத் தமிழன்னையின் புதல்வர்கள் தமிழில் கற்பதற்குக் காரணமாக இருந்தவர் ஒருவர்; தமிழை ஆங்கில மருத்துவத்துறையின் இருக்கையிலே சீராட்டி வளர்த்த தமிழ்த்தாயின் தவப்புதல்வனான சாமுவேல் பிஸ்க் கிறீன் என்னும் அமெரிக்க மிஷனரி மருத்துவரே

**1850 இல் ஆபத்துக்கு உதவி நண்பர்கள் கழக வைத்தியசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட யாழ். போதனா மருத்துவ மனையானது 1850 முதல் 1907 வரை ஆபத்துக்கு உதவி வைத்தியசாலை என்ற பெயரில் இயங்கியது. பின்னர் 1908 முதல் 1955 வரை யாழ்ப்பாணம் சிவில் வைத்தி யசாலை என்ற பெயரில் இயங்கியது.**


*அந்த மேன்மைக்குரியவர். பூவுலகில், தமிழுக்கு என்று ஒரு வீடும் தமிழ்ப் பல்கலைக்கழகமும் இருந்திருந்தால் மருத்துவர் கிறீனை மேன்மை பொருந்திய தமிழின் தவப்புதல்வர்களுள் ஒருவராகக் கொண்டாடியிருப்பர்; கிறீனது மறைவின் பின்னராவது அவருக்குரிய மாட்சிமையை வழங்கித் தமிழ்த்தாயின் தவப்புதல்வனை அரியணையில் வைத்திருப்பர்; யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று சங்கப்புலவன் கணியன் பூங்குன்றனாரது பாடலுக்கு இலக்கணமாக யாழ்ப்பாணத்திலே 26 வருடங்கள் வாழ்ந்து, ஆதுலர்க்குச் சாலை அமைத்து உயிர்காத்த உத்தமருக்கு, அமெரிக்காவிலே மசாசுசெட்சிலே உறங்கும் தமிழர்களின் மருத்துவ ஊழியனுக்கு மணற்றியிலே ஒரு சிலையாவது வைத்திருப்பர்.*

*தனது மறைவின்போது தனக்கு ஒரு கல்லறை அமைப்பதாக இருந்தால் அது எளிமையானதாக இருக்க வேண்டும் என்றும் அதிலே தமிழர்களின் மருத்துவ ஊழியர் என்ற ஒரு வாசகம் மாத்திரம் இடம்பெறல் வேண்டும் என்றும் கிறீன் கேட்டிருந்தார். கிறீன் தமிழர்களின் கிறித்துவ ஊழியர் என்று தன்னுடைய கல்லறையின் நினைவுக் கல்லிலே செதுக்கச் சொல்லி தனது உயிலிலே எழுதவில்லை என்பது நம் சிந்தனைக்குரியது.*

### தமிழ்மொழி வரலாற்றில் தடம்பதித்த 1864

*1864ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்திலே வெளிவந்த உதயதாரகை பத்திரிகையில் ஒரு விளம்பரம் வெளிவந்தது. அதிலே அடுத்து ஆரம்பமாக உள்ள மருத்துவக் கற்கைநெறி தமிழ் மொழி மூலம் இடம்பெறும் என்றிருந்தது. உதயதாரகை விளம்பரத்தைப் பார்த்துவிட்டு மருத்துவம் பயில 30 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 11 பேர் மருத்துவம் பயில்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டனர். 1864ஆம் ஆண்டு மே மாதம் தமிழ் மொழி மூலம் ஆங்கில மருத்துவம் பயிலும் வகுப்பு மானிப்பாயில் ஆரம்பமாகியது.*

*கிறீனது மருத்துவக் கல்லூரியில் பயின்ற 6 ஆவது மருத்துவ மாணவர் அணியினரே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த முதலாவது தமிழ்*



ward.

(v) CIVIL HOSPITAL, JAFFNA

This Hospital has accommodation for 268 beds. The number of patients treated in this Hospital during 1948 was 11,486—the daily average of sick in hospital being 370. There were 266 deaths in hospital during the year. 670

**Civil Hospital Jaffna in 1948**

C 22 CEYLON ADMINISTRATION REPORTS, 1948 [IV—EDUCATION,

major operations were performed during the year—also 1,946 minor and 288 obstetric operations. At the out-door department, 109,769 patients were treated during 1948. The following clinics were conducted at the hospital:—

1. Eye Clinic .. .. .. 44,798 cases treated
2. Dental Clinic .. .. 10,937 cases treated
3. Venereal Diseases Clinic .. .. 8,593 cases treated

The hospital is provided with an X'Ray plant and during the year 7,254 patients were examined at it.

21,137 laboratory examinations were made.

The construction of the following buildings was completed:—
Out-patients' Department,
Hospital Kitchen.

(i) GENERAL HOSPITAL, COLOMBO

This hospital provides accommodation for 1,294 beds which figure includes 115 beds in the paying section.

During the year under review 55,797 patients (1,451 paying and 54,346 non-paying) were treated in this hospital, the daily average sick being 2,185. There were 2,568 deaths in the hospital during this period and the percentage of deaths to those treated was 4.6. The largest number of patients in hospital on any one day was 2,489 non-paying patients on November 9, 1948, and 115 paying patients on June 18, 1948. The smallest number was 1,796 non-paying patients on April 14, 1948, and 109 paying patients on December 22, 1948. In all 11,423 operations were performed in the hospital during the year, of which number 792 minor operations were performed at the Out-Patients' Department. The total number of out-patients treated at the Out-Patients' Department was 151,139—the total number of visits paid being 460,857 and the daily average 1,259.

**Clinics**

The *Diabetic* Clinic had an average daily attendance of 60. Males form the larger number, the average age of those treated being 45 years. 65 per cent. of the cases were moderately severe; 15 per cent. mild and 20 per cent. were severe cases.

The *Asthma* Clinic was reorganised in August 1948, and 1,205 cases were treated. The total number of visits paid to this clinic was 4,264.

*Rectal* and *Varicose Veins* Clinics are held by the Visiting Surgeon, Out-Patients' Department.

*A Venereal Diseases* Clinic is conducted in the Hospital. A detailed account of the work done in this connection is shown elsewhere in the report.

*Ear, Nose* and *Throat* Clinics are held at the Out-patients' department on three mornings a week. Apart from the clinics, the Surgeon-in-charge is allotted 38 beds in the wards for patients requiring Indoor Treatment. At the clinics 11,408 patients were treated during the year and the total number of visits paid was 22,323.

**Orthopaedic Clinic**

The clinic is open daily for the treatment of ambulatory orthopaedic cases and also provides facilities for rehabilitation. There is a ward of 20 beds for crippled children. During the year 8,618 patients were treated at the clinic of whom 2,895 were new cases. Artificial limbs were supplied to 32 patients.

**Blood Bank**

During the year blood was collected from 1,933 donors. An honorarium of Rs. 10 per donor was paid to 1,814 of these donors. In all 3,566 bottles of blood, each containing about half a pint, were collected. 1,659 blood transfusions were given to patients at the General Hospital.

**X'Ray Department**

23,194 patients in the non-paying and 1,677 patients in the paying-section making a total of 24,871 patients were afforded X'Ray examinations. In the Electro-therapeutic section, 17,542 sittings were given to non-paying patients and 912 to paying patients.

**Deep Ray Department**

4,542 patients were given Deep Ray therapy during the year. Electro-cardiographic tracings were made in 6,636 patients.

Administration report of the director of medical and sanitary service for 1948 - pages

Image Source - wellcomecollection.org



National Hospital of Sri Lanka

Image Source - wikipedia.org

மொழி மூலமான மருத்துவ மாணவர்கள்.

உலகில் தமிழ்மொழி மூலம் முதன்முதலாக மேலைத்தேச மருத்துவம் பயின்றவர்கள்:(1864 1867)

கே. இளையபிள்ளை
கந்தப்பர்
எஸ். சிற்றம்பலம்
ஏ. சிவசிதம்பரம்
வி. சிற்றம்பலம்
எஸ்.சின்னப்பு
சாமுவேல் டேவிட்
சாமுவேல் எச். முருகேசு
டானியல் வெற்றிவேலு,
ஆர். எஸ். வேலுப்பிள்ளை
எஸ். மண்டலம்

இப்பதினொருவரில் இருவர் விசேட கொடுப்பனவைப் பெற்றனர். ஒருவர் வகுப்பின் மாணவ தலைவராகவும் நூலகராகவும் கடமையாற்றிய மைக்காகவும், மற்றவர் மருத்துவக் கல்லூரி வளாகத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டதற்காகவும் சிறுதொகையை ஊதியமாகப் பெற்றனர்.

அனைவருக்கும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட மருத்துவ நூல்கள் வழங்கப்பட்டன. அனைத்துப் பாட நூல்களும் தமிழாக்கம் செய்யப்படாமையால் ஆங்கில மொழியிலமைந்த நூல்களும் பயன்படுத்தப்பட்டன. மாணவர்கள் தமிழிலே குறிப்புகளை எடுத்தனர்.

கிறீனது 5 ஆவது மருத்துவ மாணவர் அணியினர் 11பேரும் 1864 ஆம் ஆண்டு நவம்பரில் மருத்துவப் படிப்பை பூர்த்தி செய்தனர். அவர்களில் ஐவர் மருத்துவர் கிறீனுக்கு உதவியாக மேலும் ஒரு வருடம் மருத்துவக் கல்லூரியில் பணிபுரிந்தனர்.

இந்த ஐவரில் இருவர் 6 ஆவது அணி மாணவர்களுக்கு உடற்கூற்றியல் மற்றும் உடலியக்கவியல் பாடங்களைக் கற்பிப்பதற்காகவும் நியமிக்கப்பட்டனர்; ஒருவர் கிறீனது தமிழ் ஆசிரியராகவும் விளங்கினார்; ஒரு மாணவர் இயற்கைத் தத்துவவியல் பாடத்தை கையெழுத்துப்படியாக எழுதுவதற்கும் மற்றவர் மானிப்பாய் மருத்துவமனையை நடாத்துவதற்கும் கிறீனுக்கு உதவினர்.

1864 ஆம் ஆண்டு மானிப்பாயிலுள்ள மருத்துவமனையில் 1,260 பேருக்கும் யாழ். நகரிலிருந்த ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் கழகத்தினது மருத்துவமனையில் 6480 பேருக்கும் சிகிச்சை வழங்கப்பட்டது.

#### சுதந்திர இலங்கையின் மருத்துவ மற்றும் சுகாதார சேவை

ஆங்கிலேயரிடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அன்று 1948 ஆம் ஆண்டில் நாடுமுழுவதும் 246 அரச மருத்துவமனைகள் இயங்கின. இம் மருத்துவமனைகளில் மொத்தமாக 18,822 படுக்கை வசதிகள் காணப்பட்டன. அப்போது இலங்கையின் சுகாதார மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சராக இருந்தவர் எஸ். டபிள்யு. ஆர். டி.பண்டாரநாயக்க.

#### கொழும்பு பொது வைத்தியசாலை (General Hospital Colombo) 1948

இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டில் கொழும்பு பொது மருத்துவமனையில் கட்டணம் செலுத்தும் 115 படுக்கை வசதிகள் உள்ளடங்கலாக 1,294 படுக்கை வசதிகள் காணப்பட்டன. இங்கு 1948 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 55,797 நோயாளருக்கு விடுதிகளில் சிகிச்சை வழங்கப்பட்டது. இவர்களில் 1,451 பேர் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெற்றனர். மொத்தமாக 2,568 இறப்புக்கள் பதிவாகின. மருத்துவமனைக்கு நாளாந்தம் வருகைதந்து சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கையை அவதானித்த போது 1948 நவம்பர் 9 ஆம் திகதி ஆகக் கூடுதலாக 2,489 பேர் சிகிச்சைக்காக வருகை தந்தனர். அதேவேளை 1948 யூன் 18 இல் ஆகக் கூடுதலாக 115 பேர் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெற்றனர். இந்த ஆண்டில் 11,423 சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. 792 சிறிய சத்திரசிகிச்சைகள் வெளிநோயாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை 151,139 பேருக்கு வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டது. குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் 460,857 தடவைகள் வெளிநோயாளர் பிரிவில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெற்றனர்.

இக்காலப்பகுதியில் கொழும்பு பொது வைத்தியசாலையின் என்புமுறிவு சிகிச்சை நிலையத்தில் 32 பேருக்கு செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டன. இரத்த வங்கியில் 1,933 பேர் இரத்ததானம் செய்திருந்தனர். இவர்களில் 1,814 பேருக்கு இரத்தானம் வழங்கியமைக்காக வெகுமானமாக தலா 10 ரூபா வழங்கப்பட்டது. எக்ஸ் கதிர் பரிசோதனைக்காக கட்டணம் செலுத்தும் பிரிவில் 1,677 பேரும் கட்டணம் செலுத்தாத பிரிவில் 23,194 நோயாளரும் எக்ஸ் கதிர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

> **இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டில் கொழும்பு பொது மருத்துவமனையில் கட்டணம் செலுத்தும் 115 படுக்கை வசதிகள் உள்ளடங்கலாக 1,294 படுக்கை வசதிகள் காணப்பட்டன. இங்கு 1948 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 55,797 நோயாளருக்கு விடுதிகளில் சிகிச்சை வழங்கப்பட்டது. இவர்களில் 1,451 பேர் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெற்றனர்.**

#### யாழ்ப்பாணம் சிவில் வைத்தியசாலை (Civil Hospital Jaffna) 1948

1850 இல் ஆபத்துக்கு உதவி நண்பர்கள் கழக வைத்தியசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட யாழ். போதனா மருத்துவமனையானது 1850 முதல் 1907 வரை ஆபத்துக்கு உதவி வைத்தியசாலை என்ற பெயரில் இயங்கியது. பின்னர் 1908 முதல் 1955 வரை யாழ்ப்பாணம் சிவில் வைத்தியசாலை என்ற பெயரில் இயங்கியது.

1948 ஆம் ஆண்டு சிவில் வைத்தியசாலையில் 248 படுக்கை வசதிகள் காணப்பட்டன. இக் காலப்பகுதியில் மொத்தமாக 11,486 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது; சராசரியாக 370 நோயாளர் நாளாந்தம் சிகிச்சை பெற்றனர்; 266 இறப்புகள் நிகழ்ந்தன; 670 பாரிய சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

(தொடரும்)

# வாசகர் கருத்து

எழுநா Ezhuna Ezhuna ஏழாவது இதழ் வெளியாகி யுள்ளது. இலங்கைத் தமிழ்ச் சூழலில் பேசப்பட வேண்டிய இலங்கை தமிழ், முஸ்லிம் சமூகவியல், வரலாறு, அறிவி யல், சமூக உளவியல், மொழியியல் என மிகப் பரந்த தளத்தில் எழுநா ஆய்வுகளை வெளியிட்டு வருகிறது. இதனால் நமது தமிழ்ச் சூழலில் மிகவும் கவனிப்புக்குரிய இதழாக எழுநா உள்ளது.

**ஜிஃப்ரி ஹாசன்**
06/02/2023

எழுநா–7 வது இதழ் படிக்கக் கிடைக்கிறது. பல தளங்களில் இருந்த வாறு சிந்திப்போர், செயற்படுவோர் ஒன்றுபடும் களம்!
மக்கள் நலன் சார்ந்த மக்கள் விடுதலைக்கான கருத்தியலு டன் பல தரப்பட்டோர் வெவ்வேறு துறைகளில் எழுதும் கட்டு ரைகளைத் தாங்கி வெளிவருவது எழுநா!
இந்த இதழும் அதற்கமைவானது! ‘கிழார்களின் வம்ப வேந்தர்’ எனும் எனது கட்டுரையும் இடம்பெற்றுள்ளது!

**ந. இரவீந்திரன்**
06/02/2023

எழுநா பிப்ரவரி 2023 இதழ் அச் சுப் பிரதியாக கையில் கிடைத் தது. 140 பக்கம். அழகான தாள். கண்ணுக்கு இதமான நல்ல எழுத் துரு. கிடைத்தகையோடு பல கட் டுரைகளைப் படித்துவிட்டேன். எல்லாமே ஆராய்ச்சி கட்டுரைகள். ஒரு பல்கலைக்கழக ஆய்வேட் டில் பிரசுரமாகும் தகுதியுடையவை. பரமு புஷ்பரட்டிணத்தின் தமிழ் இராச்சியத்தின் தோற்றம், என். கே. எஸ். திருச்செல்வம் எழுதிய கல்வெட்டுகள் பற்றிய கட்டுரை ஆகியவை முக்கியமானவை. கனடாவில் பன்மை பண்பாட்டு வாதம் பற்றி கந்தையா சண்முக லிங்கம் எழுதியதை கட்டாயம் படிக்கவேண்டும். படித்து முடிந்த தும் நூல்தட்டில் அடுக்கி பாதுகாக் கவேண்டும். ஒரு சின்னக் குறை. எழுதியவர்களின் படம் இருக்கி றது அவர்களைப் பற்றிய குறிப்பு கள் இல்லை. பாராட்டவேண்டிய முயற்சி.

**அப்பாதுரை முத்துலிங்கம்**
11/02/2023

# எழுநா புத்தக மன்றம்

எழுநா புத்தக மன்றம் வருடாந்த சந்தாவை அடிப்படையாகக் கொண்டது. எழுநா புத்தக மன்றத்தில் இணைவதன் மூலம் எழுநாவின் முயற்சிக்கு ஆதரவளிக்க முடியும். அதேநேரம், இச்சந்தா மூலம் எழுநா புத்தக மன்றத்தின் இணைபவர்களுக்கு எழுநாவின் சகல வெளியீடுகளும் கிடைக்கப்பெறும்.

| | |
|---|---|
| ஐக்கிய இராச்சியம் | 100 GBP |
| ஐக்கிய அமெரிக்கா | 125 USD |
| கனடா | 150 CAD |
| அவுஸ்திரேலியா | 175 AUD |
| ஐரோப்பா | 125 EURO |
| நோர்வே | 1200 NOK |
| இலங்கை | 25,000 LKR |

## எழுநா விளம்பர ஆதரவு

சமூக நிறுவனங்களோ அல்லது வியாபார நிறுவனங்களோ தம்முடைய சேவையை எழுநாவின் காணொலிகள் ஊடாக விளம்பரம் செய்யலாம். எழுநாவின் சகல காணொலிகளிலும் குறிப்பிட்ட மாத காலப்பகுதிக்கு நிறுவன இலச்சினை காட்சிப்படுத்தப்படும். இப்போது எம்மிடம் 15,000 பேரை சென்றடைவதற்கான வலையமைப்பு விருத்தி செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஐக்கிய இராச்சியம் | 100 GBP I 50 GBP |
| ஐக்கிய அமேரிக்கா | 125 USD / 60 USD |
| கனடா | 150 CAD / 75 CAD |
| அவுஸ்திரேலியா | 175 AUD / 100 AUD |
| ஐரோப்பா | 125 EURO / 60 EURO |



ஆதிரை
வெளியீடு
ஆதிரை வெளியீடுகள்
சயந்தன்
ஆதிரை
சயந்தன்
ஆறாவடு
காந்தப் புலம்
சமாதானத்தின்
கதை
என்ட
அல்லாஹ்
சயந்தன்
அஷேரா
கனடாவில் கிடைக்கின்றன.
தொடர்புகளுக்கு
+1 647 972 3619

SpotOn Money



SEND MONEY to SRI LANKA

FIRST TRANSFER FEE FREE *

Immediate Payment to Any Account

Partnership with CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount* on Purchases

0207 341 7300
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE




# RE/MAX COMMUNITY THE MOST TRUSTED REAL ESTATE AGENTS IN CANADA

- We are building a family of elite agent, become a part of the family
- We are voted as most trusted realtor by consumers
- Our Services

Real Estate Networking

Real Estate Investment

Real Estate Buying and Selling

remaxcommunity.ca   /remaxcommunityinc   /remax_community

/remaxcommunity   /UCD-3WoKApsSL2P4SqlnHVIA


வணக்கம் London
www.vanakkamlondon.com
உலகம்
அரசியல்
தமிழ்நாடு
சினிமா
CINEMA
IN LOVE
memory
விளையாட்டு
துயர் பகிர்வு
யாதும் ஊரே யாவரும் கேளிர்
தமிழால் இணையும்
தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்
vanakkamlondon.com
/vanakkam.london
/vanakkamlondon
/Vanakkam_London
/TheVanakkamLondon

HIGHWAY
FLEET SERVICES



OPEN 24 HOURS
(416) 876-3349

# TRUCK & TRAILER REPAIR IN GTA

**TRUCK REPAIR EXPERT IN TORONTO,**
**25 NANABERRY ST, SCARBOROUGH, ON M1X 1Y5**

**MAP OF HIGHWAY FLEET SERVICES - PROFESSIONAL MOBILE TRUCK & TRAILER REPAIR IN GTA**

highwayfleetservices.com

WE PROVIDE THE CHEAPEST MINIVAN
& CAR SERVICE
ALL OF THE GTA & ONTARIO



ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619

Nazami & Associates
A Leading Immigration and Refugee Law Firm



We focus exclusively on immigration and refugee law with extensive experience in complex matters including national security, Charter and human rights litigation.

CALL US: (416) 410-4442 | (416) 410-0796

எழுநா

# XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**